
தனவணிகன் சங்க மலர்


உலகப் பெரியார்.



வெளிநாடுகளில் வாழும் செட்டியார்கட்கு
மகாத்மாவின் மணிவாசகம்.

நீங்கள் அன்னிய நாடுகளில் வசிக்கின்றீர்கள். அந்நாட்டு ஜனங்களுடன் நீங்கள் குற்றமற்ற கண்ணியமான முறையில் நடந்துகொள்ள வேண்டும். உங்களுடைய நடத்தையைக் கொண்டே கோடிக்கணக்கான பாரத மக்களின் நடத்தை மதிக்கப்படும். உங்கள் தராசுகள் அளவுகளும் பிசகின்றியும், உங்கள் கணக்குகள் முற்றும் சரியாகவும் இருக்கவேண்டும். அன்னிய நாட்டிலுள்ள ஒவ்வொரு பெண்மணியையும் உங்கள் தாயார், புதல்வி அல்லது சகோதரியாகப் பாவிக்கின்றீர்களென்று கருதுகிறேன். செல்வமானது சன்மதியை மயக்கிவிட இடங்கொடுக்கலாகாது. பணம் படைத்தவனுக்கும் மற்றவர்கட்கும் அது ஓர் நல்வரமாயிருக்க வேண்டுமாயின், பணம் படைத்தவன் அதனிடம் தனக்கு பொறுப்பேற்பட்டிருப்பதாக உணரவேண்டும்.


சங்கத்திற்கு விஜயம் செய்த தலைவர்கள்.



ஜி. டி. பிர்லா.



வி. ஜே. படேல்.



லஜபதிராய்.

நமது சங்கத்தின் வரலாறு

காரியதரிசி திரு. சா. அ. அ. கதிரேசன் செட்டியார்

பர்மா நகரத்தார்களின் சரித்திரம் பிற்காலத்தில் எழுதப்பெற்றால் அவர்கள் சங்கங் கண்டதும, கல்வி நிலையம் நிறுவியதும் "தனவணிகன்" பத்திரிகை ஆரம்பித்ததும் அச்சரித்திரத்தில்முதலிடம்பெறுமென்பதில் ஐயமில்லை. சங்கம் தோன்றி நடந்த ஆவணியுடன் பத்தாண்டுகள் நிறைவுற்றன. கல்வி நிலயத்திற்கு ஐந்தாண்டுகள் இன்னும் பூர்த்தியாகவில்லை.'தனவணிகனு'க்கு இனித்தான் புதுமை நடக்கவேண்டும்.

இச்சங்கம் தோன்றுவதற்கு பல ஆண்டுகட்கு முன்னரே சிற்சில அன்பர்கள் இவ்வித சங்கம் காணவேண்டுமென்று பெருமுயற்சி செய்துள்ளார்கள். ஆனால் அவர்களது முயற்சி கைகூடவில்லை. துன்பமும் இன்பத்திற்கோர் வழி என்பர் பெரியார். இறைவன் எல்லாம் நன்மைக்கே செய்கின்றான் என்பது நமது ஆன்றோரின் துணிபு. அவ்விதமே பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம் ஸ்தாபிப்பதற்கு முக்கிய தூண்டுகோலாயிருந்தது செட்டியார்கட்கு ஏற்பட்ட கஷ்டங்களேயாகும். பர்மாவில் கொலையும் களவும் அதிகப் பட்டிருப்பதற்குக் காரணங்களென்ன என்று விசாரித்துப் பரிகாரம் தேடுவதற்காக ஏற்பட்ட கமிட்டியின் முன்னர் சில விஷமிகள் செட்டியார்களின் தொழிலே காரணமென வாய்கூசாது சாக்ஷியம் கொடுத்தனர். இவ்வபாண்ட வர்த்தமானம் பர்மாவெங்கணுமுள்ள செட்டியார்களிடையே பலத்த பரபரப்பை உண்டாக்கிவிட்டது. இக்குற்ற விசாரணைக் கமிட்டியின் முன்னர் தங்களது கட்சியை எடுத்துச் சொல்வதற்கு ஒரு ஸ்தாபனமில்லாத குறைவை அதுகாலை நன்கு உணர்ந்தனர். அவ்வெழுச்சியின் பயனாக சங்கம் ஏற்பட்டது. சங்கம் செய்த முதல் வேலை அக்குற்ற விசாரணைக் கமிட்டியின் முன்னர் பர்மாவின் கொலை களவுக்குத் தங்கள் தொழில்முறை காரணமல்லவென்று எடுத்துக்காட்டி அவர்களை ஒப்புக் கொள்ளச் செய்தது. அவ்வருடத்திலேயே பர்மாவிலுள்ள அனைவரும் இச்சங்கத்தில் அங்கத்தினர்களாகிவிட்டார்கள். இரங்கூனிலும் வெகு தூரத்திலிருக்கும் அரிக்கன் பகுதியிலும் எல்லைப் பிரதேசத்திலிருக்கும் பாமோவிலும் மற்றொரு கோடியிலுள்ள தவாயிலும் இச்சங்கத்திற்கு அங்கத்தினர்களிருக்கிறார்கள். இவ்விதம் பர்மாவிலுள்ள செட்டியார்களனைவரையும் ஐக்கியப் படுத்தியது மேற்சொன்ன விஷமிகளின் போலி வார்த்தைகள் என்றால் அது மிகையாகாது. ஒரு வழியில் அவ்விஷமிகட்கு நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க கடமைப் பட்டிருக்கிறோம். யார் அறிவார் அவன் வழியை?

இறைவனது அருளாலும் அன்பர்களது ஆசீர்வாதத்தாலும் நமது சங்கம் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாகவளர் பிறைச் சந்திரன்போல வளர்ந்து வந்து கொண்டிருக்கிறது. சங்கம் ஆரம்பிக்கப் பெற்ற காலத்தை நோக்கினால், 'சங்கம்' என்ற பதத்தின் பேரில் பலர்க்கு வெறுப்பு இருந்தது. ஏதோ சில இளைஞர்கள் கூடிக் கொண்டு பெரியவர்கள் விரும்பத்தகாதவைகளைச்செய்கிறஸ்தாபனமாக சங்கம் கருதப் பெற்று வந்தது. சங்கத்தைச் சேர்ந்தவர்களென்று இகழ்ச்சிக்குறிடாக அந்நாளில் சொல்லப்படுவதுண்டு. ஆனால் இன்று அவைகளெல்லாம் மாறி சங்கத்தின் ஆக்கத்தையும் அதன் வேலைத் திறனையும் அறிந்து பர்மாவெங்கணும் தங்களது உயிர்போல நகரத்தார்கள் சங்கத்தைப்போற்றி வருகிறார்கள். வெளி நாடுகளிலும் இரங்கூன் சங்கத்தைப் பின்பற்றி பல் சங்கங்கள் தோன்றியிருக்கின்றன. இவ்விதம் சங்கத்தின் உயர் நிலையை எங்கணும் அறிந்துகொள்ளச் செய்த பெருமை இரங்கூன் சங்கத்தைச் சார்ந்ததென்றால் மிகையாகாது.

ஜனநாயகதத்துவத்தைஅடிப்படையாகக் கொண்டது இச்சங்கம். இதில் அங்கம் பெற்றிருக்கும் அனைவர்க்கும் சம உரிமையுண்டு. அதன் காரியங்களைக் கவனிப்பதற்காக வருடந்தோறும் அங்கத்தினர்களால் நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப் படுகிறார்கள். ஆரம்பத்தில் இரங்கூனிலுள்ளவர்களே நிர்வாகஸ்தர்களாக தெரிந்தெடுக்கப் பெற்றார்கள். மூன்றாம் ஆண்டிலி



ர்தும் நாட்டுப்புறங்களிலிருந்தும் நிர்வாக சபைக்கு அங்கத்தினர்கள் அனுப்பி வருகிறார்கள். அங்கத்தினர்கள் சொல்லும் காரியங்களையும் நன்மைக்கு அவசியமானவைகளெனக் கருதுபவைகளையும் நிர்வாக சபையார் செய்வதற்கு கடமைப்பட்டுள்ளார்கள். நிர்வாக சபையார் தீர்மானிப்பவைகளைக் காரியதரிசிகள் நிறைவேற்றிவைக்கிறார்கள்.

சங்கத்தின் கொள்கைகளை பர்மா வாழ் செட்டியார்களிடையே பரப்புவதற்கும் ஒருவர்க்கொருவர் அறிமுகமாவதற்கும் சங்கத்தின் இரண்டாம் ஆண்டில் கம்பையில் பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் மகாநாடு ஒன்று வெகு சிறப்பாக இரண்டு நாட்கள் நடைபெற்றன. அடுத்த வருடம் பசுமந்தானில் கூடிய இரண்டாவது மகாநாடும் மிக வெற்றிகரமாக முடிவுற்றது. இவ்விரண்டு மகாநாடுகளினாலும் பர்மா நகரத்தார்களிடையே பரஸ்பரம் இருந்த அன்பு முதிர்ச்சியடைந்து சகோதரத் தன்மை பெருகிற்று.

சங்கம் என்ற பெயரில்லாவிட்டாலும் கோவிலுள்ள ஒவ்வொரு ஊரிலும் 'நகரத்தார்' என்ற ஒரு ஐக்கியப்பான்மை முன்னரே இருந்துவந்தது. அவ்வவ்வூர் சம்பந்தப்பட்ட பொதுக் காரியங்களை 'நகரத்தார்' என்றபொதுச்சபையார் காரியக்காரர்மூலம் பார்த்து வந்தார்கள். எனினும் அகில பர்மாவிற்குஓர்பொதுஸ்தாபனம்வேண்டாமா? பர்மா முழுமைக்கும் உள்ள செட்டியார்களின்நலன்களைக்கண்காணிப்பதற்குஏற்ற சாதனமாய் இரங்கூன் நாட்டுக்கோட்டைச்செட்டியார்கள் சங்கம் அமைந்திருப்பதை மகாநாட்டில் அனைவரும் நன்குணர்ந்தார்கள். இரங்கூனில் வெகு காலமாயிருந்து வந்த வட்டம் வாங்கும் பழக்கம் அம்மகாநாட்டில் நிறுத்தப்பட்டது நாட்டுப்புற நகரத்தார்கட்கு கைமேல் கிடைத்த முதற்பலனாகும்.

மகாநாடு ஓரளவுக்கு ஆரம்பத்தில் தான் பிரயோஜனமுள்ளது. செலவு மிகுதியைக் கருதி பின்னர் மகாநாடுகள் கூட்டப்பெறவில்லை. எனினும் வருடாவருடம்பர்மா அங்கத்தினர்களின் பொதுக்கூட்டம் ஆவணிமாதத்தில் நடைபெற்று வருகிறது. சங்க சம்பந்தமானவரையில் மகாநாட்டிற்கும் பொது கூட்டத்திற்கும் பெயரளவில் தான் வித்தியாசம். மகாநாடு தடபுடலான சமாசாரம். பொதுக் கூட்டம் ஆடம்பரமின்றி வேலையைக் கவனிக்கக் கூடியது. இரண்டிலும் அகிலபர்மாவிலுள்ள தனவணிகர்கள் கலந்து கொள்ளலாம். ஆவணி மாதத்தில் வருடாவருடம் நடைபெறும் வருடக் கூட்டத்தைத் தவிர்த்து அகில பர்மா அங்கத்தினர்களின் ஆலோசனை அவசியமாகுங் காலத்தெல்லாம் பொதுக் கூட்டங்கள் நடைபெறுகின்றன. இரண்டாந்தடவை தொண்ணூற்றுறார்க்கூட்டம் நடந்த காலத்தில் பர்மா அங்கத்தினர்களின் பொதுக்கூட்டம் ஒன்று கூடி தங்களது அபிப்பிராயங்களையும்ஆலோசனைகளையும் தொண்ணூற்றுறார்க்கூட்டத்திற்குஎழுதியனுப்பியிருந்தார்கள். அவ்வபிப்பிராயங்கள் மிகவும் போற்றப்பெற்றன. வியன் வட்டியை நீக்குவதற்கு ஆங்கிரச ஆண்டு ஆவணி திங்கள் நாலாம் நாள் கூடிய பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கத்தின் அங்கத்தினர்கள் கூட்டம் நம்மவர்கள் சரித்திரத்தில் ஒரு முக்கிய சம்பவமாயிருக்கிறது. பர்மாவில் செட்டியார்கள் தொழிலின் அளவைக் கணக்கெடுப்பதற்கு ஏழாம் ஆண்டில் ஒரு விசேஷப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. வியாபார மந்தத்தால் ஏற்பட்ட கஷ்டங்களை ஆலோசித்து இரங்கோன் பேங்குகளோடு சமரசம் பேசுவதற்காக இரங்கூன் நகரத்தார்களை எட்டாம் ஆண்டிலும் ஒன்பதாம் ஆண்டிலும் சங்கத்தில் கூட்டி வைத்த கூட்டங்கள் பல. எல்லாருடைய அபிப்பிராயமும் தெரிந்துகொள்ளவேண்டிய சந்தர்ப்பங்கட்கே விசேஷப் பொதுக்கூட்டங்கள் தேவைப்படுகின்றன. மற்றெல்லா விஷயங்களையும் நிர்வாக சபையாரே அப்பொழுதைக்கப்பொழுது ஆலோசித்து முடிவு செய்துவருகிறார்கள்.

வருடாந்தரம் கூடும் பர்மா அங்கத்தினர்கள் பொதுக் கூட்டத்தில் அன்பர்கள் கொண்டு வரும் பிரரேபணைகள்ஆலோசித்து முடிவு செய்வது நமது சங்கத்தில் அரச

கிறது வரும் பழக்கங்களில் ஒன்று. இவ்வித முறை இதர வியாபார சங்கங்களில் கிடையாது. இரங்கூன் செட்டியார்கள் சங்கத்து அங்கத்தினர்கள் பர்மாவின் பல பாகங்களிலும் இருப்பதாலும், வெகுதூரத்திலிருப்பவர்களும் வந்து சந்தித்து கலந்து ஆலோசிப்பதற்கு ஏற்ற சந்தர்ப்பமாய் வருடக்கூட்டமிருப்பதாலும், பிரேரேபணைகள் கொண்டுவந்து ஆலோசிக்கும் முறை கையாளப் பெற்று வருகிறது. பர்மா செட்டியார்களின் கஷ்ட நஷ்டங்களை தினந்தோறும் கவனித்து வேண்டிய பரிகாரங்களை தேடுவதற்கு சங்க நிர்வாகசபையாரிருக்கிறார்கள். வருடத்திற்கொருதரம் மகாநாடு கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றிவைத்து கலைந்து போய் மறுபடியும் அடுத்தவருடம் மகாநாடு கூடுங்காலத்து புதுத்தீர்மானங்களைக் கொணர்ந்து வார்த்தை யுத்தஞ் செய்யும் சங்கங்களிலும் கூட்டங்களிலும் தான் தீர்மானங்களின் எண்ணிக்கையில் பெருமைப்படுத்திக் கொள்ளுவது வழக்கம். நமது சங்கம்போன்ற வியாபார கழகங்களில் நிர்வாக சபையாரே எல்லா விஷயங்களையும் கவனித்து வேண்டுவன செய்வது மாபு. அத்தியாவசியமானதும் எல்லா நகரத்தார்களையும் கலந்துகொள்ளாமல் செய்ய முடியாததுமான பிரச்னைகளே வருடப்பொதுக் கூட்டத்தின் முன்னர் கொண்டு வருதல் வேண்டும்.

இங்கு ஆங்கிரச மாசி நாலாந்தேதிக் கூட்டத்தை குறித்து இரண்டொரு வார்த்தைகள் சொல்லி சங்கத்தின் கதையைத்தொடர்ந்து சொல்வோம். மாசிநாலாந்தேதிக்கூட்ட நிகழ்ச்சிகளில் முக்கியமாகக் குறிப்பிடத் தக்கதுஇரண்டு:

இரங்கூன் நடப்பு வட்டியை இயன்றவரை சாதகமாய்ப் பேசவேண்டுமென முடிவுசெய்யப் பெற்றது. இதர ஊர்களில் சிறப்பாக சென்னை கொழும்பு பினங்கு, சிங்கப்பூர், சைகோன் நடப்பு வட்டி விகிதங்கள் ஒப்பிட்டுப் பார்க்குங் காலத்து அதிகமாயிருந்தும் இரங்கூன் நகரத்தார்கள் தாங்கள் பேங்குகளில் வாங்கியிருக்கும் கடனுக்கு ஆறுஆறரைவட்டிக்கு குறையாமல் கொடுத்து வந்தும் இரங்கூன் நடப்பு வட்டியை அரை வட்டிக்கு குறையாமலும் ஒரு வட்டிவரையிலும் பேசுகிறதென்று வெகுநாட்களாக இருந்துவந்த பழக்கத்தை மாற்றி அக்கூட்டத்தில் பேசியவாறே ஒவ்வொரு மாதமும் குறைத்து வந்து ஆவணி மாதத்தில் நாலரையணுவுக்கு கொண்டு வந்து பர்மாவிலுள்ள நகரத்தார்கள் பெரும்பாலார்க்கு தீங்கு வாராமற் காத்தது நமது சங்கம் என்று பெருமையாய் சொல்லலாம்.

எவ்வளவு செல்வாக்கு வாய்ந்தவராயிருந்தாலும் ஒரு தனித்த மனிதரால் அல்லது தனித்த ஊர் நகரத்தாரால் செய்யமுடியாத காரியத்தை சங்கம் செய்ததற்கு இது ஒரு தக்க உதாரணமாகும். மாசி நாலாந்தேதிக் கூட்டத்தில் மற்றொரு அதிசயமிருக்கிறது. தன்து மாறல் முதலிய பணங் கொடுத்தவர்களுக்கும் பர்மாவிலுள்ள கடைக்காரர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் ஒப்பந்தம் எப்படியிருந்தாலும் இரங்கூன் நடப்பு வட்டிக்கு மேல் வியன் வாங்கக் கூடாது என்பது அக் கூட்டத்திற்கு மற்றொரு தீர்மானம். இத் தீர்மானம் பர்மாவிலுள்ள கடைகளை மாத்திரமின்றி இக்கடைகளோடு சம்பந்தமுள்ள இந்தியா மலாய்நாடு, சிலோன், இந்தோசைனா முதலிய நாட்டிலுள்ளவர்களையும் கட்டுப்படுத்துகிறது. இரங்கூனில் செய்த இத் தீர்மானத்தை இத்தனை நாட்டிலுள்ளவர்கள் மனமகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டு அதன்படி நடந்து வருவதற்கு நம் சங்கம் மிகுந்த நன்றியுள்ளதாயிருக்கிறது. இவ்விதமாக பல தேசங்களில், பல ஊர்களில் உள்ள நகரத்தார்களை ஐக்கியப்படுத்தி தீர்மானத்தை ஒப்புக் கொள்ளச் செய்தது நகரத்தார்களின் சரித்திரத்தில் ஓர் நிகரற்ற சம்பவம்: சுயநலங் கருதாது பொது நலங்கருதி செய்யப்படும் காரியங்கள் ஒரு நாளில்லாவிட்டாலும் மற்றொரு நாள் பொதுஜனங்கள் ஏற்றுக் கொள்வார்களென்பதற்கு இதைவிட சிறந்த திருஷ்டாந்தமிருக்கமுடியாது.

இவ்வாறாக அப்பொழுதைக் கப்பொழுது ஆலோசித்து செட்டியார்களது தொழில் முறையில் நமது சங்கம் செய்து வந்திருக்கும் சீர்திருத்தங்கள் பலவாகும். அவைகளெல்லாம்இங்கு எடுத்துச்சொல்வதென்றால் இடம் போதாது. செக்குகளுக்கும் உண்டியல்களுக்கும் பணங்கொடுக்கும் காலத்து நூறு ரூபாய் ஆயிரம் ரூபாய் நோட்டுகளாகக் கொடுத்தால் ஒன்றரை அணு வட்டம் வாங்குவது இரங்கூனில் தொன்று தொட்டு இருந்து வந்த பழக்கம். ஆனால் அப்பழக்கம் செட்டியார் கடைகளின் சுயமரியாதைக்கு இழுக்காயிருந்ததை முன்னிட்டு சங்கம் சில ஆண்டுகட்கு முன்னர் அவ்வழக்கத்தை நிறுத்திவிடச் செய்தது. பேங்குகளோடு செட்டியார்களின் நியாயமான உரிமைகட்குப் போராடின கதை ஓர் ராமாயணமாகும். வியாபார மந்தம் ஏற்படுவதற்கு முன்னர் இரங்கூனிலுள்ள மூன்று பிரபலமான பேங்குகள் செட்டியார்களை கண்யமாக நடத்தாததை முன்னிட்டும், அவசியமில்லாமல் கொடுத்த பணத்தை கேட்டதைக் கருதியும் லோன் பெற்றிருந்த எல்லா செட்டியார்களையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பல லக்ஷங்களைச் சங்கம் கட்டச் செய்ததில் அப்பேங்குகளுக்கே போச்சரியம் ஏற்பட்டதோடு, செட்டியார்களின் மதிப்பும் கௌரவமும் அதிகரித்தது. நம்மைத் தாக்கியவர்கள் நம் வீட்டிற்கு ராஜி பேச வந்தார்கள். வியாபார மந்தம் ஏற்பட்டதும் நம்மவர்கட்கு பேங்குகள் இழைக்கத் துணிந்த இன்னல்களை சங்கம் இடையிற் புகுந்து தடுத்து இரண்டு வருடம் வரை இடைவிடாது பேங்குகளோடு வாதஞ் செய்து நம்மவர்கள் கடைகள் பலவற்றிற்கு அநாவசியமாகத் துன்பம் வாராமல் தடை செய்து வந்தது.

வியாபார சங்கங்களைக் 'காவல் நாய்கள்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படுவதுண்டு. ஆபத்துவந்த பிறகு காப்பதைவிட ஆபத்து வருமுன்னரே தெரிந்து காப்பது புத்தியுடையோர் செயல். நமது அங்கத்தினர்கட்கு பின்னால் வரக்கூடிய கஷ்டங்களை முன்னரே தெரிந்து கிளர்ச்சி செய்த சந்தர்ப்பங்கள் அநேகம். 1927-வது வருடத்தில் நம்மவர்கள் தொழிலை மிகவும் பாதிக்கக் கூடிய பர்மா விவசாய மசோதா ஒன்று சர்க்காரால் வெளியிடப் பெற்றது. நமது சங்கம் செய்த கிளர்ச்சியாலும் நம்மவர்கட்குப் பக்கப் பலமாக பர்மியர்களிருந்ததாலும் சட்டசபையின் முன்னர் கூட அம்மசோதா கொண்டுவரப் பெறவில்லை. அதற்கு அடுத்த ஆண்டில் இந்தியா சட்டசபையில் முகம்மதியரான அவர்கள் கொண்டுவந்த வட்டி மசோதாவில், இட்டின் பேரிலோ அல்லது இடு இல்லாமலோ கடன் கொடுத்திருக்கும் எவரும் முதலில் கொடுத்த முதல் தொகை அல்லது வியாச்சியம் போடும் தேதியிலுள்ள பாக்கித் தொகை இவற்றில் எது குறைந்ததோ அத்தொகைக்கு மேல் ஒரு தடவையிலோ அல்லது பல தடவைகளிலோ வட்டி வாங்கும் உரிமை கிடையாதென்றும், ஒரு பத்திரத்தின் பேரில் வரவேண்டிய தொகைகட்காக அப்பத்திரத்தின் முதல் தொகையையும் வட்டி பாக்கியையுஞ் சேர்த்து ஒரு புதுப் பத்திரம் எழுதி வாங்கினால் அச்சட்ட சம்பந்தப்பட்ட வரையில் பழைய பத்திரத்தின் முதல் தொகையே புதுப்பத்திரத்தின் முதல் தொகையாகக் கருதப்பெறுமென்றும் சொல்லப்பட்டிருந்தது. அம்மசோதாவை நாம் பலமாக எதிர்த்தோம். அம்மசோதா நிறைவேறினால் எந்த தொழிலும் நடைபெறுவதற்கில்லையென்பதைத் தெளிவாய் எடுத்துச் சொன்னோம். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாக லேவாதேவிக் காரர்களைக் கண்ட்ரோல் செய்ய வேண்டுமென்றும் பஞ்சாபிலுள்ளது போல அவர்களது கணக்குகளையெல்லாம் ஒழுங்காக வைத்துக் கொள்வதற்கு சட்டம் கொண்டுவர வேண்டுமென்றும் இங்கிலாந்திலுள்ள லேவாதேவிக்காரர்களின் சட்டத்தில் சில பிரிவுகளை இந்நாட்டில் உபயோகிக்க வேண்டுமென்றும் இந்திய சட்டசபையில் பெருத்த விவாதம் நடந்தது. லோக்கல் கவர்ன்மெண்டார் நமது அபிப்பிராயத்தை கேட்டபொழுது அவ்வித சட்டங்கள் பர்மாவிற்கு கொஞ்சமும் தேவையில்லையென்பதை விரிவாக எடுத்துச் சொன்னோம். ஏறக்குறைய ஆறு வருடங்கட்கு முன்னர் பர்மாவிற்கு கடல் மார்க்கமாய் வருபவர்களிடம் ஐந்து ரூபாய் வசூல் செய்வதென பர்மா சட்டசபையில் கொண்டுவரப் பெற்ற மசோதா நமது சங்கம் இதர இந்தியர்களோடு சேர்ந்துசெய்தகிளர்ச்சியின் பயனாய் கைவிடப் பெற்றது. நல்லவர்களையும் வியாபாரிகளையும் கூட இந்நாட்டை விட்டு வெளியேற்றக் கூடிய விதமாய்க் கொண்டுவரப் பெற்ற பர்மா தேசப் பிரஷ்ட மசோதா நமது சங்க மனையவர்களின் முயற்சியால் திருத்தியமைக்கப்பெற்று உண்மையான குற்றவாளிகளை நாட்டை விட்டு அப்புறப்படுத்துவதற்கு இன்று உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது.

சிறப்பாக செட்டியார்களின் உரிமைகளைக்காக்க இச்சங்கம் வைக்கப்பெற்றதேயானாலும்மேற்சொன்னவைகளினாலும் இனி கூறுபவைகளினாலும் இச்சங்கத்தின் வேலைகளினால் செட்டியார்கள் மாத்திரமின்றி இந்தியர்களனைவரும் பயனெய்தி வருகிறார்களென்பது வெள்ளிடைமலை. இந்திய சட்டசபைக்குத் தலைமை வகித்து அப்பீடத்திற்கே இறவாத பெருமையளித்த விதல்பாய் படேல் அவர்களுக்கு நமது சங்கத்தினர் ஐந்து வருடங்களுக்கு முன்பளித்த உபசார பத்திரத்திற்குப் பதிலளிக்குங் காலத்து பர்மாவிலுள்ள இந்தியர்களை காக்கும் பொறுப்பு பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கத்தையும் பர்மா இந்திய வியாபார சங்கத்தையும் சேர்ந்தது என்று கூறியுள்ளார். அப்பெரியார் வாசகத்திற்கேற்ப நடந்து வரவேண்டுமென்பதையே நமது சங்கம் லட்சியமாகக் கொண்டுள்ளது.

நமது கோரிக்கைகளையும், நமது கக்ஷியையும், ராயல் கமிஷன்களுக்கு முன்னரும், இந்தியா கவர்ன்மெண்டார் கமிட்டிகளுக்கு முன்னரும், பர்மா கவர்ன்மெண்டார் கமிட்டிக்கு முன்னரும் யாதாஸ்து சமர்ப்பித்தும் அவசியமான காலத்து நேரில் சென்றும் தெரிவித்துள்ளோம். அவ்விதமான கமிஷன்களிலும் கமிட்டிகளிலும் முக்கியமானவை:- விவசாயக் கமிஷன். கைத்தொழில்கட்குஇராஜாங்க உதவி

செய்வது குறித்து நியமிக்கப் பெற்ற கமிட்டி. வழக்குகளில் நீதிமன்றத்திலேற்படும் தாமதம் குறித்து விசாரித்த கமிட்டி. பர்மாவில் அரிசி நெல் அதிகமாய் விலை பிறவி இருப்பதற்குரிய காரணங்களையும் பரிகாரங்களையும் விசாரிப்பதற்கு ஏற்பட்ட கமிட்டி. பர்மா பேங்கிங்என்குயரி கமிட்டி.

வியாபாரிகள் ஐக்கியப்பட்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ள வியாபார சங்கங்களை எந்த முக்கிய விஷயத்திற்கும் சிறப்பாக விவசாயம் கைத்தொழில் வியாபார சம்பந்தப்பட்ட விஷயங்களைக் கலந்துகொண்டுதான் சர்க்காரில் எந்த நடவடிக்கையும் எடுத்துக் கொள்வது வழக்கம். அவ்விதமே சில வருடங்களாக நமது சங்கத்தின் அபிப்பிராயத்திற்கு பல மசோதாக்களையும், இதர விஷயங்களையும் சர்க்காரில் அனுப்பி வருகிறார்கள். அத்துடன் பர்மா கவர்ன்மெண்டின் அறிக்கைகளையும், பர்மா கெஜட்டையும் இலவசமாய்த் தந்து வருகிறார்கள். மற்றும் ஏதாவது முக்கியமான விஷயத்தைப் பற்றி விசாரிப்பதற்காக சர்க்காரில் ஏதாவது கமிட்டி நியமித்தால், அந்த விஷயத்திற்கு சம்பந்தப்பட்ட வியாபார சங்கத்திலிருந்தும் ஒரு பிரதிநிதியைச் சேர்த்துக் கொள்வது வழக்கம். அதற்கேற்ப பர்மா பேங்கிங் என்குயரி கமிட்டி நியமிக்கப் பெற்ற காலத்து நமது சங்கத்திலிருந்து ஒரு பிரதிநிதி நியமிக்கும்படி சர்க்காரில் கேட்டிருந்தார்கள். [illegible] அ.மு.மு. முருகப்ப செட்டியாரவர்களை நியமித்திருந்தோம். சென்ற ஆண்டில் பர்மா சர்க்காரில் விவசாயக் கடனாளிகள் [illegible] கமிட்டியில் நமது பிரதிநிதியாக இரண்டொருமாதங்கள் குமாரராஜா முத்தையா செட்டியாரவர்கள் அங்கம் பெற்றிருந்தார்கள். பின்னர் திருவாளர், அ.மு.மு. வெள்ளையன் செட்டியாரவர்கள் நமது பிரதிநிதியாக சங்கத்தால் நியமிக்கப் பெற்று அக்கமிட்டியின் வேலைகளை இன்னும் அவர்கள் கவனித்து வருகிறார்கள்.

பர்மாவிலுள்ள தபால் நிலையங்களிலும் தந்தி நிலையங்களிலும் நம்மவர்கள் அறிவித்த குறைகளையெல்லாம் நீக்கியுள்ளோம். கப்பலடியிலும் கப்பல்களிலும் நம்மவர்கட்கேற்பட்ட சிரமங்களுக்கு அப்பொழுதக்கப்பொழுது பரிகாரந்தேடி வந்துள்ளோம். கப்பலடியில் சில வருடங்கட்கு முன்பாகயிருந்த சொல்லொணாத் சிரமங்கள் சங்கத்தின் முயற்சியால் குறைந்திருக்கிறது. மற்றும் நம்மவர்கள் பிரயாணிகட்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுப்பதற்காக கப்பல்தோறும் சங்கத்து உத்தியோகஸ்தர் ஒருவர் சென்று வருகிறார். இரயில்வே, போர்ட் டிரஸ்ட், முனிசிபாலிடிகள், டெலிபோன் கம்பெனி, மின்சார கம்பெனிகள் முதலியவைகளில் ஏற்படும் சிரமங்களையும் உரிய காலத்தில் அவ்வவர்கட்கு அறிவித்து பரிகாரம் தேடி வந்துள்ளோம். இந்தியன் ரயில்வே கான்பரன்ஸ் அஸோஸியேஷனிலிருந்து வியாபார சம்பந்தமான பிரச்னைகளுக்கெல்லாம் நமது அபிப்பிராயம் கேட்டு வருகிறார்கள். அடகுக் கடைகளுள்ள கிராமங்களில் நம்மவர்கள் நகைகளை இடாகப் பிடித்துக்கொண்டு பணந்தருவதை அடகுக் கடைகளும் உத்தியோகஸ்தர்களும் தடுத்து பல கஷ்டங்கள் உண்டாக்கிவந்ததை நீக்குவதற்காக உயர்தர நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து அதில் வெற்றியடைந்ததில் நம்மவர்கள் கஷ்டங்கள் நீங்கிற்று. அதே மாதிரி முனிசிபாலிடி உள்ள ஊர்களில் ஏற்படும் கஷ்டங்களை நீக்குவதற்கும் பெரு முயற்சி செய்துள்ளோம். ஆனால் இன்னும் வெற்றியுறவில்லை.

சமூக சீர்திருத்த விஷயத்தில் நமது சங்கம் முற்போக்கான கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் பிற்போக்கானவர்களையும் சமாதானப்படுத்தி காரியங்களை முடிக்க வேண்டுமென்ற மனப்பான்மை கொண்டது. எட்டாண்டுகட்கு முன்னரே செட்டியார் கோவில்களிலெல்லாம் இடும்பனுக்கு உயிர் பலி கொடுப்பதை நிறுத்தவேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றது. டாம்பீக வாழ்க்கை கூடாது என்பதை சங்கம் பலமுறை எடுத்துச் சொல்லி வந்திருக்கிறது. நம்மவர்கள் வாழ்க்கைத் துணைவிகளை உடனழைத்து வரவேண்டுமென்பதை சங்கம் சென்ற ஆண்டில் ஒப்புக்கொண்டு தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறது. அரசியல்கொள்கைக்காக சிறைசென்றவர்களையும் ஒரு குற்றமும் செய்தறியாதவர்கள் சிறை சென்ற காலத்தும் அவர்களை ஜாதிப்பிரஷ்டம் செய்தல் கூடாதென்று மற்றொரு சமயம் தீர்மானித்தபடி இவ்வாண்டில் நம் நாட்டின் சாபக்கேடான தீண்டாமையை அறவே ஒழிக்கவேண்டுமென்ற எண்ணத்தோடு பர்மாவிலுள்ள நம்மவர்கள் கோவில்களனைத்தையும் திருக்குலத்தார்க்கு-ஹரிஜனங்கட்கு-இறைவனின் செல்வக் குழந்தைகட்கு திறந்துவிடுவதென முடிவு செய்தோம். அவ்விதம் முடிவுசெய்த சமயம் காந்திஜி உபவாசமிருந்த காலம். இச் செய்தியை சபர்மதி முனிவர் கேட்டதும் அளவிலா ஆனந்தமடைந்தனராம். அவர் உபவாச காலத்தில் இச் செய்தி அவர்க்கு உணவளிப்பதாக இருந்ததாம். தமிழ் நாட்டில் நம்மவர்கள் சாழ்த்தப்பட்டவர்கட்கு நியாயம் என்று வழங்கப் போகிறார்களோ? எல்லாம் வல்ல இறைவ! ஆதித்தமிழர்கட்கு மனிதர் செய்யும் கொடுமைகளை விரைவில் நீக்கிவைப்பாய்!!

சொந்தநாட்டுக் கைத்தொழில்களை ஆதரிப்பதுவே ஒருவியாபார சங்கத்தின் அடிப்படையான கொள்கை. நம்மவர்கள் கதரை ஆதரிக்கவேண்டுமென்று சில ஆண்டுகட்கு முன்னர் தீர்மானித்தோம். அவ்விதமே பலர் கதரையே அணிந்து வருகின்றனர். கதர் அணியாத மற்றவர்களும் இந்தியாவில் இந்தியர்களது மூலதனங்கொண்டு இந்தியாவில் இந்தியர்களால் தயாரிக்கப் பெறும் நூலால் நெய்யப்பெறும் துணிகளையே வாங்குவது அவசியம். இவ்வாண்டின் வருடக் கூட்டத்தில் நம்மவர்களனைவரும் சுதேசி சமான்களையே வாங்கவேண்டும். என்று தீர்மானித்திருப்பதை ஒவ்வொருவரும் மறவாது கடைப்பிடித்து நமது நாட்டின் செல்வத்தை விருத்தி செய்வது ஓர் தெய்வீகக் கடமையாகும். நமது நாட்டுச் சாமான்களை வாங்காது வெளிநாட்டுப் பகட்டுச் சாமான்களை வாங்குவது தன் சொந்தத்தாய் கிண்ணிப் பிச்சை எடுக்கையில் பிள்ளை கும்பகோணத்தில் கோதானம் கொடுத்ததை யொக்குமல்லவா? நமது நாட்டின் செல்வம் பெருக வேண்டுமானால், நமது சந்ததியார்கள் பிற்காலத்தில் சுகமாய் வாழக்கருதினால் நமதுநாட்டில் உற்பத்தியாகிய சாமான்களையே வாங்குவதென்று ஒவ்வொருவரும்விரதம் எடுத்துக்கொள்ளவேண்டும். இந்திய மக்கள் கதரின்மேல் கொண்டுள்ள அபிமானத்தைக் கண்டு சில இந்திய மில்களும் வெளிநாட்டு மில்களும் போலிக் கதர் உற்பத்தி செய்து ஜனங்களை ஏமாற்றி வருகிறார்கள். இதனைத் தடை செய்வதற்காக இந்திய சட்டசபையில் இவ்வாண்டில் கொண்டுவரப் பெற்ற பாதுகாப்பு மசோதாவை நாம் பலமாக ஆதரித்துள்ளோம்.

இதுவரை நம்மவர்களை யெல்லாம் ஐக்கியப்படுத்தி ஒரு சங்கங்கண்டு அது செய்து வருகிற வேலைகளைப்பற்றி எழுதி வந்தோம். பர்மா கவர்ன்மெண்டோடு நமது வேலை முடிவுறுகிறதில்லை. நம் தொழில் சம்பந்தப்பெற்ற பல காரியங்கள் இந்தியா கவர்ன்மெண்டார் ஆக்ஷியிலிருக்கிறது. இந்தியா கவர்ன்மெண்டார் வியாபாரிகளின் வார்த்தைக்கு செவி சாய்க்க வேண்டுமானால், ஒரு மாகாணத்தில் ஒரு சங்கம் மாத்திரம் வேலை செய்தால் பிரயோசனம் பெறாது. அதற்காக இந்தியாவிலுள்ள வியாபார சங்கங்களெல்லாம் சேர்ந்து ஓர் சங்கம் ஏற்படுத்தியுள்ளார்கள். அதற்கு இந்திய வியாபார கைத்தொழில் சங்கங்களின் ஐக்கிய சபை யென்று பெயர். (Federation of Indian Chambers of Commerce and Industry) அச்சபையில் நமது சங்கமும் ஓர் அங்கம் பெற்றிருப்பதால் இந்தியா பூராவிலும் இந்தியா கவர்ன்மெண்டிலும் நமக்கு ஆக வேண்டிய விஷயங்களை சுலபமாய் சாதித்துக் கொள்ளலாம். இவ் வைக்கிய சபையின் வருடக் கூட்டம் ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு ராஜதானியின் தலை நகரில் கூடி அகில இந்திய வியாபாரிகளின் நலன்களைக் கண்காணிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்கிறார்கள். இக் கூட்டத்திற்கு நமது சங்கத்தின் சார்பாக ஒரு வருடத்தில் திருவாளர் வெ. வீர. சுப்பிரமணியன் செட்டியாரவர்களும், மற்றொரு வருடத்தில் திருவாளர் சா. ராம. மு. சித. மு. சிதம்பரஞ் செட்டியாரவர்களும் சென்றிருந்தார்கள். இக் கூட்டங்களில் இந்தியா கவர்ன்மெண்டின் காரியதரிசிகளும் மந்திரிகளும் கலந்து கொண்டு அங்கு ஆலோசிக்கப்பெறும் பிரச்னைகளுக்கு பதில் கூறுவதுண்டு.

மற்றும் நமது சங்கம் பாரிஸ் நகரிலுள்ள சர்வதேச வியாபார சங்கத்திலும் அங்கம் பெற்றிருக்கிறது. எந்த வியாபாரமும் தற்காலத்தில் உலக நிலையைப் பொறுத்திருக்கிறது. ஜப்பானின் நாணயமாற்று விகிதம் குறைந்ததால் இந்தியாவிலுள்ள துணிஉற்பத்தி செய்கிறவர்கள் அலறுகிறார்கள். ஹாலந்தா நாட்டில் அரிசி இறக்குமதி வரி ஏற்பட்டால் பர்மா அரிசி உற்பத்தி செய்கிறவர்கட்கு கவலை யேற்படுகிறது. இந்தியாவில் மகாத்மா காந்தி விடுதலையானால் லண்டன் ஸ்டாக் எக்ஸ் சேஞ்சில் ஷேர்களின் விலை யேறுகிறது. பர்மாவின் க்ஷேமத்திற்கும் செட்டியார்களின் பொருளியல் முன்னேற்றத்திற்கும் ஆதாரமான அரிசி விலை உலக நிலையைப் பொறுத்திருக்கிறது. ஆதலால் வியாபார சங்கங்கள் உலக நிலையைக் கவனித்து அங்கத்தினர்கள் சம்பந்தப்பட்ட தொழில் முறைக்கு வேண்டுவன செய்யக் கடமைப் பட்டிருக்கிறது. சர்வதேச வியாபார சங்கத்தில் உலகத்திலுள்ள எல்லாமுக்கியநாடுகளின் வியாபார சங்கங்கள் அங்கத்தினரா யிருக்கிறார்கள். இரண்டு வருடத்திற்கொருதரம் இச் சங்கத்தின் மகாநாடு நடைபெறுகிறது. சுமார் இரண்டு வருடங்கட்கு முன்பு அமெரிக்க நாட்டில் வாஷிங்டனில் கூடிய இச்சங்கத்தின் மகாநாட்டிற்கு திருவாளர் வெ. வீர. சுப்பிரமணியன் செட்டியாரவர்களும் அ. மு. மு. முருகப்ப செட்டியாரவர்களும் நமது பிரதிநிதிகளாக அனுப்பப் பெற்றிருந்தார்கள். அமெரிக்கா, கெனடா நாட்டிலுள்ள வியாபார சங்கங்கள் அவர்களிருவரையும் வரவேற்று உபசரித்து விருந்துகள் நடத்தியதோடு அவர்களிருவரும் அச்சபைகளிலும் பத்திரிகை நிருபர்கட்கு பேட்டியளித்த காலத்தும், இந்தியாவின் சுதந்தரத்தைப்பற்றியும் மகாத்மா காந்திஜியைப்பற்றியும் விரிவாகச் எடுத்து சொல்லியிருப்பது குறிப்பி

டத்தக்கது. அதைவிட மற்றொருசம்பவம் இன்னும் ருசிகரமானது. உலகத்தின் பல்வேறு நாடுகளிலிருந்தும் அங்கு விஜயஞ்செய்திருந்த ஏறக்குறையஆயிரத்தெழுநூறு பிரதிநிதிகட்கு நடந்த விருந்துகளில் வாஷிங்டன் நகரத்து வியாபார சபையார் அளித்ததும் ஒன்று. அவ்விருந்தில் மத்திய மேஜையில் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு பிரதிநிதிக்கு கண்ய ஸ்தானம் (Seat of Honours) கொடுக்கப்பட்டது. ஆனால் ஒரு சிலர் செய்த சூழ்ச்சியால் இந்தியாவிற்கு அம்மேஜையில் ஒரு ஸ்தானம் ஒதுக்கி வைக்கப்படவில்லை. அவ்விருந்திற்கு சென்ற நமது பிரதிநிதிகள் இதனைக் கண்ணுற்றதும் அந்த ஹாலை விட்டு வெளியேறி விட்டார்கள்; விருந்தை பஹிஷ்கரித்தார்கள். இதன் மூலம் நமது பிரதிநிதிகளின் அதிருப்தியை இந்தியா நாட்டின் அருதிப்தியை அறிந்த அக்கூட்டத்தின் தலைவர்தாம் இந்தியாவிற்கு உணராதுஇழைத்த தவறுதலுக்குப் பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். இந்தியாவின் கௌரவத்தையும் சுயமரியாதையையும் அந்த உலக சபைகளில் காப்பாற்றிய நமது பிரதிநிதிகளை நாம் மிகவும் போற்றுகிறோம்.

தெலுங்கர்கட்கும் பர்மியர்கட்கும் இரங்கூனில் நடந்த கலகங்களையும் பின்னர் லோயர் பர்மாவில் சில ஜில்லாக்களில் இந்தியர்கட்கு விரோதமாய் நடந்த கலகங்களையும் அடக்குவதற்கு சங்கத்தில் எடுத்துக்கொண்ட முயற்சிகளும் அக்கலகங்களில் கஷ்டப்பட்டவர்கட்குச் செய்த உதவிகளும் தனியாக ஒரு சரித்திரம் எழுதக் கூடும். அலோனில் ஏற்பட்ட பெரு நெருப்பில் அவதியுற்றவர்கட்கும் பல இடங்களில் வெள்ளப்பாழ் ஏற்பட்ட காலத்தும் நமது சங்கம் செய்த உதவிகள் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும். பக்கோ பூகம்பத்தில் கஷ்டப்பட்டவர்கட்குப் பல வழிகளில் உதவி செய்ததோடு அவர்கட்கு வீடு கட்டிக்கொடுப்பதற்காக பதினையாயிர ரூபாய் நன்கொடையளித்துள்ளோம்.

மேலும்நம்மவர்கள்சர்வகலாசாலைக்கு அளித்தஏறக்குறையஇரண்டுலக்ஷரூபாய்நன்கொடையைக்கொண்டுநமதுபோல்பொருளியல் வியாபாரம், லேவாதேவி முதலிய பாடங்கள் சொல்லித்தரப்பெறுகிறது. கம்பை பள்ளிக்கூட உபாத்தியாயர்கட்கும் கட்டணமின்றி மேற்கண்ட பாடங்களில் சர்வகலாசாலையார் பயிற்சி தந்து வருகிறார்கள். பர்மிய பத்திரிகைகளில்செட்டியார்களைப்பற்றி மிகபலமாகமாறுபட்ட எண்ணத்தோடு செய்துவந்த பிரசாரத்திற்கு அப்பொழுதைக் கப்பொழுது சங்கத்திலிருந்து அளித்து வந்த பதில்களினால் ஒருவாறு ஒய்வுற்றிருக்கிறது. நாடகமேடை, சினிமா, முதலியவைகளையும் நம்மவர்கட்கு விரோதமாய் பிரசாரம் செய்ய உபயோகித்து வந்ததை அக்காலத்தில் உரிய அதிகாரிகட்கு அறிவித்து அவைகளெல்லாம் தடை செய்யப் பெற்றது. புரோம் ஜில்லாவில் செட்டியார்கள் நிலம் உழவேண்டாம் என்று செய்யப்பெற்ற பிரசாரத்தை முளையில் கிள்ளிவிட்டோம். நத்தலினிலும் பவுண்டையிலும் அவ்வூர் அத்தீன்களால் நம்மவர்கள் அடைந்த கஷ்டங்கள் ஒரு பெருப்பாரதம். அவைகளுக்கெல்லாம் பெரு முயற்சியால் ஒருவாறு பரிகாரம் கிடைத்தது.

உத்தியோகஸ்தர்கள் நியாய வரம்பு மீறி நடந்த காலத்தில் அவர்கட்குப் பெரியார்களிடம் சொல்லி பல சமயங்களில் ஒழுங்கு செய்துள்ளோம். ஐராவதி கம்பெனிக்கு வருடந்தோறும் பல கடிதங்கள் எழுதி பிரயாணிகட்கு நேரும் குறைகளை நிவர்த்தி செய்தும் கட்டணங்களை குறைத்தும் புது இடங்கட்கு கப்பல் விடும்படி செய்தும் வந்துளளோம். வருமான வரியில் ஏற்படும் கஷ்டங்களை இங்குள்ள கமிஷனர்க்கு எழுதியும் பேட்டி கண்டும் அவைகட்குப் பரிகாரந்தேடியிருப்பதோடு மத்திய ரிவினியூ போர்டுக்கு பல தடவை மெமோரியல் அனுப்பியும் மத்திய ரிவினியூ போர்டு மெம்பர்கள் இங்கு வருங்காலத்து பேட்டி கண்டு பேசியும் நம்மவர்கட்குள்ள குறைகளை எடுத்துச் சொல்லியுள்ளோம். பர்மாவில் மோரட்டோரியம் கொண்டு வருவதைத் தடைசெய்வதற்காகவும் பர்மா சட்டசபையில் நம்மவர்களைக் குறித்து சொன்ன புகார்களின் உண்மையைத் தெரிவிப்பதற்காகவும் நாலைந்து தடவை கவர்னரைப்பேட்டிகண்டு பேசியுள்ளோம். பல பெரியார்களை நமது சங்கத்தில் வரவேற்கும் பாக்கியமும் நமக்குக் கிடைத்துள்ளது. பாஞ்சாலச் சிங்கம் லாலா லஜபதிராய், ஆந்திர நாட்டு தேச பக்தர் டி. பிரகாசம், இந்திய சட்டசபைத் தலைவர் வி. ஜே. படேல், இந்தியா பப்ளிக் சர்விஸ் கமிஷனைச் சேர்ந்த சர் மைகேல்கீன் சர் டி. விஜயராகவாச்சாரியார்; அண்ணாமலை யுனிவர்சிடியின் ஸ்தாபகரும் பெரும் வள்ளலுமான ராஜா டாக்டர் சர் அண்ணாமலை செட்டியார், கல்கத்தா பிரபல வர்த்தகர் ஜி. டி. பிர்லா, இம்பீரியல் பேங்கு மேனேஜிங் கவர்னர்களான சர். ஆல்பர்ன் எஸ்மித் சர். கே. எம் மேக்டனூல்டு. முதலியவர்கள் இங்கு பர்மா விஜயஞ் செய்த காலத்து வரவேற்பளித்தோம். உலக சிரேஷ்டர் காந்திஜி இங்கு வந்தகாலத்து நல்வரவேற்பளித்ததோடு 7000 ரூபாய் வரை நன்கொடையளித்தோம்.

வியாபார சம்பந்தமான சட்டங்களையும் இதர முக்கிய விஷயங்களையும் அடிக்கடி துண்டுப் பிரசுர மூலமாக அறிவித்து வந்துள்ளோம். சிறப்பாக வியாபார சம்பந்தமான பிரச்னைகளை வெளியிடுவதற்கெனவே இவ்வாண்டில் "தனவணிகன்" நிறுவப்பெற்று சங்கத்து அங்கத்தினர்கட்கெல்லாம் பத்திரிகை இலவசமாய்த் தந்து வருகிறோம்.

வாசகர்களே! இதுவரை சங்கம் என்ன தீவிரமான வேலை செய்து வந்திருந்தாலும் இனி செய்ய வேண்டிய வேலை மிக அதிகமாயிருக்கிறது. அரசியலுக்கும் வியாபாரத்திற்கும் அதிக சம்பந்தமிருக்கிறது. ஆதலால் அரசியலில் நாம் முனைந்து வேலை செய்ய வேண்டும். புதுசட்டசபையில் நமது சங்கத்திற்கென ஒரு ஸ்தானம் பெறுதல் வேண்டும். நாட்டின் நலன்களை நம் சொந்த வேலைகளாகக் கருதி பார்த்துவரல் வேண்டும்.

ஆரம்பத்தில் கூறியிருப்பது போல, பர்மாவிலுள்ள மூன்று ஸ்தாபனங்களும் செட்டியார்கட்கு அதிக நன்மை செய்யக்கூடிய இயல்பு வாய்ந்ததாயிருக்கின்றன. நமது இளைஞர்களின் வாழ்க்கையை செம்மைப்படுத்தி லக்ஷிய புருஷர்களாய் தேசத்தின் தலைவர்களாய் வரச்செய்யவேண்டியபொறுப்புகம்பை கல்வினிலயத்தைச்சார்ந்தது. 'தனவணிகன்' ஜனங்களுடையஅறிவைவிசாலப்படுத்தி புதுவியாபாரத்துறைகளைக் காண்பித்து,நம்மவர்கள்வியாபாரசம்பந்தப்பட்ட விஷயங்களையெல்லாம் தாங்கிவந்து மானிட ஜன்மத்தின் லக்ஷியங்களை அடிக்கடி எடுத்துச்சொல்லிவருவது பலரும் அறிந்ததே. நம்மவர்கள் நலன்களையும் இத்தேசமக்களின் நலன்களையும் இடைவிடாது கண்காணித்து வந்து, நம்மவர்கள் செல்வம் பெருகவும் தேசத்தின் லக்ஷியமாகிய பொருளியல் பொறுப்பாட்சி, அரசியல் பொறுப்பாட்சி சீக்கிரம் அடையவும் அனவரதமும் நியாயவரம்பிற்குள் வேலை செய்வது பர்மா நாட்டுக்கோட்டை செட்டியார்கள் சங்கத்தின் கடமை. இம்மூன்று ஸ்தாபனங்களும் நீடூழி வாழ்ந்து நமது குலமுயர உழைக்குமாறுஇறைவனதுஅருளை இறைஞ்சுகிறேன். சுபம்.

சங்க நிர்வாகிகள்.



தீ. சோ. நாகப்ப செட்டியார்.



தீ. சோ. நா. பழனியப்ப செட்டியார்.



வெ.வீர. சுப்பிரமணியன் செட்டியார்.




சா அ. ச. ராமன் செட்டியார்.




சா. அ. அ. கதிரேசன் செட்டியார்.




சா. அ. ச. பழனியப்ப செட்டியார்.



வ.சோ.ராம். ராமநாதன் செட்டியார்.




சா.ராம.மு.சித.மு. வெங்கிடாசலம் செட்டியார்.




உல. க. கண. சேவுகஞ் செட்டியார்.


பர்மா நகரத்தார் கோவில்கள்.



உவாக்கமா கோவில்.



சூமங்கை. கோவில்.



லேப்படான் கோவில்.

'என்னைச் சர்வாதிகாரியாக நியமித்தால்?'

திரு. க. வி. அழ. ராம. அழகப்ப செட்டியார், எம். ஏ; பார்-அட்-லா.

மேனாட்டில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஜர்மனி முதலாய தேசங்களைச் சுற்றி என்னுடைய பிரயாணத்தை முடித்துக்கொண்டு சென்னை வந்துசேர்ந்தது முதல் அத் தேசங்களில் கண்டறிந்த அனுபவங்கள் பலவற்றைச் செட்டியார் சமூகத்தினிடையே, பத்திரிகைகள் வாயிலாகவும், மேடைகள் மூலமாகவும் பரப்ப வேண்டுமென்ற விருப்பம் எனக்குப் பெரிதும் இருந்தது. நான் அந்த பிரயாணம் செய்து வந்த காலத்து, செட்டியார்களுடைய பழக்க வழக்கங்கள் அறவே விரைவில் மாற்றப்பட்டு நன் முறையில் சீர்திருத்தம் செய்யப்பட வேண்டுமென்ற அவசியத்தை உணர்ந்தேன். இச் சமூகம் முன்னேற்றம் அடைவதற்குப் பல வழிகள் இயற்கையாகவே இருக்கிறதால், செட்டிநாடு சென்று அவைகளைப் பரப்ப வேண்டுமென்ற ஆவல் கொண்டேன். அதுபொழுது என்னுடைய நண்பரும் "தனவணிகன்" ஆசிரியருமான திருவாளர் கருப்பன் செட்டியாரவர்கள் "தனவணிகன் சங்க" மலருக்கு செட்டிமார்களைப்பற்றிய கட்டுரையொன்று அனுப்புமாறு எழுதியிருந்தது எனக்கு நல்ல சந்தர்ப்பமாயிற்று. ஆனால் நான் எந்த விதமான உண்மை உணர்ச்சியுடனும், ஊக்கத்துடனும், இதை எழுத ஒப்புக்கொண்டேன் என்பதைக் குறித்து அதிகமாகக் கூற வேண்டுவதில்லை.

முதற் படியாக, வாசகர்களுக்கு, நம்முடைய சமூகமானது கலை சிறந்த அம்சம் ஒன்றைத் தன்னடக்கத்தே கொண்டு விளங்குகின்றது என்பதை அறிவுறுத்த விரும்புகிறேன். நான் அறிந்த வரையில் இப்பரந்த உலகத்தில் நம்முடைய சமூகத்தினரைப் போல ஒரு சிறப்பட்ட செல்வமும், ஏனைய நலன்களும், விரைவில் சீர்திருத்தம் அடைவதற்கு வேண்டிய சாதனங்களும் கொண்ட சமூகம் வேறொன்றில்லை. மற்றும் நன்மை அடைவதற்கு ஏற்றவாறே நம்முடைய ஜனத்தொகையும் குறைந்ததாக இருக்கிறது. அதுவும் சற்றேறக்குறைய ஐம்பது ஆயிரமெனச் சொல்லுவர். இவ்விதம் இருப்பதும் நமக்குச் சாதகமே. ஏனெனில் கணக்கிட முடியாத பெரும் ஜனத்தொகையினரை சீர்திருத்தம் செய்ய ஒரு தலைவருக்கோ அல்லது தலைவர்களுக்கோ கஷ்டங்களும் முட்டுக் கட்டைகளும் பல உண்டு. இந்தியா, ஹிட்லர், முஸ்ஸோலினி இவர்களைப் போன்ற மாபெருந் தலைவர் ஒருவரை அடைகின்றது என்று வைத்துக்கொள்வோம். அத்தலைவர்கள தத்தம் நாடுகளில் கையாண்ட முறைகளின் பயனாய் அடைந்த உன்னத வெற்றியைப்போல இந்தியாவிலும் அடைய இயலுமென்ற நம்பிக்கை எனக்குச் சிறிதும் இல்லை. ஒரு சமூகம் எவ்வளவுக் கெவ்வளவு குறைந்த தொகையைக் கொண்டதாக இருக்கிறதோ அதற்கேற்பத் திறன்பட சீர்திருத்தங்கள் பல செய்து திட்டமான நன்மையை எய்தலாம். நல் வேளையாக ஒரு சிறிய விஸ்தீரணத்திற்குள்ளாகவே (இராமநாதபுர ஜில்லாவிலும் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் சில பாகங்களிலும்) நாம் குடியேறியிருக்கிறோம். இவ்விதம் தெய்வத்தின் அருளால் கிடைத்த சாதகத்தை எவரும் எளிதில் உணரக்கூடும். சற்று யோஜித்துப் பாருங்கள். செட்டியார்கள் சைனாவிலிருந்து பெரு (Peru) வரையில் பரவியிருக்கின்றார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது நாம் திட்டமான சீர்திருத்தங்களைச் செய்யலாம் என்பதற்கு நம்பிக்கையான ஆதாரவு ஏதாவது இருக்கிறதா? சற்றேனும் இல்லை.

செல்வத்திற் சிறந்தவர்களாக இருக்கும் நாம்—உண்மையாக இருந்த நாம்—ஒரு சமூகம் என்ற முறையில் குறைந்த தொகையினராயும், குறிப்பிட்ட விஸ்தீரணத்திற்குள்ளாக இருக்கிறவர்களாயும், நன்மைகள் நாடுவதற்கு மற்றெந்த சமூகமோ அல்லது கூட்டமோ அடைய முடியாத வழிகள் பல கொண்டவர்களாயும் இருக்கிறோம் என்பது எவரும் மறுக்க முடியாத உண்மையாகும். ஆனால் உண்மையில் நாம் என்ன காணக் கிடைக்கின்றது? நம்முடைய தற்போதைய நிலைமை பரிதாபகரத்தையும், துக்கத்தையும், துரதிர்ஷ்டத்தையும் கொண்டதாக இருக்கின்றது. நம்முடைய சமூகம் எத்தகைய நலன்களுடன் சிறந்து விளங்க வேண்டுமோ அதற்கு மாறாக இருக்கின்றது. உண்மையைக் கூறுமிடத்து, சிறந்த சமூக வாழ்க்கை என்று கற்றோர்களால் இங்கும் மற்றெங்கும் சொல்லக் கூடிய



வாழ்க்கையை நாம் அநுபவித்து வரவில்லை. நம்மிடையே தொழில் முறையிலோ அல்லது சமூக வாழ்விலோ ஒற்றுமையில்லை. ஏன்? ஒற்றுமையென்பது சற்றேனும் காணக் கிடைக்கவில்லை. அரசாங்கத்தாரிடம் (Co-operators) ஒற்றுமைப்பட்டோமேயன்றி, நமக்குள்ளாக நாம் (Non-co-operators) ஒத்துழையாதவர்களாகவே இருக்கின்றோம். நாம் எல்லோரும் ஒருங்கு சேர்ந்து கூடிக் கலந்து நியாய வாதங்கள் பல பேசுவதற்குப் பொதுவிடம் (Forum) என்பது இல்லை. சென்னை நாட்டுக்கோட்டை நகரத்தார் யூனியனைப்பற்றி அதிகமாகக் கூறாது விடுவதும் நலமே! எனக்குத் தெரிந்த மட்டில் அச்சங்கத்தின் அறிவிப்புப் பலகை (Sign Board) தற்பொழுது முன்னிருந்த இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப்பட்டிருக்கிறது. பிற விஷயங்களைக் குறித்து யாதும் அறிகிலேன்!

நாம் செய்துவரும் ஆடம்பரமான கல்யாண முதலிய சமூக வைபவங்களுக்குக் காரணமோ காரியமோ ஒரு சிறிதும் இல்லை. தேக ஆரோக்கிய திடகாத்திர முள்ள வீரம் செறிந்த மக்கள் நாம் என்று சொல்வதற்கில்லை. நாம் எவ்வளவு பலஹீனர்களாயிருக்கிறோமோ அதற்கு ஏற்ப நம்முடைய மனப்பான்மையும் அமைந்து இருக்கிறது. கிளாக்ஸோ (Glaxo) கம்பெனியார் பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருக்கும் திடமுள்ள குழந்தையைப்போல் நம் குழந்தைகளிருக்கின்றனவா? புஷ்டியில்லாத குழந்தைகளே அதிகமாக இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் அதிகமாக நம்முடைய பெண்மக்களின் நிலைமை கவலைக்கிடமுள்ளதாக இருக்கிறது. சீர்திருத்தம் வேண்டுமென்ற செட்டியார்களிடத்தும் வேண்டாம் என்றவர்களிடத்தும் நம்முடைய பெண்டிரைக் குறித்து சம்பாஷணைகள் பல புரிந்திருக்கிறேன். அவர்களிடத்து இதைப் பற்றியவரையில் மாறுபட்ட இரண்டு அபிப்பிராயங்களில்லை. நம்முடைய நீண்டகாலத்தின் கவலைக்குறைவால் அழுந்தியிருக்கும் பாதாள நிலையிலிருந்து அவர்களை விடுவித்து வேண்டிய முறைகளைக் கண்டுபிடித்து திருத்தமுறச் செய்வதே சீரிய முறையாம் என்கின்றனர். இதில் இனியும் கவனஞ் செலுத்தாது காலங் கடத்துவதிற் பயனில்லை.

இவ்விதம் பரிதாப நிலையைப் பாடுவதில் யாது பயன்? மேற்கண்டவைகளை சீர்படுத்த உண்மை வழிகள் கண்டிருக்கிறீர்களா? என்று கேட்கலாம். அங்ஙனம் கேட்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். எல்லாத் தீய வழக்கங்களையும் அடியோடு அதிவிரைவில் மாற்றுவதற் கற்றதோர் மருந்து எதுவும் இல்லை. நம்மிடையே உயரிய ஒற்றுமையும், தலைவர்களின் ஒப்பற்ற உதவியும், இளைஞர்களின் வீர உணர்ச்சியும் ஒருங்கு சேர்ந்தால் இப்பொழுது நமக்குத்தோற்றும் கஷ்டம் சடுதியில் மறையும். உயரிய இலக்ஷணம் நமக்குள் நிலவும். விரைவில் விடுதலையடைவோம். ஒருவேளை என்னைச் சர்வாதிகாரியாக (Dictator) நியமித்தால் சமூக வாழ்விற்கேற்ற திட்டங்களை எவ்விதம் அமைப்பேனென்பதை மிகவும் பொதுப்படையாகக் கீழே தருகிறேன்.

முதன்முதலில் அவசியமாய் அமைக்கவேண்டிய சட்டம்-பொருளாதார நிலை சீர்குலைந்து தத்தளிக்கும் காலத்தில் எப்படி ஏனைய நாட்டு அரசாங்கங்கள் பொருளைப்பிறநாட்டுக்கு எடுத்துச் செல்லவிடாது கண்டிப்புத் தடை (a check on the export of Capital) செய்கின்றனவோ அஃதேபோல் நம் நாட்டிலுள்ள பெருப்பொருளை எக்காரணத்தை முன்னிட்டும் கொண்டுபோகாதவாறு தடுப்பதாகும். நம்முடைய நாட்டில் ஒருவர் பின் ஒருவராய் தம்முடைய கிராமத்தைவிட்டு பை பையாகப் பணத்தைவாரிக் கொண்டு க்ஷேத்திரமென்னும் சாக்குக் கொண்டு ஏதோ ஓர் மூலையில் எல்லையின்றிச் செலவழித்து கோயில்கள் அமைத்துக் குளங்கள் வெட்டுகிறார்கள். அந்தோ! இதை நினைக்க நினைக்க மனம் உருகுகின்றது! செட்டியார் தாமிருக்கும் கிராமத்தில் மக்கள் பஞ்சத்தால் பீடிக்கப்பட்டு அல்லலுறவும் அவ்விடம் எல்லாவிதத்திலும் சீர்பெறவேண்டியதிருக்க அதை அமைக்காது சுகாதார முறை ஒரு சிறிதும் இல்லாது நாற்றமுற்றுக் கிடக்கவும்விட்டு பல்காதவழி சென்று தர்மப்பணி

கள் ஆற்றுகின்றாய்! சற்று சிந்தித்துப் பாருங்கள்! என்னே இவருடைய கூற்று! இவ் விசர்செய்த நான் ஒருக்காலும் சம்மதியேன். ஒருசில ஆயிரங்களைமட்டும் அச்செட்டியார் தாம் வாழும் கிராமத்தின் நலத்திற்காக செலவழிப்பாராயின் அவ்விடம் சீர் பெற்றுச் சிறந்து விளங்குமன்றோ! அக்கிராமம் வாழ்வதற்கு ஏற்றஇடம் என்று யாவராலும் ஏத்தப்படுமல்லவா! இவ்விதம் ஒவ்வொருவரும் செய்ய முற்படுவாராயின் நம் கிராமங்களைப்போல வைத்துக்கொள்ள பிறநாட்டவர்களும் முயற்சிப்பார்களல்லவா? என்னுடைய அபிப்பிராயப்பட்டவரையில் செட்டியார்கள் தத்தம் கிராமங்கள் சீர்படுத்தப்படும்வரை பிறவிடங்களில் ஒரு பைசாக்கூட செலவுசெய்வதில்லைஎன்று கங்கணம்கட்டிக்கொள்ள வேண்டும். க்ஷேத்திரங்களில் திருக்கோயிலுக்குச் செலவிடும் ஏராளமான செலவின் ஓர் பாகத்தின் ஒரு அம்சத்தை உள்ளூரிலேயே நகர சௌகரியங்கள் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் செலவழித்தால் அது செட்டிநாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திற்கும் பெரிய வரம் கிடைத்தது போலாகும். நம்முடைய நாட்டில் நவீன முறையில் அமைக்கப்பெற்ற ஆண் பாடசாலைகளும், பெண் பாடசாலைகளும், நந்தனவனங்களும் (Parks) எங்கிருக்கின்றன? பிள்ளைகள ஆடிப்பாடி விளையாட பொதுவிடங்கள் (Play–Grounds) எங்கிருக்கின்றன? நற்சங்கங்கள் எங்கே நிறுவப்பெற்றிருக்கின்றன? மருத்துவச் சாலைகள் மேல் நாட்டைப்போல் எங்கு திறம்பட நடத்தப்பட்டுவருகின்றன? நமது நாட்டில் இன்னும் நிலவிவரும் திண்ணைப் பள்ளிக்கூடங்களைக்கொள்ளை நோய் கொண்டுபோக வேண்டும்! புதிய முறைகள் கொண்ட பள்ளிகள் நிறுவப்பெறல்வேண்டும்.

நம் கிராமங்களில் கால்வயிறுக்கஞ்சி யின்றிக் கதறும் ஏழைகள் பலர் ஏங்கி நிற்க அவர்களைக்கவனியாது வேறு எங்கேயோ கற்கோட்டைகளாகிய கோயில்களைக்கட்ட பணத்தை வாரி வாரி இறைக்கின்றனர். இவ்விதம் செய்வது அறவே நிறுத்தப்பெறுதல் வேண்டும். வாரி இறைக்கும் பணத்தில் ஏதாவது ஓர் பின்னத்தை மட்டும் ஒரு கிராமத்திற்குச் செலவழித்தால் அதனால் அவசியமாயிருக்கும் நலன்கள் பலவற்றையடையலாம். மேல்நாட்டிலுள்ள கிராமங்களை (Garden Cities) போல் செய்யும்வரை ஒரு செப்புக்காசுகூட பிறவிடங்களில் செலவிடக்கூடாது என்பதைக் கண்டிப்பாகவும் அழுத்தமாகவும் கூறுகின்றேன். இனிமேலாவது நம்முடைய கிராமங்கள் அனைத்தையும் மேல்நாட்டுக் கிராமங்களாகச் செய்வோம். செய்த அதன் பெருமையை வருங்காலத்தில் அடைவோம். இந்தியாவின் பூகோள சாஸ்திரத்தில் செட்டிநாடும் சிறந்த நாடாக விளங்கட்டும். நம்முடைய நாட்டின் சிறப்பானது பிறநாட்டினரை நேரிற்கண்டு ஆநந்தித்துச் செல்லுமாறு தூண்டட்டும்.

இவ்விதம்நாம் முற்றுப்பெறச் செய்துவிடுவோமாயின் அதுவேபோதுமானது. இவையாவும் செய்தது போக அதிகப் பொருள் (Surplus) இருப்பின் எவ்விதமான தங்கு தடையுமின்றி இப்பூமியின் எப்பாகத்திற்கு வேண்டுமாயினும் கொண்டுபோய் (Seven Pagodas) ஏழு கோயில்கள் மட்டுமல்ல; எழுபது கோயில்கள் கட்டுங்கள்!

இனிப் பெண் மக்களின் நிலையைச் சீர்திருத்த முற்படவேண்டும். தாய்மார்கள்தான் குழந்தைகளைப் பிற்கால வாழ்விற்கு ஏற்றவாறு அமைக்கவேண்டிய முழுப் பொறுப்புக்கொண்டவர்கள் என்று எவராவது உணருகின்றனரா? தாய் ஒருத்தியே தன்னுடைய முறையினால் குழந்தையைத் திறம்பட வளர்த்து பிற்கால வாழ்வை அமைக்க வேண்டியவளாகின்றாள். இவ்வுண்மையை நாம் உணர்ந்தவர்களாயிருப்பின் நம்முடைய பெண் மக்களிடம் கொண்டுள்ள வெறுப்பு நியாயமாகுமா? இவ்வாறு தாயின் பழக்கங்கள் கொண்டுவரும் குழந்தைகளே பின் பருவத்தில் பெற்றோர் நிலையை அடைகின்றனர்! குழந்தைகள் தொட்டிலில் கொள்ளும் பழக்கங்கள் விரிவுடன் வளர்ந்து சுடுகாடு சேரும் வரையில் இருந்து மறைகின்றன. குழந்தைகள் தொட்டிற்பழக்கத்தை கொள்ளுவது தாயிடமிருந்தா? அல்லது தந்தையிடமிருந்தா? இப்படியிருக்க என் தாய்மார்களை ஒன்று மறியாது, புறக்கணித்து அலைந்துதிரிய விடவேண்டும்? மற்றும் மனைவியே மனையில் மாண்புடன் மகிழ்ச்சியை எப்பொழுதும் நிலவும்படி செய்வதற்கு ஏற்றதகுதியானவள். இவைகளைக் குறித்துச் சிந்திக்கும் பொழுது அதி விரைவில் பெண் மக்களை நல்வழிப்படுத்தி முன் அணிக்குக் கொண்டுவர வேண்டியது ஒவ்வொருவரும் தம்முடைய முக்கியமான கடமை என்பதை நன்குணர்தல் வேண்டும். அவர்களுடைய அறியாமையை அறவே அகற்றுதல் வேண்டும். மேல் நாட்டில் ஆண் மக்களும் பெண் மக்களும் தேசப் பணியில் சமமான பங்கு எடுத்துக் கொள்ளுகிறார்கள்; அதனால் நாடும் நல்ல நிலையிலிருக்கின்றது. பெண்மக்கள் முன்னேற்றத்திற்கான வழிகளைக் காணல் வேண்டும் (Ring out the old, Ring in the new—Tennyson) பழையன கழிதல் வேண்டும். புதியன புகுதல் வேண்டும். புதுமையைப் போற்றுதல் வேண்டும். இவ்விதமாகப் பெண் மக்களை நன்முறைப்படுத்தினால் அல்லாது நாம் நற்காலத்தை எதிர்பார்க்க முடியாது.

கடல் கடந்து அயல் நாடு செல்லும்பொழுது தம் மனைவியரையுமேன் உடன் அழைத்துச் செல்லக்கூடாது? இத்தீய பழக்கம் ஒழிதல் வேண்டும். ஐரோப்பிய சமூகத்தினர் தம்முடைய பெண்களை நம்மைப்போல் கொடுமைப் படுத்துவதில்லை அவர்களுக்கும் பூரண சுதந்திரத்தை அளித்திருக்கிறார்கள். தாம் வெளிநாடு செல்லும் பொழுது மனைவியரையும் விரும்பி உடன் அழைத்துச் செல்லுகின்றனர். குஜராத்தியர்களென்ன? பர்மா முதலிய நாடுகளில்வாழும் பிராமணர்களென்ன? மற்றவர்களென்ன? இவர்களெல்லாம் தம் மனைவி மக்களை விட்டு ஆண்டுகள் பல தனியே கழிக்கின்றனரா? ஏன்

நமது செட்டியார்களும் வியாபாரத்திற்குச் செல்லும் பொழுது தம் மனைவியரை அழைத்துச்செல்ல வேண்டும் என்பது குறித்து நான் அதிகம் கூற வேண்டுவதில்லை. காரணத்தை யாவரும் நன்கு அறிந்ததே. இனி மேலாவது ஒவ்வொருவரும் புத்துணர்ச்சி கொண்டு புதுவழி தேடி நலன் அடைவாரென நம்புகிறேன்.

இவை யாவும் ஒருபுறமிருக்க கடல்போற் பரந்திருக்கும் செட்டியார்களின் தொழில் மிருந்த கவலைக்கு இடந்தருவதாயிருக்கின்றது. கற்றறிந்த பெரியோர்களும் இது குறித்துப் பேசத் தயங்கும் பொழுது நான் எழுதத் துணிந்தது அசட்டுத் துணிவாகும். (Fools rush in where angels fear to tread) எடுத்துக்கொண்ட விஷயத்தைப் பற்றிக் கூறவேண்டியது, என்னுடைய கடமையன்றோ? இப்பொழுது இந்தோ சைனாவிலிருந்து செட்டியார்களை வெளியேற்ற தீவிர முயற்சி நடந்து வருகிறது. நாம் எவ்வளவோ நியாயமாகவும், பெரியார்கள் பலரைக் கொண்டும், நம்முடைய அரசாங்கத்தார் மூலமாகவும், விவாதத்தில் பலன் ஒன்றும் அடைந்தபாடில்லை. மலாய் நாட்டிலும் (F M. S.) ஸ்டிரெயிட் செட்டில்மெண்டிலும் (S S) நம்முடைய வட்டி விகிதத்தைப்பற்றிக் திட்டங்கள் அமைக்க அரசாங்க சபை மூலமாக யோசனை நடைபெறுகிறது. பர்மாப் பிரிவினையும் முடிந்த விஷயமாக இருக்கிறது. சென்னை சட்ட சபையில்சில முக்கிய அங்கத்தினர்களை (Select Committee)லேவாதேவிக்காரர் மசோதாவை (Money lenders Bill) பரிசீலனை செய்யும்படி நியமித்திருக்கின்றார்கள். முன் கண்ட காரணங்களினால், பல தலைமுறைகளாகசர்வசாதாரணமாகநாம்செய்து வந்த லேவாதேவித் தொழில், நாம் முன்னைய நிலையுடன் வாழ வேண்டுமாயின், அறவே மாற்றப்படுதல் வேண்டும். இதில் மாறுதல் வேண்டும் என்பதை எல்லோரும் விரும்புகிறார்கள் எனபதை செட்டிமார்கள் நன்குணர்தல் வேண்டும். நாம் லேவாதேவித் தொழில் செய்யத்தான் வேண்டுமென விரும்பின் அதற்கு ஒரு வழிதானிருக்கின்றது. நம்மவர்களுள் பலர் ஒருங்கு சேர்ந்து Central Bank of India-Bank of India முதலிய பாங்குகளைப் போல கூட்டுப் பாங்குகள் அமைக்க வேண்டும். அவைகள் திரண்ட நிதி கொண்டனவாயும், பங்குக்காரர்கள (Share-holders) அதிகம் கொண்டனவாயும், தற்கால பங்கு முறைப்படி நடத்தப்படுவனவாயும் இருத்தல்வேண்டும். வெண்ணிலையாகப் பணங்கொடுத்தல் பிராம்சேரி நோட்டின் பேரில் (Pro-note) பணங்கொடுத்தல் என்ற முறைகளை முற்றும் ஒழிக்கவேண்டும். அதிக வட்டிக்கு ஆசைப்பட்டு முன்பு கொடுத்து வந்தது போல் அல்லாமல் மற்ற பாங்குகளைப்போல் பெருமானமுள்ள சொத்திற்குத் தான் பணங் கொடுக்கவேண்டும். இம்முறைகளை அனுசரித்தால் வட்டி விகிதம்குறையும். தக்க ஊதியத்தையும் பெறலாம். இல்லையேல் அதிக வட்டிக்கு ஆசைப்பட்டுப் பணத்தைக் கொடுத்து முதலையும் இழக்கவேண்டியதாகும். இவ்விரண்டனுள் நீங்கள் எதை விரும்புகின்றீர்கள்? செட்டியார்கள் இப்பொழுதிருக்கும் கஷ்டமான நிலையிலும்ஒற்றுமைப்படின் பெரிய பாங்குகள் நிறுவுவதற்கேற்ற பெரும பொருள் அவர்களிடமுண்டென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது.

என்னைப் பொறுத்தமட்டில், இந்தியாவில் தற்பொழுது வளர்ந்து வரும் கைத் தொழிற்சாலைகளில் நாம் பங்குஎடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நம்பிக்கை கொண்டவன் இவ்விதம் பங்கு எடுத்து வேலை செய்தால் ஊதியம் பிற்காலத்தில் நன்கு பெறலாம் என்பதைத் திட்டமாகக்கூறுவேன். இதற்கு முன்னரே தீவிரமுள்ள சில செட்டியார்கள் செட்டித்தெருவில் செய்துவந்த தொழிலின் மூலத்தின் ஓர் பாகத்தை வேறுவகைகளில் போட்டிருக்கிறார்கள். சாதாரண முறையைக் கொண்ட நம்முடைய தொழிலைக் காட்டிலும் வேறு தொழிலை எவ்வளவு திறமையாகவும் ஊக்கமாகவும், வெற்றிகரமாக நடத்தி ஊதியம் பெறுகின்றனர் என்பதற்கு யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனி, காளீஸ்வரர் மில்ஸ், இவை இரண்டும் போதிய சான்றாகும்.

இப்பொழுது கைத்தொழிலில் முன்னேற்றமடையும் இந்தியாவைப் பாருங்கள். அரசாங்கத்தார் பதினைந்து வருடங்கள் வரை நம் நாட்டில் உற்பத்தி செய்யப்படும் சர்க்கரைக்கு ஆதரவும் (Protection) அளித்திருக்கிறார்கள். கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக ஐம்பது கம்பெனிகள் ஆரம்பிக்கப் பெற்றிருக்கின்றன. அவைகளுள் சில கொழுத்த லாபம் (Fat Dividend) பிரித்துக் கொடுக்கப்போகின்றன. இத்தொழிலில் போதிய ஊதியத்தை திட்டமாகப் பெறலாம். நாமும் எத்தகைய கஷ்டமுமின்றி இவ்வாலைகளை ஏற்படுத்தலாம். முதலில் வெளியிலுள்ள திறமைசாலிகளைக் கொண்ட சாலைகளை நடத்தவேண்டும். இனி மேலாவது நம்முடைய சமூகத்து இளைஞர்களுள் போதிய ஆங்கில அறிவுள்ளவர்களைப் பொறுக்கியெடுத்து மேல் நாட்டிற்கு அனுப்பி தொழிலைக் கற்று வரும்படிசெய்ய வேண்டும். மற்ற தொழில்முறைகளையும் இவ்விதமே ஆண்டுள்ள பெரிய தொழிற்சாலைகளில் பயிலும்படி செய்தல்வேண்டும். இவர்களுக்கு வேண்டிய செலவிற்குப்பணம் கொடுக்க இன்னும் நம்மிடத்தில் போதிய பொருள் இருக்கின்றது. கோவில் பணம் அளவுக்கதிகமாக இருக்கிறது. அப்பணத்தைக்கொண்டு வெள்ளி இரதங்கள் செய்யாது இத்தகைய நல்ல காரியங்கட்கு உபயோகப் படுத்தலாம். இப்பணத்தைக் கொண்டு வேறு நல்ல காரியங்கள் செய்துவிடலாமென எனக்குத்தோன்றவில்லை. டாட்டா ஸ்காலர்ஷிப் (Tata Scholarship) உதவி கொண்டு எத்தனையோ மாணவர்கள் அயல் நாடு சென்று தொழில்கள் கற்று இன்று இந்தியாவிலே உழைத்து வருகின்றார்கள். நம்முடைய பணத்தைக்கொண்டு நம்மினைஞர்களை அயல் நாடு சென்று தொழில்கள் பல கற்று வரும்படி செய்து நாமேதொழிற்சாலைகள் அமைத்து ஊதியம் பெறலாம். ஆனால் இவ்விதம் உடனே செய்வதற்கு இயலாது. காலம் அதிகம் செல்லுமாயினும் வேண்டிய வழிகளைச் செய்ய விரைவில் ஆரம்பிக்கவேண்டும். இவைகளால் நாம் கணக்கில்லாத நன்மைகள அடையலாம்.

இத்தகைய நூதன வழியைப் பின்பற்ற வேண்டுமாயின்செட்டியார்கள் மூலப்பொருளிலிருந்து அதிகமாகச் செலவு செய்வதைக் குறைக்கவேண்டும். பெரியகட்டிடங்கள் கட்டுவதிலும், ஆடம்பரமான காரியங்கள் செய்வதிலும் பிறர், பெருமையாகப்பேசவேண்டுமென்று கல்யாணங்கள், புதுமைகள் செய்வதிலும் பெரும் பணத்தைச்செலவு செய்யக் கூடாது. வீணே செலவழிக்காது ஒற்றுமைப்பட்ட வியாபாரங்களைச் செய்யவேண்டும். The Army and Navy Co-operative Stores Ltd. போல நாமும் நாட்டுக்கோட்டை நகரத்தார் ஸ்டோர்ஸ் (The Nattukkottai Nagarathar Stores) என்று ஆரம்பித்து செட்டி நாடு முழுவதிலும், நம்மவர் தொழில் செய்யும் அயல்நாடுகளிலும் கிளைகள் வைத்து நடத்தினால் நமக்குச் சாதகங்கள் பலவுண்டு. இவ்விதம்நடத்தவேண்டுமென்ற எண்ணம் எனக்கு அடிக்கடி தோன்றியதுண்டு. ;இக்கூட்டுக் கடையை ஆரம்பிப்பதற்கு வேண்டிய பொருளை ஆயிரக்கணக்கான பங்குக் காரர்கள் (Share holders) மூலமாகச் சேர்க்கலாம். இதனால் ஒவ்வொருவரும் தாம் எடுத்த பங்கிற்குத் தக்க ஊதியத்தைப் பெறுகின்றனர். இக் கூட்டுக் கடையின் மூலமாக சாமான்களை மலிவான விலைக்கு விற்கலாம். இங்ஙனம் செய்தோமாயின இதைக் கண்ணுற்று யாவரும் பெருமிதமடையலாம். இதை ஆரம்பிப்பதற்கு அதிகமான பொருள் வேண்டுமென்பது உண்மை. நம்முடைய தலைவர்கள் ஒன்று சேர்ந்து முற்பட்டால் ஆகாத காரியமும் உண்டோ? விரைவில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று முழுமனதுடன் விரும்புகிறேன்.

இத்தகைய விஷயங்களை நம் சமூகத்தினரிடையே பரப்பப் பத்திரிகைகள் பல வேண்டும். 'தனவணிக'னைப் போலுள்ள பத்திரிகை வாயிலாக அருமையான பல விஷயங்களை அறிந்து அதன்பயனைப் பல நன்மைகள் அடைகிறோம் என்பதை வாசகர்களுக்கு உணர்த்த விரும்புகிறேன். இதை இன்னும் பெரிய பத்திரிகையாகவும் வெற்றிகரமுள்ளதாகவும் செய்யவேண்டியது நம்முடைய கடமையாகும். இந்தியாவில் பொருளாதார நிலைகளைக் குறித்தும், வியாபாரத்தைக் குறித்தும் வெளியாகும் "Indian Finance" "Capital" முதலிய பத்திகைகளைப்போல நாமும் பத்திரிகைகள் வெளிவரும்படி செய்தல வேண்டும். நம்மைப்போன்ற சமூகத்தினருக்கு அது பெருத்த நன்மையைத் தருவதும் முக்கியமானதும் ஆகும். இதற்கு ஆக வேண்டிய வேலைகளை நம்முடைய சங்கங்களின் மூலமாக நாம் சாதித்துக்கொள்ள வேண்டும். பெயரளவில் சங்கங்கள் இருப்பதிற் பயனில்லை. செலவைப் பொருட்படுத்தல்கூடாது. சென்னையில் ஐரோப்பிய சமூகத்தினர் தங்களுக்கு வேண்டியவற்றைச் சங்கத்தின் மூலமாக எளிதில் அடைகின்றார்கள். இதன் வேலைகளைக் கவனிப்பதற்கு தனிப்பட்ட ஒருவரை மாதம் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் கொடுத்து நியமித்திருக்கிறார்கள். அதுபோல நாமும் ஒழுங்குபட நடத்தும் திறமையுள்ள செட்டியார்களை நியமித்தல் வேண்டும். இவ்வாறு நாம் சங்கங்களை சரிவர நடத்தினால் அரிய பல விஷயங்களைச் சாதித்து நன்மயடையலாம் என்பதிற் சற்றேனும் சந்தேகமில்லை. இறைவன் திருவருளால் நம்முடைய சமூகம் சிறந்ததாக விரைவில் விளங்க வேண்டும்.

ஆசிரியர் இக்கட்டுரையை எழுதுமாறு என்னைத் தூண்டியதற்கு மிக்க வந்தனம். இதில் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு தலைப்பினைப் பற்றியும் தனித்தனியாக—விரிவாக எழுதவேண்டுமென்ற விருப்பம் உண்டு. எனவே ஆசிரியர் இடந்தருவாராயின் விரிவாகப் பின்னர் எழுதுகிறேன்.

———

சீர்ச்சாழல்.

திருச்செந்தூர் திரு. மு. கிருஷ்ண சர்மா.

மண்டலத்து மக்கள் வறுமையினைக் கண்டிரங்கி
உண்டிமிகச் சுருக்கும் உத்தமனுர் காணீரே
உண்டிமிகச் சுருக்கும் உத்தமனுர் வாய்திறப்பின்
வண்டி வண்டி யாகப்பொன் வந்திடுங்காண் சாழேலோ.

நித்தமுநம் நாட்டின் அடிமை நிலைக்குருகி
மெய்த்தவத்தோ ராகி மிகமெலிந்தார் காணீரே.
மெய்த்தவத்தோ ராகி மெலிந்தார்க்கு மன்னவரும்
சித்தம் நடுங்கித் திகைப்பார் காண் சாழேலோ.

கருணைத் தடங்கடலாம் காந்திஜியை ஓர்சாரார்
வருணச் சிமி என வாதிப்பார் காணீரே.
வருணச் சிரமத்தை வாதிப்பார் ஆனாலும்
ஹரிஜனத் தோடுண்டி அருந்துவார் சாழேலோ.

இப்புவியிற் சத்தியமே என்றுணியாம் என்பாரை
உப்புத் திருடனென் உன்னுவார் காணீரே
உப்புத் திருடன் உணவுப் பொருளெவர்க்கும்
ஒப்பப் பொதுவென் றுரைப்பார்காண் சாழேலோ.

துரியோ தனனவையிற் தூதுசென்ற கண்ணன்போல்
பெரியோரும் தெவ்வவையிற் பேசினுர் காணீரே
பெரியோர் பயனின்றி மீண்டும் பிறர்குருதி
ஒருதுளியும் சிந்த உள்ளம் பொறுர் சாழேலோ.

இன்னு செய்யாமைக் கெடுத்துக்காட் டாயவரை
ஒன்னர் சிறையுள் ஒறுத்தார்கள் காணீரே.
ஒன்னர் சிறையுள் ஒறுப்பதென்ன என்பீரேல்
மின்னர் நிலவொளியைக் கள்வர் விரும்புவரோ.

காவாத வேந்தர்பிழை கண்டெங்கும் சொல்வானை
எவாடாப் பித்தனென ஏசினர் காணீரே
எவாடாப் பித்தர்நம்மோ டென்றணங்கு வாரொன்
றிரவாப் பகலாக எங்குவரவ் வேந்தருமே.

இம்மா நிலத்துற்ற வினையர்தாய் அன்னுரை
நிர்மாணப் பக்கிரியா நிந்தித்தார் காணீரே.
நிர்மாணப் பக்கிரியை நீள்சிறையின் நின்றுவிட
அம்மா படைத்தவர் அஞ்சுவதேன் சாழேலோ.

உச்சிக் குடுமியையும் ஓட்டைப்பல் வாயினையும்
மெச்சிச் சிறுகுழவி மேல்விழ்வரா காணீரே.
மெச்சிச் சிறார்பலரும் மேல் விழும் தூயவ்வரை
இச்சகத்து மிக்கோரும் ஏத்துவர்காண் சாழேலோ.

கல்லாதார் அன்னவன்ரச் சாதிக்கலப்புச்செய்
பொல்லாதா ரென்று புழுங்குவார் காணீரே.
பொல்லாதார் சுற்றம் புனித ஹரிஜனத்தை
எல்லாரும் சோதரரா எண்ணுகஎன் றேதியதே.

நுண்ணறிவில் லாதவரை இந்துமதம் நூறிடுவான்
எண்ணமுள்ளார் என்றே இகழ்வர்கள் காணீரே.
உண்ணிறை நோய் உற்றமதத் துன்மாசகற்றவந்த
புண்ணியவா னென்று புரியார்கள் சாழேலோ.

பொறையே அணிகலனுப் பூண்ட பெரியாரைச்
சிறையில் அடக்கினர்கள் தேசியம் மாயுமென்றே
சிறையில் அடைத்த பின்னர்த் தேசியம் ஓங்கிவளர்ந்
துறுதிபெற ஒற்றுமைவேர் ஊன்றியதாற் சாழேலோ.

சிறையே புக்கிடமாச் சிற்றுடையே அம்பரமாப்
பெறுவானுக் கிங்குப் பெருமைஎவன் காணீரே.
பெறுவான் திருஉருவும் ஓவியமும் பேருலகோர்
மறுவில் மனத்தும் மனைதொறுங்காண் சாழேலோ.

ஆலயத்தி னுள்ளே ஹரிஜனத்தை விட்டாற்பின்
தாலிகட்ட உன்மகளைத் தாவென்பார் என்பர்சிலர்
ஆலயத்துட் செல்வோர்கள் ஆருமிது காறுமிந்தப்
போலி வழக்குப் புகலாமை ஓர்ந்திலரே

ஒற்றைத் துகிலுடுத்தோன் உறுதவத்திற் கேற்பனல்லால்
மற்றை அரசியலில் மாட்டானென் பார்சிலரே
சற்றுமயர் வின்றித் தனித்தொகுதி வேண்டாவென்
றிற்றைக்குச் சொல்லிக்க யாரால் இயன்றதரோ

எல்லாவாற் றானும் இவர்பெரியர் ஆயிடினும்
இல்லா வழக்கம் எடுத்துரைப்பார் என்பர்சிலர்
இல்லா வழக்கம்வரின் எய்துநலன் ஆராய்வான்
வல்லாரல் லாக்கூவ மண்டுகம் போல்வாரே


திண்ணமனங் கொண்டு கொடுங்கோல் செறும்அவனைக்
கண்ணனென வேலனெனக் கண்டுரைப்பார் காணீரே
கண்ணனென வேலனெனக் கண்டாலும் வேலாழி
நண்ணக் கனவினிலும் நாட்டமிலார் சாழேலோ.

நாடியாக் கைத்தொழிலை நாம்பெருக்கல் வினையர்க்குக்
கேடுவிளைக் காதுகொலோ என்பர்சிலர் கேளீரே
கேடுவிளை தீப்பிணிகள் கெட்டொழியின் வாகடர்கள்
தேடுபொருள் யாமிழந்தோம் என்றழுதல் சீரியதோ

பல்லுயிரும் தம்முயிராய்ப் பாவிக்கும் நல்லார்க்கு
வல்லுநராம் ஆங்கிலர்பால் வந்தவெறுப் பென்னேடி
வல்லுநரா மாகிமத்தை ஆங்கிலரும் வாழ்வடக்கின்
அல்லவரைச் சேர்ந்துநமை அங்கொறுப்பர் சாழேலோ


பாரதர்மெய்ந் நீருவி பார்ப்பாயப் போராட்டும்
சாதிசொல் கீதைதலைக் கொண்டான் காணீரே
சாதிசொல் கீதைதலைக் கொண்டுமே சிற்றுயிராம்
ஓரெறும்பும் வீயின் உடல்விதிர்ப்பார் சாழேலோ

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம், பர்மா.




பத்தாவதாண்டு நிர்வாக சபையினரும் உத்தியோகஸ்தர்களும்.


பர்மா நகரத்தார் கோவில்கள்.



தயிட்டுமியோ கோவில்.



கீமந்தான் கோவில்.



மூப்பின் மடம்.

தீண்டாமை

திரு. எஸ். சோமசுந்தர பாரதியார் எம். ஏ. பி. எல்.

தீண்டாமையென்பது தற்காலம் பிறப்புக்காரணமாக மக்கள் ஒருவரையொருவர் தொடத்தகாமை, என்ற பொருளில் வழங்குகிறது. சில வகுப்பினரை அவ் வகுப்பில் அவர் பிறந்த ஒரே காரணத்தால் மற்ற யாவரும், என்றும், அவர்கள் எத்தனை சுத்தம் உடையவராயினும் அவர்களைத் தொடலாகாது, என்ற வழக்கம் நம் நாட்டில் அடிபட்டு இடை நெடுங்காலமாக கையாளப் படுகின்றது. இது சமய ஆதாவுடையதுமட்டுமல்ல. இன்றியமையாத சமய விதியாகவும் கருதப்படுகின்றது. தொத்து நோய், தொழு நோய், இழிந்த ஒழுக்க நிலை முதலிய அருவருக்கத் தக்க காரணங்களால் அந்நிலையினரைப்பிறர் தீண்டாமை இயல்பு. ஆனால் அத்தகைய நியாயங்களொன்றுமின்றி கேவலம் பிறப்பொன்றே ஒருவரைப் பிறர் அணுகாமல் அகல விலக்கப் போதுமான நியாயமென்பது அறிவுக்கும் பிற நாகரீக உலக அநுபவத்திற்கும் பொருந்தவில்லை.

மாந்தர் எல்லாரும் இறைவனுக்கு மக்கள் என்பது எந்த மதமும் சொந்தம் பாராட்டும் கொள்கையாகின்றது. ஒருவன் பிறப்பளவில் உயர்வு தாழ்வு இருக்க நியாயமில்லை. செல்வ நிலையில் வேறுபடலாம். பதவி வரிசைகளில் வேறு பாடிருக்கலாம். எனில், ஒருவரையொருவர் எஞ்ஞான்றும் இழிவாக்கி நடத்த பிறப்பு மட்டும் எப்படி உதவக்கூடும் என்பது மட்டும் விளங்கவில்லை. இது கொடிய வழக்கமென்பது வெளிப்படை.

இந்தியாவில் மட்டுமே இக்கொடிய வழக்கத்தைக் காண்கின்றோம். பிற நாகரீக உலக முழுவதிலும் இத்தகைய வழக்கமில்லை. இந்தியாவிலும்கூட இந்துக்களுக்குள் மட்டுமே இது வழங்குகிறது. மற்றபடி பௌத்தர், கிறிஸ்தவர், மகமதியராதி இந்தியர்களெல்லோரும் தீண்டாமை வழக்கத்தை தீண்டாமலே விலக்கியுள்ளார். இந்துக்களும் தங்கள் சமயத்தைக் கையாளுபவருள் சில வகுப்பினரை அவர்தம் சமயத்தைக் கையாளும் வரைதான் இத்தீண்டாமைத் தண்டனைக்குட்படுத்துகின்றனர். இத் தீண்டா வகுப்பினரில் இந்த சமயத்தைக் கைவிட்டுப் புறமதங்களில் புகுந்தவரை அவர் பிறப்பைக் கருதாமல் தீண்டத் தக்கவராகவே நடத்த ஜாதி இந்துக்கள் சம்மதிக்கின்றனர். ஆகவே தீண்டாமை பிறப்பளவிலில்லை. சமயத்தில்தான் இருக்கவேண்டும் என்றுதோற்றும்படி இவ்வழக்கம் இடந் தருகின்றது. தீண்டாமைக்குப் பிறப்பொன்றே காரணமானால், அப்பிறப்புடையவர்எந்தமதத்தினராயினும்அவரை அதுபாதிக்கவேண்டுவதேநியாயமாகும். நம்மவர்வழக்கமோ அப்படியில்லை. இந்துப் பறையர், இந்துப்பள்ளர் இந்துப் பஞ்சமர் என்று விலக்குகிறோமே தவிர, இவர்களே கிறிஸ்தவர் அல்லது முஸ்லீம்களாகிவிட்டால் அவர்களை இழிவு கூறாமல் தொட்டுப் பழகத் தடை கிடையாது. மதத்தை மாற்றினவுடனே இவர்கள் பிறப்பு மாறிவருமா? அப்படிக் கீழ்ப் பிறந்தாரையும்புறச்சமய மாற்றம் உயர்பிறப்புடையாராக்கிவிடுமென்று நாம் நடக்கையால் ஒப்புக்கொள்வது, நமது சமயத்திற்கில்லாத ஏற்றத்தைப் பிற மதங்களுக்குஇருக்கும்படியாக நாமேஒப்புக்கொள்வதாகவல்லவா முடியும்? இதுஉண்மையானால், நமது சமயத்தைவிரைவில் விட்டொழித்துவேறு மதங்களை மேற்கொள்ள எல்லாரையும் தூண்டுவதற்கு இது ஒரு நல்ல வழியாகுமல்லவா? நமது சமயத்திற் பிறந்து அதனைக் கைவிடாமல் அநுஷ்டிப்பவரும், நமது சமயம் நல்லதென மேற்கொண்டு வருபவரும், எத்தனைநல்லொழுக்கத்தாலும், கல்வி தூய ஆசாரங்களாலும் தீண்டத்தகாதவராக முடியாது; ஆனால் நமது மதத்தைவிட்டு வேறு சமயமேற்கொண்டவுடன் அவர்கள் எல்லோரோடும் அணுகித் தொட்டுப் பழகும் ஒத்த உரிமை பெறுபவராவரென்றால் நமது சமூகத்துக்கே பழி படைத்ததாகுமல்லவா?


“பிறப்பால் எல்லாரும் எவ்வகுப்பிற் பிறந்தாலும் ஒத்த சூத்திரரேயாவர்; நல்லொழுக்கத்தால் யாரும் பிராமணராவர்”

என்று கடவுட் கீதை கரங்குகின்றதே! “பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்” என்று தேவ பாவலரான வள்ளுவர் வற்புறுத்தினாரே! இவையெல்லாம் பொய்யா? கீதையும் குறளும் இந்துசமயம் ஒப்புக்கொள்ளாத பாசண்டநூலா? இவைகள் இந்து சமயிகள் அனைவரும் போற்றிப் பேணும் சமய சாத்திரமாக அமைந்திருக்கின்றனவே. அப்படியிருக்க இறைவன் மக்களுட் சிலர் என்றும் மற்றவரால் தீண்டப்படாத இழிதகவுடையாராகக் கொள்ளுதல் தெய்வ சம்மதமாகுமா! உண்மைச் சமய தத்துவத்திற்கு முற்றிலும் மிகக் கொடிய கொள்கை விரோதமுடையதாகவன்றோ தோன்றுகின்றது.

இனி வேதம், உபநிடதம், கீதை வியாச சூத்திரம் திருமந்திரம் முதலிய சமய சாஸ்திரங்கள் ஒன்றிலும் பிறப்பால் என்றும் உயர்வுடைமை சிலர்க்கும் விதிக்கப்படக் காணவில்லை. அதற்கு மாறாக ஒழுக்கமுடைய மெய்யன்பர் எவ்வகுப்பினராயினும் மேலோராகவே கருதப்படுவார் என்பதே நமது இந்து சமயங்களெல்லாம் பறையடிக்கப் பார்க்கின்றோம். கண்ணப்பர், நந்தனார், முதலிய சைவ சமய நாயன்மார்களும் திருப்பாணர் முதலிய ஆழ்வார்களும் மற்றைய மேல்வகுப்பிற் பிறந்த அந்தணருக்கும் கிடையாத பெருமை பெற்று மோட்சத்திற்கு முதலுரிமை உடையாராக சைவ வைணவ நூல்களால் அறிகின்றோம். அன்றியும் குறத்தியை முருகவேளும், பாத்தியைச் சிவபிரானும் உவந்து மணந்து சிறப்புச்செய்ததாக புராணங்கள் முழங்குகின்றன. தேவராஜ குமாரியான தெய்வானைக்கு விலகிய விளக்கமற்ற கோவில் சமைத்து குறத்தியான வள்ளியம்மனுக்கு மிக நெருக்கமுடைய சமீபத்தில் சிறப்புடைய திருவோலக்கம் தருவதையே நாம் எல்லாக் கோவில்களிலும் காணலாம். நந்தனுருக்கும் கண்ணப்பருக்கும் அந்தணாளர் அருச்சகராக அமைந்து மகிழ்கின்றனர்.

இனி இவையெல்லாம்போதாமல்நாராயணரோ புறமதங் கூட நேசத் தொடர்புக்கும் அணுகியமனைப் பழக்கத்துக்கும்தடையாகாதென்றுகாட்டுவதற்கு துலுக்க நாச்சியாரை மணந்து வழிகாட்டி மக்களுள் பிறப்பு சமயங்களால் உயர்வு தாழ்வு கிடையாது, எல்லோருஞ் சமம் என்ற உண்மையையும் விளங்க வைத்துள்ளார். இப்படி இந்துக்கள் வணங்குங் கடவுளர் எல்லாருமே தீண்டாமை தவறென்று தம் செயலால் காட்டி தீண்டா வகுப்பில் பிறந்த பெண்டிரை உரிய மனைவியாக மணந்தே சிறப்புச் செய்து, தம் சமத்துன மரபிற் பிறந்த பலரையும் நாயன்மார்களும் ஆழ்வார்களுமாக்கி அந்தணர் முதலிய மேல் வகுப்பினர் வணங்கும்படி யாட்கொண்டு வழி காட்டியிருக்க இனி இவரை பிறப்பால் என்றும் தீண்டாதவராக நடத்த இந்துக்களில் யாருக்கு எப்படி என்ன உரிமை ஏற்படக்கூடும்? முதலில் இத் தெய்வங்களை தீண்டாதவராக விலக்கிவிட்ட பிறகல்லவா, இவர் தம் வகுப்பினரை விலக்க நினைக்கக் கூடும்? ஆகவே, சமயநூல் அளவிலாவது மத அநுஷ்டானத்திலாவது இத் தீண்டாமை வழக்கத்திற்கு நியாயமான ஆதரவு காண முடியாது. “சிலர் துராச்சாரம் அருவருக்கத்தக்க ஆகாரம் நாற்ற முடைமை ஆதிய ஏதுக்களால் அணுகுவதற்குரியரல்லர். அதனால் அவரை விலக்குகின்றோம்” என்றால் அது பிறப்பளவில் என்றும் மாறா வியாதியாகக் கொள்ள இடந்தாராது. எப்பிறப்பினருள்ளும் இழிதகவுடையர் எல்லாரையும் அருவருத்து விலக்குவதும், தூயரும் நல்லொழுக்கமுடையவருமானவரை தழுவிப் பழகுவதும் யாண்டும் எஞ்ஞான்றும் எல்லாரும் ஒப்புக்கொள்ளத்தக்க நியாயமாகும். இதை விடுத்து கேவலம் பிறப்பை மட்டும் காரணமாக்கிச் சிலரை விலக்குவதுதான் தவறுடையது. இத்தகைய தீண்டாமையைத் தான் காந்தியடிகள் நமது சமூகத்தைப் பற்றிய தொத்து நோயாகக் கருதி விரைந்து விலக்க வேண்டுமென்று முயல்கின்றனர். இத் தீண்டாமையை இந்து சமய விதியாகக் கருதுபவரே நமது மதத்தைப் பழிப்பாவர் என்பது அறிவுடையார் தற்போது உணர்கின்ற உண்மையாகும்.

இன்னும் இப்படி இந்துக்கள் தம் கடவுளர் காட்டிய மெய்யறநெறி திறம்பி தம்சோதாரில் சிலரைப் பழித்து இழித்து வந்தபாவத்தால் தக்கபடி தெய்வ தண்டனைக்குமாளாகி நிற்கின்றனர். மற்றப் பாவங்களுக்கு தண்டனை மறுபிறப்பிலிருக்கலாம். ஆனால் கடவுளருக்கு மைத்துனப் பாங்குடையபலரையும் எல்லாரும் இறைவனுக்கு ஒக்கமக்களாவர் என்று எல்லாச் சமயமும்



மாந்தலே வெந்நீர் ஊற்று (A.R.C.)

வற்புறுத்தவும் அதையுமறந்து இந்துக்கள் பல நூற்றாண்டுகளாகச் சகோதரர் பலரைப் பழித்ததன் பயனாக இப்போது இந்துக்கள் எல்லாருமே நாகரீக அயல் நாட்டாரால் தீண்டாதாராக நடத்தப்படும் நிலையை எய்தியுள்ளார். இந்தியப்பிராமணரையும் தங்கள் வண்டிகளிலும் புகைவண்டித் தொடர்களிலும், ஏறப்படாது தாங்களிருக்கும் தெருக்களிலும் நகரப்பகுதிகளிலும் நடக்கவும் வாழவும் படாது; இந்தியரெல்லாம் தீண்டப்படாத கீழ் மக்கள் என்று வெள்ளையர்கள் வெறுத்து ஒதுக்கி வருவது, பலகாலம் நாம் நமது சகோதரரையே பழித்த பாவத்தின் பயனாக இம்மையில் இவ்வுலகத்தே நாமெல்லாரும் அனுபவிக்க நேர்ந்த தெய்வத் தண்டனையாகக் கிடைத்திருக்கின்றது.

இன்னும் தூக்கமா? இந்துக்களே! விழியுங்கள்! பழியையும் பாவத்தையும் அறமறிந்தாற்றிக் கழியுங்கள்! சுயமரியாதையை விரைவில் தேடிப் பெறுங்கள்! உண்மையுறமறந்து திக்கற்ற ஏழைமக்களுக்கான பிறருக்குக் கேடு சூழ்ந்த மேல் வகுப்பு இந்துக்களுக்கு அறஞ்சூழ்ந்த பெருங்கேடே தற்பொழுது நாகரீக அயல் நாடுகளில் நம்மவர் அனைவரும் தாழ்த்தப்படும் விபரீத இழிதகவாகும், என்பதை இனியாவதுஉணரவேண்டும்! பாவம் பிறருக்காற்றி நாம் என்றும் அதற்குரிய தண்டனைக்குத் தப்ப முடியாது. பிறிதுலகில் நாம் மதிக்கப்பெற வேண்டில் நம்மவரை நாம முதலில் மதிக்க வேண்டும். பழி நமக்குப் பிறர்தா வேண்டேமாயின் நம்மவருள் யாருக்கும் நாம் பழிபட வாழ்தல் கூடாதன்றோ? நம்முள் பஞ்சையான பிறர்க்கின்னா முற்பகல் செய்தமையால் நமக்கின்னா பிற்பகல் தானே வந்துளது! பிறப்பால் என்றும் இழிந்தாராக நடத்துவது அப்படி நடத்தப்படுபவருக்குத் தாங்க முடியாத இன்னா வாகுமென்பது வெளிப்படை.

"இன்னா எனத் தாமுணர்ந்தவை
துன்னாமை, வேண்டும் பிறன்கட்செயல்"
"எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் [மனத்தானும்
மாணா செய்யாமை தலை"

என்ற தமிழ் வேத வாக்கியங்களைச் சிந்தித்து விரைந்து அறம் ஆற்றி நாம் கடைத்தேற வேண்டும்.

"தீண்டாமை தீண்டாமை தேரியார் [ஏய்துவார்
வேண்டாமை வேண்டுவார் வீடு"

—:—

உடன் செல்லுதல்

கோலாலம்பூரிலிருந்து திருமதி. சுப. திருநெல்லை.



சீர்திருத்த வேட்கை மிக்க செல்வச் சகோதர, சகோதரிகளே!

தொன்றுதொட்டு நடந்துவந்த புராதன பழக்க வழக்கங்களைக் கடந்து வாழ்க்கைத் துணைவர்களோடு அயல்நாடு செல்வதென்றால் சிறிது சிரமமே தோன்றுகிறது. பலர், உலக நலத்திற்காக, தேசத்தின் முன்னேற்றத்திற்காக, மதத்தின் வளர்ச்சிக்காக, ஜாதீயச்சீர்திருத்தம் திறம்பெறுவதற்காகப் பல துறைகளிலும் பாடுபட்டதில் ஒரு சில தன்மைகளே கிடைத்திருக்கின்றன. ஒரு இயக்கத்தில் இடுபடுமுன்னே

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்பது இழுக்கு"

என்னும் பொய்யா மொழியை முற்றும் உணர்ந்து, இடையூறுகள் வருவது நிச்சயமென்று எண்ணித்தான் இறங்குகிறார்கள். இறங்கியபின் மலைபோல் வரும் மயக்கமாகிய துன்பங்களைக் கண்டு தயங்குவது இயல்பாகிவிட்டது. ஒருவர் உதவியையோ, ஒத்தாசையையோ நாடி ஒரு இயக்கத்தை மற்ற இனத்தவர்களைப்போல் (சீன தேசத்தில் சீர்த்திருத்தத் தலைவர் சன்யாட்சென் என்பவர் அமெரிக்க நாட்டின் மேடையிலே பிரசங்கம் செய்யும் பொழுது அங்கு பிரசங்கத்தைக் கேட்டுக்கொண்டிருந்த சீன வண்ணானொருவன் தன் வாழ்நாளில் அன்று வரை தேடிய பொருள்கள் யாவற்றையும் சீர்திருத்தப்பணிக்காக வழங்கினான் என்று சரித்திரம் கூறுகிறது) நம்மினத்தவர்களிடையில் நடாத்தி முற்றும் பலனடைந்தார் இதுவரை எவருமில்லை. ஏன்? நம்மில் இப்பொழுது எத்தனையோ சங்கங்களும், பத்திரிகைகளும் அனேகம் தலைவர்களின் கொள்கைகளும் தோன்றிய குறியொடு நிற்கின்றனவா?

எனதன்புமிக்க சகோதரிகாள்! கண்ணகி சீதை, தமயந்தி, சாவித்திரி முதலிய கற்பின் மேம்படு காதலிகளின் சரித்திரங்களைப் படிப்போமாயின் கற்பின் மேம்பாடும் காதலர் பிரிவும் எளிதிற் தோன்றும்.

"செல்லாமை உண்டேல் எனக்குரை
மற்று நின், வல்வரவு வாழ்வார்க்குரை"

என்ற திருவள்ளுவனாரின் திருவாக்கை ஓருங்கள். அவரவர் காதலரைப் பின்பற்றி அவர் எங்கு செல்லினும் அங்கு செல்லுங்கள். அயல் நாடுகளுக்குச் சென்று அந்நாட்டின் வளப்பங்களையும், வசதிகளையும், அங்கு வதிபவர்களின் இன்பவாழ்க்கை முறைகளையும் கண்டு களியுங்கள். காதலென்பது இன்னதென்று விளங்கும்.

"காதலர் இருவர் கருத்தொருமித்து
ஆதாவு பட்டதே இன்பம்"

மற்றவை எவையும் இன்பமாகுமா என்றுதான் அப்பொழுதும் இப்பொழுதும் பெரியோர்களால் பேசப்படுகிறது. அது முற்றும் உண்மையே! காதல் வெள்ளம் கரைபுரண்டோடிய தமிழ் நாட்டில் பிறந்த நம்மை எங்நிலையில் இருக்கச் செய்திருக்கின்றார்களென்பதை சிந்தித்துப் பாருங்கள்.

கருங்கடல் கடந்து காதலாற் கவலுறும்
சோதரர்காள்!

நீங்கள் அந்நிய நாடு சென்று அங்குள்ள அனேக தேச மக்களோடு அளவளாவி அவர்களுடையும் அளவிலாச் சுகபோகங்களைக் கண்டு, நாமும் நம் நாடு சென்றதும் இது மாதிரிதான் வாழவேண்டுமென்று மனக் கனவு காண்பது இயல்பே! முற்றும் இயல்பே!! இனியும் அக்கனவுகாணாது திடங்கொண்டு தங்கள் தங்கள் இன்னுயிர்க் காதலிகளை உடனழைத்து வந்து உங்கள் சுகதுக்கங்களிலும் பங்கெடுத்துக் கொள்ளும் படி செய்யுங்கள்!

"காதலொருவனைக் கைப்பிடித்து அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து"

என்ற பாரதியாரின் பாட்டிற்கிணங்க ஒரு கூலிவேலை செய்யும் ஒட்டன் மண்வெட்டக் கூலிபேசும்போதுகூட ஜோடி ஒன்றுக்குக் கூலிஇன்னதென்று பேசிக் கொண்டு காதலனும் காதலியும் மகிழ்ச்சி கலந்தமனத்தோடு வேலை பார்த்து முடித்து எஜமானர்களைத் திருப்தி செய்வதோடு கிடைத்த ஊதியத்தைக் கொண்டு சந்தோஷமாக வாழ்வதைப் பார்த்திருக்கின்றோம். இப்போது, வீட்டினுள்ளே " பெண்ணைப் பூட்டிவைப்போமென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். கம்பெனிகளிலோ, அரசாங்கத்திலோ வேலை பார்க்கும் ஒருவன் தன் இல்லக் கிழத்தியோடு காலையில் பசும்புற்றரையில் பந்து விளையாடுகிறான். மாலையில் நறுமணங் கமழும் இனிய சோலைகளிலும் நீலத்திரைகளை வீசும் நெடிய கடலிலும், கடற்கரையிலும் உலவுகிறான். இரவு இன்னிசை கேட்டு இன்பமுறுகின்றான். இவைகளுக்கெல்லாம் இந்நாட்டைப் பரிபாலிக்கும் அதிகாரிகள் அத்தனை வசதிகளையும் செய்து வைத்திருக்கிறார்கள். வனப்பு மிகுந்த இந்நாடுகளுக்கு இயற்கை அன்னையும் துணையாக இருந்து என்றும் மழை பெய்விக்கிறாள்.

நம்மினத்தவர்களில் பலர் முதலாளிகளாய் உள்ளவர்கள்தான் உடனழைத்து வரலாம். சம்பளத்துக்குப் புறப்படுகிறவர்கள் கூட்டிக்கொண்டு போகலாகாது என்பவர்களுக்கு யான் கூறும் பதிலாவது நம்செட்டிநாட்டு ராஜா அவர்கள் இதனை ஆதரிப்பதோடு நடைமுறையில் தங்கள் ஏஜண்டுகளை உடனழைத்துச் செல்ல அனுமதித்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அந்நிய நாடுகளுக்குப் பெண்களோடு போய் வருவதால் அடங்காச் சடங்குகளும் ஆடம்பரமான வீண் செலவுகளும் குறையுமென்பதை ஆராய்ச்சிக் கண்கொண்டு கவனியுங்கள்!

"மனைத்தக்க மாண்புடையளாகித்தற்
[கொண்டான்"

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

என்றார் பொய்யில் புலவர். நாம் உடனிருந்தாலல்லவா வருவாய்க்குத் தக்க செலவு செய்யவும் வாழ்க்கையைப் பயன் பெறச் செய்யவும் முடியும்.

தைரியம்பெருக்குமின்! தகுதியடைமின்!!
உரிமைவளர்க்கஉரங்கொண்டெழுமின்!!!

உடனழைத்துச் செல்லுதல்.

("நடந்த தென்ன சொல்லம்மா" என்ற மெட்டு)

பல்லவி

உடன்மழைத் தேகிடுவீர்—செல்வம்
உடையவ ராகிடு வீர் இனி (உட)

அநுபல்லவி

1 உடலினுக்குயிர்போ லும்மையே நம்பி
உவந்துவந்த மனைவி ஊரினில் வெம்பி
இடரடைந்திடப் பினுங் கிரங்கோன் கொழும்பி
லிருந்து நீர் வாழ்ந்தென் னின்பம் விரும்பி (உட)

2 வாழ்வதற் கல்லவோ மணஞ் செய்து கொண்டீர்
மனைவியரைப் பிரிந்து வாழ்வென்ன கண்டீர்
பாழ்வயி றென்றையே பார்த்திருந் துண்டீர்
பரிந்தற நடத்தும் புத்தினிப் பெண்டிர் (உட)

3 இல்லற மல்லது நல்லறமன்று
எனவுரைத் தாரவ்வை யியற்றமி ழன்று
சொல்லறிந்து வழக்கத் தொடர்பினைக் கொன்று
துணிந்து "தன வைசிய"த் தூயரோ யின்று (உட)

நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சங்கம், பர்மா.

சங்க நிர்வாகிகள்.

முதலாவது வருடம்.

தலைவர்.
அ. க. அ. முத்தையா செட்டியார்
உப தலைவர்.
சா. ராம. மு. சித. மு. வெங்கிடாசலம்செட்டியார்
,, திருப்பதி செட்டியார்
காரியதரிசி.
தி. சொ. நாகப்ப செட்டியார்
பொக்கிஷதார்.
அழ. அரு. சுப்பிரமணியன் செட்டியார்

இரண்டாவது வருடம்.

தலைவர்
சா. அ. ராம. சாமிநாதன் செட்டியார்
,, சொக்கலிங்கம் செட்டியார்
உப தலைவர்
சொ. மு. அரு. அழகப்ப செட்டியார்
காரியதரிசி
ராம. மெ. சித. அருணாசலம் செட்டியார்
மெ. அரு. அரு. சோமசுந்தரம் செட்டியார்
,, சங்கரன் செட்டியார்
பொக்கிஷதார்
அழ. அரு. சுப்பிரமணியஞ் செட்டியார்

மூன்றாவது வருடம்.

தலைவர்.
தி. சொ. நா. பழனியப்ப செட்டியார்
உபதலைவர்.
சா. அ. சித. கதிரேசன் செட்டியார்
காரியதரிசி.
மு. அள. வீரப்ப செட்டியார்.
சு. தெ. ப. சி. ராம. முருகப்ப செட்டியார்
பொக்கிஷதார்.
சுப. க. அ. அ. மு. வேலாயுதம் செட்டியார்
,, சொக்கலிங்கம் செட்டியார்

நான்காவது வருடம்.

தலைவர்
க. வெ. சித. அழகப்ப செட்டியார்
உபதலைவர்.
கூ. கரு. நா. கண்ணப்ப செட்டியார்
,, நாராயணன் செட்டியார்
காரியதரிசி.
சு. தெ. ப. சி. ராம. முருகப்ப செட்டியார்
பொக்கிஷதார்
சு. ப. க. அ. அ. மு. சொக்கலிங்கம் செட்டியார்

ஐந்தாவது வருடம்.

தலைவர்.
அ. க. அ. சித. வெ. சொக்கலிங்கம் செட்டியார்
,, சோமசுந்தரம் செட்டியார்
உபதலைவர்.
சி. கரு. சி. சித. சோமசுந்தரம் செட்டியார்
காரியதரிசி.
சா. அ. ச. ராமன் செட்டியார்
,, பழனியப்ப செட்டியார்
பொக்கிஷதார்
ப. ராம. ப. சு. ராம. பெரிச்சியப்ப செட்டியார்.

ஆறாவது வருடம்.

தலைவர்.
வீ. தெ. இராமன் செட்டியார்
,, குமரப்ப செட்டியார்
உபதலைவர்.
வீ. முரு. பெ. அண்ணாமலை செட்டியார்
காரியதரிசி.
சா. அ. ச. பழனியப்ப செட்டியார்
,, ராமன் செட்டியார்
உபகாரியதரிசி.
சொ. முரு. அரு. அருணாசலம் செட்டியார்.
பொக்கிஷதார்.
ராம. அரு. அரு. ராம. சொக்கலிங்கம் செட்டியார்

ஏழாவது வருடம்.

தலைவர்.
ராம. அரு. அரு. ராம. சொக்கலிங்கம் செட்டியார்
உபதலைவர்.
அ. க. அ. சித. அள. முத்துராமன் செட்டியார்
காரியதரிசி.
சா. அ. ச. ராமன் செட்டியார்
உபகாரியதரிசி.
வீ. முரு. பெ. அண்ணாமலை செட்டியார்
பொக்கிஷதார்.
வயி. அ. சாமிநாதன் செட்டியார்.

எட்டாவது வருடம்.

தலைவர்
உல. க. கண. சேவுகஞ் செட்டியார்
உபதலைவர்
அ. க. ராம. மெ. கி. அண்ணாமலை செட்டியார்
காரியதரிசி
சா. அ. ராம. ராமசாமி செட்டியார்
உப காரியதரிசி
உ. நா. ராம. மெ. ராமநாதன் செட்டியார்
பொக்கிஷதார்
வ. சொ. ராம. ராமநாதன் செட்டியார்
,, நடராஜன் செட்டியார்


ஒன்பதாவது வருடம்.

தலைவர்.
மு. ஆரி. வீரப்ப செட்டியார்
உபதலைவர்.
சு. ப. க. அ. அ. மு. லட்சுமணன் செட்டியார்
காரியதரிசி.
சா. அ. அ. கதிரேசன் செட்டியார்
உபகாரியதரிசி.
அ. க. ராம. மெ. சித. அழகப்ப செட்டியார்
பொக்கிஷதார்.
மெ. செ. மெ. மெ. பழனியப்ப செட்டியார்.


பத்தாவது வருடம்.

தலைவர்
வெ. வீர. சுப்பிரமணியன் செட்டியார்
உப தலைவர்
அ. க. ராம. மெ. சித. அழகப்ப செட்டியார்
,, கிருஷ்ணப்ப செட்டியார்
காரியதரிசி
சா. அ. அ. கதிரேசன் செட்டியார்
உப காரியதரிசி
கூ. கரு. நா. கருப்பன் செட்டியார்
,, கண்ணப்ப செட்டியார்
பொக்கிஷதார்
வீ. முரு. பெ. காசிச் செட்டியார்


பர்மாக் காட்சிகள்



Edward Memorial. எட்வர்ட் மெமோரியல்.




Ching Tsong Palace. சிங் சாங் அரண்மனை.




Kareen School (Bassein) பாசீன் கரீன் ஸ்கூல்.


பர்மா நகரத்தார் கோவில்கள்



மியாங்மியா மடம்.



கையான் மடம்.



. நவுலியப்பன் கோவில்.

கோடைக்கானற் காட்சி.

திரு. அரு. சோமசுந்தரம்.



தோற்றுவாய்

கோடைக்கானல் மலையெனும் சொற்றொடரைக் கேட்கும்பொழுது, கோடைப் பருவத்தில் அவண்சென்று உறைந்த அன்பர்களின் உள்ளம் பெரிதும் குளிரும். இது தென்னாட்டு மேற்கு மலைத் தொடர்ச்சியின் ஒரு பகுதி. இதன் உயரம் ஏழாயிரம் அடிகள் ஆகும். இது மதுரை ஜில்லாவைச் சார்ந்தது; பெரிய குளத்திற் கருகே இருக்கின்றது. தென்னிந்திய இருப்புப் பாதையில் மதுரைக்கும் திண்டுக்கல்லுக்கும் மத்தியில், 'கோடைக்கானல் ரோடு' என்ற ஸ்டேஷன் ஒன்று உளது. அதிலிருந்து நேரே கோடைக்கானலுக்கு வாடகை மோட்டார் செல்கின்றது. மலையடிவாரம்வரைக்கும் இருபது மைல் கல்லாலை. அடிவாரத்திலிருந்து மலையின் தலைமைத்தலம் முப்பது மைல். மலையின் புறத்தைச் சூழ்ந்து நல்ல பாதை வளைந்து வளைந்து செல்கின்றது.

வழியின் வனப்பு

போகும் வழியில் மலையின் இயற்கையழகு மக்கள் கண்களைக் கவராநிற்கும். யாண்டும் மரங்களும் செடிகளும் கொடிகளும் செறிந்து பின்னிக் கலந் திலங்குவது பேரின்ப மளிக்கும். நிரல் நிரலாக வாழைத் தோட்டங்களும், காப்பித் தோட்டங்களும், ஏலத் தோட்டங்களும், பொலிந் திலங்கும். ஆரஞ்சு, பேரி ஆகிய பலவகை நறுங்கனிகளை நல்கும் தோட்டங்களும், ஏலக்காய்ச் செடி ஆங்கிலக் காய் கறிகள் ஆகிய பயிர்கள் மிளிரும் இடங்களும் எங்கும் திகழும். தாழ்ந்த பள்ளத்தாக்குகளில் மிக உயர்ந்து ஓங்கி வளர்ந்து விளங்கும் மரங்களின் மீது பலவகை நிறம்மிக்க மலர்கள் மலிந்த கொடிகள் பின்னிப் படர்ந்து பிறங்குவது இயற்கை யழகில் திளைப்பவர் கண்களுக்குப் பெருவிருந்தாக இருக்கும். அப்பேரழகு வெள்ளத்தை நான் இருவிழிகளாலும் பருகிய பொழுது "செல்வமல்கு செண்பகம் வேங்கை சென்றேறி, கொல்லை முல்லை மெல்லரும்பீனும் குற்றாலம்" எனுந் திருஞான சம்பந்தர் திருவாக்கு எனது செவிகளில் ஒலித்துக் கொண்டிருந்தது. கோடைக்கானலுக்கு என் தமிழ்ப் புலவர்கள் பாட்டுப் பாடாது விட்டனர் என்ற பெருவருத்தமும் ஒரு புறம் உண்டாயிற்று. இயற்கை அழகில் திளைத்து மகிழும் பாரதியாரும், இளங்கோ வடிகளும், கம்பரும், வேர்ட்ஸ்வொர்த்தும், ஷெல்லியும், என் நினைவில் தோன்றினர். அன்னோர் பாடல்கள் இயற்கை அழகைப் படம் பிடித்தது போன்றிலங்கும் உண்மை இனிது புலனாயிற்று. யாண்டும் இளமரக் காவின் இட்டமும், பலவகை விலங்கினங்களின் செலவும், அருவிகளின் ஓட்டமும், பறவைகளின் தோற்றமும், வண்டினத்தின் பேரொலியும் நிறைந்திருந்ததால் வழி நீண்டதாகத் தோன்றவில்லை. மோட்டார் உயரச் செல்லுந்தொறும் செல்லுந் தொறும் உள்ளத்தில் இன்ப வெள்ளம் மிதந்துகொண்டே வந்தது. "ஊதைகள சொரிவன உயிருறும் அமுதம்" என்று கம்பர் கூறும் இனிய கருத்தை உயரிய அம் மலைச்சாரலில் வீசும் குளிர் காற்று நன்கு புலப்படுத்திற்று. அப்பூங்காற்று உடலுக்கும் உள்ளத்திற்கும் உயிருக்கும் பெருவிருந்தாகவும் அருமருந்தாகவும் இருந்தது. கதிரவன் கொடுமையும் பெரிதுங்குறையலாயிற்று. மதுரையில் நெருப்புப்பொறிகளைக் கக்கிக்கொண்டிருந்த கதிரவனது கொடிய கிரணங்கள் கோடைக்கானலில் வெண்ணிலவு போலத் தண்ணளி கொண்டு வீச ஆரம்பித்தன.

இயற்கையழகு

கோடைக்கானலின் இயற்கை வனப்பையும், கோடைநாளில் வீசும் குளிர்காற்றின் தூய தன்மையையும் கண்டின்புற்றபொழுது சமீபத்திலுறைந்து கொண்டிருந்தும் "என் இத்துணை நாட்களாக இவண்வாராது வீட்டில் வாளா இருந்தனம்" என்ற எண்ணம் உள்ளத்தில் உதயமாயிற்று. நடு வழியிற் சென்றுகொண்டிருக்கும் பொழுது பச்சைப் படாம் போர்த்ததுபோல் நீலமுடி தரித்த குன்றுகள் பல புலனாயின. அக்குன்றுகளின் மீது மேகங்கள் திரள் திரளாக இவர்ந்து சென்ற காட்சி உள்ளத்திற்குப் பெரிதும் உவகை ஊட்டிற்று. உயர்நிலையில் இருந்து தரை மட்டத்தை நோக்கும் பொழுது அக்காட்சி கடல் மயமாகத் தோன்றிற்று. பல ஆண்டுகள் தரை மட்டத்திலேயே வாழ்ந்தவன் உயர்ந்த மலையின் மீது ஏறிச் செல்ல நேரிட்டது, உள்ளத்தில் அடங்கா மகிழ்வை ஊட்டியது. அம்மலையின் வானுயர் தோற்றம் ஆயிரம்வகையான இனிய எண்ணங்களை மனத்தில் எழுப்பிற்று. எண்ணங்கள் இயற்கையோடு கூட்டுறவு கொண்டு உல்லாசமாக உலாவித் திரிந்து கொண்டிருந்தன. கற்பனைவெள்ளம் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்தது.

பெரும் புலவர்கள் இயற்கைப் பெருவனப்பில் பெரிதும் ஈடுபட்டுப் பாடிய பாடல்கள் பல நினைவிற்கு வந்து மகிழ்ச்சியை மிகுவித்தன. தமிழ்ப் பெரும் புலவராகிய சேக்கிழார் பெருமான் மலைகளைப்பற்றிக் கூறிய இனிய செய்யுட்கள் இரண்டு எதிரே சித்திரப்படங்கள்போல் மிளிர்ந்தன. அவை வருமாறு:—

"அளிக்குலங்கள் சுழித்தகல அரவிந்த முகம்புலர
பளிக்குமணி மரகதவல்லி யாற்கோத்த பான்மை [யெனத்
துளித்தலைமேல் அருகுபனி தொடுத்தசையச் சூழ் [பனியால்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய [குன்றுகளும்"

"மொய்பனிசூர் குளிர்வாடை முழுதலவும் பொ [ழுதேயாய்க்
கொய்தளிர்மென் சோலைகளுங் குலைந்தசையக் [குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங் கரநிமிர்க்க மாட்டான்போல் வீசும் [பனிவிடை
ஐதுவெயில் விரிப்பதுவு மடங்குவது மாகுமால்"

ஆ! ஆ!! என்ன கவி! என்ன இன்பம்! இரண்டு செய்யுட்களும் இரண்டு பூங்கொத்தாகவே பொலிகின்றன. இவையிரண்டும் திருஞான சம்பந்தர் திருக்கொடிமாடச் செங்குன்றூரை அணைந்த பொழுது பனிப்பருவம் எய்திய சந்தர்ப்பத்தில் வருவன. இவ்விரண்டினும் மலைவருணனை மிகஅழகாக அமைந்திருக்கின்றது. "பச்சைக் கொடியில் பளிங்குமணிகோத்தது போல், பசும் புல்லில் பனித்துளிகள்படிந்துள்ளன" என்று கூறுவது என்னுள்ளத்தைப் பெரிதும் ஈர்க்கின்றது. 'குன்றுகள் குளிர்பொறுக்காது வெண்மையான போர்வை போர்த்துக் கொண்டதுபோல் பனியால் மூடப்பட்டிருக்கின்றன" வென்று பகர்வது கவனிக்கத் தக்கது. பனியுங் குளிருஞ் சகியாது சோலைகளும் ஆடி அசைகின்றன. கொடிய கதிரவனும் குளிரால் கைவிரிக்க இயலாதவன் போல் வானத்தில் தனது கிரணங்களைச் சிறிது தோற்றுவிப்பதும் மறைப்பதுமாக இருக்கின்றான் என்றியம்புவது அனைவருக்கும் நல் விருந்தாகும். இக்காட்சியைக் கோடைக்கானலில் நேரே கண்டுகளிப்புறலாம். பனியால் அழகு செய்யப்பட்டிருக்கும் புற்றரைகளையும் சோலைகளையும் அவைகளினூடே தோன்றி மறையும் இள வெயிலையும், பார்த்துப்பார்த்து மகிழலாம். காலைப்பொழுதில் மூடுபனியை நீக்கிக்கொண்டு அளவிலாத இளங்கிரணங்களுடன் கதிரவன் தோன்றுங்காலத்து;

"தங்கமுருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோ ரிங்கிதமோ"

என்று வியப்புறும்படி மலையும் மலைபடு பொருள்களும் யாவும் பொன் மயமாய்த் திகழ்தலை நோக்கலாம். அப்பொழுகை ஒருவாறு கண்களாலேயே பருகுதல் கூடும். எப்புலவராலும் எழுத்தால் முழுவதும் எழுத இயலாது. இயற்கை அழகுக்கு முன்னர் எழுத்தா நிற்கவல்லது? இயற்கை அழகன்றோ உலகின் நிலைத்த பெருநிதி. இயற்கை வனப்பை நேரே காண்டற்கும் ஏட்டிலும் பாட்டிலும் பார்த்தற்கும் மடுவிற்கும் மலைக்கும் உள்ள வேறுபாடு உண்டு. எனவே ஏட்டுச் சுவடிகளிலும் காயிதக்கற்றைகளிலும், படிந்து தாழ்ந்திருந்த எனது உள்ளம் அவைகளை விடுத்து மிக உயரிய நிலையையெய்தி இயற்கை அழகின் உறையுளாகத் திகழ்ந்தது. இயற்கையே இறைவனது எல்லையிலாற்றல் என்பது வெள்ளிடை மலை போல் விளங்கிற்று. இயற்கையழகைக் கண்டின்புறாத கண் புண்ணே என்பதைக் கோடைக்கானலில் வாழும்கொடிகளும், செடிகளும், மலர்களும், மரங்களுமே அறிவுறுத்தின. அவைகளின் குளிர்ந்த நீர்மையும், மெல்லிய தன்மையும், கண்ணைக்கவரும் நிறமும், விழியின் எல்லையுள் அகப்படாத இட்டமும் எவர் மனத்தைக்கொள்ளை கொள்ளாதிருக்க இயலும்? எனது மனமே அவைகளைக்கண்டு குதிகொண்டு கூத்தாடிற்றென்

ருல் இயற்கைக் கவிகளின் உள்ளம் எவ்வாறு களி நடம் புரியும்? கவிகளின் கண்கட்கு அவ்வழகுத் திரள் முழுவதும் பாட்டாகவன்றோ திகழும்! பார்ப்போர் மனம் மலர மலர்ந்திருக்கும் பல்வகை மலர்களும் பாட்டாகவே பொலிந்திலங்கின. நூற்றுக் கணக்கான பூங்கொத்துக்கள் நிறைந்த கொடிகளைத் தாங்கி நிற்கும் மரங்கள் புன்முறுவல் நெகிழ்த்து என்னுடன் பேசுவது போலவே தோன்றின.

ஊர் வனப்பு.

மலையையணுகியதும் நான்கு புறங்களிலும் குன்ற வரிசைகளில் அழகிய பங்களாக்கள் கண்களுக்குப்புலனாயின. அப்பங்களாக்கள்உயர்ந்தகுன்றங்களின் கிரீடவரிசை என விளங்கின. பசுமை நிறைந்தமலைப்பாங்கரில் வெண்மை நிறத்தோடும் சாம்பல் நிறத்தோடும் வேறு பல நிறங்களோடும் சுவர்கள் எழுப்பப் பெற்று பங்களாக்கள் பொலிந்தது இனிய காட்சியாக இருந்தது. இயற்கையழகு திகழும் மலைமீது மேக வெள்ளத்தில் தோய்ந்திருந்த பங்களாக்கள் செயற்கை யழகுடன் மிளிர்ந்தது கம்பர் இலங்கையை வருணித்த செய்யுள் ஒன்றினை நினைவூட்டியது. புகைப்படம் பிடித்தெடுத்ததுபோல் அவ்வினிய பாடல் எதிரே தோன்றித் திகழ்ந்தது.

"பொன்கொண் டிழைத்த மணியைக் [கொடு பொதிந்த
மின்கொண் டமைத்த வெயிலைக் [கொடு சமைத்த
என்கொண் டியற்றிய வெனத் தெரிகிலாத
வன்கொண்டல் விட்டு மதிமுட்டு வனமாடம்"

குன்றங்களினியற்கை ஒளியுடன் பங்களாக்களின் செயற்கை யொளியானது இடை இடையே பிரகாசித்த காட்சி பசுங் குன்றங்களாகிய மரகதங்களினிடையே பல நிறமணிகளையும்பதித்தது போலவே மிளிர்ந்தது. பசுங் குன்றுகளில் வெண்மையான பங்களாக்கள் பிறங்கியது சூரியப் பிரகாசம் போலவே இருந்தது. நான்கு புறங்களிலும் நீண்ட தூரம் வரை இந்நற்காட்சிஎதிர்ப்பட்டது. பல வேறுகுன்றங்களிலும் மக்களும், ஆடு மாடு முதலியவைகளும் உலாவி வந்தது ஓர் அரிய காட்சியாக இருந்தது.

ஊருக்குள் நுழைந்ததும், பிரயாணி விடுதியும், சத்திரமும், கச்சேரிகளும், கடைத்தெருவும் மிடைந்திருந்தன. அப்பால் நடு ஊருக்குள் மூன்று மைல் சுற்றளவுள்ள அழகிய ஏரி ஒன்று இலங்கிற்று. ஏரியைச் சூழ்ந்து நடைபாதை ஒன்று சென்று கொண்டிருந்தது.நடுவில் ஏரியும், கரையிற் சிறுசிறு மரங்களும்,பாதைக்கப்பால் நான்கு புறத்திலும் அழகிய இல்லங்களும் அமைந்திருந்தன. ஏரியில் பல சிறு சிறு ஓடங்கள் உல்லாசமான மைந்தரையும் மகளிரையும் குழந்தைகளையும் தாங்கிக்கொண்டு ஊர்ந்து வந்த காட்சி கண்ணுக்குப் பெரு விருந்தாக இருந்தது. தண்ணீர் பனிக்கட்டியைப் போல் மிகக் குளிர்ந்திருந்தது. அவ்வேரியின் ஓர் பாங்கரில் ஒரு பெரிய பூந்தோட்டம் பொலிந்து கொண்டிருந்தது. அதன் கண்ணே பாத்தி பாத்தியாகப் பல வகையான கண்ணுக்கினிய மலர்களும், வரிசை வரிசையான புதிய மரத்தொகுதியும், செடிகொடிகளாகிய வேலிகளும், லதாகிரகங்களும் திகழ்ந்து கொண்டிருந்தன. ஊரிலுள்ள பங்களாக்களிலும் அளவிலாத மலர்கள் அலர்ந்திருந்தன. ஆங்கிலக் கவிகள் கூறும் பல்வகை மலர்களையும் அங்குதான் காணலாம். ரோஜாவின் வகையும், மலர்களும் மிக அதிகம். பங்களாச் சுவர்களில் அழகிய பசுந்தளிர்க் கொடிகள் படர்ந்திருந்தது பேரனந்தத்தை விளைவித்தது.

மாலை நேரத்தில் மஞ்சு மூட்டம் போட்டுக் கொள்கின்றது. எங்கும் இருள் சூழ்கின்றது. வெள்ளிய இதழ்களையுடைய கற்பூர மரங்கள், பச்சை மரங்களினிடையே வெண்ணிலவை வழிய வார்த்ததுபோல் விளங்கின. இரவில் நாம் மேகங்களினூடேயே நடந்து செல்லுதல் வேண்டும். வெளிச்சமில்லாவிட்டால் பாதை தெரியாது. தண்ணளியுடைய மேகங்கள் நமது உடம்பிலுள்ள சட்டையின் மேல் தவழ்ந்து செல்வது இன்பமாக இருக்கும். காலையில் பத்து மணிக்கு மேல் எழும் இளஞ் சூரியனுடைய மெல்லிய கிரணங்கள் செடிகளையும் கொடிகளையும் ஒளிரச்செய்து, முத்த மிடுவது போலிருந்தது. பாலைவனம் போன்ற பிரதேசங்களில் வசிப்பவர்கள் பங்குனி சித்திரை மாதங்களில் ஆண்டுப் போய் வதிந்தால் வானுலக வாழ்வாகவே அஃதிருக்கும். நான் அவண் வதிந்த நாட்களில் என்ஞான்றும் பழந்தமிழரது மலைவாழ்வு நினைவிற்கு வந்து கொண்டே இருந்தது. அப்பருவ காலத்தில் அவணுறைவது உடலுக்குப் பெரிதும் நலன் தருவதாகும். அவ்விடத்திலுள்ள பிரயாணி விடுதி மிக வசதியாக இருக்கின்றது. செல்வர்கள் பலர் பங்களாக்கள் வைத்திருக்கின்றனர். வாடகைக்கு விடக்கூடிய பங்களாக்கள் பல இருக்கின்றன. பெரிய குளத்திலிருந்து பத்து மைல் தூரம் செங்குத்தான நடைபாதை ஒன்று உளது. அவ்வழியாகவே கோவேறுகழுதைகள் மேல் மலைக்குச் சாமான்கள் வருகின்றன.

தமிழர்களுக்கு உணவு வசதிக்குத்தக்க உண்டிச்சாலை ஒன்றிருக்கின்றது. ஆங்கிலேயருக்குச்சிறந்த உண்டிச்சாலை ஒன்றுளது. ஊரிலும், அணித்தேயுள்ள குன்றங்களிலும் தமிழ்மக்கள் பலர்நிலைப்பாக வசிக்கின்றனர். பொதுத் தோற்றத்தில் ஊர்மிக அழகாகவும் சுத்தமாகவும் விளங்குகின்றது. இயற்கையின்ப நிலயமான இம் மலையில் பல ஐரோப்பியர்கள் வசித்து வருகின்றனர். அவர்களுடைய கலாசாலைகளும், சமயஸ்தாபனங்களும் பல உள்ளன. முக்கியமான பாதிரிக்கூட்டத்தார் பலர் இவண் உறைகின்றனர். ஊருக்குள் யாண்டும் "யூகாலிப்டஸ்" மரமும், கற்பூர மரமும், பேரி மரமும் மிக அதிகம். ஊரானது வாசத்திற்கு மிகவும் வசதியானதாகவே யிருக்கின்றது. பருவ காலத்தில் வெப்பம் மிகவும் குறைந்து குளுமை மிகுந்து இருக்கின்றபடியால் கோடைநாளின் நினைவே மனதில்தோன்றவில்லை.எப்பொழுதும் ஊர்மந்தாரமாக இருப்பது எல்லையில் இன்பத்தை அளிக்கின்றது. ஒவ்வோர் அமயத்தில் இன்பந்தரும்இளவெயில் தோன்றி மென்மையான, பசுமையான கிரணங்களால் எல்லோரையும் மகிழ்விப்பது எழுதும் திறத்ததன்று. கோடைக் கானலில் கதிரவனது குளிர்ந்த—தோன்றி மறையும் அற்புதக்காட்சி பெரிதும் வியக்கற்பாலதேயாகும்.

காட்சிகள்

மலையின் உயர்ந்த சிகரம் ஒன்றில் பெயர் பெற்ற நக்ஷத்திர ஆராய்ச்சிச்சாலை (Observatory) ஒன்று இருக்கின்றது. வெள்ளிக்கிழமைகளில் தலைமை அதிகாரியின் அநுமதியின்பேரில் யாரும் சென்று அதனை நோக்கலாம்.அங்கு சூரியனைப் படம்பிடித்து ஆராய்ச்சி செய்வதற்கும், நக்ஷத்திரங்களை நோக்குவதற்கும், பூகம்பம், மழை, வெயில், காற்று ஆகியவற்றின் நிலையை உணருதற்கும் உரிய கருவிகள் இருக்கின்றன. ஏரியிலிருந்து அதற்குப் போகும் வழியில் இரண்டு மைல் தூரம் அழகிய பங்களாக்கள் பல உள்ளன.

"குலேக்கர்ஸ் வாக்" எனும் மலைச்சருவிலுள்ள சிறு பாதையின் வழியே நடந்து கொண்டு சென்றால் ஆறுபிரத்து எழுநூறு அடி உயரமுள்ள உன்னத நிலையில் நின்று கொண்டு தரைமட்டத்திலுள்ளபெரியகுளம், தோப்பு, வயல்கள், சாலைகள், நடமாடும் மக்கள் வண்டிகள் பிராணிகள் ஆகியவற்றின் காட்சியைக் கண்டின்புறலாம். அஃதோர் இயற்கைச் சித்திரப்படம் போலவே பொலிகின்றது.

அதனை இண்டு எழுதிக்காட்டுதல் என்பது இயலாத தொன்றே. ஊரிலிருந்து நான்கு மைல்தூரத்தில்"பில்லர்ராக்" எனும்கோபுரத் தூண்போன்றநீண்டசிகரங்கள் இரண்டினைக் காணலாம். கோடைக்கானலைச் சார்ந்த பலவேறு குன்றங்களிலும் பலவேறு வகையான காட்சிகள் பொலிகின்றன. குன்றங்களில் நண்பர் குழாத்துடன் சாவகாசமாக நடந்து சென்றால் அக்காட்சிகளையெல்லாம் பார்த்து மகிழலாம். கோடைக்கானலில் பருவ காலம் முழுவதும் உறையாவிடினும் ஒவ்வொருவரும் அவண் சில நாட்களாவது உறைந்து ஊதைக் காற்றையும் தட்ப வெப்ப நிலையையும் காட்சிகளையும் உணர்ந்து உவகை யெய்துதல் இன்றியமையாததாகும். பண்டை நாளில் பாண்டிய மன்னர்களுடைய கையில் இம்மலை இருந்து வந்தது என்றும், அவர்கள் இதனைத் தமது கோடைக்கால வாசஸ்தலமாகக் கொண்டிருந்தனர் என்றும், அவ்வூர்த் தமிழ் மக்களிற் சிலர் கூறுகின்றனர். புற நானூற்றில் கோடைமலை யென்பது குறித்து ஒரு வரலாறு காணப்படுகின்றது.முன்னாளில் "கடிய நெடுவேட்டுவன் பரிசினீட்டித்தான்" எனும் பெயருடைய வேடர் தலைவன் ஒருவனிருந்தான். அவன் ஒரு கொடைஞன். அவன் கோடை மலையை உரிமையாகக் கொண்டிருந்தான். அவனைக் குறித்து பெருந்தலைச் சாத்தனர் எனும் புலவர் பாடிய பாட்டில்;

"வெள்வீ வேலிக் கோடைப் பொருந" என்று அழைக்கிறார்."வெண்மையான முல்லை மலர் நிறைந்த கொடிகளால் மிடையப் பெற்ற வேலியையுடைய கோடை மலைக்குத் தலைவ" என்பது இதன் பொருளாகும். இதுவேகோடைக்கானல் மலையென்று யூகித்தற்கு இடமுண்டு. இம்மலையில் நெடு நாட்களாக மக்கள் உறைந்து வருகின்றனர் என்று அவ்வூரார் இனிது கூறுகின்றனர்.

இந்நாளில் அரசாங்கத்தார் இம்மலையை இன்பத்தின் இருப்பிடமாக ஆக்கி வைத்திருக்கின்றனர். யாண்டும் சாலைகளும் சோலைகளும் விளக்குகளும் விடுதிகளும் நிறைந்துள்ளன. இந்நாளில் மலைவாழ்வு மிகஎளிதாக இருக்கின்றது. இயற்கை இன்ப நிலயமாகிய கோடைக்கானலுக்குச் செல்வர்களும் இளைஞர்களும் அறிஞர்களும் அவசியம் ஒரு முறையாவது போய்வரல் வேண்டும். ஆண்டுகள் தோறும் சென்று பருவம் முழுவதும் உறைவது உடலுக்குப் பெரு நலன் தருவதேயாகும். அம்மலையில் வீசுந் தூயஊதைக்காற்றேபலவகைப்பிணிகளையும் போக்கி உயிர்ச் சக்தியை வளர்க்கும் தகையது. கொடுங் கோடைநாளில், அம்மலையில் இன்பமான மந்தாரப் பொழுதை அனுபவிக்கலாம். தென்னாட்டில் கோடைகால இன்ப வாழ்விற்குரிய சிறந்த நிலையங்களுள் கோடைக்கானலும்ஒன்றாகும்! தமிழ் நாட்டு மலைவளத்தைத் தமிழ் மக்கள் துய்த்து இன்புறுவார்களாக!

——

தேவதாசி

சங்கு ஸுப்ரஹ்மண்யன் எழுதிய சிறுகதை.

ஊரெல்லாம் பிள்ளையார் நோன்பைக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. ஆனால் வெ. ம. க. வீரப்ப செட்டியார் வீட்டில் மட்டும் ஒன்றையும் காணோம். பிள்ளையார் பிம்பத்தை வைத்துப் பூஜை செய்ய வேண்டிய நடுக்கூடத்தில் அணில்கள் ஜதை ஜதையாக ஓடிப் பிடித்து விளையாடிக் கொண்டிருக்கின்றன. அந்த அணில்களின் நேச வாழ்க்கையைக் கண்ணாப் பார்த்துக் கொண்டு அலமேலு உட்கார்ந்திருந்தாள். எண்ணைப் பசையற்ற தலைமயிரோடும், அழுது அழுது அழுகையே தெவிட்டிப் போன கண்களோடும், பட்டினி கிடந்து கிடந்து ஒடுங்கிப்போன உடலோடும், இருப்பதற்கு அலமேலு என்ன பாவம் செய்தாளோ? சு. வ லெ. வம்சத்தில் பிறந்து நல்ல செல்வச் சீமானுக்கு வாழ்க்கைப் பட்ட இந்த இளம்பெண் இந்தக் கோலத்தில் இருக்க வேண்டுமா? கந்தல் புடவைதானா அவள் உடுத்தவேண்டும்? எல்லாம் காலத்தின் லீலை.

கதவு தட்டும் சத்தம் கேட்டது. ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். "வெந்நீர் போட்டிருக்கிறயா?" என்று அதட்டிக் கொண்டே செட்டியார் உள்ளே நுழைந்தார். பயித்தியம் பிடித்தவர் போல அவர் மூகம் இருந்ததே யொழிய வேறில்லை.

அலமேலு வெந்நீரைக் கொணர்ந்து முற்றத்தில் வைத்தாள். "கழுதே! இன்னிக்கு குளிக்கப் போவதில்லேன்னு சொல்றேன். ஒன்னையாரு கொண்டாந்து இங்கே வைக்கச் சொன்னது?" என்று தர்மபத்தினியின் கன்னத்தில் பளீரென ஒரு அறை கொடுத்தார் செட்டியார். பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளிய மரத்தில் ஏற வேண்டியது தான் என்பார்களே! அலமேலு பேய்க்குத்தான் வாழ்க்கைப்பட் டிருக்கிறாள். ஆதலால் வெந்நீர்த் தவலையையும் அப்புறப்படுத்தி விட்டாள்.


கொடுமையை அனுபவித்து அனுபவித்து அலமேலுக்கு யாவும் சகஜமாகிவிட்டன. ஆயினும் பொறுமைக்கும் எல்லையுண்டல்லவா? நல்லநாளும் பெருநாளுமாகிய இன்றைய தினத்தில், வீட்டில் பிள்ளையாரை வைத்துப் பூஜை செய்ய வேண்டிய இந்த நல்ல லக்னத்தில், புருஷன் அகாரணமாக கோபிப்பதென்றால் பெண்மை எவ்வாறு சகிக்கும்? மனத்தில் அடக்கி வைத்திருந்த அத்தனை யுணர்ச்சியையும் கொட்டிவிட வேண்டுமென அவளுடைய வாய் விரும்பிற்று. ஆகவே செட்டியாரின் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு அவள் பேசலுற்றாள்.

"அத்தான்! நானென்ன செய்வது? வூட்டைப்பற்றி நீங்க கவனிப்பதேயில்லை. ஊரார் பேசுகிற வம்பையோ கவனிக்க மாட்டேங்கிறீங்க! தங்கம் போலிருந்த உடம்பு வர வர கேட்டுப் போவுதே! இனி மேலாவது அந்தப் பாழும் வழக்கத்தை நிறுத்திவிடக் கூடாதா?" என்று கொஞ்சும் குரலில் கெஞ்சினாள். அவளுடைய கண்ணிலிருந்து பல பலவென்று கண்ணீர் பெருகிற்று.

"அதுக்கு நீயாரு யோசனை சொல்ல. போ உள்ளே" என்று உறுமிக்கொண்டே புருஷன் தன் கைகளை வெடுக்கெனப் பிடுங்கிக்கொண்டான். கண்களால் மிரட்டினான்.

- "அத்தான் என்னால் இனித்தாழமுடியாது. தற்கொலை செய்துகொள்ளத் தைரியமுமில்லை. உங்கள் பொன்னான கையால் என்னைக் கொன்று விடுங்கள். அப்புறம் உங்களை யாரும் கேட்கவேமாட்டார்கள்." என்று விம்மி விம்மிக் கொண்டே அந்தப் பேதை கூறினாள்.

"நாயே! இவ்வளவு வாயா உனக்கு? நீ செத்தால் தான் எனக்கு விடியும். ஒன்னைத் தொலைச்சிட்டு மறுவேலை" என்று அவளைப் பிடித்துக் கீழேதள்ளிவிட்டு சின்னஞ் செட்டியார் வெளியே போய்விட்டார். அந்த நடுக்கூடத்தில் மிருகபலத்தினால் பெண்மை நசுக்கப்பட்டுக் கிடந்தது. மாலையில் வெகு நேரம் கழித்து எழுந்திருக்கும் போது கூடத்தில் விளையாடிக்கொண்டிருந்த அணில்களைக் காணோம். சிட்டுக் குருவிகளும் தத்தம் காடுகளுக்குப் போய் விட்டன. தனிமையும் நிச்சப்தமும் குடிகொண்டிருந்தது. வெகு நேரமாகத் திறந்தே



கிடந்த வாசற் கதவைத் தாளிடுவதற்காக அலமேலு மெல்ல எழுந்து சென்றாள்..

தெருவெல்லாம் கோலாகலம். அன்று பிள்ளையார் நோன்பல்லவா? பட்டுப்பட்டாக ஆடைகளையணிந்துகொண்டு அநேக பெண்மணிகள் விக்னேஸ்வரன் கோவிலுக்குப் போய்க் கொண்டிருந்தனர். தேவார கோஷ்டியொன்று போய்க் கொண்டிருந்தது. அலமேலு ஆச்சிக்குப் பழைய நினைவுகள் வருவதேயில்லை. இன்றைக்கு மட்டும் அவளுக்குப் பழையஞாபகங்கள் கொஞ்சம் தென்பட்டன.

பத்து வருஷத்துக்கு முன்னே. தான் சிறுமியாயிருந்தபோது தன்னுடைய தகப்பனார் கட்டிய பிள்ளையார் கோவிலின் ஞாபகம் வந்தது. அந்தக் கோவிலுக்கு ஊராரெல்லாரும் போய்க்கொண்டிருந்தனர். ஆனால்தான் மட்டும் அங்கு போவதற்கில்லையென்ற எண்ணம் தோன்றியவுடன் துக்கத்தைஅவளால் அடக்க முடியவில்லை. உள்ளே போனால் விளக்கேற்றுவதற்குக் கூட வழியில்லை. எண்ணெய் இருந்தாலல்லவோ விளக்கேற்ற முடியும்?

சுமார் ஏழு மணியிருக்கும். செட்டியார்வந்து கதவைத்தட்டினார். அலமேலு ஓடிப்போய்க் கதவைத்திறந்தாள். ஆஹா! பூர்ணமாகக் குடித்து அந்த வெறியில் ஆடிக்கொண்டே செட்டியார் வீட்டிற்குள் நுழைந்தார்.

மகாபாபி! பிதிரார்ஜித சொத்தாகிய மூன்று லகாரத்தைக் கூத்தியாருக்கு எழுதி வைத்துவிட்டான். பெண்டாட்டிக்கு வந்த சீதனப்பொருள்களையும் பட்டணம் குதிரைப் பந்தயத்தில் தோற்றான். தன் மாமனார் வீட்டுக்காரர்கள் மேலும் மேலும் பண உதவி செய்ய மறுத்ததற்காகஅவர்கள் பெண்ணைப் பார்க்கவும் வரக்கூடாதென்று கட்டளை போட்டுவிட்டான். தரித்திரம் தாண்டவம் ஆடஆட மனிதன் தன்னை மறக்க விரும்புவானன்றோ! ஆகவே வீட்டில் உள்ள பண்டங்கள் ஒவ்வொன்றாக அடகு வைத்துக் குடிக்கவும் ஆரம்பித்துவிட்டான். பேதை அலமேலு என் செய்வாள்! "புருஷனோடு வாழ்ந்து இறப்பதே முக்தி" என்ற நம்பிக்கை அவள் மனத்திலாழ்ந்திருந்தது. அது மூட நம்பிக்கையோ சரியான கொள்கையோ யாதாயினும் அவள் சித்தாந்தப்படி அவள் நடந்து வந்தாள். "நமக்குளதேன நினைக்கும் கதி" தான் அவளது உயிரை உலகில் தேக்கிக்கொண்டிருந்தது.

உள்ளே புகுந்த மிருகம் அலமேலுவின் சிகையைக் கையால் பிடித்துக்கொண்டது. "அத்தான் அத்தான்! என்று அலறிக் கொண்டு அலமேலு ஓடினாள்.

ஒ ஒன்னை இன்-னி-க்கி தொலைச்சுடரேன். கொன்னுப் பூடரேன்" என்று தெத்தித் தெத்திப் பேசிக்கொண்டே சின்னான் தூக்கினான். வழியிலிருந்த அம்மி அவன் காலில் இடறு விட்டால் அலமேலுவின் ஆயுள் அன்றோடு முடிந்தேயிருக்கும். ஆனால் ஐயோ! மடேரெனப்புருஷன் கீழே விழுந்து விட்டான்.

ஓடிக்கொண்டிருந்த மனைவி திடுக்கிட்டுத் திரும்பினாள். அந்த முற்றத்திலான மண்டல வெளிச்சத்தில் தன் கைப்பிடித்த நாயகன் நெற்றி மோதப்பட்டு உதிரம் பெருக்கெடுத்தோடக் கீழே கிடப்பதை அந்தப் பத்தினி கண்டாள் ஹிருதயத்தில் ஊசிபாய்ந்ததைப் போலிருந்தது.

"அம்மாடி! அத்தான்! அத்தான்!" என்று அலறிக்கொண்டே அருகே ஓடிவந்தாள். "ஐயோ அத்தான்! பாழுங்கள்ளே! அத்தான்! ஐயோ! பேச்சைக்காணோமே" என்று அலறிக்கொண்டே அந்த அனாதை மனைவி அருகே அமர்ந்து பெருகும் குருதியைத் தன் முந்தானையால் ஒற்றினாள். இரத்தம் ஓய்வதாகக் காணவில்லை.

சில நிமிஷமான பின்பு "தெய்வமே துணையில்லையா?" என்று கதறிக்கொண்டே வாசற்படிக்கு ஓடினாள். தெருவில் யாரோ இரண்டு ஸ்திரீகள் கோயிலினின்று வந்து கொண்டிருந்தனர். "அம்மா ஆச்சிமார்களே! யாரையாவது டாக்டரைக்கூப்பிடுங்களேன்! ஐயோ அவருக்கு மண்டே உடைஞ்சுபோச்சே" என்று கூறிவிட்டு மறுபடியும் உள்ளே ஓடி வந்தாள். அதற்மேல் அவளது சதைக்குத் திராணியில்லை. அவளுக்கும் மூர்ச்சை போட்டுவிட்டது. தனது நாயகன் அருகே விழுந்துவிட்டாள்.

பிரக்ஞை வந்து பார்க்கும்போது ஏதோ ஒரு நடு வீட்டில் தான் படுத்திருப்பதையும், கொஞ்ச தூரத்தில் கட்டிலின் மீது தனது புருஷன் போடப்பட்டிருப்பதையும், அவருக்கு யாரோ ஒரு அழகுள்ள பெண்மணி சிசுருஷை செய்துகொண்டிருப்பதையும், தன்னருகே யாரோ ஒரு கிழவி விசிறிக்கொண்டிருப்பதையும், டாக்டர் ஒருவர் அங்கு நின்று கொண்டிருப்பதையும் அலமேலு கண்டாள். தனது நாயகன் ஏதோ முணுமுணுப்பதாகத் தோன்றிற்று. உடனே அலமேலு புதிய உயிர் பெற்றவளானாள்.

சட்டென எழுந்து நாயகன் கட்டிலண்டை ஓடினாள். அங்கு உட்கார்ந்திருந்த அழகுள்ள பெண்மணியின் பாதங்களைப் பிடித்துக் கொண்டு "ஆச்சி! மகாலட்சுமி மாதிரி வந்தீங்களே! எனக்கு மங்கிலியப் பிச்சை தந்தீங்களே!" என்று நன்றி கூறஆரம்பித்தாள். அந்த அழகியோ தனது பாதங்களை விரைவில் இழுத்துக் கொண்டு,

"அம்மாடி! அப்படிச் செய்யாதீங்க. நீங்க அருந்ததி. நானோ ஓர் தேவடியாள்! —சதையை விற்பவள்" என்று கண்ணீர் உதிர்த்துக் கொண்டே கூறினாள். அலமேலுக்கு தானிருக்குமிடம் எதுவென்பது விளங்கி விட்டது.

நளினாக்ஷி—அது தான் அந்தத் தாசியின் பெயர். எவ்வளவோ சீமான்களை அவள் ஒட்டாண்டியாக்கினவள். ஆனால் இன்று அலமேலுவின் முகத்தைப் பார்த்த மாத்திரத்தில், குங்குமப் பொட்டு இடப்பட்ட தூய்மை பிரகாசிக்கும் நெற்றியை நோக்கியவுடன் நளினாவின் குணமே மாறிவிட்டது.

அலமேலு மறுநாளே தனது வீட்டுக்குத் திரும்பி வந்து விட்டாள். மூன்று நாள் அவளுக்குச் சுரம் அடித்துக் கொண்டிருந்தது. அவளுடைய புருஷனுக்கோ நளினாக்ஷி என்ற தேவதாசியின் வீட்டில் சிகிச்சை நடந்து வந்தது. அக்கம் பக்கத்து ஆச்சிமார்களில் அநேகர் அலமேலுவுக்கு நல்லகாலம்பிறக்க வேண்டுமெனத் தங்கள் இஷ்ட தெய்வங்களை வேண்டிக்கொண்டார்களாம். அலமேலுக்காகவே அந்த ஊரில் மழைபெய்து வந்ததாக ஓர் சிலர் எண்ணியிருந்ததில் அதிசயமும் உண்டோ? நளினாக்ஷி காலையும் மாலையும் அலமேலுவின் வீட்டிற்கு வந்து அவளது தேகஸ்திதியைப் பற்றி விசாரித்துப் போகலுற்றாள். குல தெய்வமாகிய கொப்புடை யம்மனிடத்தில் நளினாக்ஷி வைத்திருந்த பக்தி முழுவதும் அலமேலுவிடம் திரும்பிவிட்டது என்றே சொல்லலாம்.

தம்மிடமிருந்து மீண்ட தன் நாயகனைக் காண்பதற்காக ஒரு நாள் அலமேலு இரண்டு தெரு நடந்து சென்று தேவதாசியின் வீட்டிற்குள் நுழைந்தாள். அறைக்கு வெளியே நின்றிருந்த நளினாக்ஷி உள்ளே ஓடிச் சென்று "செட்டியாரையா! ஒங்கவூட்டு ஆச்சி வந்திருக்காவ" என்று ஆசையோடு பரபரப்பாகத் தெரிவித்தாள். அவள் வார்த்தையை முடிக்கு முன்னரே செட்டியார், "நளினா—அந்த மூதேவியை இங்கே வர விடாதே. அது பிசாசு. அது காலடிவச்சஎட மெல்லாம் துடைச்சுடும். உன் வீடும் ஒழிஞ்சுபூடும். அதை அடிச்சுத்தூரத்து." என்று கூச்சலிட்டார். ஏமாந்த முகத்தோடு நளினாக்ஷி அலமேலுவைச் சந்திக்க வெளியே வந்தாள். முத்து முத்தாய்க் கண்ணீர் உதிர்த்துக் கொண்டு அலமேலு "அம்மா நளினம் நான் பிசாசுதான். எப்படியாவது அவர் பிழைத்தால் போதும். பாவி என் கண்ணிற்படாமல், அவர் நல்லா யிருந்தால்போதும். நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுத் திரும்பும்போது அக்காட்சி கல்லையும் கரைப்பதாயிருந்தது. நளினாக்ஷியின் மனம் அப்போது பட்ட பாட்டை விவரிக்க வேண்டுமா?

அடுத்தமாதம் நவராத்திரி ஆரம்ப தினம். அன்று அலமேலுவைக் காண நளினாக்ஷி வந்திருந்தாள். அவள்கையில் இரண்டு புதுப் புடவைகளோடு வந்திருந்தாள். வாசலில் சாமான்கள் நிறைந்த வண்டியொன்று வந்து நின்றது.

"ஆச்சி! இவைகளை உள்ளே கொண்டு போய் வையுங்க" என்றாள் தேவதாசி.

"நளினா இதெல்லாம் எதற்கு? நான் ஒத்தர் கிட்டேயும் ஒண்ணும் வாங்கக் கூடாதென்று அவர் உத்தரவு" என்றாள் அலமேலு.

"இல்லீங்க ஆச்சி இதெல்லாம் அவர்தான் அனுப்பி வைச்சாரு. உள்ளே கொண்டு போங்க"

"என்ன நளினா! அவரிடத்திலேசெல்லாத தம்பிடிகூடக்கிடையாதே. இதெல்லாம்....."

"ஆச்சி! தாயே! என்னை சோதிக்கக் கூடாது. இவவளவும் அவர் பணத்தைக் கொடுத்து வாங்கியதுதான். இப்போதாவது சம்மதமா?"

"நளினம் இது நாயமில்லே! அவர் உத்தரவில்லாது........"

அதற்குமேல் நளினத்துக்குத் தாழமுடியவில்லே. கண்களில் நீர் அரும்பிற்று.

"அம்மா! இன்னும் என்னைப் பாவியாக் காதீங்க. உங்க புருஷனை ஒட்டாண்டியாக ஆக்கியதும் நான்தான். அவருக்குக் கெட்டப்பழக்கங்களை விருத்தி சேஞ்ச படுபாவி நான்தான். பத்தினியாகிய நீங்க கந்தப்புடவையோடு கஷ்டப்படும்படி ஆக்கியதும் இந்தத் துரோகிதான். என் தொழிலுக்கும் நான் சேஞ்ச தப்புகளுக்கும் ஆண்டவன் தான் கூலி கொடுப்பான். இவ்வளவு நாளாக நான் சதை தாசியாக இருந்தேன். ஆனால் உங்களுடைய நெற்றிக் குங்குமப் பொட்டு என்னைச் சரியான தேவதாசியாக மாற்றிவிட்டது நீங்கதான் எனக்கு இனிமேல் தெய்வம்! சோதிக்க வேண்டாம்" என்று கூறி விம்மி விம்மி அழ ஆரம்பித்தாள்.


"நளினம்! அழாதே! சலவைக்கல்மாதிரியிருந்தமுகம் செவப்பாகி விட்டது! எல்லாத்தையும் நான் எடுத்துக்குறேன். இனிமேல் நீ அழுதா, நானும் அழுவேன்" என்று அலமேலு கூறிவிட்டு நளினாக்ஷியை இறுகக் கட்டிக்கொண்டாள்.

அந்த சமயத்தில் தள்ளாடித் தள்ளாடி நடந்து கொண்டு நோயாளி, வெ. ம. க. வீரப்பன் செட்டியார் வீட்டிற்குள் நுழைந்தார். அந்த அந்தி சந்தி வேளையில் இரண்டு பெண்களும் ஒருவரையொருவர் தழுவி நிற்கும் காட்சி அவரைத் திகைக்கச் செய்தது. சந்தோஷமும் ஓர் புறத்தில் ஏற்பட்டது.

"நளினம்! அலமேலுக்கு என் மேலேயிருந்த கோபம் போயிருச்சா?" என்றுபற்களைக் காட்டிக் கொண்டே கேட்டார்.


இந்த ஆனந்தக்காட்சியைபிரகடனப்படுத்துவதே போல அப்போது கோவிலில் கணகண வென மணி ஒலித்தது.

பர்மாக் காட்சிகள்.




சைட்டோ பகோடா.

Kyaikto Pagoda.




தவளைப் பகோடா.

Frog Pagoda.



மாண்டலேயிலுள்ள பெரிய வெண்கல மணி.


Biggest Bell in Burma.



காண்டாப் பாலம்.

Goteik Bridge.


பர்மா நகரத்தார் கோவில்கள்.



பசுமந்தான் கோவில்



பசுமந்தான் மடம்.



கம்பை மடம்.

சமூகச் சீர்திருத்தம் பற்றி எனது சாட்சியம்

திரு. மு. சின்னையா செட்டியார்

நமது சமுதாய சீர்திருத்த விஷயமாக எனது அபிப்பிராயத்தைச் சந்தேகமற விளக்கும் பொருட்டு இங்கு சம்பாஷணை ரூபமாகக் கூறுகிறேன்.

கேள்வி:—தனவணிக சமூகத்தைப்பற்றி நன்காராய்ந்திருக்கிறீர்களா?

பதில்:—ஆம். நான் நன்கறிவேன். சுமார் முப்பது வருஷங்கட்கதிகமாக நமதுசமூகத்தில் பிரபலஸ்தர்களோடும் சாமான்ய ஜனங்களோடும் நெருங்கிப்பழகி அவர்களுடைய பழக்க வழக்கங்கள், தொழின் முறை செல்வநிலை, கலைவளர்ச்சி, நாகரீகம், வாழ்க்கை முறை, வரவு செலவு (Budget) நிலைமை இவற்றை நன்றாகக் கவனித்து வந்திருக்கிறேன்.

கேள்வி:—சமூகத்தின் பொதுவான யோக்கியதையென்ன?

பதில்:—தென்னிந்தியாவில் இது ஒரு மரியாதையான சமூகம். நம்பிக்கை, நாணயம், ஒழுங்கு, மரியாதை, அமைதி, அடக்கம், வாய்மை, பொறுமை முதலிய நற்குணங்களுக்கு நமது சமூகத்தில் அதிக மதிப்பும் கௌரவமுமுண்டு. பொய், புரட்டு, அசத்தியம், அயோக்கியத்தனம் முதலிய தீயகாரியங்கள் அவமதிக்கப் படுகின்றன.

கேள்வி:—பழக்க வழக்கங்கள் எப்படி?

பதில்:—பழக்க வழக்கங்கள் மிக மிகக் குறைபாடுகளுள்ளவைகளே. அவை கால தேச வர்த்தமானங்கட்கேற்பப்புதுப்பிக்கப் படாமலும் திருத்தமடையாமலும் மிகவும் பழமையான நிலைமையிற் சீர் கேடுற்றிருக்கின்றன.

கேள்வி:—தொழின் முறையென்ன? எங்கெங்கு? அவற்றின் சற்கால நிலைமையென்ன?

பதில்:—பெரும்பாகம் வட்டித் தொழில். சிறுபான்மை ஏனைய வியாபாரங்களும் தொழிற்சாலைகளுமுண்டு. சிலோன், பர்மா, மலாய்நாடுகள், அன்னம் தேயங்கள, சுமட்ரா நாடுகள், இந்திய நாடுகள் இவை முக்கியமான வியாபாரஸ்தலங்கள். தற்காலம் விளைபொருள்கட்குப் போதுமான விலையில்லாததினால் கஷ்டமும், நஷ்டமும் அதிகரித்து வருகின்றன.

கேள்வி:—கலைவளர்ச்சி நாகரீகம் எப்படி?

பதில்:—முப்பது வருஷங்கட்கு முன்னிருந்த நிலைமைக்கும் இப்போதுள்ள நிலைமைக்கும் அதிக வித்தியாசமுண்டு. முப்பது வருஷங்கட்குமுன் கல்வி யென்பது அரிச்சுவடியும் எண் சுவடியுமாகவே இருந்தன. அவையிரண்டும்படித்து முடிந்தால்பிள்ளைபடித்துவந்து விட்டானென்றுசொல்லிக்கொள்வார்கள். அந்தப்பாக்கியமும் பெண்களுக்கில்லை. பெண்கள் படிப்பதே அசம்பாவிதம் என்று கருதப்பட்டது. இப்போது பெரிய பெரிய படிப்பாளிகளும் அதி மேதாவிகளும், நாவன்மை சொல்வன்மையுடைய போறிஞர்களும், அரசியல் ஞானமுடையவர்களும், பத்திராதிபர்களும், தமிழ்வடமொழி ஆங்கிலம் ஆகிய பாஷைகளில் பெரிய பெரிய வித்துவான்களும், பிரான்சு, சிங்களம், பர்மா, மலாய், அன்னம், தெலுங்கு, கன்னடம் முதலிய பாஷைகளைத் தாராளமாகப் பேசுபவர்களும் பலரிருக்கின்றனர். பெண்கள் ஏராளமாகப் படித்துவருகின்றனர். ஆயிரக்கணக்கான ஜனக்கூட்டத்தின் முன்னின்று நாவன்மையோடு பேசும் பெண்களும் தோன்றி யிருக்கின்றனர். ஆகவே கலைவளர்ச்சியும் நாகரிகமும் அதிகமாகவே அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கின்றன.

கேள்வி:-வாழ்க்கை முறை யெப்படி?

பதில்:-முன்னுக்குப் பின் விரோதமானது. வரம்பும் நியதியும் நிச்சயமு மில்லாதது. அனுவசியமான ஏற்பாடுகளையும் வீணான செலவுகளையும் மேற்கொண்டிருப்பது. வாழ்க்கை இன்பங்களுக்குப் பிரதிகூலமானது. மன அமைதிக்கும் சந்தோஷத்துக்கும் விரோதமானது. அளவில்லாத பணத் தேவையுடையது. பணமிருந்தும் சுகமில்லாதது.



கேள்வி:-வரவு செலவு நிலைமை யென்ன?

பதில்:-நான் அறிந்த காலமாக வரவு செலவு நிலைமை அபாயகரமானதாகவேயிருந்தது. வருவாயை நினைத்துக்கொண்டு பெருஞ் செலவினங்கள் தயாரிக்கப்பட்டன. கடன்படுவதற்குக் கொஞ்சமும் அஞ்சவில்லை. கடைகள் திறப்பதற்கும் பின் வாங்கவில்லை. பெரும்பாலும் டம்பத்துக்காகவே தான தருமங்கள் செய்யப்பட்டன. தேவையில்லாத விடங்களிலெல்லாம் கோயில்களும் சத்திரங்களும் பசு மடங்களும் பாடசாலைகளும் கட்டப்பட்டன. சிறு சிறு விசேடங்கட்கெல்லாம் பெருஞ் செலவு செய்யப்பட்டன. கல்யாண மென்பது குடி கெடுக்கும் காரியமாக அல்லது நாச வேலையாக மாறிவிட்டது. கல்யாணச் செலவினால் நஷ்டமடைந்த குடும்பங்கள் பல. அளவில்லாத பணத் தேவையை உத்தேசித்துக் கல்யாணஞ் செய்து கொள்ள முடியாமல் கல்யாணத்தை நினைக்கவும் முடியாமல் கண் கலங்கி நிற்கும் குடும்பங்கள் பல. இப்படி வீண் செலவுகளைப் பெருக்கி அதற்கு வகை செய்ய முடியாமலும் வரவு செலவைச் சரிக்கட்டிக்கொள்ள முடியாமலும் பெருந்தொகை துண்டு விழுந்து கிடக்கிறது. பெருவாரியான விசேடங்களும் காரியங்களும் ஸ்தம்பித்தும் போய்க் கிடக்கின்றன.

கேள்வி:- அப்படியானால் சமூகம் இனி நல்ல நிலைமைக்கு வர வழியில்லையா?

பதில்:- வழியுண்டு. வழியில்லாத காரியமே உலகத்திலில்லை. தொழில் வியாபாரம் முதலியன எப்போதும் இலாப நஷ்டங்கட்குட்பட்டவைகளே. இலாப நஷ்டங்கள் இயற்கையானவை. அடிக்கடி மாறிவரும் தன்மையுடையவை. தற்காலம் உலக நிலைமையே நன்றாக இல்லை. பண நெருக்கடியும் வியாபார மந்தமும் விலைகளின் வீழ்ச்சியும் நமது சமூகத்தை மட்டும் பாதித்திருக்கவில்லை. பெரிய பெரிய அரசாங்கங்களையும் கோடீஸ்வரர்களையுங்கூடப் பிடித்து நிற்கின்றன. ஆகவே அதற்காக சமூகம் பயப்படவேண்டியதில்லை. கவலைப்படுவதிலும் பிரயோஜனமில்லை. உலகமே பெரு முயற்சி செய்து கொண்டிருப்பதால் சீக்கிரம் விமோசனமேற்படலாமாயினும் எதிர் காலத்தில் வட்டித்தொழில் அதிக நயந்தருவதாக இராது. வட்டித்தொழிலை மட்டும் நம்பிக்கொண்டிராமல் பற்பல வியாபாரங்களிலும் தொழிற்சாலைகளிலும் சமூகம் இடுபடவேண்டும். எல்லாத்துறைகளிலும் படிப்பும் அநுபவமும் இனி வேண்டும். அவை ஒருபுறமிருக்கத்தொழிலால் ஏற்படும் கஷ்டநஷ்டங்கள சமூக வாழ்க்கையின் அடிப்படையான காரியங்களை எந்த நிலைமையிலும் எக்காலத்தும் பாதிக்காமல் வாழ்க்கை முறையை முற்றிலும் சீர்ப்படுத்திக்கொள்ளவேண்டும். அதுதான் இப்போது முதற்காரியம்.

கேள்வி:—சீர்திருத்திக்கொள்ளவேண்டிய காரியங்களெவை?

பதில்:—வீணாகச் செய்யப்படும் எல்லாச் செலவுகளையும் ஒழித்து விட வேண்டும். ஆடம்பரமும் டம்பச் செலவுகளும் ஒழிய வேண்டும். பட்டம் பதவிகளில் வைத்திருக்கும் ஆசையைத் துறக்க வேண்டும். சாரமற்ற தருமங்களை மறந்துவிட்வேண்டும். விவாஹ முறை முற்றிலும் புதுப்பிக்கப்பட வேண்டும்.

கேள்வி. எப்படி ?

பதில்:—காப்புக் கட்டுப் புதுமை, கார்த்திகைப் புதுமை திருவாதிரைப் புதுமை, தீர்த்தம் சாப்பிடுதல், வேவு, சாந்தி, சபிண்டிதுஷ்டி முதலிய விசேஷங்கள் யாவும் ஒரே நாளில் முடிந்து விடவேண்டும். அவை ஒவ்வொன்றுக்கும் ரூபாய் நூறுக்கு மேற் செலவு செய்யக் கூடாது. உறவினர் கட்கும் நண்பர் கட்கும் விருந்தளிப்பதைத் தவிர வேறு பொருள் ஒன்றும் கொடுக்கவும் வாங்கவும் கூடாது. பிறர் பாராட்டுவதற்கென்று ஆடம்பரமான காரியங்களும் டாம்பீகமான செலவுகளும் செய்யக்கூடாது. பட்டங்களும் பதவிகளும் தானாக வந்தாலன்றி அதற்காக ஒருபைசாவும்செலவு செய்யக் கூடாது. கோயிற் கட்டுதல் கும்

பாபிஷேகம் செய்தல், சத்திரங் கட்டுதல். பாடசாலை வைத்தல் பசுமடம் வைத்தலாதிய சாரமற்ற தருமங்களை இனி மறந்து விடவேண்டும். கல்யாணம் சர்வ சாதாரணமாக நடைபெற வேண்டும். பெண்ணுக்காக வென்று கொடுத்தலும் வாங்குதலும் ஒழிய வேண்டும். மூன்று நாட்களிலும் ஐநூறு ரூபாய்க்கு அதிகமாகாத செலவிலும் கல்யாணம் நடைபெற வேண்டும்.

கேள்வி:—தற்காலம் அனுபவித்து அறிந்து கொண்ட கஷ்டங்களினாலும் சிரமத்தாலும் இனி விசேட காலங்களிற் செய்யப்படும் வீண்செலவுகளையும், டம்பத்துக்குச் செய்யப்படும் செலவுகளையும், குறைத்துக்கொண்டாலும் கலியாண காரியம் எப்படி சர்வ சாதாரணமாக நடைபெறும்? பெண்ணுக்குக் கொடுப்பதும் வாங்குவதும் எப்படி ஒழியும்? மூன்று நாட்களிலும் ஐநூறு ரூபாய்ச் செலவால் கல்யாணம் எப்படி நடைபெறும்?

பதில்:—கல்யாண வீட்டில் பெண்ணுக்குச் சமான் வைத்தல், பட்டுக் கண்டாங்கி வைத்தல், பல சாக்குக் கடை வைத்தல் சட்டி பெட்டி கொடுத்தல், பாக்கு மூடை கொடுத்தலாகிய வீண் காரியங்களும் தாளமேளத்தைக் கொண்டு போய்ப் பேய்வருதலுமாகிய வீண் சடங்குகளும் அடியோடு ஒழிக்கப்பட்டுக் காரியமான சில சடங்குகளோடு உறவினர்கட்கும் நண்பர்கட்கும் விருந்து செய்தனுப்புவதோடு நின்றால் மூன்று நாளும் ஐநூறு ரூபாயும் போதுமானது. அப்போது கல்யாண காரியம் சர்வ சாதாரணமாக நடக்கக்கூடுமன்றோ!

கேள்வி:—அப்படி நடக்கக் கூடுமாயினும் பெண்ணுக்குப் பணம் கொடுப்பதும் வாங்குவதும் எப்படி ஒழியும்?

பதில்:—பெண்ணுக்குப் பணம் வாங்குவதும் அடியோடு ஒழிய வேண்டும். அந்த ஆபத்துத் தீராவிட்டால் ஏனைய திருத்தங்களாற் பயனில்லை. அந்த மார்க்கெட் (Market) இல்லாமற் செய்வதற்கும் பெண்களின் விடுதலைக்காகவும் அனுவசியமான துக்கமும் துயரும் தீருவதற்காகவும் இன்னும் பல துன்பங்கள் தொலைவதற்காகவும் மாதர் மறுமணத்தை சமூகம் ஆதரித்து அநுஷ்டிக்க வேண்டும்.

கேள்வி:— பெண்கள் புனர் விவாஹம் செய்து கொள்ளுதல் நமது பழக்க வழக்கங்கட்கு மாறான செயலாகுமன்றோ?

பதில்:- ஆம். அந்த வழக்கம் இப்போது அநுஷ்டானத்தில் இருந்தால் அதைப்பற்றி இவ்வளவு தூரம் விவகரிக்கவும் புதிதாக பிரரேபிக்கவும் அவசியமில்லையே. முன்னொரு காலத்தில் அந்த ஏற்பாடு நல்லதாக இருந்திருக்கலாம். ஆனால் தற்கால உலகத்துக்கும் ஜன சமூகத்தின் மனப்போக்குக்கும் கால தேச வர்த்தமானங்கட்கும் அந்த வழக்கம் கொஞ்சமும் ஒத்ததாக இல்லை. முற்காலத்தில் பிள்ளைகளுக்கு முப்பது வயதான பின்னும் பெண்களுக்கு இருபது வயதுக்கு மேலும் கல்யாணம்செய்வார்களாம். மக்கள் நூறு வயதுக்கு மேலும் ஜீவித்திருந்து அதற்கு மேலும் சிலர் சாகாமல் கூனிக்குறுகி மதமதக் கத்தாழியில் வைத்துப் புதைக்கப்படுவார்களாம். அந்தக்காலத்து ஏற்பாடுகளும், வழக்கங்களும், இப்போது எப்படிப் பொருந்தும்? இப்போது பிஞ்சிற் பழுத்து ஐந்து வயதிலும் ஏழு வயதிலும் பத்து வயதிலும் கல்யாணம் செய்வதும் அகால மரணமடைவதும் சகஜமாக இருக்கிறது. வயதுக்கிருந்து வாழுகிறவர்கள் மிகச்சொற்பமாகவே யிருக்கிறார்கள். கொள்ளை நோய்களும் மோட்டார் விபத்தும் அகால மரணமும் சகஜமாக இருக்கிறது. ஆகாய விமானம் வேறே வந்துவிட்டது. இந்த நிலைமையில் நூறுவயது மனிதர்களின், பழக்க வழக்கங்களை நினைத்துக்கொண்டு என்ன செய்கிறது? அப்படியானால் இப்பொழுதும் பொறுத்திருந்து ஆண்களுக்கு முப்பது வயதிலும் பெண்களுக்கு இருபது வயதிலும் விவாகம் செய்யும் வழக்கத்தையேன் அநுஷ்டிப்பதில்லை?

கேள்வி:—பழக்க வழக்கங்கட்கு அப்படிச் சமாதானம் செய்து கொண்டாலும் சாஸ்திர விரோதமென்பார்களே?

பதில்:—சாஸ்திரத்தைப் பற்றி நம்மவர் கவலைப்பட்டதில்லை. இனிமேலும் கவலைப்பட வேண்டியதில்லை. பெண்ணுக்குப்பணம் வாங்கக் கூடுமென்று எந்தசாஸ்திரம் கூறுகிறது. மூத்த பெண்ணை இளைய மாப்பிள்ளைகளை கல்யாணம் செய்யும்படி எந்த சாஸ்திரம் கூறுகிறது? ஒன்றன்பின் ஒன்றாக வாழைக்கீட்டை வரையில் பல பேர்களை மணந்து கொள்ளும்படி எந்த சாஸ்திரம் கூறுகிறது? விபசாரம் செய்யும்படி எந்த சாஸ்திரம் கூறுகிறது. விபூதி உருத்திராக்ஷம் அணிந்து பஞ்சாக்ஷரம் ஜபம் செய்து கொண்டு புலாலுண்ணும்படி எந்த சாஸ்திரம் கூறுகிறது? இவைகட்கெல்லாம் சாஸ்திரங்களைப் புரட்டிப் பார்க்காமல் உண்டு உடுத்தி உலகவின்பத்தை ஆவலோடு அநுபவிப்பதற்குரியதும் கிடைத்தற் கரியதும் அருமையானதுமான பச்சிளம் பருவத்தில் அன்னியாயமாக சிறுபொழுது மணையிலிருந்த தண்டத்துக்கு வாழ்விழந்து உயிரைப்பறி கொடுப்பது போல ஆடை அணிகளைப் பறிகொடுத்து விட்டு, அலக்கழிக்க பட்டு நிந்திக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, பரிதாபமான நிலைமையில் முக்காடிட்டு மூலையிற் கிடக்கும் அபாக்கியவதிகளான விதவைப்பெண்களைப் பின்னும் வாழ்க்கை நலன்களை அநுபவிக்கும்படி அனுமதிக்கும் புண்ணியமான காரியத்துக்குத்தானா சாஸ்திரங்களைப் புரட்ட வேண்டும்? இதை ஆக்ஷேபிக்கும் பாரபக்ஷமான சாஸ்திரங்கட்கு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து இறுகக் கட்டிவைப்பதே நல்லது.

கேள்வி:—மாதர் மறுமணத்தைச்சாமான்ய ஜனங்களும் பெருந்தனவந்தர்களும் ஒரு வழிப்பட்டு ஆதரிப்பார்களா?

பதில்:—சாமான்ய ஜனங்களைப் பார்க்கிலும் தனவந்தர்கட்குத் தான் மாதர் மறுமணம் இன்னும் அவசியமென்று கூறுகிறேன். அகால மரணமும் விதவைத் தன்பமும் எல்லோருக்கும் பொதுவானதென்பதை மறந்துவிடக் கூடாது.

கேள்:— அப்படியானால் விதவையான பெண்கள் எல்லோரும் மறுமணம் செய்து கொள்ள வேண்டுமா?

பதில்:-இல்லை அது நியாயமாகாது. விருப்பமுள்ளவர்கள் மட்டும் மறுமணஞ் செய்து கொள்ளட்டும். விரும்பாதவர்கள் அவர்களிஷ்டம்போல் வைதவ்ய விரதத்தை யாதொரு ஆக்ஷேபணையுமில்லாமற் காப்பாற்றிக் கொள்ளட்டும்.

சீட்டாட்டம்.

பல்லவி.

சீட்டாட்டம் பொல்லாது —
சீரழிக்குமே யென்றைக்குஞ் (சீட்)

அநுபல்லவி.

கேட்டாட்டம் வேறது போல் —
கிடையாதையோ புவியில்
கேட்டாரும் வாழ்வு நலங் —
கெட்டாரித் தப்புவியில் (சீட்)
சூதால் வரும் பொருளைச் —
சுற்றியிருக் கின்ற நண்பர்
ஆதாரம் போற் பல சொல் —
லாடி யடைந் தோடியுண்பர் (சீட்)
ஒருபாகங் காட்டி மைந்தர் —
ஊனுறிஞ்சும் வேசி யொப்பப்
பொருளாசை காட்டியுள்ள —
பொருள் பறிக்குமே விருப்பச் (சீட்)
வண்டரிக்கு மாறு பல —
வழிகளிலுந் துன்ப முற்றுக்
கொண்டபொருளைத்தெருவில்
கொட்டுவதோ புத்தி யற்றுச் (சீட்)
வேலையற்ற சோம்பேறி
வீணருக்க தேபிழைப்பு
மூலையிலுட்காரு மதி —
மூடர்பெறு வாரழைப்புச் (சீட்)
சர்க்கா ரிந்தவிடில் —
சந்தேக மின்றிச் சிறை
வைக்கா திருப்ப துண்டோ —
வாய்பேச லென்னமுறை (சீட்)
கனதருமர் நளன்முதலோர் —
கதைகள் பல கேட்டிருந்தும்
"தனவைசிய"ச் செல்வர்கள் —
தன்மை யெக்த நாட்டிருந்தும் (சீட்)

தனவணிக சமூகமும் உடற்பயிற்சி இயக்கமும்

சாண்டோ லே. சோமசுந்தரன்.

நான் உடற் பயிற்சியின் உண்மைத் தன்மையின் உணர்ந்து இருபத்தைந்து ஆண்டு களாகின்றன. ஆரம்பத்தில் என் சொந்தத் தேகாபிவிருத்தியின் பொருட்டுப் பத்து வருடங்கள் உழைத்தேன். அப்போது நமது சமூகத்தவர்களிடையே இதற்குப் பெரும் எதிர்ப்பு இருந்து வந்தது. நான் கேவலமாகப் பேசப்பட்டேன்; அவ்விதமே நடத்தப் பட்டேன். அந்நிலைமையிலும் விடாது முயன்று மேற்கூறிய பத்து வருட காலத்தில் நல்ல பலன் கண்டேன். நான்கண்ட பலனை நம் நாட்டவரும், சிறப்பாக எனது சமூக இளைஞர்களும், காணவேண்டுமென்ற பேராவலினால் தூண்டப்பட்டு, பத்திரிகைகளில் பல வருடங்கள் கட்டுரைகள் எழுதியும், பொதுக்கூட்டங்களில் பிரசங்கங்கள் செய்தும், வலிமைக் காட்சிகள் மூலம் இதன் உண்மைகளை விளக்கியும், துண்டுப் பிரசுரங்கள் புத்தகங்கள் முதலியன வெளியிட்டும் வந்திருக்கிறேன். பிற்பகுதியாகிய பதினைந்து வருடங்களில் இதற்கு நான்மிக நன்றாக உழைத்திருக்கிறேன். எனது சொந்தத் தேக நலத்தையும் பொருட்படுத்தாது இரவு



பகலாக வேலை செய்துள்ளேன. இதனுல் அநேகம் இடர்களுக்குட்பட்டேன். மேற்கூறிய விஷயங்களுக்காக ஆரம்பத்திலிருந்து என் சொந்தப் பொருளையே செலவு செய்தேன். வலிமைக் காட்சியின் பொருட்டும் தற்காப்பின் நிமித்தமும் எனக்கு ஏற்பட்ட ஆபத்துகள் கொஞ்சமல்ல. உடற்பயிற்சியினல் ஏற்கனவே சம்பாதித்து வைத்திருந்த தேக நலன்கள் இப்போபத்துகளினின்றும் காப்பாற்றின என்பது உண்மையிலும் உண்மை.

ஆங்கில பாஷையில் நான் போதிய பயிற்சி பெறுதிருந்தும், மேல்நாடுகளிலிருந்து இதற்குரிய ஏராளமான புத்தகங்களை வருவித்து ஆங்கில பாஷா நிபுணர்கள் மூலம் ஆராய்ச்சி செய்தேன். இதற்கான ஆங்கிலப் பத்திரிகைகள் பல தருவித்தேன். இதற்கேற்ற கருவிகளும் வாங்கினேன். மேல்நாட்டு உடற்பயிற்சி நிபுணர்களுடைய பாடங்களை எடுத்துப் படித்தேன். இவைகளுக்காக மதிக்கத்தக்க ஓரளவு தொகை செலவு செய்திருக்கிறேன். விரும்புவோர்க்கு நேரிலும் கடித மூலமும் இதின் உண்மைகளை எடுத்துரைக்க ஒரு போதும் நான் தயங்கியதேயில்லை. சில போது தினம் ஒன்றுக்கு 40-50 கடிதங்கள் கூட எழுதியுள்ளேன். அதில் பல கடிதங்கள் பல பக்கங்கள் எழுதவேண்டியிருக்கும். இதற்கிடையிடையே பத்திரிகைகளுக்குக் கட்டுரையும் எழுதுவதுண்டு. கடந்த இரண்டு வருடங்களில் இதற்காக 7000-க்குக் குறைபாத கடிதங்கள் எழுதியிருக்கின்றேன். தபால் முத்திரைக்காகச் செலவிடப்பட்டிருக்கும் பணமும் கொஞ்சமல்ல.

சில வருடங்களாகப்பலசாலிகள் மகாநாடு கூட்ட வேண்டுமென்க் கனவு கண்டேன். கனவு நனவாகி, கடந்த மூன்று வருடங்களுக்குள் இரண்டு பல சாலிகள் மகாநாடுகளும் கண்டேன். இதனைக் காண ஆதரவளித்தது எனது சமூகமே எனப் பெருமையுடன் கூறுகின்றேன். ஓர் செல்வாக்குள்ள சமூகத்தில் பிறந்திராவிட்டால் இந்த அளவு பலனை நான் கண்டிருக்க முடியாதென்பது உறுதி. இவ்வியக்கத்திற்கு ஆதரவளித்து வரும்எனது சமூக மக்கள் இதன் உண்மைத் தன்மையினை உணர்ந்து வந்தாலும் போதிய அளவு பலன் பெறவில்லை என்பதும் மறுக்க முடியாத விஷயமாகும். இதற்காகவே சமூக இளைஞர்க்கென உடற்பயிற்சி மகாநாடு ஒன்று காணப் போகிறேன். தேகபலத்தில் தாழ்ந்தவர்கள் என்று கூறப்படும் சொற்கள் இன்னும் சில வருடத்தில் மறக்கடிக்கப்படும் என்பது நிச்சயம். ஒவ்வொரு சிறுவர்-சிறுமிகளும் தேக நலத்தில் சிறந்து விளங்கி, பிற சமூகங்களுக்கும் வழிகாட்டியாயிருக்க வேண்டுமென்பது சிறியேன் விருப்பம்.


ஏறக்குறைய ஐம்பதாயிரம் மக்களைக் கொண்ட நமது சமூகத்தில் 600—700 பெயர்களே இப்போது இப்பயிற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள் என அறிகிறேன். இதில் பெண்கள் ஐம்பது பெயர்களுக்கதிகமில்லை என்றும் தெரிகிறது. இதுமிகக் குறைந்த அளவையே குறிப்பதாயிருக்கிறது. எனினும் ஆரம்பத்தில் வெறுப்புக் கொண்ட பெரியார்கள் இப்போது இதில் முனைந்து வேலை செய்கிறார்கள். குடும்பம் குடும்பமாய் சில குடும்பங்கள் ஈடுபட்டிருக்கின்றன. இளைஞர்; வயோதிகர், சிறுவர்—சிறுமி, புருடன்—மனைவி, சோதரி சோதரன் எல்லோரும் இதில் கலந்து கொள்ளுகின்றனர். ஒருவரை ஒருவர் தூண்டிவிடுவதானது வருங்கால அபிவிருத்தியினைக் காட்டுகிறது. என்றாலும் நமதிளைஞர்கள் நிச்சயப் புத்தியுடன் ஒருமித்து முனைந்து இதில் பிரவேசிக்கின்றார்களில்லை. இளமை மணமும் புற வாழ்க்கையின் கேடுகளுமே அதற்குத் தடைக் காரணங்களாக நிற்கின்றன. முனைந்து ஈடுபட்டால் பலன் சமீபத்திலிருக்கிறது. பதினைந்து வருடங்களுக்கு முன் படத்தில் காணும் இளைஞரைப்போல் ஒருவரைக் கூட நமது சமூகத்தில் நீங்கள் கண்டிருக்க மாட்டீர்கள் என்பது நிச்சயம். ஆனால் வருங்காலச் சிறுமிகளும்—சிறுவர்களும் தேக நலத்தில் சிறப்புற்று தற்காப்புக்கேற்ற தகுதி பெறுவார்கள் என்பதற்கான நற்குறிகள் தோன்றுகின்றன. எனது வளர்ப்பின் பயனை எதிர்கால நம் மக்கள் நன் கனுபவிப்பர். அதுவரை நானும் ஓய்ந்திருக்கப் போவதில்லை.

தனித்த முறையில்போட்டியிட்டுச் செயம் பெற்றுமகிழும்மகிழ்ச்சியைக்காட்டினும் பல பேர்கள்—பல்நிறைந்தவர்கள்கூடும்மகாநாட்டில்தங்கள் பராக்கிரமங்களைக்காட்டிச் செயம் பெற்று மகிழும் மகிழ்ச்சியே சாலச் சிறந்த தென்பதை அறிஞர் எவரும் அங்கீகரிக்கார். வருகிற இளைஞர் மகாநாட்டில் எல்லோரும் பரிசு பெற விழையும்உயர்ந்த முயற்சியில் முயல வேண்டுகிறேன். ஒரு மகாநாட்டின் நீதிபதிகள், சார்புபற்றி நீதி வழங்குகிறார்கள் என்று இருந்த சொற்களைப்போல் கேவலமானது வேறொன்றில்லை. எனது ஜெயம், தோல்வி, திறமைமுதலியவைகளைப் பற்றிப் பொதுசனங்கள் நிச்சயிக்கட்டும்.

நான் இதுவரை செய்து வந்த வேலைகள் திருப்திகரமானதில்லை என்று சிலர் குறை கூறி வருகின்றனர். அது கருதியே எனது வேலைபற்றி இக்கட்டுரை சுருக்கமாக எழுத நேர்ந்தது. பிறிதொரு சமயம் எனது சவிஸ்தாரச் செய்திகள்பற்றிக்கூறுகிறேன். எனது

தனவணிக "சார்லஸ் அட்லாஸ்"

இவ்வியக்கத்தின் பயனாய் உருவான இவ்விளைஞரைப்போன்ற சரீரக் கட்டுடையோரைச் சில வருடங்களுக்குமுன் நமதுசமூகம் உற்பத்திசெய்ததுண்டா?



முத்து. முத்துக்கருப்பன்,
கோ. லெட்சுமிபுரம்.

சக்திக்கேற்ப நான் ஒருவனாய், வேறு உதவியின்றிப் பல வருடங்களாய்ச் செய்துவந்த உதவியின் பயனாய் ஒரு சிறு பலன் கூட ஏற்படவில்லையென்று எவரும் கூறத்துணியமாட்டார்கள். நான் இதில் உழன்ற இருபது வருடங்கட்குப் பிறகே, எனக்கு உதவி செய்வோரும் போட்டிக்கழைப்போரும் தோன்றி வருகின்றனர். நான் இவ்வியக்கத்தைச் சரியான முறையில் வளர்த்திராவிட்டால், தடியடி வஸ்தாதுகளுக்கு நேர்ந்த கதி எனக்கும் நேர்ந்து, வெகு நாட்களுக்கு முன்னரே இவ்வியக்கம் நசித்துப் போயிருக்கும் என்பது உண்மை.

மேலை நாட்டில் முதன் முதல் இவ்வியக்கத்தை வளர்த்த பெரியார் எவரோ, அவருக்கு நான் சிஷ்யனாகி, அவருடைய உயர்ந்த போதனைகளை ஏற்று, அவருடைய அரிய கலையைக் கற்று, அவருடைய அடிப்படையான திட்டத்தைக் கைக்கொண்டு வேலை செய்ததின் பயனாகவே இதுகாறும் எதிர்ப்பின்றி இதனை ஒரு சிறிதாவது வளர்க்க முடிந்ததென்று சந்தோஷத்துடன் உங்க


பட்டும் தெளியவில்லை

திரு. சோ. முருகப்பா

பொருளாதார நெருக்கடி உலக முற்றும் சூழ்ந்து வருகின்றது. எல்லா தேசத்தாரும் எல்லா வியாபாரியும் இதனால் பாதிக்கப்பட்டு விட்டனர். அப்படியே நாட்டுக் கோட்டையாரின் வியாபாரமும் ஸ்தம்பித்து நிற்கின்றது. இச்சமூகத்தாருக்குப் பண நிலைமையில் பலமுறை மந்த மேற்பட்டிருக்கிறது. அக்காலங்களில் மலாயா நாடு விழுந்தால் பர்மா தலைதூக்கி நிற்கும். பர்மா படுத்தால் சைகோன் பகுதி நிமிர்ந்து நிற்கும். ஆனால் இப்பொழுதைய நிலைமை எல்லாம் ஒரு மாதிரியான நெருக்கடியை நல்கியிருக்கிறது. இதனை உணராதவரில்லை. உணருவது யோசனையினாலன்று. நித்திய அனுபவத்திலேயே உணர்ந்து வருகின்றனர்.

இந்தக் கஷ்டத்தைச் சமாளிக்கக் கையாள வேண்டிய வழிகளில் முக்கியமானது செட்டான வாழ்க்கையாகும். வாழ்க்கை முறையை அளவுபடுத்திச் செம்மை செய்து கொள்ள வேண்டும். கரையில்லாத கம்மாயில் எவ்வளவு வெள்ளம் வந்தாலும் தங்காமல் வீணாவதுபோல் நம்மவர் ஈட்டும் பொருள் முழுமையும் வீணாகி வருகிறதென்ற குரல் சென்ற இருபதாண்டுகளாகக் கேட்டுக்கொண்டேயிருக்கிறது. அக்குரலை யாவரும் கேட்டே வருகின்றனர். அதை உண்மையென்றும் ஒப்புக்கொள்கின்றனர். ஆனால் கரையிழந்த கம்மாயைச் சீர்படுத்தவோ பெருகிவரும் தண்ணீரை நிறுத்திப் பயன்படுத்திக் கொள்ளவோ முடியவில்லை. தண்ணீர் வரவு குறைகிறதென்பது இன்றைய நிலையில் யாவரும் அறிகின்றனர். இப்பொழுதாவது கிடைக்கும் பொருளை வீணாக அழிய விடாமல் காப்பாற்ற வேண்டாமா என்பதே நமக்கு முன்னுள்ளிருக்கிற கேள்வியாகும்.

கள்ளுண்டு பழகிய ஒருவர் கள்ளுண்டதாலேயே கைப்பணமெல்லாம் வீணாகிறதென்று பலர் கூறும் உபதேசத்தைக் கேட்பார். வாஸ்தவந்தானென்று உணரவும் செய்வார். ஆனால் பணங் கிடைக்கும் போதெல்லாம் கள்ளுக் கடையில் சென்று குடிக்காமலிருக்க முடிகிறதில்லை. அப்படியே சூதாடும் பலருமிருக்கின்றனர். இந்தப் பழக்கங்கள் முதல் முதலில் சாதாரணமாக இருந்து பின்னர் மனிதனின் புலன்களை இழுத்து அடிமைப்படுத்தி விடுகின்றன. இவற்றுக்கு அடிமையானால் பின்னர் மீள முடிகிறதில்லை. கையில் பொருள் கிடைத்தால் இவ்வழியில் ஒரு விநாடியிற் பறந்து போகும். பொருள் கிடைக்காவிட்டால் கடன் வாங்கியாவது திருடியாவது இக்காரியங்களிற் செலவிடப் பின் வாங்குவதில்லை. ஏறக்குறைய இந்த மாதிரியாகவே வீண்செலவு செய்து பழகிய



மக்கள் கடன் பட்டேனும் காரியங்களைச் செய்யப்பின் வாங்கவில்லை. புதுமை செய்பவர், கல்யாணம் செய்பவர், வீடு கட்டுபவர்களைக் கவனித்தால் தங்களுடைய வசமிழந்து செய்கிறார்களென்பதைக் கூறலாம். தங்கள் வீட்டில் நடைபெறும் விசேஷம் சிறப்பாக நடந்ததென்று எல்லாரும் கருதவேண்டுமென்றும் மற்றவரைப் போன்ற வழியில் இன்னும் அதிகமாகச் செய்ததாகப் பேர் வரவேண்டுமென்றும், கருதியே பணச்செலவு நடைபெற்று வருகிறது. இந்த மனப்பான்மை உரம் பெற்றுநிற்பதாலும், வீண்செலவைக் குறைத்துப் பயனுள்ள மாதிரியில் திருப்புதற்கு தைரியமின்மையாலுமே செலவாகிய பணம் வியர்த்த மாகிறதென்பதை நாம் உணர வேண்டும்.

கல்யாணம் முதலிய செலவைக் குறைத்துப் புது வழியில் நடக்கலாமென்று காணப்பட்ட "டீ பார்ட்டி" முறையானது இன்னும் அதிகச் செலவையும் பெருங்கஷ்டத்தையு முண்டாக்கி விட்டது. சுற்றத்தார் மட்டும் சேர்ந்து பல நாள் உண்டு கொண்டிருக்கும்படி பிரித்துப் பாக்கியுள்ளவர்களுக்கு ஒரு வேளை டீயுடன் அனுப்பலாமென்று செய்யப்பட்ட யோசனை சாலச் சிறந்தது தான். ஆனால் அது குறித்த பலனை அளிக்கவில்லை. பழைய நிலைமையில் மாற்ற மேற்படாமல் டீ பார்ட்டியொன்று புதிய சடங்காகிப் பணச் செலவையும் வேலைத் தொந்தரவையும் இருமடங்காக்கி விட்டது. இதற்குக் காரணம் விசேடங்களை நடத்துபவருடைய மனம் அடங்கவில்லையென்பதேயாகும். மனம் அடங்குவது சுற்றியிருப்பவரால் குறைவாகக் கருதப்படுகிறது. சூதாடுபவன் பந்தயம் வைக்கச் சிறிது தயங்கினால் பக்கத்திலிருப்பவர்களால் எப்படி இகழப்படுவானோ அதைக் காட்டிலும் பன்மடங்கு இந்த விசேஷக்காரர் இகழப்படும் நிலைமையிலிருக்கிறார். சீர்திருத்த நெறி புறக்கணிக்கப்படுதற்கும் இதுவே காரணமாகும். எப்படியும் பொருளைச் செலவிடுவதே கௌரவமென்ற மனப்பான்மை இச்சமூகத்தாருக்கு பலமாகப் ஏற்பட்டு விட்டது.

சாதாரணமானவர்கள் தாம் இப்படிப்பட்ட மனப்பான்மையிலிருக்கிறார்களென்று நினைக்க வேண்டியதில்லை. சீர்திருத்த உலகை நன்குணர்ந்தவர்களைப் பார்த்தாலும் இதிலிருந்து தப்பி விடவில்லையென்பது தெரியும். பட்டம் பதவியை விரும்புகிறவர்கள், சாதாரணக் கொண்டாட்டங்களில் சாதிக்கிற பணம் கொஞ்சமா? அதையொரு பாராட்டாக ஆடம்பரத்தையும் வீண் செலவினங்களையும் குறைத்துச் செய்ய முற்படவில்லை, எலெக்ஷனில் பணப்பையின் வாய்க்கயிறு உருவிவிடப்படுவதைக் காண்கிறோம். பாரமார்த்திகமோக்ஷத்திற்கு சர்வ சாந்த நிலையை படையவிரும்புகிறவர்களும் கோவில்களில் எண்ணற்றவழியான வீண் செலவில் பணத்தை வாரி வாரி அலங்காரமும் பிறவும் செய்கின்றனர். இதிலிருந்து ஒன்றுதான் உணர முடியும். தனவணிக மக்களால் செய்யப்படும் அத்தனை காரியங்களும் பணச் செலவை முக்கியமாக அதிகச் செலவை அடிப்படை யாகக் கொண்டே நிற்கின்றன. சீர்திருத்தக்காரரும் பிறரும் இதிலிருந்து அதிகதூரம் தப்பிச் செல்ல முடியவில்லை. இதற்கு அடிப்படையாக "மனப்பான்மை" மாற்றப்படுதற்குப் பலமான முயற்சிகளைச் செய்தல் வேண்டும். இனி ஒரு நிமிஷமும் தாமதிக்கக் கூடாது. சீர்திருத்த நெறியினைப் பலமாகக் கைப்பற்றித் துணிவாகக் காரியங்கள் நடைபெற வேண்டும். பலவும் நிறையக் கிடைத்த காலத்தில் பணச்செலவு செய்தது பெருமையானால் பணம் சுருங்கி வருகிற காலத்தில் சுருக்கிச் செலவிடுவதே பெருமையென்ற மனப்பான்மைக்கே வரும்படி செய்தல்வேண்டும். வாலிபர்களும்சீர்திருத்த அபிமானிகளும் இத்துறையில் துணிந்துமுன் வரவேண்டும். இதுவரை அதிகச் செலவு செய்வதில் போட்டி போட்டதுபோல் இனிமேல் குறைவாகச் செய்வதில் போட்டி போட்டால் சமூகத்தாரின் சிறப்பு மேன்மையடையுமென்ற உணர்வு பெருகவேண்டும்.

ளுக்குத் தெரிவிக்கிறேன். இன்று உலகில் தோன்றியிருக்கும் உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் அடிப்படையாயிருப்பதும் அப்பெரியாருடைய திட்டமே என்று உண்மை அறிந்தோர் தயங்காமல் கூறுவர்.

வருங்காலத்தில் நமது மக்களில் பெரியோர் முதல் சிறுமி-சிறுவர் வரை எல்லோரும் இப்பயிற்சியினாலாய பயன் பெறுவதை நான் காணவே போகின்றேன். எனது வேலையைக் குறைக்க இக்கலையில் பயிற்சி மிக்க போராசிரியர்கள் தோன்றவே போகின்றார்கள். இவைகளை நீங்களும் கண்டு களிக்கப் போகின்றீர்கள், இதன் உண்மைத் தன்மையின் ஒரு பகுதியை வருகிற இளைஞர் உடற்பயிற்சி மகாநாடு உங்களுக்கு நன்கு விளக்கும்.

இம்மகாநாட்டிற்கு கனம்தூக்குபவர்கள், கலைத் செய்வோர், தண்டால்-பஸ்கி எடுப்போர், குண்டு எறிபவர், குஸ்தி செய்வோர், கயிறு இழுப்போர், ஓடுபவர், பலவித தேகாப்பியாசம் செய்வோர் கட்டை சுத்துவோர், வலிமைக் காட்சி நடத்துவோர், குத்துச்சண்டை செய்வோர் முதலிய பலதிறப் போட்டியாளரும் வருகின்றனர். இதற்கு ஆண்களும் வருகின்றனர். பெண்களும் வருகின்றனர். இவர்கள் எல்லோரும் தனவைசியர்களே! என் மகனையும்-மகளையும் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளும்படி செய்யுங்கள் என்று கூறும் வயோதிகத் தந்தைகள் இப்போது இருக்கிறார்கள் என்றால் அதைக்காட்டிலும் பாக்கியம் நமக்கு என்ன வேண்டும்.

சங்க நிர்வாகிகள்.


அ.க.ராம.மெ.சித. அழகப்ப செட்டியார்.


மு. ஆரி. வீரப்ப செட்டியார்.


மெ.செ.மெ.மெ. பழநியப்ப செட்டியார்.


சுப.க.அ.அ.மு. வேலாயுதம் செட்டியார்.


வ. சோ. ராம. நடராஜன் செட்டியார்.



அ.க.ராம.மெ.கி. அண்ணாமலை செட்டியார்.


ராம.மெ.சித. அருணாசலம் செட்டியார்.



வீ. முரு. பெ. காசிச் செட்டியார்.


சா.ராம.மு.சித.மு. திருப்பதி செட்டியார்.


பர்மாக் காட்சிகள்.



Rangoon Harbour. இரங்கூன் துறைமுகம்.



A View of Rangoon City. இரங்கூன் நகரின் ஒரு பகுதி.



Another View of Rangoon City. இரங்கூன் நகரின் மற்றொரு பகுதி.



மின்சார அலைகள்-ஆகாயத் தந்தி


திரு. கே. ஜீ. கிருஷ்ணன் பி. எஸ். சி. (ஹானர்ஸ்)

உலகத்தையே நிறைந்துமூடிக்கொண்டுள்ள 'இதர்' * என்பதோர் வஸ்துவில் உண்டாகும் அலைகளால் வெளிச்சம், உஷ்ணம், கம்பியில்லாத்தந்தி (மின்சார அலைகள்) முதலியவை உண்டாக்கப்படுகின்றன. இவ்வலைகள் ஜலத்திலுண்டாகும் அலைகள் போலவே வளைந்து வளைந்து ஓடுகின்றன. ஆனால் சப்தம் உண்டாவதற்கு ஏதாவதோர் உபகரணம்-வாயு பதார்த்தமோ, ஜல பதார்த்தமோ அல்லது திட பதார்த்தமோ-வேண்டியதவசியம். இவ்வவணியின் கண் வாயுவேயில்லாவிடின் யாதொரு தொனியுமுண்டாகா. ஒருவருக்கொருவர் பேசுவதியலாது. எல்லாரும் ஊமைகளாகவேயிருந்து எல்லாம் குறிப்பாலேயே நடத்திக்கொள்ள ஏற்படும்.

மின்சாரத்தாலடிபடும் மணியை ஓர் கண்ணாடி மூடியால் மூடி வைத்தாலும் அதினோசை நன்கு கேட்கும். ஆனால் அக்கண்ணாடி மூடிக்குள்ளிருக்கும் காற்றை வெளியேற்றுங் கருவியால் வெளிப்படுத்திவிட்டால் அம்மணியோசை செவிக்குப் புலனாகாது. பிறகு காற்றைக் கொஞ்சம் கொஞ்சமாய் உட்புகுத்தினால் மணியோசை கொஞ்சங் கொஞ்சமாய் புலனாக ஆரம்பித்து காற்று கண்ணாடியினுள் எப்பொழுதும்போல நிறைந்துவிட்டால் ஒலி எப்பொழுதும் போல உண்டாகும். இதனால் யாதொரு அணுக்களடங்கிய வாயுவில்லாமல் தொனி ஏற்படாதென்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

காற்றானது அணுக்களால் நிறையப் பெற்ற வஸ்து. ஏதாவதோர் பொருள் வெகு வேகமாய் அங்குமிங்கும் அசைந்தால் அவ்வசைவு உண்டான பக்கங்களிலிருக்கும் அணுக்கள் அவ்வசைவைப்பெற்று அவைகளுக்கருகிலுள்ள அணுக்களுக்களிக்கின்றன. இவ்வாறு உண்டான அசைவு, அணுக்களால் சுமந்துகொண்டு போகப்பட்டு, கடைசியாக நமது காதுகளிலமைந்துள்ள ஓர்வித மெல்லிய தோலில் தாக்கிய மாத்திரத்தில் அத்தோலும் அவ்வசைவைக்கொண்டு ஆட்டமுற்று ஒலியுணர்ச்சியைக்கொடுக்கிறது.


சப்த அலைகள் காற்றில் ஓடும்போது ஜலத்திலுண்டாகும் அலைகள் போல வளைந்து வளைந்து செல்லுகின்றன. ஆனால் திட பதார்த்தங்களில் உலோகக் கம்பி முதலியவைகளில்—உண்டானால் நேர் முகமாய்க் கொண்டு செல்லப்படுகிறது. சப்தமானது காற்றில் ஒரு விநாடிக்கு சுமார் 1120 அடி தூரம் ஓடுகிறது. ஆனால் தண்ணீரில் காற்றைவிட நான்கு பங்கு அதிக வேகமாயும், இரும்பு அல்லது உடுக்கில் சுமார் 15 பங்கதிக வேகமாயும் செல்லுகிறது. உலகத்திலேயே பிரமாண்டமான தொனியாக உண்டானாலும் அது 100 மைலுக்கதிகமாகச் செல்லுதலியலாது. அவ்வளவு தூரம்செல்ல சப்தம் சுமார் 9நிமிஷங்கள் எடுத்துக்கொள்ளுகிறது. ஆனால் கம்பியில்லாத் தந்தியி உபயோகப்படுத்தும் மின்சார அலைகளோ ஒரு விநாடியில் உலகத்தை $7\frac{1}{2}$ தடவை சுற்றி வந்துவிடும். சப்த அலைகள் போகப் போகச் சக்தி குன்றிச்சப்தமின்றி மறைந்துபோகின்றன. ஆனால் ஆகாயத் தந்தியின் அலைகள் எப்பொழுதும் கெடாமல் ஓடிக்கொண்டேயிருக்கும். ஆகாயத்தந்தியின் மின்சார அலைகள் ஓர் விநாடிக்கு 186,200 மைல் தூரம் ஓடுகிறது.



ஓர் சிறு குளத்தில் வளைந்துகொடுக்கும் இரு கழிகளை ஒன்று A ஒரு கரையோரமாகவும், மற்றொன்று B மறு கரையோரமாகவும், ஊன்றியிருக்கின்றனவென்று வைத்துக் கொள்ளுவோம். இவ்வாறுள்ள கழிகளில் Aயை இழுத்து விட்டுவிட்டால் அது அங்குமிங்கும் அசைந்தாடுமல்லவா? அவ்வசைவுகள் கழியைச் சூழ்ந்துள்ள ஜலத்தால் கிரகிக்கப்பட்டு அலைகள் வடிவமாக நாலாபக்கமும் ஓடுகின்றன. அசைந்தாடும் A கழி கொஞ்ச நேரத்திற்குள் அசைவற்று நின்றுவிடலாம். ஆனால் தண்ணீரில் உண்டாக்கிய அலைகள் சென்று இரண்டாவது B கழியைத்தாக்கி அதை மெதுவாய் அசைந்தாடும்படி செய்யும்.

இம்மாதிரியாகவே கம்பியில்லாத்தந்தியும் உண்டாக்கப் படுகிறது. தண்ணீரில் அலைகள் உண்டாக்கப்படுவதுபோலவே ஆகாயத்தில் 'இதர்' என்ற வஸ்துவில் மின்சார அலைகள் ஓரிடத்தில் உண்டாக்கப்பட்டு நாலாபக்கமும் ஓடும்போது அம்மார்க்கங்களிலமைந்த தந்திமரங்களில் தாக்கி தாங்கள் கொண்டு வந்த செய்திகளை மின்சார அலைகள் மயமாய் சமர்ப்பிக்கின்றன. மேலே குறித்த கழிகளுக்குப் பதிலாய் கம்பிகளையுடைய தந்திமரங்களையும், அலைகளுண்டாக்கத் தண்ணீருக்குப்பதிலாய் இதர் என்ற வஸ்துவையும் கொண்டு அலைகளை மின்சார சக்தியால் உண்டாக்கினால் உண்மையான கம்பியில்லாத் தந்தியாகிவிடுகிறது. ஆனால் கம்பியில்லாத் தந்தியில் உபயோகிக்கப்படும் மின்சார அலைகள் அளவு கடந்து அசைந்தோடுவதால் நமது பொறிகளால் அறிதலரிதாம். ஆகவே அவ்வளவு வேகமாய் அசைந்தோடுவதை மிகக்குறைவாயசையுமாறு சில நுட்பமான கருவிகளால் மாற்றி காதுகளால் கேட்க முடிகிறது.

முன் குறிப்பிட்ட குளத்தையே மறுபடியும் எடுத்துக்கொள்ளுவோம். A. B. என்னும் இரண்டு கழிகளல்லாமல் ஆங்காங்கு அநேக கழிகள் C. D, E. F. ஊன்றப்பட்டிருப்பதாக வைத்துக் கொள்ளுவோம்.



* இக்குறிகுளத்திலூன்றப் பட்ட கழி
......" அலைகள்

A என்னும் கழியை இழுத்துவிட்டு விட்டால் அது அசைந்தாடும் போது ஜலத்தில் அலைகளுண்டாகின்றன. ஒவ்வொரு அலையும் அசையும் A கழியை மத்தியமாய் வைத்து வட்டம் வட்டமாய்ப் புறப்பட்டுமேல் செல்லுகின்றது. அவ்வாறு ஏகும் அலைகளில், அருகிலிருக்கும் அலையின் எப்பாகமும் தூரத்தில் சென்றிருக்கும் அலையைவிட அதிக சக்திவாய்ந்திருக்குமல்லவா? படர்ந்து செல்லும் அலையில் ஓர்சிறுபாகமே மற்ற கழிகளைச் சென்று தாக்குகிறதென்பது கண் கூடு. Aக்கும் Bக்கு முள்ள தூரம் 25 அடியென்றால், Aயின் சுற்றளவு $\frac{1}{2}$ அங்குலமானால் Aயில் உண்டான சக்தி அலைகள் மயமாய்ச் சென்று Bக்கு 1000த்தில் ஒருபங்கான சக்தியையே கொடுத்து அதை மெதுவாக ஆடச் செய்கிறது. மீதியான சக்தி அலைகள் மயமாய் வேறு பாகங்களை நோக்கிச் சென்று உபயோகமற்று விடுகின்றன. இப்பொழுது C, D, E, F முதலிய கழிகளும் ஊன்றப்பட்டிருந்தால் ஒவ்வொன்றும் Aயிலிருந் துண்டாகும் அலையின் சக்தியை Bக்குப் போகும் சக்தியைப் பாதிக்காமலே C கொஞ்சம் பெறுகின்றதன்றோ? இப்பொழுது Cயையும் Dயையும் எடுத்துப் பார்த்தால் Cயைத் தாக்கும் அலையின் சுற்றளவு Dயைத் தாக்கும் அலையின் சுற்றளவை விடக் குறைவானதல்லவா? ஆகையால் Cயைத் தாக்கும் அலையின் பாகம் Dயைத் தாக்கும் அலையின் பாகத்தை விட சக்தியில் அதிகமாயிருக்க வேண்டுமென்பது கண்கூடு. ஆதலால் Aயிலிருந் துண்டாகும் அலையின் சக்தியை, Dயைவிட Cயும், Eயைவிட Dயும், Bயை விட Eயும், Fயை விட Bயும் அதிகமாய்ப் பெறுவது உள்ளங்கை நெல்லிக்கனி.

இதே விதமாகவே கம்பியில்லாத் தந்தியிலும் உண்டாகிறது. சங்கதிகளை மின்சார அலைகளால் ஆகாயத்தில் பரப்பி விட்டால் சமீபத்திலுள்ள தந்திமரம், தூரமாயுள்ள தந்திமரங்களை விட மின்சார அலையின் அதிகமான சக்தியைப் பெறுகிறது. ஆகவே சமீபத்திலுள்ள தந்திமரங்கள் ஆகாயத் தந்திச்செய்தியைப் பெற்றுக்கொள்ள சாதாரணக் கருவிகளை உபயோகிக்கக் கூடும்.

* "இதர்" என்பது ஒரு வஸ்துவென்று கொள்ளுதலாகாது. அதைப்பற்றி அதிகம் ஒருவரும் அறிந்ததில்லை. ஆனால் அலைகளுண்டாக தண்ணீரிருப்பதுபோல் வெளிச்சம், உஷ்ணம், மின்சாரம் முதலிய அலைகள் உண்டாக இந்த இதர் என்ற வஸ்து உலகத்தில் நிறைந்திருப்பதாகப் பாவித்துக் கொள்ளப் படுகிறது.

ஆனல் வெகு தூரத்திலமைந்துள்ள தந்திமரம் மின்சார அலையின் வெகு சொற்ப சக்தியையே பெற முடியுமாதலால், அச் சக்தியைக் கிரகித்துக் கொள்ள வெகு நுட்பமான கருவிகளை உபயோகிக்க வேண்டிய தவசியம். இவ்வாறு வெகு தூரத்தில் வந்து சேரும் மின்சார சக்தியானது ஒரு மின்சார மணியை அடிக்கச் செய்வதற்கு உபயோகப் படுத்தும் மின்சார சக்தியின் ஆயிரங்களில் ஒருபாகமா யிருப்பதால் அவ்வளவு சொற்ப சக்தியைக் கிரகிக்க எவ்வளவு நுட்பமான கருவிகளை உபயோகப் படுத்தவேண்டு மென்று சொல்லவும் வேண்டுமோ?

ஒரு விநாடிக்கு 16 தடவையிலிருந்து 36,000 தடவை அசைவதால் பலவித சப்தங்கள் உண்டாக்கப்படுகின்றன. 16க்குக் குறைந்தோ அல்லது 36,000-க்கு அதிகமாகவோ உள்ள அசைவுகளாலுண்டாகும் சப்தங்களைச் செவிகளால் உணர்வது முடியாது. மின்சார அலைகள் ஒரு விநாடிக்கு 20,000 லட்சம் தடவை அசைந்தாடுகின்றன. இவ்வளவு விரைவுடன் அசையும் அலைகளை இலேசாக உணர்ந்து கொள்ளுவது அசாத்தியம். ஆதலால் ஆகாயத் தந்தியைப் பெற்றுக் கொள்ளுமிடங்களில் தற்சமயம் "வால்வ்" என்னுமோர் அரிய கருவிகள் அநேக வற்றினுட் பறந்து வரும் அலைகளைச் செலுத்தி அசைவுகளைக் குறைவுபடுத்தி 36,000 தடவைகளுக் குட்படுத்திச் செவிகளால் கேட்கப்படும் சப்த அலைகளாக மாற்றுகிறார்கள்.

இரு உலோகக் குண்டுகளைச் சமீபமாக வைத்து அவைகளில் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்குத்தாவியோடும்படியாகஒருசாவியின் உதவியால் மின்சாரத்தை விட்டு விட்டுச் செலுத்தினால் அவ்வாறு தாவிப்பாயும் மின்சாரச் சுடரினால் மின்சார அலைகளுண்டாக்கப்பட்டு நாலா பக்கங்களிலும் பரவியோடுகின்றன. இவ்விதமாக முதலாவதாக ஹெர்ட்ஜ் என்பவரே உண்டாக்கினார். இவ்வித அலைகளுக்கு "ஹெர்ட்ஜியன் அலைகள்" என்று பெயர் இவ்வித முண்டாக்கப்பட்ட அலைகளை கம்பி யில்லாமல் கிரகிக்க சர் ஆலிவர் லாட்ஜ், மார்க்கோனி முதலியோர் முயன்று வந்தனர்.

இவர்களுக்கு முன்னமேயே சர். ஜெகதீஸ் சந்திரபோஸ் கல்கத்தாவில் மின்சார அலைகள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் கம்பியில்லாமல் ஓடி வந்து சேருவதைக் காண்பித்திருக்கிறார். 1895ல் வங்காள கவர்னர் தலைமையில் போஸ் சொற்பொழிவு செய்யும்போது ஓரிடத்தில் மின்சார அலைகள் யுண்டாக்கிச் சுமார் 75 அடிகளுக் கப்பாலுள்ள மற்றோர் அறையில் (ஊடே மூன்று சுவர்களிருந்தன.) யாதொருகம்பிப் பொருத்தமுமின்றி முதல் அறையில் உண்டாக்கப் பட்ட மின்சார அலைகளைக் கிரகித்து அதைக்கொண்டு சிறிய மின்சார மணி அடிபடவும் சிறிய மருந்துக் கைத் துப்பாக்கியைச் சுடும்படியாகவும் செய்தார். போஸ் மின்சார அலைகள் பறந்தோட 20 இடி உயரக் கம்பத்தில் ஓர் உலோகத்தகட்டை அமைத்திருந்தார். இதிலிருந்து ஓடிவரும் மின்சார அலைகளைக் கிரகிக்க அதேமாதிரியாக உயரமானதோர் கம்பம்நாட்டி அதிலிருந்து "கோகிரர்" என்றதோர் மின்சாரம் கிரகிக்கும் கருவியைச் செய்து அமைத்திருந்தார். இதைக்கண்டு கவர்னர் உள்பட யாவரும் ஆச்சரியமடைந்தனர். இவ்வாறே அதிக தூரத்திலிருந்து கம்பியில்லாமல் மின்சார அலைகளைக் கிரகித்து அதனால் சங்கதிகளை உணர போஸ் தனது வீட்டில் ஓர் தந்தி மரம் நாட்டி ஒரு மைலுக் கப்பாலிருந்த பிரஸிடென்ஸி காலேஜுக்குச் சங்கதிகள் தெரிவிக்கும் வண்ணம் அமைக்க ஆயத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது அவர் இங்கிலாந்து செல்ல ஏற்பட்டு அது முடிவடையாமல் போயிற்று. ஆகவே ஆகாயத் தந்திக்கு ஆதிகர்த்தா ஸர் ஜெகதீஸ் சந்திரபோஸ் என்றே கூற வேண்டும்.

போஸ் கண்டுபிடித்த "கோகிரர்" என்ற புதிய கருவியைத் தன் பெயரால் ரிஜிஸ்தர் செய்யாது விட்டு விட்டார். போஸ் தான் கண்டு பிடிப்பவைகளிலிருந்து தனக்கு ஒரு வித பிரதிப் பிரயோஜனங் கூடாது; உலகம் அதனால் முன்னேற்றமடைய வேண்டும்; என்ற உயரிய நோக்கங் கொண்டு பேசாதிருந்து விட்டார். இதை "எலக்ட்ரிக் எஞ்சினியர்" என்ற ஆங்கிலப் பத்திரிகை பறைசாற்ற அமெரிக்கா தேசத்தவரொருவர் அதனைத் தன் பெயரால் ரிஜிஸ்தர் செய்து கொண்டார். இதனைப் போஸ் அறிந்தும் தன் உரிமையை நிலை நாட்டாது எவரும் பயனடையட்டும் என்ற பெருந்தன்மையுடன் பேசாதிருந்து விட்டார். இவ்வாறு விட்டுக் கொடுத்ததை மேனாட்டார் ஆவலுடன் அபகரித்துத் தங்கள் பெயர்களை உயர்த்திக் கொண்டார்கள்.

முன்பு கூறிய வண்ணம் ஒருவிதச் சாவியை அமிழ்த்தி மின்சாரத்தை ஒரு குண்டிலிருந்து மற்ற குண்டுக்குப் பாய்ந்தோடச் செய்வதாலும், சாவியை உயர்த்தி மின்சாரத்தை நிறுத்தி விடுவதாலும் மின்சார அலைகளை விட்டு விட்டு உண்டாக்கி அவைகள் பறந்து சென்று வேறோரிடத்திலிருக்கும் தந்தி மரத்தைச் சேர்ந்து செவிக் கருவியில் விட்டு விட்டுத் தாக்குவதால் தாக்கும் நேரத்தின் கணக்கைக்கொண்டு "மோர்ஸ்கோட்" என்ற கோடு, புள்ளி (— ●) விகிதப்படி சங்கதிகளை உணர்ந்து வந்தனர். ஆனால் இவ்விதம் உண்டாக்கப்படும் அலையின் மின்சாரம் அதிகமாவதால் சரியாக அலையின் தாக்குதலை உணர்வதற்கும், வெகு தூரத்தில் அலைகள் அனுப்பப்பட்டால் மின்சார சக்தி குறைந்து விடுவதால் அதனைக் கிரகிப்பதற்கும் அசாத்தியமாகி விட்டது.

இருபதாம் நூற்றாண்டின் துவக்கத்தில், மின்சார விளக்கைப் போன்ற உருவத்தையுடைய "வால்வ்" என்ற கருவி டாக்டர் J. A. பிலெமிங் என்பவரால் 1904ல் கண்டுபிடிக்கப்பட்டு அதனால் அற்பமான மின்சார அலைகளை உண்டாக்கி அனுப்பவும், வெகு அற்பமான அலைகளைக் கிரகித்துச் சங்கதிகளை வெகு சுத்தமாகத் தெரிந்து கொள்ளவு முடிந்தது. இவ் "வால்வி"ன் உதவியால் தொடரான அலைகளை உண்டாக்கவும், ஓடிவரும் அலைகளைப் பெற்று உணர்த்தவும், வெகு அற்பமான அலையையும் அதிகப்படுத்திச் செவிக்கு நன்கு புலனாகும் வண்ணம் ஆக்கவும் முடிந்தது.

உலகத்தில் பல விடங்களில் ஆகாயத் தந்திச் சாலைகளிலிருந்து அவைகள் ஒவ்வொன்றும் மின்சார அலைகளைப் பரப்பி விட்டால் அவ்வலைகள் யாவும் ஒன்றாய் வந்து மற்றொரு இடத்திலுள்ள தந்தி மரத்தில் தாக்கி சப்தம் கேட்க முடியாமல் ஆக்கிவிடலாம். இதற்காக மின்சார அலைகள் உண்டாக்கும்போது ஒவ்வொரு இடத்திலும் ஒவ்வொரு விதமான அலைகள் உண்டாக்கப்படுகின்றன. அதாவது ஒவ்வொரு இடத்திலும், வெவ்வேறு நீளமான மின்சார அலைகளையுண்டாக்கி அனுப்புகின்றனர். திருஷ்டாந்தமாக இங்கிலாந்திலேயே லண்டன் நகரில் உண்டாக்கி அனுப்பப்படும் அலையின் நீளம் 365 மீட்டர்கள். மான்செஸ்டர்நகரிலிருந்து 375 மீட்டர் நீளமான அலைகளையும், பெர்மிங்காம் நகரிலிருந்து 475 மீட்டர் நீளமான அலைகளையும் அனுப்புகின்றனர். இவ்வாறே இவ்வலைகளைக் கிரகிக்கும் இடங்களில் எவ்வித நீளமான அலைகளைக் கிரகிக்க வேண்டுமோ அவ்வித அலைகளைக்கிரகிக்கத் தகுந்தவாறு தங்கள் தந்தி மரத்தை "கண்டென்சர்" என்றதோர் கருவியைக் கொண்டு தயார்ப்படுத்தி வைத்துக் கொள்ளுகின்றனர். எவ்வித நீளமான அலைக்குப் பக்குவப்படுத்தி வைக்கப்படுகிறதோ அவ்வித அலைகள் மாத்திரம் தந்தி மரத்தை வந்தடையும். மற்ற அளவுள்ளவைகள் வந்து சேரமாட்டா. ஆகவே ஒவ்வொரு ஆகாயத் தந்தி மாமும் ஒரே ஒருவித நீளமான அலையைக் கிரகிக்கவே பக்குவப்படுத்தி வைத்துக் கொள்ளுவதால் மற்ற எவ்வித மின்சார அலைகள் வந்தாலும் அவைகள் கிரகிக்கப்படாமல் எவ்வித பாதிப்பும் ஏற்படுவதில்லை.

தற்சமயம் இவ்வித் முன்னேற்றமான, நுட்பமான, கருவிகளினுதவியாலும், "மைக்ரோபோன்" என்ற ஒலி பரப்பும் கருவியைக் கொண்டும், ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து மற்றோரிடத்திற்கு நேர்முகமாகக் கம்பியில்லாமல் "டெலி—போன்"போல ஒருவரோ டொருவர் பேசி வருகின்றனர். மேலும் மின்சார உதவியாலும், வெளிச்சத்தின் அதிகம், குறைவு இவைகளைக் கொண்டும் ஆகாயத் தந்தியால் ஒருவரின் புகைப்படத்தை (மின்சார அலைகள் வடிவமாக) மற்றோரிடத்திற்கு அனுப்பி வருகின்றனர். பறந்து செல்லும் ஆகாயக் கப்பல்களிலிருந்துங் கூட பூமியிலுள்ள வேறோரிடத்திற்குக் கம்பியில்லாமல் சங்கதிகள் அனுப்பிவைத்துக் கொள்ளுகின்றனவென்றால், மின்சார சக்தியின் பெருமைகள் தான் என்ன!

தனவணிகர்களும் இன்ஷியூரன்சும்

திரு. இராம. அருணாசலன்.

இக்கட்டுரை தனவணிகன் விசேஷ அனுபந்தத்திற்கென எழுதப்பெறுவதால் தனவணிகர்களும் இன்ஷியூரன்ஸும் என்ற தலைப்பின் கீழ் இதனைஎழுதுகின்றேன்.

நம்தனவணிகர்களிற் பெரும்பாலார் இன்ஷியூரன்ஸில் அவ்வளவு அதிகமாக கவனம் செலுத்துவதில்லை. காரணம் ஆராய்வோமாயின் அதைப்பற்றிய விஷயங்களைப்பற்றி சிந்திக்காமையே யாகும்.

ஆனால் இப்போது-நாடு க்ஷீணித்திருக்கும் இந்த காலத்தில் ஒரு சிலர் பல துறைகளிலும் கவனம் செலுத்த முன் வந்துள்ளனர் என்றால் அது மிகையாகாது.

இன்ஷியூரன்ஸ்

ஆயுள், நெருப்புப்பயம், நீர்ப்பயம், திருட்டுப் பயம், எதிர்பாராத அபாயம் முதலியன வாகிய பலதிறப்படும்.

இவற்றுள் நம்மவர்கள் நெருப்புப் பயம், நீர்ப்பயம் திருட்டுப்பயம்ஆகியவற்றில்இன்ஷியூர் செய்ய இப்போது தயங்குவதில்லை. காரணம் வியாபார மந்தத்தினால் விலை குறைந்துள்ள இந்நாளில் மேற்கூறிய வழிகளில் நட்டம் வந்துவிட்டால் என்செய்வது என்று கருதியே யாகும். ஆனால்,

உயிர் இன்ஷியூர் செய்வதை ஏனோ அப்படிக் கருதவில்லை? உயிர் இன்ஷியூர் செய்து கொண்டால் இறந்த பின்னர்தான் அந்தத் தொகைக் கிடைக்குமென்றும் அந்தப்பணத்தைப் பெறுவதற்காக நாம் இறக்க வேண்டாம் என்றும் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாதபடி சொல்லுகின்றார்கள் ஒரு சிலர். வேறு சிலரோ தாங்கள் பணக்காரரல்லவென்றும் தங்கட்கு இன்யூஷியூர் எதற்கென்றும் சொல்லுகிறார்கள். பணக்காரர்களோ வெனில் தங்கட்கு இன்ஷியூரன்ஸ் அவசியமா வென்று அவர்களிடம் அதைப்பற்றிப் பேசுவோரிடம் பகருகின்றனர். மற்றொரு சிலர் இன்ஷியூரன்ஸ் என்பது பண்டைநாளில் இல்லாத வழக்கமென்று வாதாடுகின்றனர். பிரிதொரு சாரார் இன்ஷியூரன்ஸ் செய்வது வட்டிக்குக்கட்டாது என்று வுறைகின்றனர்.

இவர்கட்கெல்லாம் சிறிது பதிற்கூறி விஷயத்தை மேலே தொடருவோம்.

1 உயிர் இன்ஷியூர் செய்து கொண்டால் இறந்த பின்னர்தான் அந்தப்பணம் பெறவேண்டு மென்பதில்லை. நாம் உயிருடன் இருக்கும்பொழுதேயும் அதை அடையலாம். ஆனால் அதற்கான ஏற்பாட்டின்படி நாம் இன்ஷியூர் செய்துகொள்ளுதல் வேண்டும்.

2 பணக்காரரல்லாதவருக்கு இன்ஷியூரன்ஸ் மிக மிக அவசியம். அவர் சம்பாதிப்பதில் அவர் வருட வருமானத்தில் ஏதோ ஒரு பாகத்தை அவர் இன்ஷியூரன்ஸுக்கு பிரிமியமாக செலுத்தி வருவாரானால் அவருடைய விருத்தவயதில் அது பெருந்தனமாக மீந்து விடும் என்பதைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இதனால் அவர் ஒரு பெருந் தொகையை கஷ்டமில்லாது அடைகின்றார்.

3 பணம் படைத்தவர்கட்கோ வெனில் அவர்கட்கும் உபயோகம். அவர்கள் தங்கள் வாழ்நாட்களில் ஏதோ ஒருதருமத்தைப் பரிபாலித்து வருவார்களாயின் அவர்கட்குப் பிற் காலத்தில் அவர்களின் பின் சந்தியார் அத்தருமத்தைத் தொடர்ந்து நடத்துவார்களா என்று சந்தேகியாது அவர்கள் வாழ்நாளிலேயே அத்தருமத்தை எவ்வளவு தொகை நிதியாக இருந்தால் நன்கு கவனிக்கமுடியுமோ அவ்வளவு தொகைக்குத் தங்களை இன்ஷியூர் செய்து அந்த இன்ஷியூரன்ஸ் பாலிஸியை அத்தருமத்தைநிருவகிக்க வேண்டிய பரிபாலகர்களின் பெயரால் இன்னதருமத்திற்கென அஸைன் மெண்ட் செய்து வைத்துவிட்டால் அவர்கள் தங்கள் பின் சந்ததியாரைப்பற்றிக் கவலை கொள்ள வேண்டிய அவசியமே கிடையாது.

4 இன்ஷியூரன்ஸ் பண்டை நாளில் இல்லை என்பது உண்மையே. ஆனால் அது வேறுவிதமாக இருந்தது. இன்னும் இருந்து வருகிறது, என்பதை யாவரும் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். பண்டை நாளில் நமது செலவினங்கள் மிக மிக குறைவாக இருந்தது. ஆதலால் அதற்கு வேண்டிய மூலதனம் குறைவாக இருந்தால் போதுமானது என எண்ணி நமது முன்னோர்கள் சுமார் 1000 ரூ. பெருமானமுள்ள கழுத்துரு என்ற ஓர் உபயோகிக்க முடியாத தனித் தங்க நகையை புதிதாக இல் வாழ்க்கையில் இறங்கும் ஒவ்வொருவரும் வைத்துக்கொள்ளுதல் வேண்டும் என்று ஏற்படுத்தினர். இதன் கருத்தென்ன வென்பதை நான் கூறுதல் மிகையாகும். அது இன்றும் அர்த்தமற்ற சடங்காக காலத்துக்கு ஏற்ற மாறுதல் இல்லாமல் நடந்து வருகிறது. இப்பொழுதோ நமது வாழ்க்கையில் குறைந்தது ஐயாயிரமாவது முதல் இருந்தால் அல்லது எவ்வளவு எளிய வாழ்க்கையும் நடத்த முடியாது என்பதை ஒப்புக் கொள்வீர்கள். ஆதலின் அந்தத் தொகையைப் பெறவாவது நாம் நம்மை இன்ஷியூர் செய்து கொள்ள வேண்டாமா?



5 இன்ஷியூரன்ஸ் செய்வதனால் நமது பணத்துக்கு வட்டி கட்டாது என்று கூறுவது உண்மையே. வட்டியைக்கருதி நாம் செய்த தொழிலில் இப்போது நாம் அடைந்திருப்பது நிலம், ரப்பர் தோட்டம், தென்னந்தோட்டம், தஸ்தவேசு போதாக் குறைக்கு கோர்ட் நடவடிக்கை மேல் பார்த்தல் இவைகளே யாகும். ஆனால் இன்ஷியூரன்ஸுக்கு நாம் செலுத்தும் பிரிமியத்துக்கு நியாயமானவட்டிகிடைப்பதுடன் வருமான வரித் தள்ளுபடியும் கிடைப்பதனால் நாம் அந்த வகையிலும் கஷ்டமடையவில்லை என்பதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

இனி இன்ஷியூர்செய்துகொள்ள வேண்டியது ஆண்கள் மட்டுமன்று. பெண்களும் அதிற் கவனம் செலுத்த வேண்டுவது அவசியமாகும். இன்ஷியூரன்ஸ்செய்துகொள்ளுவதன்மூலம் பணம்சேர்ப்பதானது நமது செலவினங்களை நாம் குறைத்துக்கொள்ள ஒரு வழியாகவும் சிறுகச் சிறுகச் சேர்த்து ஒரு பெரும்தொகையை பிற்காலத்தில் பெற அனுகூலமாகவும் நமது ஆயுளுக்கு எதிர் பாராத விபத்து நேரிடின் நமது சந்ததியாருக்கு ஒரு முதலீடு போலவும் உதவி நிற்கிறது. ஆதலால் பெண்கள் ஆண் மக்களையும் ஆண்கள் பெண் மக்களையும் தூண்டி இன்ஷியூர் செய்துகொள்ள வேண்டும்.

இன்ஷியூர் செய்து கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டிய விஷயங்கள் சில உள. அவற்றைக் கவனித்தே இன்ஷியூர் செய்து கொள்ளுதல் வேண்டும். அவ்விதம் செய்து கொள்வதனால் பின்னர் பணம் பெற வேண்டிய காலத்தில் தொல்லைகள் ஏற்படாதிருக்கும்.

அவைகள்:—

1 தாம் இன்ஷியூரன்ஸ் செய்ய விரும்பும் கம்பெனி தமது சொந்தநாட்டைச் சேர்ந்ததா? என்பதையும் அதன் பங்காளிகள் சொந்த நாட்டினரா என்பதையும் நன்றாக அறிதல் வேண்டும்.

2 நல்ல திறமை வாய்ந்த அனுபவமுடைய மேதாவிகளால் அக்கம்பெனி நிர்வகிக்கப் பெறுகிறதா?

3 அதில் பாலிஸி எடுத்துக் கொள்ளுபவர்களின் நலனைப் பற்றிக் கவனிக்க அவர்களின் பிரதிநிதியாக பாலிஸி ஹோல்டர் யாரேனும் காரியக் கமிட்டியில் அங்கம்பெற உரிமையுண்டா? அவ்விதம் அங்கம் பெற்றிருக்கின்றனரா?

4 அக்கம்பெனியின் நிருவாகம் களங்கமில்லாமல் அங்கீகரிக்கப்பட்டு நடக்கிறதா?

5 அக்கம்பெனி ஜாமீன் கொடுத்திருக்கும் தொகையானது போதுமான அளவு இருக்கிறதா?

6 அக்கம்பெனியின் பாலிஸி ஹோல்டரின் க்ஷேமநிதி இன்ஷியூரன்ஸ் தொகையின் வீதப்படி போதிய அளவு சேர்க்கப்பட்டு இருக்கின்றதா?

7 க்ஷேம நிதியானது சரியானபடி பாதுகாக்கப்படுவதுடன் நியாயமான வருமானம் கிடைக்கக்கூடிய நிலையில்இருக்கிறதா?

8 ஆபீஸ் நிருவாகம் நன்றாகவும் திறமையாகவும் நடந்து வருகிறதா?

9 அதன் மதிப்பீடானது அதன் வருமானத்தை நன்கு காட்டக் கூடிய நிலையில் தெரிகிறதா? அதன் லாபப்பிரிவினை தொடர்பாக நடந்துவருகிறதா?

10 செலவினமானது நியாயமான விகிதப்படி வருமானத்திற்குத்தகுந்தபடிசெலவு செய்யப்படுகிறதா?

11 பாலிஸியின் நிபந்தனையானது போதுமானபடி தாராளத் தன்மையுடையதாக இருக்கிறதா?

12 உரிமைத் தொகை கொடுப்பதில் சுறு

செட்டியார்களும் சுதேசி இயக்கமும்

திரு. இராம. சுப்பையா

எனது பிரிய தோழர்களே! நம்மை அரும்பாடுபட்டு இன்றெடுத்த நமதருமைத்தாயின் அழுகைக்கு இன்னும் செவிசாய்க்கவில்லையா? பெற்ற தாய்க்குநேரிடும் அல்லல்களை அக்கணம் அகற்றுதல் புதல்வர்களின் இன்றியமையாத கடமையன்றோ? நாம் எதற்காக இவ்வுலகில் வாழ்வை நடாத்தவேண்டும்? வாழ்க்கைப் பயனை எவ்வாறு எய்துவது? சற்று யோசித்துப் பாருங்கள்.

பல்வளமும் நிரம்பப்பெற்ற நமது பாரதத்தாயின் பண்டைப்பெருமை என்ன? அவளுக்கு இப்போது இருக்கும் இன்னல்கள் என்னென்ன? உலகப் பொருளாதாரச் சுணக்கம் அவளை மிகத் துன்புறுத்துவதின் காரணம் என்ன? அந்தோ கண்கள் கலங்குகின்றன! எல்லாம் நமது (இந்தியர்களது) கடமையைச் செவ்வனே செய்யாமையேயன்றி வேறுண்டோ? தாயின் ஏழ்மை நிலையை அறிந்த வங்க நாட்டு வாலிபர்கள், வயோதிகர்கள் அனைவரும் ஆற்றிவரும் அருந்தொண்டுகள் எத்தனை? எண்ணுதற்கரியன. சிறைச் சாலைக்குப் புன் சிரிப்புடன் சென்றோர் எத்தனை பேர்? சவுக்கடியைத் தாழ்மையுடன் பெற்ற தேச பக்தத் தொண்டர் படை எவ்வளவு? தம்மினும் இனிய உயிரையும் தியாகம் செய்த புண்ணிய புருஷர்களும் உண்டன்றோ? அவ்வாறு சமீபத்தில் விண்ணுலகெய்தி, வீர சொர்க்கம் பெற்ற, வங்கமணி, ஸ்ரீஜத் சென்குப்தாஜியின் பெருமைதான் என்னே! இவ்வீரச் செயல்களை எல்லாம் கண்டபின்னர், நாமிருக்கும் நிலையை நினைத்து நினைத்து, கண்ணீர் விட்டுத் தலை குனியவேண்டுவதேயன்றி வேறுண்டோ?

நமது தாயின் சுதந்திரத்திற்குப் போர் புரிவது நமது கடமையென்பதை இன்னும் உணராதிருப்பின், வேறு வருந்தத்தக்க தொன்றுமில்லை. உணர்ந்திருந்தால் அந்நியநாட்டுப்பொருள்கட்கு அடிமைப் படக்காரணமில்லையே. நமது சமூகத்தினர் கொழும்புவேஷ்டிக்கும், டைமன் துண்டுக்கும், பாரிஸ் சில்க்குக்கும் கொடுக்கும் பணத்தொகைஎவ்வளவு? பெண்மக்கள் பிறநாட்டுப் புடவைக்ட்குக் கொடுக்கும் காசின் கொடுமை மிகப் பெரிது. நமது நாட்டுச்சோதர மக்களால் செய்யப்பெற்று, வாழ்க்கைக்கு வேண்டிய சொற்ப லாபத்துடன் கிடைக்கும், தூய கதர் ஆடையை வாங்கி அணிந்து கொண்டால், எத்தனை ஏழை மக்கட்கு நாம் கஞ்சி வார்த்ததற்குச் சமம் என்பதை நம்மில் அறிந்தோர் மிக மிகச் சிறுபான்மையோரே. இராஜ்யத்துறையில் இடுபட்டு, கடும்போர் புரிய இயலாவிடினும், சுதேசிப் பொருள்களை ஆதரித்தால், இந்தியத் தாய் சற்று இன்புறுவாளன்றோ?

நமது பெண்பாலார், தங்கள் புதல்விகள் திருமணத்திற்கென வாங்கும் ஜப்பான் தேசத்து எனமல் சாமான்கட்கும், இதர பிறநாட்டுப் பொருள்களுக்கும் போகும் பெருந்தொகையை இங்கு குறிப்பிடாமலிருக்கமுடியவில்லை. நாம் பாடு பட்டுத் தேடிய பணம் பிறநாட்டிற்குத் தானா உதவ வேண்டும்? நமது ஏழை நாட்டுக்குப் பயன்படலாகாதா? என்ன கொடுமை! என்ன அநியாயம்! நமது சொந்தத் தாய் துன்பக் கடலில் மூழ்கி நிற்கின்ற காலத்து, பிறநாட்டுப் பொருள்களுக்கு ஆசைப்பட்டு வாங்குதல், சிறப்பாக நமது பெண்டீர்களும், பொதுவாக ஆண் மக்களும் அறியாமை இருளில் ஆழ்ந்து கிடப்பதைப் புலப்படுத்துகின்றது. விரைவினில் விழித்தெழல் வேண்டுவதன்றோ?

சுதேசியை ஆதரிப்பதன் அவசியத்தை மற்றொரு வகையானும் விளக்கலாம். உலகில் ஒவ்வொருவனும் எதற்காக முயற்சிக்கிறான்? உயிர் உடலோடு கூடிவாழும் வரை பசிப்பிணி இன்றி, மானத்தோடு வாழவே முயற்சிக்கிறான் என்பது ஆழ்ந்து பார்ப்பின் தெற்றென விளங்கும்.

ஜீவர்களுக்குப் பசி அதிகரித்த காலத்து, ஜீவ அறிவு விளக்கமின்றிக் குன்றுகின்றது; மனம் தடுமாறிச் சிதறுகிறது; பிராணன் தவிக்கின்றது. கண் பஞ்சடைந்து உள்ளே செல்கின்றது. காது கும்மென்று செவிடுபடுகிறது; நா உலர்ந்து போகின்றது; மேனி சிறுக்கின்றது; கைகால்கள் துவளுகின்றன; வயிறு பகீரென்று எரிகின்றது; என்னே பசியின் கொடுமை!

இவ்வாறு பலவழியால் பசிப் பிணியில் வாடுகின்ற மக்கட்கு அப்பிணியைத் தீர்க்க செல்வந்தர்கள் சத்திரம் முதலியன கட்டுவித்து உதவுகின்றனர். இத் தருமம்பலரைச் சோம்பேறிகளாக்கி விடுகின்றது. குருடர் முடவர் முதலியவர்கட்கே அன்னதானஞ் சிறந்தது. அன்றியும் நமது நாடிருக்கும் நிலையிலும் வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரிக்கும் காலத்திலும் அனைவரும் தருமஞ்செய்தல் இயலாக் காரியம். ஏழை ஜனங்கட்கு நன்மையைச் செய்து, பிரதி உபகாரத்தையும் உடன்பெறத்தக்க உபாயம் சுதேசியை ஆதரிப்பதே யன்றி வேறில்லை.

நமது வாழ்க்கையின் இலக்ஷியம் என்ன? வாழ்க்கைப் பயனை எவ்வாறு அடைவது? பிறருக்குத் தொண்டு புரிந்து அதன்கண் இறைவன் அருளைப் பெறல் என்பதே சிறியேன் கருத்து. இங்கு காந்தி அடிகளின் உபதேசம் பெரிதும் குறிப்பிடத் தக்கது. "பிற ஏழைகட்குச் சேவை செய்வதே பேரானந்தம்; அதுவே ஆண்டவனுக்கு உயர்ந்த வழிபாடு; வேறு இன்பந்தரத்தக்க செயல் அவனுக்கு இல்லை என்று அப் பெரியார் பன்முறை கூறியுள்ளார். செய்கையிற் காட்டிவரும் அப் பிறர்நலப் பித்தன் பெருமையை எடுத்துரைக்கவும் வேண்டுமோ? இது பற்றியன்றோ நமது அப்பர் சுவாமிகள் "என்கடன்பணிசெய்து கிடப்பதே" என்று பாடியுள்ளார்.

மேனாட்டுப் புலவர் E. L. Scott என்பார் தாம் எழுதிய "வாழ்க்கையின் பெருமை" என்னும் அரிய நூலில் "உலகில் ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு நீர்த்துளிக்குச் சமம், ஓர் நீர்த்துளி ஜனங்கட்கு எவ்வளவு பயன் பட்டு, இறுதியில் சமுத்திரத்தைப் போய் சாருகின்றதோ அவ்வாறு ஒவ்வொருவனும் உலகத்திற்கு நன்மைகளைச் செய்து எல்லாம் வல்லானை இன்புறச் செய்தல் வேண்டும்" என்று மிகத்தெளிவுடன் விளக்கிக் கூறியுள்ளார். ஆகையால் அருமைச் சகோதரர்களே! சகோதரிகளே! எண்ணிலா ஏழை மக்கள் ஒரு வேளை உண்டியாயினும்உண்பதற்கும்,நாடு வறுமை நீங்கி, செழிப் புற்றிருப்பதற்கும் சுதேசியை இயன்றவரை ஆதரிக்கும்படி மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகின்றேன். அதுவே தேசப்பணியும், தெய்வப்பணியுமாகும்.

சுறுப்புடன் சரியாக நடந்து கொள்கிறதா?

ஆகியவற்றை ஆராய்ந்து அத்தன்மைகள் வாய்ந்த கம்பெனியில் இன்ஷியூர் செய்து கொள்ளுதல் வேண்டும். ஆயினும் அதில் நாம் செய்யவேண்டிய சில கடமைகளும் உண்டு.

அவை 1—நாம் இன்ஷியூர் செய்து கொள்ளும்போது கொடுக்கும் வாக்குமூலம் உண்மையானதாகவும் சரியானதாகவும் இருக்கவேண்டும்.

2 நமது வயதை இன்ஷியூர் கம்பெனியார் ஒப்புக் கொள்ளும் வண்ணம் ருஜு செய்து வைத்தல் வேண்டும்.

3 நமக்குத் திடீரென மரணம் நேர்ந்து விடின் நமக்குப்பின் நமது இன்ஷியூர் தொகையைத் தாமதமின்றி நமது சந்ததியார் பெறும்படியாக நமக்குப்பின் பெறக்கூடியவர் பெயரைக் கம்பெனியில் (அஸைன்மெண்ட்) பதிய வைத்துவிடல் வேண்டும்.

நாம் செய்யவேண்டிய கஷ்டமில்லாத இச்சில கடமைகளை நிறைவேற்றி இருப்போமாயின் நாம் இன்ஷியூரன்ஸ் செய்து கொண்டதனுலாய சரியானபயனை யடைந்தவர்களாவோம்.

வருங்காலம்.

("பெரிய கிழவன் வருகிறான்" என்ற மெட்டு)

பல்லவி.

கருதுவீர் வருங்காலமே
காண்பீ ரதன் மூலமே (கருது)

அனுபல்லவி

விருதா அபி விருத்தி புரிந்து
வெம்பினோ மிவ் வேளை தெரிந்து (கருது)

சரணங்கள்

ஒரு தொழிலில் நாமுழல் கின்றோம்
ஓயா மலே யலைகின்றோம் (ஒரு)
பரிதி யெழுந்து படு மவ்வளவும்
பட்டதற் குண்டோ பலனெவ்வளவும் (கருது)

உலகத்தோ டொட்டி யொழுகு வோம்
உயர்ந்த தொழில்கள் பழகு வோம் (உல)
பலகற்று மென்ன பயனிங்குண்மை
படிப்பித்தா லன்றோ பாவு நன்மை (கருது)

விவசாயக் கைத்தொழில்

'பாரதி' ஆசிரியர் திரு. ரா. நாராயணஸ்வாமி.

* "இந்தியாவின் தொழில்களை அபிவிருத்தி செய்ய நாம் உத்தேசித்தால், இந்தியாவின் நன்மையையே முக்கா லும் மூன்று தடவை நாம் கவனிக்க வேண்டும் என்பது என்னுடைய உறுதியான அபிப்பிராயம். இந்தியாவில் கிடைக்கும் மூலப்பொருள்களை உபயோகிக்க வேண்டியது என்னுடைய அபிப்பிராயத்திற்கு முதல் காரணம். தொழில்களை ஏற்படுத்த வேண்டியது இரண்டாவது காரணம். தொழில்களால் உண்டாகக்கூடிய லாபம் இந்தியாவிலேயே தங்கி இருக்க வேண்டுமென்பது மூன்ருவது காரணம்."

விவசாயமும், கைத்தொழிலும், வியாபாரமுமே ஒரு நாட்டின் சிறப்பிற்கு அத்யாவஸ்ய சாதனங்கள். தேசத்திற்கு வேண்டும் பொருள்களுக்காகத் தேசத்தின் விளை பொருள்களைக்கொண்டு உற்பத்தி செய்வதே கைத்தொழிலாம். இத்தொழிலின் அபிவிருத்திக்கு முக்கியமாக விளை பொருள்களாகிய மூலப்பொருள்களுடன் மூலதனம், தொழிற்கல்வி, பொதுஜன ஆதரவு, அரசாங்கத்தின் உதவி, வியாபார சுதந்திரம், உழைப்பு முதலியவைகள் சேர்ந்தாலன்றி, கைத்தொழில் அபிவிருத்தியடையாது. விவசாயமே இந்நாட்டில் முதன்மையான தொழிலாயிருக்கிறது. உலகில் உயர்ந்த மூலப்பொருள்கள் விளைவதில் அநாதிகாலம் முதற்கொண்டு இந்நாடே கீர்த்தி பெற்றிருக்கிறது. தேசத்தில் சீதோஷ்ண ஸ்திதி தக்கவாறிருப்பதால் கைத்தொழிலுக்கு வேண்டிய புல், பூண்டுகளும், எண்ணெ வித்துக்களும், மருந்திற்காக வேண்டிய பற்பல செடி, வேர் வகைகளும், இன்னுமனேக சாமான்களும் ஏராளமாக உண்டாகின்றன.

ஆதிகால முதற்கொண்டு இந்தியா தன் கைத்தொழிலில் நல்லபெயர்பெற்று வந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு 2,000 ஆண்டுகளுக்கு முன்பு எகிப்து தேசத்தில் கோரிகளில் அடக்கம் செய்யப்பட்ட சவங்களின் மீது இந்தியாவில் நெய்யப்பட்ட அதி நேர்த்தியான சல்லாக்கள் சுற்றப்பட்டிருந்ததற்கும் அத்தாட்சிகளிருக்கின்றன. எவ்வளவோ காலத்திற்கு முன்னிருந்து இந்தியா ஆடைகள் நெய்யும் தொழிலில் நிகரற்று விளங்கியதென்பதற்கு எவ்வித சந்தேகமும் கிடையாது. பெரிய கஷ்டங்களையும், அபாயங்களையும் தாங்கிக்கொண்டு அயல்நாட்டு வியாபாரிகளை இந்நாட்டுக்கு வரும்படி கவர்ச்சித்தது இந்தியத் துணிகளின் நேர்த்தியேயென்று சரித்திராசிரியர் மார்ரே சொல்லுகிருர். மொகலாய சக்கிரவர்த்தி ஔரங்கசீப் ஆஸ்தான மண்டபத்தில் அமர்ந்திருக்கும் தருணத்தில் அவருடைய புத்திரி உடம்பு தெரியும்படியாக உடுத்திக்கொண்டு அங்கு வந்ததற்காக அவர் கோபிக்கவே, தான் ஆடையின் மீது ஆடையாக ஏழு உடைகள் உடுத்தியிருப்பதாகச் சொல்லித் தன் தகப்பனைச் சாந்தப்படுத்தினாம். அக்காலத்து டெக்காமஸ்லின் மிகவும் பேர் பெற்றது. இந்தியாவில் செய்யப்பட்ட சாமான்கள் ரோம் நகரில் தாராளமாக விற்கப்பட்டு, ரோம் ராஜ்யத்தின் செல்வம் வருஷா வருஷம் ஏராளமாக வடி கட்டப்பட்டதென பிளினி என்பவர் கூறி வருந்துகிருர்.

டேரியஸ், அலெக்சாந்தர் முதலிய அரசர்களுக்கு அநேகம் கப்பல்கள் இந்தியாவிலேயே கட்டப்பட்டன. இந்தியக் கப்பல்கள் ஆப்பிரிக்காவிற்கும் அமெரிக்காவிற்குங் கூடப் போய்விட்டு வந்தன. சுமத்திரா, ஜாவா, போர்னியோ, பாலி முதலான தீவுகளுக்கு இந்நாட்டுக் கப்பல்கள் சென்று வந்தன. அத்தீவுகளில் இந்தியர்கள் குடியேறி இருந்ததால், கப்பல் போக்கு வரவு அடிக்கடி நடந்தது. அங்கு இந்திய நாகரீகம் அடியோடு அழியாது, இன்னுமிருக்கிறதாகச் சமீபத்தில் அங்கு சென்று ஆராய்ச்சி செய்து வந்த அறிஞர் காளிதாஸ் நாக் சொல்லுகிருர். கி. மு. 2000 வருடங்களுக்கு முன்னிருந்தே உலகின் முக்கிய தேசங்களுடன் கப்பல்களில் இந்தியா வியாபாரம் செய்ததென்று ஆசிரியர் மாக்ஸ் டங்கன் அறிவிக்கிருர்.

இரும்புத் தொழிலிலும் இந்தியாபிரஸித்தி பெற்றிருந்தது. டில்லி நகருக்குச் சமீபத்திலிருக்கும் குட்டப் மினர் என்ற 1500 வருடங்களுக்குமுன் செய்துவைக்கப்பட்ட கம்பமும், புரியிலுள்ள பிர்மாண்டமான இருப்பு உத்திரங்களும், சோமநாத புரத்திலிருக்கும் விசித்திரத்தலைவாசல்களும், நர்வார் என்ற இடத்திலுள்ள 24 அடி நீளமுள்ள இரும்புப்பீரங்கியும் இந்தியாவின் பண்டை எஃகுத் தொழிலுக்குச் சாட்சிகளாக விருக்கின்றன. மிக்க பேர் போன டமாஸ்கஸ் கத்திகளைச் செய்வதற்கு இந்தியாவிலிருந்துதான் எஃகு கொண்டுபோகப்பட்டது. எஃகுத் தொழில் சமீபத்திலிருந்துதான் இங்கிலாந்தில் உண்டாகியிருக்கிறது. ஆனால் இந்தியாவிலோ புராதன காலத்திலிருந்து இந்தியர்களுக்கு இத்தொழில் தெரியும். உள்நாட்டுத் தேவைகளுக்குக் கொடுத்ததுமன்றி அயல் நாடுகளுக்கும் இந்தியா ஏற்றுமதி செய்தது.

இன்னும் கண்ணுடி செய்தல், சாயம்போடுதல், சிற்ப வேலை, தச்சுவேலை, பொன் வேலை முதலிய வேறு பல தொழில்களுக்கும் பாதகண்டம் பிரசித்தி பெற்றதாயிருந்தது. அநேக அந்நிய நாட்டார்களைப் பாரத தேசத்திற்கு இழுத்தது இந்நாட்டு வாசனைத்திரவியங்களும் கைத் தொழில்களுமே என்று கூறுவதில் எவ்வித எதிர்ப்புமில்லை.

லண்டனிலிருக்கும் இஸ்ட் இந்தியா கம்பெனியார்கள் இந்தியாவுடன் வியாபாரம் செய்யுமாறு சாசனமொன்று எலிஜபெத் ராணி அவர்களிடம் 1600ஆண்டில் பெற்றுர்கள். இவர்கள் இந்தியாவிற்கு வந்து பண்டகசாலைகள் கட்டி, வியாபாரம் செய்து கொண்டு சுதேச மன்னர்களுடன் சேர்ந்து உள்நாட்டுக் கலகங்களில் பிரவேசித்துப் பின் எந்த நாளிலிருந்து இவர்கள் வரி வசூலிக்க ஆரம்பித்தார்களோ அந்நாள் முதல் இந்தியக் கைத்தொழில்கள் க்ஷீணிக்க ஆரம்பித்தன. கம்பெனிக்குப் புதிதாகக் கிடைத்துள்ள அதிகாரத்தின் மூலமாக இந்தியாவின் கைத்தொழில்களை நசித்துப் போகும்படிசெய்ய ஆரம்பித்தார்கள். நமது மூலப்பொருள்களெல்லாம் இங்கிலாந்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இங்கிருந்து மூலப்பொருள்கள் அங்கு கொண்டுபோகப்பட்டு மறுபடியும் அவைகள் அங்கிருந்து பலவேறு ரூபங்களாகச் செய்யப்பட்டு இரட்டிப்புக் கடல்தீர்வையோடு பலவித செலவுகளுடன் இந்தியாவிற்கு வந்ததால், வருகிறதால் இந்தியாவின கைத் தொழில்கள் நசுக்குண்டு போனதுமன்றி, பிரிட்டிஷ் சாமான்களின் இறக்குமதியும், இந்தியாவின் மூலப்பொருள்களின் ஏற்றுமதியுமே இந்தியாவில் வறுமை வருவதற்குக் காரணம்.

தொழில்கள் கெடவே தொழிலாளிகளும் விவசாயத்தில் இறங்கியதால், விவசாயிகள் அதிகமாகப்பெருகினுர்கள். தேசத்தில் அதிகமான ஜனங்கள் விவசாயம் ஒன்றையே நம்பிக்கொண்டிருந்த படியால், பஞ்சங்கள் அடிக்கடி தோன்ற ஆரம்பித்தன. இங்கு 1800ஆண்டிலிருந்து 1825ஆண்டிற்குள் 5 பஞ்சங்கள் உண்டாயின. 1826ஆண்டு முதல் 1850ஆண்டு வரை 2 பஞ்சங்கள் வந்தன. 1851ஆண்டு முதல் 1875ஆண்டு வரை 6 பஞ்சங்கள் தோன்றின. 1876ஆண்டு முதல் 1901ஆண்டிற்குள் 18 பஞ்சங்கள் வந்தன. இவைகளெல்லாவற்றிலும் தாதுஆண்டு உண்டான் பஞ்சமே மகாகொடிது. 1854ஆண்டு முதல் 1901ஆண்டு வரையில் 2 கோடியே 88 லட்சம் பிரஜைகள் இந்தியாவில் க்ஷாமத்தால் இறந்துபோனுர்களென்று ஸ்ரீமான் டிக்பி அறிவிக்கிருர்.

1877-78ஆண்டிய பஞ்சத்திற்குப் பின்பு பஞ்சத்தைப்பற்றி விசாரித்து அறிவிக்கும்படி ஒரு சபையைச் சர்க்கார் நியமித்தார்கள். அக்கமிஷனர்கள் அவர்கள் அறிக்கையில்ஓரிடத்தில்அறிவிக்கிருர்கள்:—

"ஜனங்கள் அநேகமாக விவசாயத்தையே நம்பியிருப்பதாலும், வேறு தொழில்எதுவும் இல்லையாகையாலும், பஞ்சம் உண்டானல் ஜனங்களுடைய கஷ்டத்தை நிவர்த்தி செய்வது வெகுசிரமமாக இருக்கிறது. வழக்கப்படி மழை பெய்யாவிட்டால் ஜனங்கள்கொடுக்கக்கூடிய விலைக்கு அவர்களுக்கு வேண்டிய சாமான்கள் அகப்படாமல் போவதுடன், அவர்களுக்கு வேலையும் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகையால் விவசாயம் தவிர வேறு தொழில்களை விருத்திசெய்வதுதான் இந்நிலைமைக்குப்பரிகாரமாகும்."

இந்தியாவிலுள்ள ஜனங்கள் தரித்திரத்திற்கும் பருவமழை தவறிப்போய் விட்டால் அவர்கட்கேற்படும் கஷ்டங்களுக்கும் மூல காரணம் என்ன வென்பதை ஏற்கெனவே சொல்லியிருக்கிறோம். அதாவது விவசாயம் ஒன்றே ஜனங்களின் தொழிலாக இருப்பதுதான். பலவேறு தொழில்களை உண்டுபண்ணினுலொழிய இந்நிலைமைக்குப் பரிகாரம் ஏற்படமாட்டாது. அப்படி உண்டுபண்ணிஞல் விவசாயம் செய்வதற்கு அவசியமான ஜனங்கள் போக பாக்கி ஜனங்கள் கைத்தொழில்களில் அமர்ந்து ஜீவனம் சம்பாதிக்கும்படி செய்யலாம்.

கிளைவ் இந்தியாவிற்குப் புறப்பட்டுப்போன 1756 வருஷத்தில் 74கோடிக்கதிகமான பவுன் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டுக்குக் கடன் இருந்தது. அதற்கு வட்டி 27 லட்சத்து 53ஆயிரம் பவுன் கொடுக்கப்பட்டு வந்தது. 1815 வருஷத்தில் இந்தப்பெரிய கடனுனது 86 கோடியே 40 லட்சம்பவுனுகிவிட்டது. இந்தியாவிலிருந்து திரண்ட செல்வம் சென்றதின் பயனுக இந்தப் பிர்மாண்டமான கடன் தீர்ந்தது. இச்செல்வ நிலைக்குப்பின்பே இங்கிலாந்தில் தொழிற்

* ஸர் பிரிடிரிக் நிக்கல்ஸன்.

புரட்சி ஏற்பட்டது. இங்கிலாந்து ஏற ஏற இந்தியா இறேவ ஆரம்பித்தது.

கைத்தொழில்கள் கெட்டுப்போய் இந்தியா வெறும் விவசாயத் தேசமாவதற்குத்தகுந்த காரணங்களிருக்கின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் மூலப் பொருள்களை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கத்தார் அளிக்கும் ஆதாவும், புதுப்புதுத் தொழில்களைக் கண்டு பிடித்து வேண்டியவைகளைச் செய்து தொழிலபிவிருத்தி செய்வதற்குச் சர்க்கார் உதவ முன் வாாமலிருப்பதுவும், தொழிற் கல்வி போதிக்காமலிருப்பதுவுமே கவர்ன்மெண்டு செய்திருக்கும் தவறுதல்களென்று எப்படி சொல்லாமலிருக்க முடியும்! இது விவசாய தேசமாக மாறிய பின்னரும் விவசாயமும் உற்சாகிக்கப்படவில்லை. இந்தியா இப்பொழுது உலகம் பூராவுக்கும் சணல் கொடுத்துதவுகிறது. பருத்தி உற்பத்தியில் உலகத்தில் இந்தியா இரண்டாவதாக இருக்கிறது. அயல் நாடுகளுக்கு அதிகமாகவே அனுப்பும்படியாக அவ்வளவு அதிகமாக எண்ணெவித்துக்கள் இங்கு உற்பத்திசெய்யப்படுகிறது. உலக விளைவில் 100-க்கு 40-பங்குத் தேயிலை இந்தியாவில் விளைகிறது. கரும்பும் ஏராளமாக விளைகிறது. அவுரி, ரப்பர், சம்பாரவர்க்கங்கள், மசாலைச் சாமான்கள் இங்கு எதேஷ்டமாக உண்டாகிறது.

இவைகளைத் தவிர்த்து நமது நாட்டில் விவசாயக் கைத்தொழில்கள் (Agricultural Industries) பல செய்வதற்குச் சாதனங்களிருக்கின்றன. பட்டுப் பூச்சி வளர்த்தல், அரக்கு உண்டாக்கல், தேன் சேகரித்தல், மா எண்ணை உற்பத்தி செய்தல், வெண்ணெய்எடுத்தல், எருத்தயாரித்தல், புஷ்பங்களை வளர்த்தல், பன்னீர் செய்தல், அத்தர் எடுத்தல், பிசின் செய்தல், கற்பூரம்,சாம்பிராணி செய்தல், பெருங்காயம், குங்கிலியம், மட்டிப்பால் முதலியவை எடுதல், புல் தைலம், சந்தனத்தைலம் இறக்குதல், அநேக விதைகளிலிருந்து எண்ணெய் எடுப்பது, பழங்களிலிருந்து ரசம் எடுப்பது, கருவாடுதயார் செய்வது, கோழி, ஆடு, மாடு வளர்த்தல், மருந்துச்செடிகளை உற்பத்தி செய்தல், நார்களை உற்பத்தி செய்து கயிறு திரித்தல், தானிய வகைகளை மாவாகச் செய்தல் ஆகியஇன்னும் இவைபோன்ற அநேக விவசாயக் கைத்தொழில்களும் குடிசைத்தொழில்களும் நமது தேசத்தில் செய்யலாம்.


அரசாங்கத்தின் உதவியை நம்பிஇங்கு எத் தொழிலையும் செய்ய முடியாது. உயர்தாக் கலாசாலைகளிலும் சர்வகலாசாலைகளிலும் செத்துப்போன பாஷைகளும், தவறுதலான புராதன சரித்திரங்களும், உபயோகமற்றசாஸ்திரமும், மூளையே கெட்டுப்போகும்படியான அவ்வளவு கஷ்டமான கணித சாஸ்திரமும், தத்துவ சாஸ்திரமும், மாணவர்களுக்கு வாலிப இந்தியர்களுக்குப் போதிக்கப்படுகின்றன. நமது நாட்டில் தொழிற்கல்வி சிறிதுமின்றி, நம்மைஅடிமை வாழ்வில் ஆழ்த்தும் அனுவசியக்கல்வியேமாணவர்களுக்குக்கொடுக்கப்படுகின்றது. இக்கல்வியேகுமாஸ்தாக்களை சிருஷ்டிக்கிறது. இப்பொழுது இக்கல்வியின் பயனாகவே படித்தவர்களுக்கிடையில்வேலையில்லாத்திண்டாட்டம் உண்டாகியிருக்கிறது. இந்தியாவில் விவசாயக் கல்வி நன்கு போதிக்கப்படவில்லை. கைத்தொழிற் கல்வி பள்ளிகளில் கற்பிக்கப்படவில்லை. ரசாயனக் கைத்தொழில்(Chemical Industry) போதிக்கப்பட வில்லை. பள்ளி விட்டு விலகியவுடன் வயிற்றின் பாட்டுக்காக ஆதாவளிக்கும் கலைகள் புகட்டப்படவில்லை.

விவசாயம் உன்னத மடைந்தால்மட்டும் ஒரு தேசம் சிறப்படையாது. கைத்தொழிலும் முதன்மை பெறவேண்டும். வியாபாரத்திலும் முக்கியமாக விளங்கவேண்டும். ஒரு மனிதனுக்கு வாதம், பித்தம், சிலேற்பனமென்ற மூன்று நாடிகளும் முக்கியமாயிருப்பது போல, விவசாயம், கைத்தொழில், வியாபாரம் ஆகிய இம் மூன்றும் ஒரு தேசத்திற்கு உயிர் நாடிகளாம். இவை ஒவ்வொன்றிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. உலகிலுள்ள அரசுகளில் கைத்தொழிலினுலன்றோ சில முன்னேற்றமடைந்து வல்லரசுகளாய் விளங்குகின்றன. ருஷ்யா—ஜப்பான் யுத்தத்திற்கு (Russia-Japan war)ப்பின்பே ஐரோப்பாவில் பல தேசங்கள் கைத்தொழில் விஷயத்தில் முன்னேற்றமடைந்து, ஒவ்வொரு தேசத்துச் சாமான்களை விற்கும் விஷயமாகப் போட்டியுண்டாகியதால், மகா ஐரோப்பிய யுத்தம் கிளம்பியதற்குக் காரணமென்று ஒரு அறிஞர் கூறுகிறார்.இப்பொழுது அமெரிக்காவின் அதிதீவிரமான அபிவிருத்தியையும், ஜப்பானின் முற்போக்கையும் கவனியுங்கள். விவசாயிகளின் அறியாமையும், தரித்திரமும், முதலாளிகளின் ஒற்றுமைப்பின்மையுமே நமது கைத்தொழில் விருத்தியாகாததற்கு மற்றொருபக்கத்துக்காரணங்கள்.

முடிவு.

நம் நாட்டில் எத்தனையோ மூலப்பொருள்கள்—மறைபட்ட திரவியங்கள் நினைப்பாரற்றுப்—பார்ப்பாரற்று—அனுபவிப்பாரற்று அப்படியே கிடக்கின்றன. விவசாய்கள் அவைகளிடத்தில் செல்லாவிட்டாலும் அவைகள் விவசாயிகளை வலுவில் கூப்பிடுங்காலம் வந்துகொண்டிருக்கிறது. பிரிய விவசாயிகளே! விவசாயத்தின் மூலமாக வரும்மீதியான வருமானங்களைநகைகள்செய்வதிலும், வீண் விஷயங்களிலும் செலவுசெய்யாதீர்கள். அதிக வரும்படியுள்ளவர்கள் பேராசையுடன் பெருவட்டிக்குக்கொடுக்காதீர்கள். பணத்தைத் தக்கவாறுஉபயோகித்தால், 1-க்கு 100மடங்கு லாபம் கிடைக்கும். நமது தேசத்தில் பல வகையானகைத்தொழில்கள் செய்வதற்கு வேண்டியவஸ்துக்களிருக்கின்றன. ஆகையால் கைத்தொழிலிலீடுபட்டு நீங்கள்உன்னதநிலைமைஅடைவதோடு, அநேக ஏழைச் சகோதார்களுக்குத் தொழில் கொடுத்து உதவி பொதுவாக தேசத்தின் செல்வத்தை பெருக்குங்கள்.

ஐராவதி நதி.



மாலைத் தோற்றத்தின் அழகிய காட்சி.

(நியூ லைட் ஆப் பர்மா)

ஐராவதி நதி.

மாலைக் காட்சி.

தேவருலகம் எனப் புகழ்ந்துரைக்கும் பெருமை சான்ற பர்மா நாட்டின் செழுமைக்குப் பெருங் காரணமாக இருப்பது ஐராவதிஆற்றுவளமே என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. மாலை நேரத்தில் இக்குறையும் கப்பல்களையும்எத்திசையிலும் பரந்து விளங்கும் படகுகளையும் காண் போர் பெருமகிழ்வடைவர் என்பது திண்ணம்.

அருணன் அலைகடல் குளிக்கும் அந்திப் போதில் ஐராவதி ஆற்றின் அழகொழுகும் அருங்காட்சி மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொள்வதாயிருக்கும். செக்கர் வானத்தின் சிறந்த காட்சியை ஐராவதி ஆறு படம் பிடித்தது போன்று அழகைப் பிரதிபிம்பித்துக் காட்டும் அழகு இயற்கையழகை இரட்டித்துக் காட்டுவதாயிருக்கின்றது. இயற்கை இன்பத்தில் ஈடுபட்ட அன்பர்கள் கண்கட்குப் பெருவிருந்தளிக்கும் அக்காட்சியின அழகில் ஈடுபட்ட ஆண்களும் பெண்களும் அனுதினமும் தவறாது சென்று அனுபவித்துவருதல் கண்கூடு. அங்ஙனம் அழகொழுகும் ஒரு நாள் மாலைப்பொழுதின் காட்சியினைப் பக்கத்தேயிளிரும்படம்காட்டுகின்றது.

பொருளாதார நெருக்கடியும் வட்டித்தொழிலும்

திரு. வைசு. ஷண்முகம்.

வட்டித் தொழில் ஒன்றையே பிரதானமாகக்கொண்ட நமது தனவணிக சமூக மக்கள் இந்தியா, பர்மா, சிலோன், பிரிட்டிஷ் மலாயா, டச்சு மலாயா, சையாம், கொச்சின் சைனா, ஆகிய நாடுகளில் பெரு முதல் வைத்து நடத்தி வருகிற இத்தொழில் இன்று அடைந்திருக்கிற சீர்கேடான நிலை நமது சரித்திரத்திலேயே ஒரு புதிய அத்தியாயமாகும்.

பணத்தையே மூலப் பொருளாகக் கொண்டு நடத்தும் தொழிலுக்கு வட்டித் தொழில் (லேவாதேவி, Banking) என்று பெயர்.

ஆனபடியால் வட்டித்தொழிலைப்பற்றி எழுதுமுன்பு அதன் மூலப் பொருளான பணத்தின் தற்கால நிலைபற்றிச் சிறிது கூறுவதும் அவஸ்யமேயாகும்.

பொருளாதார நெருக்கடி.

ஒவ்வொரு நாட்டில் ஒவ்வொருகாலத்தில் உள்நாட்டு விளைவுப் பொருள்களின் விலை வீழ்ச்சி காரணமாக அந்நாட்டுத் தொழில்கள் சிறிது பாதிக்கப் பெறுவதுண்டு. ஆனால் உலகில் உள்ள எல்லா நாடுகளிலும் விளை பொருள்களின் விலை வீழ்ந்து பொருளாதார நெருக்கடி இன்று ஏற்பட்டிருக்கிற மாதிரி சரித்திரம் தோன்றிய காலமுதல் இதுவரை ஏற்பட்டதில்லை என்று சரித்திரக்காரர்கள் சொல்கின்றனர்.

1914ம் வருடத்தில் ஆரம்பித்து 1918ல் முடிந்த ஐரோப்பிய வல்லரசுகளின் மகாயுத்தத்தில் நேர்ந்த பெரும் பணச் செலவின் காரணமாக பல அரசாங்கங்கள் பெற்ற பெருங் கடனுக்கு வகை சொல்லவேண்டிய நிலை எய்தியமையால், கடன் பெற்ற அரசாங்கங்கள், அரசாளும் நாட்டின் விளை பொருள்களின் விலை குறையத்தலைப்பட்டன. விலையைக் குறைத்து விற்றும் போதிய பொருள் கிடைக்காமல் அவ்வரசாங்கங்களுக்கு கடன்காரர் துன்பம் காலக்கிரமத்தில் வளர்ந்தன. ஆகவே அரசாங்கங்களுக்கும் பணத்துன்பம் வளர வளர ரொக்கப்பணத்தை அவைகள் கைப்பற்றி அவைகளை வெளி விடாமல் பட்டகடனுக்கு வகை செய்யவேண்டிய நிலையேற்பட்டது.

வழக்கமாக வெளிவந்த பணம் தடைப்பட்டு அரசாங்கத்துக்கு சென்ற பணம் திரும்ப பொது மக்களிடையே விடப்பெறுதபடியால் பண நெருக்கடியேற்பட்டது. அரசாங்கங்கட்கு பணமுடையேற்பட்டதறிந்த பொதுமக்கள் அரசாங்கத்தை நம்பாத நிலையேற்பட்டு, நோட்டுகளைக்கொடுத்துத் தங்க நாணயம் கேட்கத் தலைப்பட்டன. அரசாங்கங்கள் பட்ட கடனுக்குத் தங்கத்தைக் கொடுக்கவேண்டிய நிலையில் உள் நாட்டுக்குள் தங்க நாணயம் கொடுக்க முடியாதென பிரிட்டிஷார் உள்பட பல வல்லரசுகள் மறுத்து தங்க நாணயத்தைக் கைவிட்டன.

தான்பட்ட கடனை கேட்டபோது நாணயமாகத் திருப்பிக் கொடுக்கக்கூடியவனுக்கு "சால்வெண்ட்" என்றும், பட்ட கடனை கேட்டபோது நாணயமாகக் கொடுக்க முடியாதவனுக்கு "இன்சால்வெண்டு" என்றும் ஆங்கில பாஷையில் கூறுவர்.

தான் பட்ட கடனை நாணயமாகக் கொடுக்க முடியாத இன்சால்வெண்டு நிலையில் தான் இன்று பல வல்லரசுகள் இருக்கின்றன.

கட்டுக்கட்டாகப் புழக்கத்திலிருந்தநோட்டுகளெல்லாம் எங்கே போய் மறைந்துவிட்டன? என்று சாதாரணமக்கள் இப்பொழுது வினவுகின்றனர். அந்த நோட்டுகள் அனைத்தும் அரசாங்கப் பொக்கிஷத்தில் அக்னி தேவனுக்கு இரையாக்கப்பெற்றன. வெளிப் பழக்கத்திலிருக்கும் கடதாஸி நோட்டுக்கு அரசாங்கப் பொக்கிஷத்தில் தங்க நாணயம் வைத்திருப்பது வழக்கம். தங்க நாணயங்களை கடன்காரருக்குக் கொடுத்துவிட்டபடியால் அவ்வரசாங்கம் வெளியிட்ட நோட்டு பொக்கிஷத்துக்குள் வந்ததும், அந்நோட்டுகளை திரும்பவும் வெளிவிடாத நிலை ஏற்பட்டதோடு புதிய நோட்டு போட்டு வெளியிட (இருப்பில் தங்கமில்லாதபடியால்) இடமில்லாத சிரம நிலையேற்பட்டு பழக்கத்திலிருந்த நோட்டுகளிற் பெரும்பாகம் பிறந்தவிடம் புகுந்து அழிந்துவிட்டது.

நிலைமை இத்தகைய சீர்கேட்டை அடைந்துவிட்டமையால் அதிகார வலுவில் அரசாங்கம் நடத்தும் நாணயமற்ற முறையைக் கைக்கொள்ளவேண்டிய சந்தர்ப்பம் அர-



-சாங்கங்களுக்கே உண்டாகிவிட்டது இங்கு குறிப்பிடத் தக்கது.

பணப் புழக்கம் குறையக் குறைய அதற்கேற்ப விளைபொருள் விலைமலிந்தும் பணத் துன்பம் இன்று உலகைப் பிடித்து வாட்டும் விஷ நோய் ஆகி எண்ணற்ற தொல்லைகளை விளைவித்துவிட்டன.

பண்டை நாளில் பெரு வெள்ளத்தினலோ, அல்லதுமழையின்மையாலோ, விளைவு குன்றிப் பஞ்சம் யேற்பட்டு மக்கள் சிரமப்பட்ட கதைகள் பல உண்டு. உலகமெங்கும் இப்பொழுது அதிகமான விளைவும் அதன் காரணமாக விலை மலிவும் ஏற்பட்டும் மக்கள் பணப்பஞ்சத்தினல் துன்பப்படும் கதை முற்றிலும் புதிதன்றோ!

பஞ்சத்தினல் துன்பப்பட்ட கதை மாறி அதிக விளைவினல் துன்பம் நேர்ந்திருக்கிறதென்பது இக்காலத்தில் காணும் விந்தைகளுக்கெல்லாம் இது சிறந்த விந்தையல்லவா?

இந்தப் பணப்பஞ்சத்துக்குக்காரணமான யுத்தக்கடனை நெருக்கிக் கேட்டு உலகில் பொருளாதார நெருக்கடியைப்பரவ விட்டது அமெரிக்காவையே சாரும். காலக்கிரமத்தில் கடனை வசூலிக்க நினையாது வல்லரசுகளை எல்லாம் நெருக்கி மூச்சுத் திணரடித்த கொடுமையை இப்பொழுது அமெரிக்காவும் அனுபவிக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை எய்திவிட்டது. இது இயல்பேயாகும். எதற்கும் ஓர் அளவுண்டு. அளவுக்கு மேற்பட்டால் அமிர்தம் விஷமாகும். தங்கத்தை வாங்கிக் குவித்து இறுமாந்து நிற்க நினைத்த குற்றத்துக்கு அமெரிக்காஅரசாங்கம் வகை சொல்லவேண்டியதாகி விட்டது.

அமெரிக்க நாட்டு மக்களும் அந்த சர்க்காரிடம் நோட்டுக்கும் பத்திரங்கட்கும் தங்க நாணயத்தில் அளவு மீறிய காதலை அரசாங்கங்கள் காட்டுவதைக்கண்டு ரொக்மாகத் தங்க நாணயம் கேட்க ஆரம்பித்துவிட்டார்கள். எனவே அமெரிக்க சர்க்காரும் தங்க நாணயத்தைக்கைவிட வேண்டிய நிலை யேற்பட்டு அமெரிக்கா அரசாங்கமும் தங்க நாணயம் கொடுக்க முடியாது, தங்க நாணயத்தை விட்டு "சால்வெண்டு" நிலையிலிருந்து மாறி தத்துவார்த்தத்தில் "இன்சால்வெண்டு" ஆகிவிட்டது இங்கு குறிப்பிடத் தக்கது.

அமெரிக்க அரசாங்கத்தின் மூடத்தனத்தினல் விளைந்த பணத்துன்பம் அமெரிக்கா உள்பட உலகில் உள்ள பல வல்லரசுகளை நிலைகுலையச் செய்துவிட்டது.

இங்கிலையில் பல அரசாங்க நிபுணர்களடங்கிய பொருளாதார மகாநாடு கூட்டி விளைபொருள் விலைகள் அத்தனையையும் கூட்டவேண்டுமென்றும்; ஒரு நாட்டை மற்றோர்நாடு ஆளக்கூடாதென்றும் பலர் பேசி சிரித்துவிட்டு இப்பண நெருக்கடியை எப்படிச் சமாளிப்பதென்று முடிவுகட்ட முடியாமல் திக்கற்ற நிலையில் பொருளாதார மகாநாடும் கலைந்து விட்டது.

பொருளாதார நெருக்கடி காரணமாக உலகில் உள்ள தொழில்கள் அனைத்தும் பாதிக்கப்பெற்றிருந்தாலும் "நாணயத்தை" அதாவது பணத்தை மூலப்பொருளாகக் கொண்ட வட்டித் தொழில் மிகப் பாதிக்கப் பட்டுவிட்டது கண் கூடு. ஆகவே வட்டித் தொழில் ஒன்றையே நம்பி நின்ற நமது தனவணிக சமூகம் நிலைகுலைந்து நிற்கும் நிலையில் நம்மவர்கள் தொழில் செய்யும் இடங்கள் எங்கும் வட்டித்தொழிலுக்குப் புதிய புதிய சட்டங்கள் நிறைவேற்ற வழிகோலி அவைகள் புலி காடிபோல் நம்மவரைப் பார்த்து உறுமுகின்றன. கொச்சின் —சைனு மலாயா சிலோன் ஏன் இந்தியாவிலும் கூட இச்சட்டங்கள் தலைதூக்கி விட்டன. இதுவும் இயல்பேயாகும்.

உலகில் ஏற்பட்ட பணப் பஞ்சம், மக்களைத் துன்புறுத்தாதிருக்க வழிகோல வேண்டியது அரசாங்கத்தின் கடமை. துர்ப்பாக்கிய வசமாக பணத்தை மூலப்பொருளாக வைத்துச் செய்யும் லேவாதேவித் தொழில் ஒன்றை மட்டும் கைக்கொண்ட நம்மை அது அதிகம் பாதிப்பது இயல்பேயாகும்.

உலகில் தோன்றும் புதிய புதிய சந்தர்ப்பங்களையும் அவைகளை நிர்வகிக்கும் வகைகளையும் பரந்த நோக்குடன் பார்த்திருக்கும் ஆற்றல் நமக்கு வேண்டும். காலத்திற்கு ஏற்ற சட்டங்கள்உண்டாவது வியப்பன்று.

எண்சுவடி மட்டும் படித்துவிட்டு கட்டுப்பாடின்றிய முறையில் தொழில் நடத்தும் நமது வட்டித்தொழிலுக்கு விசேட விதி ஒன்றும் கிடையாது.

லிமிடெட் கம்பெனியாகத் தொழில் செய்யும் பேங்குகட்கெல்லாம் விசேட விதி அவர்கட்குத் தனிமையில் அமைந்திருக்கிறபடியால் அவர்களை புதிய சட்டங்கள் பயமுறுத்துவதில்லை.

கூட்டுக்காரர்கள் பெயரை ரிஜிஸ்டர் செய்யுங்கள், கணக்குக்காட்டுங்கள், என்பன போன்ற நன்மைதரும் விதிகளை கண்டு நம்மவர்கள் பயப்படுவதற்குக் காரணம் என்ன? பங்குக்காரர்களை மோசஞ் செய்வதற்கு வழியில்லாது போகுமே என்றா? அன்று நிபந்தனையின்றி யிருந்தோர்க்குப் புதிதாக நிபந்தனை யேற்படுவதைப் பற்றிய அதிருப்தியே யாகும்.

புதிய நிபந்தனைகளைக் கண்டு பயப்படுவதற்கு காரணம் தற்கால கல்வி அபிவிர்த்தி இன்மையே யாகும். “காலம் அறிந்து பிழையாதவன் கோலம் அழிந்து தூங்காவான்” என்ற சாபத்திற்கு ஆளாகாமல், தற்கால கல்வியில் நாம் சிந்தை செலுத்தி யாருடன் (அறிவாளிகளுடன்) கூடி வாழப் பழகிவிட வேண்டும்.

ஒரு ஜாதிக்கு ஒரு தொழில் என்ற பழங் கதையையே பல்லவியாகப் பாடாமல்—உலகமக்களின் முன்னேற்றத்தை நோக்கி மற்ற சமூக மக்களுடன் கலந்து பழகி மற்ற பல தொழில்களில் கவனம் செலுத்த வேண்டிய அவஸ்யத்தை தற்காலப் பொருளாதார நெருக்கடி நமக்கு உணர்த்துகிறதன்றோ!

இன்றிருக்கிற பணப் பஞ்ச நிலைமை மாறி வட்டித் தொழில் சீர்பெறும் காலம் வரும்முன்பு நமது மக்கள் ஒருவரையொருவர் இம்சித்து கேடு விளைவித்து தாங்களும் கெட்டுவிடும் நிலை எய்தியிருப்பது வருந்தத்தக்கது.

வட்டித் தொழில் காரணமாக நம்மவர்கள் பணம் பெருமையால் சொத்துக்களை ஒப்புக்கொண்டு இடர்ப்படுகின்றனர். சொத்துக்களுக்கு மதிப்பின்மையால் தாம் பட்ட கடனை கொடுக்க வழியற்று நிற்கும் நிலையில் நம்மவர்கள் பலர் சிக்கியிருப்பது கண்கூடு.

முடிவு.

மடியிற் கனமிருந்தால் வழியிற் பயமென்ற மூதுரைப்படி நமது சமூகத்தார் வட்டித் தொழிலினால் பணத்தையே எப்பொழுதும் கட்டி வைத்திருப்பதினால் அவர்கள் மனதில் பயம் குடிகொண்டு அவர்களைப் புதிய துறைகளில் இறங்க விடாமல் தடைப் படுத்தி விட்டது.

வட்டித் தொழில் தீமையுடையதென எவரும் கூற முடியாது. அப்படி கூறுதல் பொறுப்பற்ற வார்த்தையாகும். பேங்குகள் இத்தொழிலைத்தான் செய்கின்றன.

எனினும் எந்தத் தொழிலையும் லிமிடெட் கம்பெனி முறையில் அளவுக்குட்படுத்தி செய்தலே நன்மை பயக்கு மென்பதையும் அளவுக்குட்படாத முறையில் தொழில் செய்யும் முறையை அடியோடு கைவிட்டு விட வேண்டுமென்பதையும் வலியுறுத்தி விட்ட பொருளாதார நெருக்கடியைப் போற்றுவோம்.

பொருளாதார நெருக்கடியினால் நாம் இப்பொழுது பெற்ற அநுபவத்தை நல்ல வழியில் உபயோகப்படுத்தி நம் தனவணிக மரபினர் பல தொழில்களிலும் யீடுபட்டு நன்னிலை அடைவார்களென்று எதிர்பார்க்கிறோம். துன்பங்களைக் கண்டு பயப்படாமல் துன்பங்கள் தான் இன்பத்தைப்பெறும் தாய், என்பதை உணரவேண்டும். பிரஸவ வேதனைக்குப் பிறகு பெற்றெடுத்த பிள்ளையைக்கண்டு தாய் இன்புறுகிறாள். பலமுறை உலையில் ஏறி, அடிபட்ட தங்கம் உயர்ந்த நகையாக கழுத்திலும் காதிலும் ஏறி அழகு திருக்கிறது. ஆகவே துன்பங்களைக்கண்டு மனந்தளராமல் அத்துன்ப அநுபவத்தினால் இன்பம் அடைய வழிகோலும் திடம் நமது மரபினர்க்கு வளர வேண்டும். வட்டித்தொழிலினால் துன்பம் அநுபவித்த மக்கள் சென்றதற்குக் கவலைப்பட்டு சீர்குலையாமல் மேலாக வேண்டிய காரியத்தில் கவனஞ் செலுத்தி லிமிடெட் கம்பெனி என்ற அளவுகட்டிய முறையில் புதிய ஏற்பாடுகள் புதிய தொழில்கள் செய்ய முற்பட்டு, வட்டித் தொழிலையும் அளவுக்குட்படுத்தி பரஸ்பரம் கடன் வாங்குபவருக்கும் கொடுப்பவருக்கும் லாபந்தரும் முறையில் செய்து தனவணிக மக்கள் சீரும் சிறப்பும் அடைய வேண்டு மென்பதே நமது ஆசை.

கணக்குப் பரிசோதனை.

திரு. S. RM. பழனியப்பா S.F.A.I.; F.C.A.S. (Lond)

கணக்குப் பரிசோதனையால் பிழையை (Errors) யும் புரட்டை (Fraud) யும் தடுக்கலாம்.


கைத்தவறுதலாகவோ அல்லது ஞாபகமின்மையாலோ எழுதும் எண்களிலும் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், முதலியவைகளில், அதிகமாக அல்லது குறைய ஏற்படுவதுதான் பிழை. இம்மாதிரியான தப்பிதத்தை சாதாரணமாகக்கணக்கு வேலை பார்ப்பவரே எளிதில் கண்டுபிடித்தாற்றான் அன்று திட்டம் சரியாக இருக்கும்.

ஒரு கர்த்தாவை மோசம் செய்யும் பொருட்டாக குறிப்பி (Day Book) ல் புரட்டாக எழுதி, பாக்கிப் புஸ்தகத்தி (Balancing Ledger) ல் ஷை கணக்கைப் பதிந்து பெயரேட்டில் பதியாது விட்டுவிடுதல்தான் புரட்டு. இம்மோசத்தைப்பெரும்பாலும் கணக்குப் பரிசோதகர்களாலேயேதான் கண்டுபிடிக்கமுடியும். அல்லது வருமானவரி கணக்கு முடிக்கும் பொழுது இந்த ரகசியம் வெளியாகும். இப்படி ஏற்ப




டும் புரட்டுகளை கண்டுபிடிக்கக்கூடிய கணித வல்லமை ஒவ்வொரு கணக்குப் பரிசோதகனுக்கும் வேண்டியது இன்றியமையாததாகும். (Auditor) கணக்குப் பரிசோதகர் முதலில் கணக்கைப் பரிசீலனை செய்ய ஆரம்பிக்கும்பொழுது ரசீது முதற்கொண்டு பெயரேடு வரை கணக்குவேலை செய்பவரை கொண்டு வரும்படி செய்து, ரொக்க புஸ்தகத்தி (Cash book)ல் உள்ள பற்று வரவுகளுக்கு ரசீதுகளை சரிபார்க்கவேண்டும். பிறகு அதன்படி இருப்பு சரியாக யிருக்கிறதா என்று பார்ப்பதுடன், ரசீது, செக் புஸ்தகங்களின் அடிக்கட்டைகளையும் (Counterfoil Receipt books) சம்பள ரசீது கைச்சாத்து சாமான்களையும் பார்க்கவேண்டும். தனிப்பட்ட முறையில் ஒரு தொழிலை நடத்துவது (Sole Trader) சோல் டிரேடர் என்றும் இரண்டு நபர்களுக்கு குறையாமல் (in the Case of a Bank 10-members) நடத்தும் தொழிலுக்கு (Partnership) என்றும் சொல்லுவார்கள். மேற்சொன்ன இரண்டு ஸ்தாபனங்களுக்கும் கணக்குப் பரிசோதகர் நியமிக்கப்படவேண்டு மென்ற அவசியமில்லை. லிமிடெட் கம்பெனிகளுக்கு சட்டப்படி ஆடிட்டர் நியமிக்கப்பட வேண்டும். பொதுஜனங்களால் சேர்ந்து நடத்தும் பப்ளிக் லிமிடெட் கம்பெனி மட்டும் வருஷாவருஷம் ஐந்தொகை வெளியிட வேண்டும். அந்த ஐந்தொகை அதற்கென அமைக்கப்பெற்ற ஆடிட்டரால் ஷை கம்பெனியின் கணக்குகளை நன்கு பரிசீலனை செய்து அவர்கள் வெளியிடப்பெற்றிருக்கும் (INVESTMENTS) பொருள்களுக்கு மதிப்பு ஏற்படுத்தி, வாராக்கடனை (Bad Debts) யும் மதிப்பு குறைவை (Depreciation) யும் கழித்து சரியான லாபத்தைக்கண்டு பிடித்த க்ஷேம நிதிகளுக்கு (Specific Reserves, General Reserves, Reserve Funds, Sinking Funds, Secret Reserves) இத்தனைபாகம் (Percentage) ஒதுக்கப்பட்டு மீதத்தைப் பங்கு தாரர்களுக்கு என்ன வட்டி பிரித்துக் கொடுக்கலாமென்று கண்டுபிடிக்கப்பட வேண்டும். பிறகு வருஷாந்தர கூட்டத்தில் கணக்குப் பரிசோதகரால் தணிக்கை செய்யப்பட்ட கணக்கை வாசித்து நிறைவேற்ற வேண்டும். அக்கணக்கு முடித்து கையெழுத்துசெய்துகொடுத்திருக்கும் வாக்குமூலத்தில் புரட்டுகளிருந்தால் கம்பெனீஸ் ஆக்ட் 1908, செக்ஷன் 281-ன் படி (Consolidation) குற்றத்திற்கு ஆளாவார். கணக்குப் பரிசீலனை என்பது சுமார் இருபதுவருஷங்களுக்குள்ளாகத்தான் அதிகமாயிருக்கிறது. அதற்கு முன்னும் மேல் நாடுகளில் சொற்பமாக இருந்து வந்திருக்கிறது. இன்கம் டாக்ஸ் அசெஸ்மெண்ட் 1914ல் ஏற்பட்டவுடன்தான் விர்த்தியாகியிருக்கிறது. நம் செட்டியார்களில் அநேகர் கணக்கு இன்ன விதமாய் வைத்துக்கொள்கிறதென்ற விதம் தெரியாது ஏடுகளைப்பெருக்கி இன்கம்டாக்ஸ் வரி கட்டியிருக்கிறார்கள். நமக்கு ரிசர்வ் பண்டு (Reserve Fund) என்ற முறையை தெரிந்து ஒதுக்கி வைத்திருந்து வந்திருப்போமேயானால் இக்கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கமாட்டோமென்பது திண்ணம். இனியாகிலும் நிலங்களுக்கு ஒரு மதிப்பு ஏற்படுத்தி டிப்ரிஸியேஷன் (Depreciation) முறையை அநுசரித்து தற்கால பேங்கிங் முறைப்படி நடத்தி வருவார்களென நம்புகிறேன்.


கம்பை தனவைசியர் கல்வி நிலையம்.



கல்வி நிலையம்




மாணவர் விடுதி புதிய கட்டிடம்.




மாணவர் விடுதி.


கம்பை தனவைசியர் கல்வி நிலையம்.



வாலிபச் சாரணர்கள்.



மாணவர்கள் சாப்பிடச்செல்லும் காட்சி.



மாணவர்கள் சாப்பிடும் காட்சி.

எஸ். நாதன் செய்த ஏமாற்றம்

திரு. இ. சிவம் எழுதிய சிறுகதை.

இரவு மணி பத்து இருக்கும். எங்கும் இருள்; காரிருள். வாயுமண்டலம் பனிக்கட்டிபோல் குளிர்ந்திருந்தது. அக்குளிரைத் தாங்க முடியாமல் மனிதர் யாரும் வெளிவரவில்லை. விலங்குகளும், இருள்நோக்கி வெளிப்போந்து ஓடியாடித் திரியும் ஆந்தை முதலிய பறவைகளும்கூட வெளிவந்தில. ஆகாயமும் அக்குளிருக்குப் பயந்துவிட்டது போலும். மேகங்களெனனும் கரும்போர்வையை எடுத்து உடம்பை மூடிக்கொண்டது. அம்மூட்டில் அடங்கிவிட்டன எண்ணிறந்த நக்ஷத்திரக் கூட்டங்கள். ஆகவே அன்றிரவு எந்த நக்ஷத்திரமும் கண்ணைக் காண்பிககவில்லை.

இத்தகைய கொடிய இருளில் ஆர். எஸ். நாதன் என்ற இண்டர் மீடியட் மாணவன் ஒருவன், பாளையங் கோட்டை நகரில், பல மூலை முடுக்குகளையும் சந்து பொந்துகளையும் அடைந்து, கையில்வைத்திருந்த பல "நோட்டீஸ்"களைச் சுவரில் ஒட்டிக் கொண்டிருந்தான். அவன் முகத்தில் கலக்கமும் பயமும் காணப்பட்டன. அவன் நோட்டீஸ் ஒட்டும் போதும் ஒட்டுவதற்கு ஓர் புது இடத்தை நாடும்போதும் சாலவும் குழம்புவதுபோல் காணப்பட்டான். இருதயம படபடவென்று அடிக்க இடையிடையே பெருமூச்செழுந்தது. இவன ஏன் இருளில் தனிமையில் நோட்டீஸ் ஒட்டினன என்பது இப்போது விளங்கவில்லை. நோட்டீசின் "காபி" இதுவாகுட;—

அறிக்கை.

"இவ்வூரிலும் சுற்றுப்புறங்களிலும் மாணவருலகில் பழகுவோருக்கு குஞ்சிதத்தைப்பற்றி சொலலவேண்டியதில்லை. அவள் படிப்பிலும் அழகிலும் மேம்பட்டிருக்கிறுளென்று எல்லோரும் நினைக்கினறுர்கள். ஆனல் குணத்தைப்பற்றி அவர்கள் முற்றிலும தவறுன எண்ணம் கொண்டிருககிறுர்களென்று தெரிதல் வேண்டும். அவள் இண்டர் மீடியட் வகுப்பிலேயே வாசித்துவரும் ஆர். எஸ். நாதன என்பவனேடு கள்ள நட்புப் பூண்டிருக்கின்றுள. இருவரும் நடந்து கொளளும்முறை கல்லூரியைய சின்னுட்களில் பாழாக்கிவிடலாம். கல்லூரி அதிகாரிகள் கவனம் செலுத்துவார்களா"?

* * *

குஞ்சிதம் நாங்குநேரியில் பிறந்து வளர்ந்தவள. இந்தக் கதை நடந்தபோழ்து அவளுக்கு வயது பதினெட்டாயிற்று. உலகை மயக்கிவிடுமழகில்லாமற்போனுலும் எந்தப் புருஷனும் எறட்டுப் பார்த்து ஏதாவது நினைத்துப்போகும் எழில் பெற்றிருந்தாள். அம்தாடு மாணவர்கட்குள்ள ஒய்யாரமும் எழுச்சியும் எடுப்பும் இணைந்து அவள் அழகை சற்று அதிகப்படுத்தின. ஆனல் அவள் இயற்கையில் நல்லவளும் கொஞ்ச மடக்க முடையவளுமாகையால் தம்மழகைப் பாடாம்டாபம் செய்துகொள்ளவில்லை. அவள் தினசரி கல்லூரிக்குச் செல்வதும் பாடங்கற்பதும் வீட்டுக்கு வந்து அமைதியாயிருப்பதும் தவிர வேறென்றும் செய்வதில்லை. எப்பொழுதாவது தோழிகளுடன் "இவனிங் வாக்காக"ப் போனல் மிகுந்த மரியாதையாகவே நடந்து கொள்வாள்.

இத்தகைய குஞ்சிதம் நாம் குறிப்பிடும் போது இண்டர் மீடியட் வகுப்பில் வாசித்துக் கொண்டிருந்தாள். அவள் ஜாகை பாளையங்கோட்டையில் சைவர் தெருவிலிருந்தது. அங்கு அவளுக்குத் துணையாக இருந்தவர்கள் ஒரு சிறறன்னையும் அவள் கணவன் குழந்தைகள் ஆகியவர்களுமாம். அவர்கள் தம் வீட்டின் பிற்புறமுள்ள காலிமனையில் அழகான ஓர் தனிக்கட்டிடம் அமைத்து அதனைக் குஞ்சிதத்தின் தனியறையாக நல்கியிருந்தார்கள்.

குஞ்சிதத்தை தத்தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டுமென்று பிரயாசைப் பட்ட மாணவர் பலர். அவர்களில் சிலர் அவர்களுடைய ஆசையைத் தம்மட்டோடு நிறுத்திக் கொண்டார்கள். வேறு சிலர் வெளியே காண்பிக்கவும் தொடங்கினர்கள். அவ்வாறு வெளியே காண்பித்தவாகளுள் முக்கியமானவன் ஆர். எஸ். நாதன். அவன் முழுப்பெயர் ஆர். ஸ்வாமிநாதன். அவன் சுவாமியை விரும்பவில்லை போலிருக்கிறது- அதின் ஒரு கடைசியை மட்டிலும் பற்றிக் கொண்டு எஸ். நாதனுக்கிக் கொண்டான்.



அவனுக்கு வயது 23 இருக்கும். சுமாரான படிப்பும் அழகும் உடைத்திருந்தான். ஆனல் அவன் சேர்மாதேவிப் "பண்ணையாரு"டைய புதல்வனென்ற கருத்தினல் அகந்தை மிகுந்திருந்தான். அவன் பல நாட்களாகப் பலவழியாலும் குஞ்சிதத்தின் காதலைப் பெற்றுவிட வேண்டுமென்று முயற்சித்தான்; முடியாமற் போயிற்று. குஞ்சிதம் அவன் குறிப்புகட்கெல்லாம் வெறுப்பைக் காண்பித்து விட்டதோடுவிடுத்த லெட்டரை கடுத்த முறையில் தூவென்று தள்ளி விட்டாள். இதனல் மனம் நொந்துவிட்ட எஸ். நாதன் ஏதேனும் சூழ்ச்சிகளில் அவளை அடைந்துவிட வேண்டுமென்று தீர்மானித்தான். அந்தத் தீர்மானந்தான் நாமிக்கதையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டவாறு இரவில் 10 மணிக்கு மேல் சுவருக்குச் சுவர் நோட்டீஸ் ஒட்டச் செய்தது. தம் பெயரையே குஞ்சிதத்தின் காதலனுக விளம்பரம் செய்து விடுவதால் எல்லோரும் அதனை எங்கும் சொல்லத் தொடங்குவார்களென்றும் அதனல் குஞ்சிதம் இவனைக்கண்டு நாணவும் வேறொருவர் அவளைக் காதலியாது விட்டுவிடவும் ஏற்படுமென்றும் அதனல் தான் அவளை அடைந்துவிடக் கூடுமென்றும் சுவாமிநாதன் நினைத்தான்.

சுவாமிநாதன் நோட்டீஸ் ஒட்டியதன் அடுத்த நாள் காலையில் ஊர் முழுதும் குஞ்சிதம்-எஸ். நாதன் கதையே பேசப்பட்டது. மாணவரும் மற்றேரும் காதலர்களைக் காண ஆசைப்பட்டார்கள். பலர் விசேஷமாகக் கல்லூரிக்கே போய் விட்டார்கள். நல்ல வேளையாகக் குஞ்சிதம் நோட்டீஸின் செய்தி கேட்டுக் கல்லூரிக்கே செல்லவில்லை. நாதனே இருதயத்திற்குள் வெற்றியும் முகத்தில் வெறுப்பும் கொண்டவன் போல "தடபுடலான" ஆடைகளால் அலங்கரித்துத் தம் மோட்டார் சைகிலில் ஆரோகணித்துக் கல்லூரிக்கு வந்து விட்டான். அவனைக் கண்டதும் எல்லோரும் காரைக்குடிக்காரர்கள் ஆகாய விமானத்தைப் பார்ப்பது போலப்பார்த்தார்கள். பலர் அவனை ஒரு "மன்மதனு"கவும் மதித்தார்கள். பெரும் பாலார் அவன் தடபுடலையும் மோட்டார் சைகிலையும் குஞ்சித்ததின் சமாசாரம் உண்மையாயிருக்கலாமென்றே நம்பிவிட்டார்கள். இந் நம்பிக்கை மாணவர்களோடும் வெளியார்களோடும் நில்லாது ஆசிரியர்களிடத்தும் சென்றுவிட்டது. சிலநெருங்கிய நண்பர்கள் எஸ். நாதனிடத்தில் "நோட்டீஸ் சங்கதி தெரியுமா? நீமௌனிபோல இருந்திருந்து நல்ல இடத்தை நாடிவிட்டாயே! இத்தனை நாளும் எவ்வளவு மறைவாக வைத்துவிட்டாய்" என்றுர்கள். அதற்கு அவன் ஒரு மாதிரியாக நகைத்து இருவிதமான பொருள் கொள்ளப்படும்படியாகப் பேசினன். அது பலர் சந்தேகத்தைப் பலப்படுத்தியது. நிற்க

* * *

அன்று மாலை நான்கு மணிக்குக் கல்லூரி தலைமை அதிகாரி (Principal) யும் வேறு சில பண்டிதர்களும் நோட்டீஸ் விஷயமாக கல்லூரிக்கு பெருத்த அவமானம் ஏற்பட்டுவிட்டதால் அதனைத் தீர்த்துக்கொள்வதற்கு என்ன வழி யென்று யோசித்தார்கள். பலர் பல விதமான அபிப்பிராயங்களைத் தெரிவித்தாலும்-தலைமை அதிகாரி காதலர்களை நீக்கிவிடுவதே உசிதம் என்று அபிப்பிராயப்பட்டார். ஆதலால் 4—51க்கு அடியில் வரும் உத்தரவு நோட்டீஸ் போர்டில் போடப்பட்டது:—

'இண்டர் மீடியட் வகுப்பில் கல்விபயின்று வரும், ஆர். எஸ். நாதன் என்ற மாணவனும் குஞ்சிதம்என்றமாணவியும் கல்லூரி ஒழுங்குகட்குப் பொருந்தாதமுறையில் காதல்காண்பித்து வருகிறுர்களென்று எங்கும் பேசப்படுவதாகத் தெரிவதால்; அக்காதலால் கல்லூரியின் பெயரும் ஒழுங்கும் படிப்பும் பாதிக்கப்பட்டு விடுமென்று நம்புவதால், மேற்குறிப்பிட்ட இருவரையும் தற்காலிகமாக நீக்கியிருக்கிறேம். அவர்கள் தம் பெற்றேர் அறிய திருமணம்செய்துகொள்ளவோ அன்றி இருவரும்காதலிக்கவில்லைஎன்றுருஜுப்படுத்தவோ செய்தால் மீண்டும் சேர்க்கப்பட்டுக் கொள்ளப் படுவார்கள். இன்றேல் இவ்வுத்தரவு அப்படியே நின்று வரும்.

கல்லூரித்தலைவர்.

* * *

இக்கல்லூரி யுத்தரவு சிலவிஷயங்களில் முறை கெட்டதென்பது சிலருடைய அபிப்

பிராயம். அவ்வாறு அபிப்பிராயம் கொண்டவர்களில் நாகசாமி என்பவன் ஒருவன். அவன் அக்கல்லூரியில் பி. ஏ. பயில்கின்ற ஒரு மாணவன். அவனுடைய சொந்த வூர் நாங்குநேரிதான். அவன் நல்ல ஒழுக்கமும் உயர்வும்கருத்தும்கவனமுமுடையவன். அவனுக்குத் தன் சொந்த வூர்ப் பெண்ணாகிய குஞ்சிதத்தின் மீது ஒரு விதமான அபிமானமும் மதிப்பும் ஆசையு மிருந்தது. ஆனால் அதனைவெளிப்படுத்துவதற்கான ஓர்தருணம் கிடையாமையால் அடங்கியிருந்தான். இவனை அடிக்கடி குஞ்சிதம் காண்பதுண்டு. அவளுக்கும் அவனைத்தெரியுமாகையால் ஒருவிதமான அன்பு கொண்டிருந்தாள். திறந்து சொன்னால் குஞ்சிதத்தின்மனம் அவன்மீது மட்டிலுந்தான் கொஞ்சம் நெகிழ்ந்திருந்தது.

இந்த நாகசாமி கல்லூரித் தலைவர் உத்தரவைக் கண்டதும் பெரிதும் ஆத்திரம் கொண்டு, சில யோசனைகள் சொல்வதற்காக மாலை ஏழு மணிக்குமேல் குஞ்சிதத்தின் சிற்றன்னை வீட்டுக்குச் சென்றான். அங்கு எல்லோரும் அவனை வரவேற்று உபசரித்துக்கொண்டிருந்ததால் பேச்சு நீண்டு நீண்டு பத்து மணியைக் கடந்துவிட்டது.

அப்போது குஞ்சிதம் தனக்கு வந்த அவமானத்தைப் பொறுக்க மாட்டாதவளாய் என்ன செய்வதென்று மயங்கிக் கலங்கி ஏங்கித் தன் அறையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். கண்கள் எதிரேயிருந்த சுவரை நோக்கியிருக்க கைகள் ஏதையெதையோ செய்ய, கால் ஆடி அசைந்து அதன் வழி நிற்க மனதில் பல நினைவுகள் தோன்றித் தோன்றி மறைந்தன. உண்ணவும் உடுக்கவுமில்லை. அப்படியே 9 மணிவரையிலுமிருக்கத் திடீரென யாரோ பேசுவதுபோல சில வார்த்தைகள் செவியில் விழுந்தன. அவள் உடன்திடுக்கிட்டுப் பார்த்தாள். கண்ணைப் பறிக்கும் மாதிரியில் ஆடைகள் பூண்டு கிராப்பை யொழுங்காகச் சீவி, நல்ல "செண்டு" பூசி, நாணமும் துணிச்சலும் கலந்த முகத்தோடு ஆர். எஸ். நாதன் நின்றுகொண்டிருந்தான். இந்த எதிர்பாராத பாதகனின் தோற்றத்தைக் கண்டதும் ஒன்றும் புரியாது சிறிதுநேரம் மௌனமுற்று இருந்தாள். அப்போது நாதன் "குஞ்சிதம் பார்த்தனையா! நான் உன் உறவைப் பெற்ற முறையை என்னென்னவெல்லாம் பாடுபட்டேன்; சமிக்ஞை காண்பித்தேன்; கடிதமெழுதினேன்; எல்லாவற்றையும் நிராகரித்துவிட்டாயே! இப்போது என்னசெய்யக்கூடும்? இரண்டு ரூபாய்ச் செலவில் உன்னை என் காதலியாக்கிக் கொண்டேன். ஊரில் குஞ்சிதம் நாதனுக்கு சிநேகம் என்ற சொல்லைச் சொல்லாத ஒரு மனிதராவது உண்டா? இப்போது என்னை மணம் செய்யாது வாழாமலிருக்க வழியேது? நியாயமான எந்தப்புருஷனும் உன்னைத் திருமணம் செய்துகொள்ள முன்வரமாட்டானே! என் பெற்றோரும் சுற்றத்தாரும் தான் நீ என்னை அடையாமற் போனால் என்ன நினைப்பார்கள்? என் கோமளா! என் சூழ்ச்சி எப்படியாயினும் ஆகுக! என்னை ஏன் மணந்து கொள்ளலாகாது? நான் பெரிய தனவந்தனில்லையா? உன்னைக் காதலிக்கவில்லையா? படிப்பில் நான்நான் தாழ்ந்தவனா? என் அன்பே! என்னை நாடினால் எவ்வளவு நல்ல வாழ்வை எய்தலாம்! நான் ஒருவருடமாக உன்னைத் தேடித் தேடி நைவதை அறியாயா? என் காதற் கொழுந்தே!"


என்று கூறிக்கொண்டு நாதன் குஞ்சிதத்தின்காலில்விழப்பார்த்தான். உடனே அவள் எழுந்திருந்து ஓட முயன்றாள். இத்தகைய நாடகம் ஒன்பது மணிக்கு சந்தேகப்பட்ட ஒரு பெண் தனியாகவிருக்கும் அறையில் நடைபெற்றால் இரகசியமாகவா போகும்? குஞ்சிதம் ஓடிய சத்தம் கேட்டு நாகசாமியும் அவளுடைய சிற்றன்னை கணவர் கோவிந்தனும் ஓடிவந்து நாதனைப் பிடித்துக்கொண்டார்கள். அவன் கொஞ்சம் பலம் காண்பித்தான். அதுநாகசாமியால் அடக்கப்பட்டுவிட்டது. பிறகு நாகசாமி அவனை வற்புறுத்தி உண்மையைச் சொல்லச் சொன்னான். நாதன் தப்பமுடியாது சிக்கிக்கொண்ட பயத்தினாலும், அவமானத்தினாலும், நாகசாமியின் கைப்பலத்தினாலும் உண்மையைக் கக்கினான். அதனால் அவன் அம்பாசமுத்திரம் கங்கா பிரசில் நோட்டீஸ் அச்சிட்டானென்றும், குஞ்சிதத்திற்கு அவமானமுண்டுபண்ணி அதனால் அவளையடைந்துவிடவேண்டுமென்பதுதான் நோட்டீஸ் அச்சடித்ததின் உத்தேசமென்றும் தெரிந்து கோவிந்தனுக்கும் நாகசாமிக்கும் கொஞ்சமிருந்த வந்த சந்தேகம் நிவர்த்தியாயிற்று. அவர்கள் நாதன்கையால்நிகழ்ந்தவற்றை எழுதிவாங்கினார்கள். அடுத்தநாள் கோவிந்தன் அம்பா சமுத்திரம் சென்று கங்கா பிரசில் நாதன் கையெழுத்துள்ள நோட்டீசின் "ஒரிஜினல்" பெற்றான். நாகசாமி (பாளையங்கோட்டை) கல்லூரித் தலைவரைக் கண்டு நடந்த விஷயங்களை விபரமாக எடுத்துக் கூறி அவர் திடீரென நோட்டீஸ் போட்டுவிட்டது பெரிதும் கண்டிக்கத்தக்க செய்கையென்று விரிவாகச் சொன்னான். உடன் தலைவர் வருத்திராதனைக் கல்லூரியை விட்டு நீக்கினார். அது சம்பந்தமான உத்தரவைப் பார்த்ததும் எல்லோரும்குஞ்சிதத்தின் நேர்மையைத் தெரிந்துகொண்டார்கள். என்றாலும் நாகசாமி, குஞ்சிதம் அதற்குமேல் அங்கு கல்வி பயில்வது சரியல்லவென்று எண்ணி இடமாற்றப்பத்திரம் வாங்கி அவளை திருவாங்கூருக்குப்போகவிட்டான்.

இந்த நாகசாமியின் உதவி குஞ்சிதத்திற்கும் அவள் சுற்றத்தாருக்கும் அபிமானத்தைக் காண்பித்தது. எனவே குஞ்சிதம் நாகசாமிக்குத் திருமணம் செய்து வைக்கப்பட்டாள். இப்போது குஞ்சிதம் B. A. பட்டம் பெற்று நாகசாமி B. A. B. L. உடன் இன்பமாக வாழ்ந்து வருகிறாள். அடிக்கடி அவர்கள் சந்தோஷமாயிருக்கும் வேளைகளில் தாம் கல்யாணம் செய்துகொண்ட கதையைச் சொல்லிச் சொல்லி மகிழ்வார்கள்.

எஸ். நாதன் இப்போது சேரமா தேவிப் பண்ணையாராகவிருக்கிறான். அவனுக்கு 3 லட்சத்துக்கு ஆஸ்தியிருக்கிறது. ஒருதடவை திருநெல்வேலிக்கு வந்தபோது நாகசாமியைக் கண்டுவிட்டதால் நாணம்கொண்டான். என்றாலும் அப்பால் சிறு வயதில் நடந்ததென்று முந்திய கதையை மறந்துவிட்டு க்ஷேம சமாசாரங்கள் பேசத்தொடங்கினார்கள். அதில் குஞ்சிதமும் கலந்துகொண்டாள். அவர்கள் நாணம் வெட்கம் மன்னிப்பு ஆகியவை கலந்த புன்னகையைக் காண்பித்தார்களே தவிர வேறெதையும் தோற்றுவிக்கவில்லை.

இப்போது பண்ணையார் குஞ்சிதம் நாகசாமியோடு பெரிய நட்பு. அவருடைய வழக்குகள் நாகசாமியைத்தான் அடைகிறன.

நதிக்காட்சியின் நல்லின்பத்தை அநுபவித்தாரே அறிவர். ஆற்றுக் காட்சிக்குவேண்டிய அனைத்தினையும் ஐராவதியாறு பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இருமருங்கும் பன்னிற மலர் மண்டி அழகு செய்யும் அருங் காட்சி! யாண்டு நோக்கினும்பச்சைப்பசும்புல் நிறைந்த பரந்த தரைகளின் தோற்றம்! யாழ் ஒலியன்ன மெல்லிய வோசையுடன் பெருக்கெடுத்தோடும் நீரின் மீதிவர்ந்து வரும் மெல்லியபூங் காற்றைத் துய்க்கும்பேறு பெற்றாரே பிறவியின் பயனைப்



பெற்றார். தீயன்ன செக்கர் வானமும் முத்தன்ன தெண்ணீரும் கருமைமிக்க கார்மேகக்கூட்டமும் பசுமை சான்ற பைம்பொழிலும் ஏககாலத்தில் காட்சி யளிப்பது காண்போர்தம் ஐந்து பேரறிவையும் கொள்ளை கொள்ளும் தன்மையாயிருக்கும். அத்தகுசீர்மைசால் ஐராவதி நதியின் மாலைத் தோற்றத்தின் மற்றொரு காட்சியை மருங்கிருக்கும் படம் காட்டாநிற்கும்.

மாலைத்தோற்றத்தின் மற்றொரு காட்சி. —நியூ லைட் ஆப் பர்மா

இளைஞர்களும்-சீர்திருத்தமும்

திரு. சா. கணேசன்.

உலகம் இயற்கை நெறி யொழுகவே யமைந்தது. அந்நெறி நல்வாழ்வை நல்கும். அந்நெறியினின்றும் வழுவினால் வாழ்க்கையிற் குறைகள் வந்தடையும். அக்குறைபாடுகள் ஒவ்வொரு வகைத்தாயிருந்து மக்கட்குப் பேரின்னல் விளைக்கும்.

நந்தமிழ்நாட்டை அத்தகு குறைபாடுகள் பல புகுந்து நல் வாழ்வைக் குலைத்து வருகின்றன. அவற்றுட் சிறப்பாக இண்டெடுத்துரைக்கத்தக்கன:— பிறப்பினுல் உயர்வு தாழ்வு கற்பித்தல், அதனால் தீண்டாமை நெருங்காமை முதலிய கொண்டொழுகல், பெண்ணடிமை யாக்கல், பொருளற்ற குருட்டுச் சடங்குகட் கடிமைப்பட்டுக்கிடத்தல் ஆகியவாம். இவற்றைக் களையப்புகும் பொழுது பண்டைத் தமிழர்களின் நிலைமையையும், கொள்கையையும் ஆராய்தல் இன்றியமையாததாகும். அங்ஙனம் ஆராய்ந்து செயலிற் கொணர்ந்து நாட்டிற்கு நலம்பல செயவல்லவர் வீர இளைஞர்களே யென்பதை எவரே மறுக்கவல்லார்? உலகச் சரித்திரமும் இதற்கே ஆதரவு நல்குகின்றது. இளைஞர்களின் சலியா முயற்சியாலேயே பல தேயங்களும் எத்துறையிலும் வெற்றிபெற்று மிளிர்கின்றன! மாஜினி முதலிய நாட்டன்பர்கள் இளைஞர் இயக்கத்தின் மூலமாகவே நாட்டின் விடுதலை கண்டார்கள். இவையும் இவை போன்ற பிறவும் சரித்திரங்களிற் பரக்கக் காணலாம். அஃதை ஈண்டு விரிவஞ்சி விடுத்து மேற் செல்வாம்.

பழைய சரித்திரங்களைத் துருவி யாராய்வதால் ஒருவகைப் புத்துணர்ச்சியும் புதிய ஊக்கமும் இளைஞர் உள்ளத்தில் எழுந்து புத்தாற்றல் தரும்! உலக சரித்திரம் எழுதுவதின் தத்துவமு மிதுவே! வாழ்வின் செழுமைக்கு அதன் துணை பெரிதும் வேண்டப் படுவதாகும். எனவே பண்டைத் தமிழர் நெறிபுக்குச் சிறிதாராய்வாம்.

பத்துப்பாட்டு, புறநானூறு, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய தமிழ் முது நூல்கள் தொன்மைத் தமிழ்நாட்டின் பொருட்காட்சி மாளிகைகளாக மிளிர்கின்றன. அவற்றிற்காணும் தமிழ்நாட்டிற்கும் இன்று காணுந் தமிழ் நாட்டிற்கும் அம்மம்ம! எத்துணை மாற்றம்! எத்துணை வேறுபாடு! இராமாயணம், பாரதம் முதலிய இதிகாசங்களில் தமிழ்நாட்டின் புகழ் பேசப்படுகின்றது! அசோகன் சாசனத்தில் தமிழ்நாட்டின் மணம் வீசுகின்றது! மேகஸ்தினிஸ் என்பார் எழுதிவைத்த குறிப்பிலும் தமிழ் நாட்டின் ஒளி வீசுகின்றது! இத்தொன்மையும் சீர்மையும் செறிந்த பைந்தமிழ் நாட்டைப் புரந்தளித்த மூவேந்தர்களும் வீரத்தாலும், மானத்தாலும், நெறி திறம்பா நேர்மையாலும், அன்பாலும், அருளாலும், சிறந்து மிக்கோங்கி யாவரும் விரும்பும் பெரும்புகழ் படைத்திருந்தனர். அவர்களின் அருங்குணங்கள் யாவும் இன்று பாவுருக்கொண்டு பரிமளிக்கின்றன!

பாண்டிய மன்னர்களின் நடுநிலைமையும் அறங்காத்தலும் சிலப்பதிகாரத்தில் நன்கு விளக்கப்படுகின்றன. கண்ணகி யென்னுங் கற்புத் தெய்வம் பாண்டியன் அவைக்களஞ் சென்று தன் காதலனுங் கோவலனைக் கொன்றது அறமன்றெனச் சிலம்புச் சான்றால் வெளிப்படுத்துகின்றாள். தன் செயல் தவறென வுணர்ந்த பாண்டியன்

"பொன் செய் கொல்லன் தன்சொற் [கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்!
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது. கெடுகவென் [னாயுள்"

எனப் புகன்று மனங்கலங்கி, அறிவிழந்து, செயலற்று அரியாசனத்திலிருந்து கீழ் விழுந்து தன்னுயிர் அழிந்தான். ஒரு புரவலன் தன் பிழை யுணர்ந்து மனச் சான்றால் மடிந்தான் என்றால் அவன் செங்கோலின் திறந்தானென்னே! அவன்றன் அறத்தின் மாண்புதானென்னே! இளைஞர்களே! உங்கள் தமிழ் மன்னர்களின் ஆட்சியின் மாட்சியை எண்ணுங்கள்!

அத்தகு சீரிய சிலப்பதிகாரக்கதை இன்று களியாட்டக்காரர்களாம் நாடகக்காரர் கையில் சிக்குண்டு படும் பாட்டை எண்ணும்பொழுது கண்ணீர் துளும்புகின்றது. "பழிக்குப் பழி கொடடா பழிகாரப் பாண்



டியா" என்று அலறிப் பாண்டியன் மீது பாய்ந்து அவன் குடலைப் பிய்த்துக் கடித்துத் துவைக்கும் நாடகத்தில் வரும் கண்ணகிக்கும் சிலப்பதிகாரக் கற்புக் கடவுளாம் பெண்மையின் தெய்வமாம் கண்ணகிக்கும் ஏதாவது தொடர்பு உண்டா? இவற்றைக் கருதுங்கால் உண்மைத் தமிழர்கள் கண்மடை வெள்ளம் பொழிவார்கள் என்பதில் ஐயமில்லை! இப்பாழும் செயலையே பொருளாக்கொண்டு சில புல்லறிவாளர்கள் நாட்டின் சீரைக் கெடுக்கின்றார்கள்!

செந்தமிழ் மன்னர்களின் வீரம் புறநானூற்றில் செறிந்து விளங்குகின்றது. சோழன் நலன் கிள்ளி என்னும் வயவேந்தன் தன் மாற்றான் ஒருவன் தன்னாற்றல் தெளியாது தன்னுடல் இளமை யொன்றையே கருதிப் போர் தொடுக்க வருவதறிந்து "மெல்லென வந்து என்னடிவணங்கி இரப்பானாகில் வென்றி முரசதிரும் இவ்வரசு மட்டுமா, எனது இனிய உயிரையும் மறுக்கா தீவேன் ஆனால் வல்லார்களின் வல்லமையை மதியாது என் மனத்தைப் புண்படுத்திய அறிவிலி, உறங்கும் புலியைத் தட்டி எழுப்பிய குருடன் போல்வான். இனியவன் உயிர் கொடு திரும்புவது முண்டா? வலிய யானைக்காலில் அகப்பட்ட மூங்கிலின் நீண்ட முளையைப்போல அவனைச் சமரில் கசக்கிப் பிழியேனாகில் நெறி படிந்த உள்ளத்தில் உண்மையன்பு இல்லாத வேசையர்களின்முறைபற்றகலவியிடை எனது வெற்றிமாலை கிடந்து துவழ்வதாக!" எனும்பொருள் தோன்ற

மெல்லவந்தென் நல்லடிபொருந்தி
ஈயென இரக்குவ ராயிற் சீருடை
முரசுகெழுதாயத் தரசோ தஞ்சம்?
இன்னுயிராயினுங் கொடுக்குவெனின் [னிலத்து
ஆற்றலுடையார் ஆற்றல்போற்றாதென்
னுள்ளமெள்ளிய மடவோன்றெள்ளிதிற்
றுஞ்சுபுலியிடறிய சிதடன்போல
வுய்ந்தனன்பெயர்தலோ அரிதேமைந்து
கழைதின்யானைக் காலகப்பட்ட [டைக்
வன்றிணிநீண்முளை போலச் சென்றவண்
வருந்தப் பொரேஎ னாயிற் பொருந்திய
தீதி னெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்லிருங் கூந்தல் மகளிர்
ஒல்லா முயக்கிடைக் குழைகவென்றாரே!

என்று சபதங் கூறுகின்றான். இதினின்றும் செந்தமிழ் மன்னர்களின் இரப்போர்க்கீயும் வள்ளன்மையும் வீரத்தின் மாண்பும் ஒழுக்கத்தின் விழுப்பமும்தெள்ளிதிற் புலனாகின்றது!

வீர இளைஞர்களே! இதைக் கற்குந்தோறும் உங்கள் குருதியில் வீர எண்ணமும் உரைக்க முடியா ஓர் விதப் புத்துணர்ச்சியுந் தோன்றுகின்றதன்றோ? இத்தகு மெய்த்திரு வீரர்களின் வென்றிசேர் சரித்திரங்களைக் கற்பிக்காது இரத்தவெறிபிடித்த ஜான் நிக்கல்சனையும், கிளைவ் போன்றாரையுங் கற்பிப்பதே தற்காலக் கல்விமுறையின் குறைபாடுகளிலொன்றாகும்! தற்காலத்தவர் வீரம் என்ற சொல்லுக்கு உயிர்வதை செய்வதையே பொருளாகக்கொள்ளுகின்றனர். பல பேரைக் கொன்றவன் ஒரு வீரனும்! ஆனால் பண்டைப் பெரியோர்கள் வீரம் என்ற சொல்லுக்கு ஆற்றல் என்றே பொருள் கொண்டார்கள்! எவைவரினும் பொறுமையுடன் தாங்குவதே உண்மை வீரனின் இலக்கணமாகும்! தருமர், நாவுக்கரசர், கிறிஸ்து, சாக்ரெட்டிஸ், யதீந்திரர் ஊவிஜயா, காந்தி முதலிய பெரியார்களே உண்மை வீரர்க்கு உதாரணமானவர்கள்! தொண்டுகிழவனான காந்தியடிகள் தமது ஆற்றலால் இவ்வுலகையே ஆட்டுகின்றார். அத்தகு ஆற்றல் நமக்கு மீண்டும் வந்து திக்குமாறு இறைவனை வேண்டுவோமாக!

இனிப்பழந்தமிழர் மானங்காக்கு மாண்பினைச் சிறிதாய்வாம். மூவேந்தர்களுள் வஞ்சிநாடுடைய வள்ளலாம் செங்குட்டுவன் வட இமயம்வரைச் சென்று, தமிழ்மக்களைக் "கோழைகள்" எனக் கூறி இகழ்ந்தகனக விசயரைப் போரில் வென்றுகண்ணகியுருச் சமைப்பான் இமயத்திலெடுத்த கல்லினை அன்னார் தலைமிசை ஏற்றிக் கொணர்ந்ததுடனல்லாது இமய நெற்றியில் வெற்றிக் கறிகுறியாக இலச்சினையுமிட்டுத் திரும்பினமை சிலப்பதிகாரத்தில் ஒலிக்கிறது. தம்மை இகழ்ந்தோர் எத்தன்மையராய் எத்துணைச் சேய்மையி லிருந்தாலும் அன்னவர்க்குச்

சரியான முறையில் புத்திகற்பித்து தம் பெருமைக்குச் சிறுமை சேராவண்ணம் காத்துவந்திருக்கின்றனர். மானமிக்க இளைஞர்களே! இன்றுஉங்களைப்பற்றிக் கூறப்படும் உண்மைப்பழிக்கு என்ன விடையிறுக்கப் போகின்றீர்கள்?

பண்டைத்தமிழ்நாட்டில்வகுப்புப்பிணக்கும், அதனால்தீண்டாமை, உயர்வு-தாழ்வாதியவுமிருந்தனவாஎன்பின் இல்லை என்னும்ஒரே மொழியிற் பதிலிறுக்கலாம்! சமயாசிரியர்களுள் முன்னையரான மணிவாசகப் பெருந்தகையாரின் திருக்கோவையாரில் காதல் மணத்தின் பெருமைகளெல்லாம் விளக்கப்படுகின்றன. காதல் என்னும் ஒரு பெருவெள்ளத்தை சாதி, மதம், என்னும . சிறு துரும்புகள் தடைப்படுத்திவிடமுடியாதுஅன்றியும் சைவசமயத்திற்கே ஒரு கண்ணென நிலவும் திருத்தொண்டர் புராணம் கலப்பு மணம், சமரச சகோதரத்துவமனப்பான்மை, உடனுண்ணல், பார்ப்பனரல்லாதாரைப் பார்ப்பனர்குருவாகக்கோடல் முதலிய நாடுவிழையும் நற் சீர்திருத்தங்கட்கு ஆதரவு தருகின்றது. "பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும்," "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்," சாத்திரம் பல்பேசும் சழக்கர்காள் கோத்திரமும் குலமும் கொண்டென் செய்வீர்," "சாதிவிடாத குணங்கள் தம்மோடு சலித்திடுமாகாதே" முதலிய பெரியார் மொழிகளாலும் இஃது தெளியப்படுகின்றது. இறைவனுறையாலயம் எனக்கருதப்படும் திருக்கோயில்களில் எவ்வகுப்பிலுமுதித்த அடியார்களை எல்லாம் வைத்து விழ வெடுக்கின்றோம். ஆனால் அன்னார் பிறந்த வகுப்பில் வந்த மக்களை அனுமதிக்கின்றோமில்லை. மக்களுள் பிறப்பின் காரணமாகச் சிலரை ஒதுக்கி வெறுத்தல் எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவனை இழிவு படுத்தியதாகும். இளைஞர்களே! தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருமந்திரம், திருவருட்பா முதலிய அருள் நூல்களை எடுங்கள்! எடுத்துப் புரட்டிப் பாருங்கள். அந்தோ! எங்காவது வேற்றுமை உணர்ச்சி இருக்கின்றதா! இல்லை! இல்லை!! சத்தியமாகவும் இல்லை!!!

இனிப் பெண்களைப் பற்றி முன்னையோர் கொண்ட கருத்தைச் சிறிதாராய்வோம்! செந்தமிழ்ச் செல்வர்கள் பெண்ணையே முதன்மையாகக் கருதி வந்திருக்கின்றனர். சிவனுடலிற் பாதியைப் பெண்ணுருவாய் வகுத்தனர். உலகம் சிவமயம். எவ்வுயிரும் நீங்காதுறைபவன் இறை சிவன். உலகம் சரிபாதி ஆணினத்தையும், சரிபாதி பெண்ணினத்தையும் கொண்டது. ஆகவேதான் அம்மையப்பனென்னும் பெயருடன் இறைசிவனை வகுத்தனர். திருமால் மார்பில் மலர்மகளை வைத்துள்ளார். செல்வத்தைப்பெட்டியிலன்றோ வைத்துப் போற்றவேண்டும்! நான்முகன் கலைமகளை நாவில் வைத்து மகிழ்ந்தான்! கலைவன்மை நாவினின்றே யன்றோ வெளிப்படும்! செல்வத்தையும், கல்வியையும், நதியாதியவற்றையும், இவையெல்லாவற்றையுங் கொண்ட தேயத்தையும், தேயம் பல வடக்கிய இவ்வுலகத்தையுமே முதறிவாளர்பெண்ணுருவாய்க்கண்டுபோற்றினர். இன்றும் அங்ஙனமே நிகழ்கின்றது. அப்படிப்போற்றிப் புகழப்பட்ட பெண்ணினம்—தண்மைமிக்க தாயினம்—இன்று எந்நிலையிலிருக்கின்றது! கல்வியில்லை, சுதந்திரமில்லை, கண்ணில்லை. கையில்லை. வாழ்க்கையின் பங்காளிகளிருவரில் ஒருவர் தன் மடமையில் வாழ்க்கை எங்ஙனம் இன்பமுடையதாயிருக்கும்! பெண் மக்கள் கல்வியறிவு பெருமையாலன்றோ உலகநிகழ்ச்சியும் பிறவும் அறியமாட்டாதவரா யிருக்கின்றார்கள். அதனாலன்றோ மூடப்பழக்கவழக்கங்களைக் குருட்டுத்தனமாக உடும்புப் பிடியாகப்பற்றிக் கொண்டிருக்கின்றனர். என்று பெண்ணடிமை ஒழியுமோ அன்றுதான் நாடு அடிமைத் தளையினின்று, அறியாமைப் படுகுழியினின்று விடுதலை பெறும்!

இனி மக்கள் ஒழுக்கத்தை எடுத்துக்கொள்வோம். பண்டை அறிஞர்கள் ஒழுக்கத்தைச் சமய வாழ்வுடன் இணைத்திருக்கின்றார்கள். இன்றும் ஒழுக்கமிக்காரை ஆங்கிலத்தில் அவர் ஒரு சமய வாழ்க்கையுடையார் (He is a relegious man) எனப் புகல்வதுண்டு! சமய வாழ்வென்றதும் வெளிப்பூச்சு, வேடம், திருவிழா முதலியவற்றிற் கருத்தைச் செலுத்தி அவைகளே சமயவாழ்வெனக்கொண்டு இடர்ப்படுதலாகாது. அவைகள் சமய வாழ்வென்னும் பெருமாளிகையின் வாயிற்படிகளேயாகும். ஆனால் அவை இன்று படிகளாகவும் நின்று துணைசெய்வதில்லை. அப்படிகள் இன்று சமயவாழ்வென்னும்மாளிகையுட் செல்ல விழைவார்களைத் தடுக்கி இடரிவிட்டுக் காயப்படுத்தி விடுகின்றன. சமயம் என்றதும் பல சமயங்களின் பெயரைச் சொல்லி எது உயர்ந்தது எது தாழ்ந்ததென்னும் சண்டையினை விளைத்து முட்டுப்படுதலாகாது. இச்சமயத்தில் தாயுமானரின் திருப்பாடல் ஒன்று நினைவுக்கு வருகின்றது.

"வேறுபடு சமயமெல்லாம் புகுந்துபார்க்கின்
விளங்குபரம் பொருளேநின் விளையாட்டல்லால்
மாறுபடுங் கருத்தில்லை முடிவின் மோன
வாரிதியில் நதித்திரள்போல் வயங்கிற்றம்மா"

என்று கூறும் பகுதி இக்கொள்கைக்குத் தக்க சான்றாயிருக்கின்றது. கிறிஸ்து பெருமானின் மலைப்பிரசங்கத்திற்கும், திருவாசகத்திற்கும் யார் வேற்றுமைகாணக் கூடும்? கிறிஸ்து பெருமான் செயலுக்கும் அப்பர் செயலுக்கும் இருக்கும் வேற்றுமை யென்னே? ஆகவே உலகிலுள்ள எல்லாச் சமயங்களும் இறைவனை யெய்துவிக்கும் நெறிகளே யென்றுணர்க.

கொலை, களவு, கள், காமம், பொய் யாதிய படுகுழியில் வீழாதவாறு தடுத்தாட்கொள்வது சமயநெறியொன்றேதானென்று விருது கூறுகின்றேன். அந்நெறிபற்றியொழுகுவதே இளைஞர்களின் வளர்ச்சிக்குத்துணையுமாகும்! உயிர்வர்க்கத்திற்குத் தொண்டு செய்வதே சமய வாழ்வின் தலையாய நோக்கம். ஆயின் அதற்காகப்பெண்டு பிள்ளைகளைத் துறந்து ஓடுவது சமயவாழ்க்கையாகாதுபெண்டுபிள்ளைகளுஞ் உயிர்வர்க்கமே. அங்கும் இறைசிவனிருக்கின்றான். போலித்துறவு, திண்ணைவேதாந்தம் முதலியவற்றால் நாடு அடைந்துவரும் இன்னல்கள் அளப்பில. அத்துறவில், அவ்வேதாந்தங்களில் இளைஞர்களே! உங்கள் மனம் செல்லாதிருக்குமாக! மனைவிமக்களுடன் பொருந்திய வாழ்க்கை நடாத்தி எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும் செவ்வழிபற்றிச் செல்வதே சீரிய சமய வாழ்க்கையாகும்,

இனிச்சிலர் சமய வாழ்க்கையைச் சடங்கிற்கு அடிமைப்படுத்திவருவது மாறுபட்டதாம் என்க! சடங்குகள் என்பவை வெவ்வேறுஅடிப்படையின்மேல்,வெவ்வேறுமக்களால்,வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு தன்மையினவாயமைகின்றன, ஆரம்பத்தில் சில அடிப்படைகளைக் கொண்டு தோன்றும் அவை காலக்கிரமத்தில் பொருளற்றகுருட்டு வழக்கமாகமாகத் திரிந்து விடுகின்றன, இதற்குத்தக்கசான்று தற்கால மணவினைச் சடங்குகளே சாலும்! இப்படிப்பட்ட குருட்டு வழக்கங்கள் இயற்கையின் நியதிப்படி சீர்திருத்தப்படுகின்றன. சீர்திருத்தம்விழையும் நல்லன்பர்கள் வாழ்க்கை முறையில் குருட்டு வழக்கங்கள் நுழையாதவாறு கண்ணுங் கருத்துமாயிருந்து வரவேண்டும்.

இங்கு மூன்று விஷயங்கள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கன. சமயத்திற்கும் சடங்கிற்கும் பாலமமைப்பது பெருந் தீமை விளைவிப்பதாகும். நல்வினை தீவினைக்கருமங்கட்கு பார்ப்பனரையோ பண்டாரத்தையோதான் வரவழைக்கவேண்டுமென்பது மனித சமுதாய சுதந்திரத்தைக் கொலை செய்வதாகும்! குறிப்பிட்ட பொருள் விளங்கா வேற்று மொழியிலேயேதான் மந்திரங் கூறவேண்டுமென்பது தாய் மொழி வளர்ச்சிக்கு ஊறு விளைப்பதாயும், அடிமை மனப்பான்மையை வளர்ப்பதாயுமிருக்கின்றது.! ஆகவே இவை சடங்கில் உள்ள பெருந்தீமைகளாகும்!

மேற்கண்ட குறைபாடுகளை எல்லாம் ஒழிக்க வேண்டுமென்றால் முதலாவதாக நமது நாட்டின் தற்காலக் கல்விமுறையை மாற்றியமைக்கவேண்டும். தாய்மொழிக்கு முதன்மை தரா வரையில் நாட்டின் வளர்ச்சி கிட்டாது! ஒரு காலத்தில் தென்னாஃபிரிகாவரைப் பரந்து விளங்கிய தண்டமிழ்த் தனிமொழி இன்று தனது மக்களாலேயே புறக்கணிக்கப்படுகிறதென்றால் இதனினுங்கொடுமை வேறென்ன வேண்டும்? நாட்டு மொழி வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி என்பதை அயர்லாந்து நன்கு விளக்கியிருக்கிறது. அயர்லாந்தின் விடுதலைக்கு எவ்வெவ் வழிகளிலெல்லாமோ முயன்றும வெற்றி பெருமை கண்ட தேயத்தலைவர்கள் மொழி வளர்ச்சி செய்வதில் முனைந்து நின்றார்கள். சொந்த மொழி வளர்ச்சியடையவே இவர்களின் வேலைகளும் எளிதிற் பயன் பெற்றது. விடுதலைப் போரில் வெற்றியும் பெற்றார்கள். இது உலகறிந்த உண்மை! நாடு என்னும் மாளிகை, மொழி என்னும் அடிப்படையின் மீது கட்டப் பட்டிருக்கின்றது. மொழியாம் அடிப்படை அழியின் நாடு நாசமுறக் கேட்கவும் வேண்டுமா?

மொழி வளர்ச்சி பெற்றதென்றால் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துக்கள் பெருகிற்றென்பதில்லை. எக்கலையையும் மக்கள் அம்மொழியிலேயேகற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளிருக்கவேண்டும். ஒவ்வொருவரும் அறிவுக்கலை (ஸைன்ஸ்) உடற்கூறு (ஃபிஸியாலஜி) உடல் ஓம்பல் (ஃபிஸிகல் கல்ட்சர்) தாவரம் (பொட்டனி) பூத பௌதிகம் (ஜியாலஜி) முதலிய கலைகளிற் பொது அறிவேனும் பெற்றவர்களாயிருக்கவேண்டும். இவ்விடத்திற்றான் பலர் ஐயப்பாடுகளைக் கிளப்புகிறார்கள்! "நந்தமிழ் மொழியில் இவையெல்லாம் இல்லையே இவற்றை ஆங்கிலம் முதலியவேற்று மொழித் துணைகொண்டுதானே கற்கவேண்டும்?" என்கின்றார்கள். ஆங்கிலம் ஜெர்மனி ஃபிரஞ்சு முதலிய மொழியினர் யாவரும் புத்தம்புதிய கலைகளையெல்லாம் தத்தம் மொழியிலேயேகற்று வருவதியாவருமறிந்ததாம். பண்டைத் தமிழ் நாட்டில் இக்கலைகள் எல்லாம்நிறைந்திருந்தனவென்பதற்கும், மக்கள்இத்துறைகளில்வல்லவர்களாயிருந்தனர் என்பதற்கும் பல மறுக்கவொண்ணாச் சான்றுகளிருக்கின்றன. அவற்றை இண்டு விரிப்பிற் பெருகும். அவற்றை எல்லாம் இடைக்காலப் "பெரியார்கள்" கடலுக்கோ அன்றிக் கறையானுக்கோ தானம் செய்துவிட்டார்கள். நிற்க,இன்று ஆங்கிலத்திலுள்ள எல்லா


சங்க நிர்வாகிகள்.




சா.அ.ராம. சாமிநாதன் செட்டியார்.



சா. அ. ராம. சொக்கலிங்கம் செட்டியார்.



சா. அ. ராம. ராமசாமி செட்டியார்.




அ. க. அ. சித. வெ.
சொக்கலிங்கம் செட்டியார்.



வயி. அ. சாமிநாதன் செட்டியார்.




மெ. அரு. அரு. சங்கரன் செட்டியார்.



அ க.அ.சித அள.முத்துராமன் செட்டியார்


பர்மை தனவைசியர் கல்வி நிலையம்.



கல்வி நிலைய மாணவர்களும் ஆசிரியர்களும்.




சா.ராம மு.சித.மு காசிச் செட்டியார்
பழைய தலைவர்.



மு. அழ. அழகப்ப செட்டியார்.
பொக்கிஷதார்.




அ.க.அ சித அள. வள்ளியப்ப செட்டியார்.
புதிய தலைவர்.



ராஜா ஸர். அண்ணாமலை கட்டிடம்.

லண்டன் எக்ஸ்சேஞ்ச் மார்க்கெட்.



LONDON EXCHANGE MARKET.

நூல்களும் அவர்களாலேயே கண்டெழுதப்பட்டதல்ல! மொழி பெயர்ப்பு நூல்களும், அவற்றுட்கிடக்கின்றன என்பதை எடுத்தியம்ப வேண்டுவதில்லை! அன்றியும் ஜெர்மனி, பிரஞ்சு, ஆங்கிலம் முதலிய மொழியினர் எல்லாம் வேற்று மொழியிலுள்ள அரும் பெருங் கலைகளை அம்மொழிபயின்றே கற்கவில்லை! அம்மொழிவல்லாரைக்கொண்டு தத்தம் மொழியில் அக்கலை நூல்களைப் பெயர்த்து அதனைக்கற்றே அறிஞராகின்றனர். அங்ஙனமே நாமும் செய்தாற்றான் மொழி வளர்ச்சியடைவதுடன் நாமும் அக்கலையை ஐயந்- திரிபு அறக்கற்றுப்பயனெய்தலாம். இண்டு,

“பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்”

என்னும் பாரதியார் வாக்கு சிந்திக்கத்தக்கதாகும்!

இளைஞர்களே!

நேற்றுப்பிறந்த புதிய மொழிகளை எல்லாம் பாருங்கள்! பழமைக்கும் பழமையாமுங்கள் தண்டமிழ் மொழியையும் பாருங்கள்! அப்புது மொழிகள் எல்லாம் இன்று மின்னெறி முடியணிந்து பொன்னரி யாசனத்தில் தன்னிகரில் பெருமையோடு இறுமாந்திருக்கின்றன. ஆயின், தண்டமிழ்த்தாயின் மடிமிசை யமர்ந்து தவழ்ந்து விளையாடிய இளைஞர்களே! உங்கள் அன்னையையும் உற்று நோக்குங்கள்! அந்தோ! உலக மொழியாட்கெல்லாம் முன்னவளான உங்கள் தாயின் மணிமுடி எங்கே? செங்கோல் எங்குபோய் இருக்கின்றது? கிண்கிணிச் சிலம்புகள் யாண்டுபோய்ப் பதுங்கின? அவள் உடையெங்கே? உணவெங்கே? உறையுள் தானெங்கே? ஐயோ! செந்தமிழ்ப் பைந்தொடி மைந்தர்கள்! உமது அன்னைக்கு உயிர் இருக்கின்றதா? நாடி ஒடுக்கிடுந் தருணமும் உற்றதோ? மக்களே! மக்களே! எனக் கதறும்மொழி யுங்கள் செவிப்புகவில்லையா? பெற்றதாயினும் பெரிய பொருள் உங்கட்கு உண்டா? உடனே எழுங்கள்! எழுந்து தாயை மறலிகையினின்றும் மீட்க முயலுங்கள்! தாயை எடுத்து நன்னீராட்டி பூந்துகிலணிவித்து செந்திலகமிட்டு புது அணிபலவால் அலங்கரித்து அரியாசனத்தமர்த்தப் போகின்றீர்களா? அன்றி மடியுந் தருவாயிலிருக்கும் மாதாவுக்கு இமக்கடனாற்றப்போகின்றீர்களா? தமிழ் இறந்தபின் தமிழ்த்தரைமட்டும் இருந்தென்ன? மொழியன்றோ நாடு! கலையன்றோ உயிர்!

தமிழ் மக்களே! உங்கட்கென ஓவியமாளிகைகளிருக்கின்றன! இசைநிலயங்களிருக்கின்றன. காவியப்பொழில்களிருக்கின்றன! அன்பு மலர்களிருக்கின்றன! வேறுபல அறிவுக்களஞ்சியங்களுமிருக்கின்றன. அந்தக் காட்சிசாலைபுட் செல்லவும் அஞ்சுகின்றனரே! காவியத்தைக் கற்கும் தமிழன் எத்தனை? ஓவியத்தை ஓம்பும் தமிழன் எத்தனை? இசையைப்போற்றுவார் எத்தனை? அறிவுக் களஞ்சியங்களை அன்பின் நிலையங்களை எத்துணை பேர் கற்கின்றனர்?

தொல்காப்பியப் பொருளின்பமும், வள்ளுவர் அறமும், இளங்கோவின் எழிலும், சம்பந்தர் பண்ணும், சேக்கிழார் அன்பும் மணிவாசகர் உருக்கமும், புறநானூற்றின் வீரமும், கம்பன் கவியும், இராமலிங்கர் நேர்மையுமன்றோ நமது அழியாச் செல்வங்கள்! அவையேயன்றோ நமது “பிதுர்ராஜ்ய” சொத்துக்கள்; குன்றாத கருவூலங்கள்! இத்துணைச் சிறப்புவாய்ந்த நந்தா நிதியையணுகவும் அஞ்சுவரோ! இளைஞர்களே! அந்நிதியைக் கொள்ளை கொள்ளுங்கள்! செஞ்சொற்கவியின்பத்தை நுகருங்கள்! அறிவை விலாசப் படுத்துங்கள்!

ஓவியம் ஓம்பல் நமது நாட்டில் இம்மியும் இல்லை! அணுவும் கிடையாது! இதை நீங்கள் பெருமாள் கோவில்களில் கண்ணாரக் காணலாம். பெருமாளின் ‘பிரசாதம்’ என்னும் உண்டப்பருக்கையை மூக்குமுட்ட மாந்தி எண்ணெய்க் கையை அழகொழுகுந் திருமுகத்துடன் அருகிருக்கும் ஓவியச்சாலைகளின்மேல் அப்பித்துடைத்து அழகினைப் பாழ்படுத்தும் மக்கட்கும் ஓவியம் ஓம்புவதற்கும் என்ன தொடர்பிருக்க முடியும்?

இசைப் பயிற்சி அருகிவருகின்றது. அருட்பாக்கள் எல்லாம் அடங்கி வருகின்றன? யாழ் குழல் முதலிய கருவிகள் பொன்றி வருகின்றன! “மாமாப் பாட்டு”ம் “வண்ணான் பாட்டு”ம் “ட்றியோப் பாட்டு”ம் மல்கிவருகின்றன. புல்புல்தாரா முதலிய கருவிகள் இசை யினிமையைப் பாழ்படுத்தி வருகின்றன! ஆர்மோனியம் வந்ததால் இசையுலகமே கொலைசெய்யப்படுகின்றது! போதாக் குறைக்கு மோர்ஜிங்கு என்னும் பேயும் கூடிவிட்டால் கேட்கவும் வேண்டுமோ? யாழ் குழல் முதலிய இனிய கருவிகள் “இன்னகாலத்தில் இந்திய நாட்டில் இசைக்கருவிகளாய்க் கருதப்பட்ட கருவிகள்” என்றெழுதிக் காட்சி சாலையில் வைக்கும்படியான நிலையும் வந்துவிடுமோ என்னவோ? யார்கண்டது!

சீர்திருத்தம் வேண்டும் இளைஞர்களே! எழுமின்! எழுமின்! நாட்டின் வளர்ச்சி கருதி ஆக்கவேலையும் அழித்தல் வேலையும் செய்ய முனையுங்கள்! தொடக்கத்தில் பெரியார் (வயதால்) எனப்படுபவர்கள் முட்டுக்கட்டைதான் போடுவார்கள்! அஞ்சாது முனைவீரேல் ஆக்கம் பெறுவீர்! வெற்றியுறுவீர்!

“பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே”

வர்த்தகமும், சுயராஜ்யமும்

'காந்தி' ஆசிரியர் திரு. தே. ச. சொக்கலிங்கம்.


"தனவணிகன்" ஆசிரியர், 'சங்க மலரி'ல் வெளியிடுவதற்காக ஒரு கட்டுரை எழுதியனுப்பும் படி உத்தரவிட்டார். எதைப்பற்றி எழுத வேண்டுமென்று அவர் சொல்லியிருந்தால் கொஞ்சம் சுலபமாயிருந்திருக்கும். "எதைப்பற்றி வேண்டுமானாலும் எழுதலாம்" என்று அவர் குறிப்பிட்டிருப்பதால் சங்கடமாய் விட்டது. இதைப்பற்றி யோசித்துக் கொண்டிருக்கும்போது மகாகனம் சீனிவாச சாஸ்திரியாரின் பிரசங்கம் கண்ணிற் பட்டது. அதை வாசித்தபோது ஒரு முக்கிய விஷயம் அதில் கிடைத்தது. நீங்கள் அதை அறிவீர்களோ இல்லையோ எனக்குத் தெரியாது. ஆகவே அதை மறுபடியும் சொல்லுகிறேன். இந்தியர் அநேகர் வெளிநாடுகளிலே குடியேறியிருக்கிறார்களல்லவா ? வர்த்தகத்திற்காக வெளிநாடுகளில் போய் வசிக்கிறவர்களும் உண்டு. இவர்களில் பெரும்பான்மையோர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள நாடுகளில் தான் இருக்கிறார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திலுள்ள சகல பிரஜைகளுக்கும் சமஉரிமை யிருப்பதாக பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள் தத்துவம் பேசுகிறார்கள். ஆனால் காரியத்தில் நடப்பது வேறு விதமாயிருக்கிறது. பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளிலுள்ள இந்தியருக்கு அடிக்கடி புதுப்புது துன்பங்கள் நேரிட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். தென்னாப்பிரிக்காவிலும், கெனியாவிலுமுள்ள இந்தியரின் குறைகளை நீக்க கனம் சாஸ்திரியார் உள்பட பிரபல மிதவாதிகள் எல்லாரும் முயற்சி செய்து பார்த்தாய் விட்டது. பிரிட்டிஷ் சர்க்காரிடம் மிகத் தாழ்மையான விண்ணப்பங்களை எழுத்து மூலமாகவும் வாய் மூலமாகவும் கொடுத்து பார்த்தாய் விட்டது. ஒன்றும் பலிக்கவில்லை. இதற்குக் காரணமென்ன ?

1923 ம் வருஷத்தில் கெனியா இந்தியருக்கு நேரிட்ட இக்கட்டுகளை நீக்க பெரிய முயற்சி நடந்தது. அச்சமயம் கனம் சாஸ்திரியார் பிரிட்டிஷ் மந்திரி சபையிடம் நேரில் சென்று இந்தியரின் கஷ்டங்களையும், வெள்ளையர் செய்யும் அநீதிகளையும் எடுத்துரைத்தார். சாஸ்திரியார் சொல்லிய காரணங்கள் நியாயமானவை தான், எந்தக் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தாலும் அவர் கட்சி ஜெயிக்கும். ஆனால் மந்திரி சபை கோர்ட்டுக்குப் போக விடவுமில்லை; தாங்களாக பரிகாரம் தேடவுமில்லை. "நியாயங்களை எடுத்துக் காட்டியும் பரிகாரம் தேடாமல் இருக்கிறீர்களே, இது என்ன விநோதம் ?" என்று சாஸ்திரியார் குடியேற்ற நாட்டு உதவி மந்திரியைக் கேட்டார். அதற்கு அவர் சொல்லிய பதில் தான் மிகவும் முக்கியமானது. அவர் சொன்னார்:—

"நீங்கள் சொல்லுவதெல்லாம் நியாயந்தான். ஆனால் உங்களுக்கு குடியேற்ற ஆட்சியில்லை".

இந்த ஒரு காரணத்தால் இந்தியர் கட்சி எவ்வளவு நியாயமானதாயிருந்தாலும் பலிக்காமல் போய்க்கொண்டிருக்கிறது. வெளிநாடுகளிலுள்ள இந்திய வர்த்தகர்கள் எவ்வளவு கஷ்ட நஷ்ட மடைய நேர்ந்தாலும், இந்தியருக்கு விமோசனமில்லை. காரணமென்ன? சுயராஜ்யமில்லை!

வர்த்தகத்திற்கும் சுயராஜ்யத்திற்கும் சம்பந்தமில்லையென்று சிலர் நினைக்கிறார்கள். இது தவறு! வர்த்தக உரிமையும் சுயராஜ்ய உரிமையும் ஒன்றுக்கொன்று இணைபிரியா சம்பந்தமுள்ளது. என்று நாம் ராஜ்ய உரிமையை இழந்தோமோ அன்றே நமது வர்த்தகச் செழிப்புந் தொலைந்துபோயிற்று. வர்த்தக உரிமைக்கும் ஆபத்தேற்பட்டது. சைகோனில் லேவாதேவிசெய்துவரும் செட்டியார்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களை நீங்கள் அறிவீர்கள். சைகோனில் லேவாதேவி செய்கிற வேறு எந்த நாட்டாருக்காவது இந்த சங்கடங்கள் உண்டா? அதற்கு என்ன காரணம்? சைகோனிலுள்ள மற்ற நாட்டார் சுயராஜ்யம் பெற்றவர்கள். அவர்களிடம் சைகோன் சர்க்கார் கைவரிசையைக் காட்டினால் அவர்கள் சர்க்கார் சும்மாவிடமாட்டார்கள். ஆனால் இந்தியரை என்ன செய்தாலும் கேட்பாரில்லை என்ற விஷயம் எல்லாருக்கும் தெரியும். அதனால்தான் வெளிநாடுகளிலுள்ள இந்தியர் கஷ்டப்படுகிறார்கள். அவர்



களின் கஷ்டங்களை நீக்க இந்தியருக்கு சக்தியுமில்லை.

சைகோன் செட்டியார் கஷ்டங்களைப் பற்றி இந்தியாவில் எவ்வளவோ பலமான கண்டனங்கள் நடைபெற்றன. சென்னை கவர்னரையும் வைசிராயையும் பார்த்துப் பேசி தந்திமேல் தந்தி கொடுத்தார்கள். இவ்வளவு செய்தும் பிரிட்டிஷ் சர்க்கார் நத்தை போல நகர்கிறதே யொழிய, தீவிரமாக ஒரு காரியமுஞ் செய்யவில்லை.

பிரிட்டிஷ் பிரஜைகளுக்கு ஏதாவது நேரிட்டால் இந்த பிரிட்டிஷ் சர்க்கார் இவ்வளவு மெத்தனமாக இருக்குமா? ரஷியாவில் சில பிரிட்டிஷ் வேலைக்காரர்களை கைது செய்ததற்காக் பிரிட்டிஷ் சர்க்கார் என்ன ஆர்ப்பாட்டம் செய்தது தெரியுமா? பாரசீகத்தில் பிரிட்டிஷ் எண்ணெய் கம்பெனியின் ஒப்பந்தத்தை ரத்து செய்ததற்காக இதே பிரிட்டிஷ் சர்க்கார் ஆடின தடபுடல்கள் எதற்காக? அகப்பட்டவர்கள் பிரிட்டிஷார். ஆகவே தன்னை யறியாமலே ஆர்ப்பாட்டங்கள் கிளம்பின. சைகோனில் கஷ்டப்படுவது இந்தியர்கள். ஆகவே எவ்வவு சத்தமிட்டாலும் காதில் ஏறவதில்லை!

இந்தியருக்கு சுயராஜ்யம் இருந்தால் இப்படி நடக்குமா? நடந்தால் இந்தியர் பிரிட்டிஷ்சர்க்காரிடம் முறையிடவேண்டிய அவசியம் நேரிடுமா? இந்திய சுயராஜ்ய சர்க்கார் இந்தியருக்கு பிறர் துன்பம் செய்வதைப்பார்த்துக்கொண்டு சும்மா யிருப்பார்களா?

நமக்கென்ன! நாமுண்டு, வர்த்தகமுண்டு சுயராஜ்யத்தைப் பற்றி நமக்கென்ன கவலை? என்று பேசுகிற வர்த்தகர்களை சைகோனில் நடந்த சம்பவங்களை நினைத்துப்பார்க்கும்படி கேட்கிறேன்.

ஒரு நாட்டின் செழிப்பிற்கு வர்த்தகமே உயிர். இந்தியாவிற்கு வர்த்தகஞ்செய்யவே பிரிட்டிஷார் வந்தார்கள். வர்த்தகத்திற்காகவே இன்றும் இந்தியாவை ஆண்டுவருகிறார்கள். தங்கள் வர்த்தகம் எங்கு குறைந்துவிடுமோ என்று பயந்துதான் வர்த்தகப் பாதுகாப்பு தங்களுக்கு வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆகவே சுயராஜ்யத்திற்கும் வர்த்தகத்திற்கும் சம்பந்தமில்லையென்று சொல்லுவது யோசனையில்லாத பேச்சாகும்.

மேலும் எந்த சமூகமும் தேசிய இயக்கத்தில் சம்பந்தப்படாமல் ஒதுங்கி நிற்பது தவறு. சுயராஜ்யம் என்பது வெறும் கனவல்ல, நிச்சயமாக பலிக்கப்போகிற காரியம். அது பலிப்பதற்கு எவ்வளவு காலம் ஆகுமென்பது ஜனங்களின் ஊக்கத்தைப் பொறுத்திருக்கிறது. தேசிய இயக்கத்தில் சேருவதால், ஜனங்களின் அபிமானத்தை வர்த்தகர்கள் பெற முடியும். அதனால் அவர்களுக்கு லாபம் கிடைப்பதோடு, தேசத்தில் ஒற்றுமை உணர்ச்சியும் பலமாகும்.

சுதேசி சாக்குகளை வாங்கவேண்டுமென்ற அபிமானம் இருக்கிறதனால் தானே, சுதேசி தொழிற்சாலைக் காரர் தொழில் நடத்த முடிகிறது? அந்தத் தொழிற்சாலைக்காரர் ஜனங்களின் அபிப்பிராயத்தை உணர்ந்து, அவர்கள் கோரிக்கையில் அநுதாபங்காட்டவேண்டியது கடமையல்லவா? ஆகவே சுதேசி இயக்கத்தை அவர்கள் ஆதரிப்பதால் தங்கள் தொழில் நடக்க உதவி செய்கிறவர்களாகிறார்கள். தேசிய இயக்கத்திற்குவிரோதமாய் நிற்கிற வர்த்தகரோ, தொழிற்சாலைக்காரரோ ஜனங்களின் அபிமானத்தைப் பெற முடியாது.

வர்த்தகமும் சுயராஜ்யமும் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்த முள்ளது. உடலும் உயிரும் போன்றது. சுயராஜ்யமில்லாமல் வர்த்தகம் செழிக்க முடியாது. வர்த்தகம் செழிக்காவிட்டால் சுயராஜ்யம் கிடைத்தால்கூட நிலைத்து நிற்க முடியாது. வெளிநாட்டில் இந்தியர் அநுபவிக்கிற சகல கஷ்டங்களுக்கும் காரணம் நமக்கு சுயராஜ்யமில்லாதது ஒன்றே. சுயராஜ்யமே சகல கஷ்டங்களையும் போக்கும் சஞ்சீவி. அது கிடைக்காத வரையில் நமக்கு ஏற்படும் கஷ்டங்களையோ, நஷ்டங்களையோ, இழிவுகளையோ நாம் போக்க முடியாது.

விதவைகள் துயரம்

திரு. ஆ. டழ. சோக்கலிங்கன்.

கடல்புடை சூழ்ந்த இக்கில வுலகின் கண்ணேவாழும் மனிதர் இன்பமாய் வாழ்தலே உயர் வாழ்க்கையின் பயன் எனப் பட்டபோதிலும் பலதிறப்பட்ட துன்பங்களைத் தத்தம் வாழ்நாட்கட்குள் அநுபவிக்கின்றனரென்பது கண் கூடு. "அன்ன விசாரம் அதுவேவிசாரம்அதுவொழிந்தாற்,சொன்ன விசாரம் தொலையா விசாரம்நற்றோகையரை, பன்ன விசாரம் பலகால் விசாரம் இப்பாவி நெஞ்சுக்கு,என்ன விசாரம்வைத்தாய் இறைவா கச்சி யேகம்பனே" என்று பட்டினத்தார் ஆண் மகனுக்கு உணவு தேடுதலை முதல்துயரமாகவும்,பொருள் தேடுதலை அடுத்தும், நல்ல மனைவிமாரைத் தேடுதலை இறுதித் துயரமாகவும் அருளியிருக்கின்றனர். பெண் மகளுக்கும் இவ்வாறு துயரங்களுண்டு. ஜனசமூகத்தில் ஆடவரைப் பார்க்கிலும் பெண்களே அதிகமான துயரினை யநுபவிக்கின்றார்கள். அடிமைப் படுத்தப்பட்ட அச்சாந்த மூர்த்திகளான பெண்டிருள்ளும் விதவையரே துயர சாகரமாய்த் துலங்குகின்றனர். கணவன் இறந்தவுடனேயே மனைவி விதவையாகின்றாள்.

சங்க மருவிய நூல்களை யாம் பார்க்கும்பொழுது கணவன் இறந்தானெனக்கேட்டவுடன் அன்பின் பெருக்கால் அரும்பரிவால் யாதொரு முயற்சியுமின்றி கொல்லன் உலையில்துருத்தியிலிருந்து வெளிப்படும் காற்றுப்போலப் பெருமூச்சுவிட்டு அக்கணமே உயிர்துறக்கும் பெண்கள் தலைக்கற்பினரென்றும் இறந்த பின் சந்தர்ப்பப்படி அவனின் உடலோடோ அன்றி தனித்தோ நல்ல நீருள்ள ஊருணியில் மூழ்குவது போன்று தீப்பாயும் பெண்கள் இடைக்கற்பினரென்றும் இவ்வாறு தமதுயிரை மாய்க்காது தனது கணவனை யடைய (மறுபிறவியிலாயினும்) கைம்மை நோன்பு நோற்போர் கடைக்கற்பினரென்றும் முந்தையோர் வகுத்திருக்கின்றனர் எனக் காண்கின்றோம். இதனை மணிமேகலையில் "காதலன்உற்ற கடுந்துயர் கேட்டுப் போதல் செய்யா வுயிரோடு நின்றே, பொற்கொடி மூதூர்ப் பொருளுரை யிழந்து நற்றொடி நங்காய் நாணுத்துறந்தேன். காதலர் இறப்பில் கனையெரி பொத்தி, ஊதுலைக் குறுகின் உயர்த்தகத் தடங்காது, இன்னுயிர் இவர் இயாாயின், நன்னீர்ப்பொய்கையின் நளியெரி புகுவர், நளி யெரி புகாாயின் அன்பரோடு உடனுறை வாழ்க்கைக்கு நோற்று உடம்படுவர், பத்தினிப் பெண்டிர் பரப்பு நீர் ஞாலத்து" என்று வயந்த மாலைக்கு மாதவி நல்லாள் வழுத்துகின்றாள். தன் கணவன் கோவலன் மாயக் காரணமாகிய அரசன் நெடுஞ் செழிய (ப்பாண்டிய)னின் அவையிற் சென்று கண்ணகி அரசனின் தவறினை யெடுத்துக் காட்ட உடனே அவன் இறக்க, அவன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டு எனும் பெண்மணியார் "தன்னுயிர் கொண்டவனுயிர் தேடினள் போற், பெருங் கோப்பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்' எனும் சிலப்பதிகார அடிகளால் அக்கணமே தன் உயிர் நீத்தாள் எனத் தெரிகிறது. இப்பெண்மணியினை தலைக்கற்பினளெனச் சாற்றுவர். அரசன் பூதபாண்டியன் இறக்க அவன் மனைவி பெருங் கோப் பெண்டு தீப்பாய முயல்கையில் தன்னைவிலக்கிய பெரியார்களைப்பார்த்து.

"பல்சான்றீரே பல்சான்றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென
[விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே
யணில் வரிக் கொடுங்கால் வாள் போழ்ந்
[திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப் பெய்தட்ட
வேளை வெந்தை வல்சியாகப்
பாற் பெய் பள்ளிப் பாயின்று வதியும்
உயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங் காட்டுப் பண்ணிய
[கருங்கோட்டீம
நமக்கரி தாகுகதில்ல வெமக்கம்
பெருந் தோட் கணவன் மாய்ந்தென
[வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே"

(இதன் சாரம்:—பல சான்றோர்களே, பல சான்றோர்களே. [தீப்பாயச்] செல்க என்று சொல்லாது [தீப்பாய்தலை] விட்டுவிடு என்னும் பொல்லாத சூழ்ச்சியுடையபல சான்றோர்களே! வாளால் அறுக்கப்பட்ட அணில் போன்ற வரியை யுடைய வளைந்த வெள்ளரிக்காயின் விதைபோன்ற நல்ல வெண்மையான மணக்கும் நெய் கலவாது இலைகளூடே கிடந்த கையாற் பிழிந்துவைக்கப்பட்ட சோற்றுத் திரளினை வெள்ளை எள்த்துவையலோடும்புளிச்சேர்த்து, சமைக்கப்பட்ட வெந்த வேளைக் கீரையோடும் உணவாக்கொண்டு பருக்கைக் கற்கள்மேல் பாய் இல்லாமல் துயின்று வருந்தும் பெண்கள் யாங்களல்ல. பெருமை பொருந்திய தோளினையடைய கணவர் இறந்தாராக அவரினும் அரிதாயது எமக் கொன்று மில்லையாதலால் அரும்பில்லாத கூர்மையான இதழ் விரிந்த தாமரை பொருந்திய பெரிய தடாகமும் சுடுகாட்டில் அடுக்கிய கரிய விறகுகளில் கொளுத்தப் பெற்ற தீயும் எமக்கு ஒரு தன்மையையுடையதே.)

என்று கூறுவதாகப் புறநானூறு புகல்கிறது. இப்பெண்மணியினை இடைக்கற்பினள் என இயம்புவர். இக்கூற்றால் கைம்மை நோன்புநோற்போர்எள்துவையல், வேளைக்கீரை பழங்கஞ்சி,இவைகளை உணவாகக் கொண்டு பருக்கைக் கற்கள்மேல் நித்திரைசெய்வார்களெனத் தெரிகிறது. கைம்மை நோன்பு நோற்ற பெண்மணிகள் மாதவி, குந்தி, இவர்களைக் கடைக்கற்பினர் என்பர். அறக்கற்பினர் மறக்கற்பினர் எனவும் சிலர் பாகுபாடு செய்துள்ளனர். இவ்வாறே ஒழுக்கங்குறித்தும் பிறன்மனை விழையாமை, அயல் மாதரை விரும்பாமை குறித்தும் ஆண்கட்குக் கூறப்பெற்றுள தெனினும் தன் தாரம் உயிர் நீக்கத் தானும் சாற்றரிய அன்பினால் உயிர் நீத்த சான்றோனையாயினும், உடன் கட்டையேறிய உத்தமனை யாயினும், வைதவ்யம் அநுட்டிக்கும் வைராக்கிய சீலனையாயினும் ஓரிடத்துங் கண்டோ மில்லை. ஆடவரின் அன்பின்திறன்! பெண்கள் உடன்கட்டையேறும் பழக்கம் பன்னெடுங்காலம் தோன்றியும் மறைந்தும் இருந்து வந்திருக்கிறது. வட நாட்டில் (இந்தியாவில்) இதனை மிகுந்த மும்முரமாக அநுஷ்டித்து இஷ்டமில்லாத 15 வயதுச் சிறிய பெண்களைக்கூட பாரித்து எழும்புந்தீயில் பலாத்காரமாகத்தூக்கிப் போட்டுப் பலியிட்டிருக்கின்றனர். சிலவிடங்களில் இவ்விதவைப் பெண்களை உயிருடன் புதைத்திருக்கின்றனர் இக்கொடுமைகளைப் பார்க்கச் சகிக்காத ஸ்ரீ ராஜாராம்மோகன்ராய் சதிப்பழக்கத்தை (உடன்கட்டை யேறுதலை) அடியோடு ஒழித்தற்குச் சட்டஞ் செய்தல் வேண்டுமென்று பல்லாற்றானும் முயன்றார். அக்பர் சில சட்டதிட்டங்கள் செய்தும் அவை மதப் பரிவு காரணமாக அலக்ஷியஞ் செய்யப்பெற்றன. பின்னர் 1829-ம் ஆண்டில் லார்ட் வில்லியம் பெண்டிங்க் வைசிராயாயிருந்த காலத்தில் இச்சதியினை ஒழிக்குமாறு சட்டம் செய்யப்பெற்றது. அதற்குச் சதிவிலக்குச் சட்டம்என்று பெயர்சூட்டினர் (The Prohibition of Suttee) இந்தியவிதவைகள் உயிருடன் தீக்கொளுத்தப் பெறுதலோ அன்றி புதைக்கப்பெறுதலோசட்டவிரோதமானதும்கிரிமினல் கோர்ட்டுகளினால் தண்டிக்கப்பெறுவதுமாயிருக்கிறது" என அச்சட்டத்தில் கண்டனர் (O.S. History of India by V A. Smith) இதனை யெதிர்த்துப் பெரிதும் போராடி மகஜரும் தூதுக் கோஷ்டியும் வங்காளத்தார் அனுப்பியும் சதி விலக்கு மசோதாவை ஒழித்தற்கியலாது போயிற்று. சட்டத்திற் கஞ்சிச் சதியும் தலை தப்பியது தம்பிரான் புண்ணியமென அடியோ டொழிந்தது. உடன்கட்டை யேறினாற்றான் உய்யலாம் என்ற எண்ணமும் செயலும் எங்கு போயிற்றோ ? நண்பர்களே! சட்டத்திற்கு முன்னால் பதி பக்தி (பலாத்காரப் பக்தி)யும் மோக்ஷமும் பட்ட பாட்டைப் பார்மின்.

இனிப், பின் வந்த நூல்களில் விதவையர் (தலை) மயிருடனிருத்தலும், பாயிற் படுத்தலும், ஆபரணங்களணிதலும் ஒரு வேளைக்குமேல் (பகலில் மட்டும்) உண்ணலும் ஆகாவென்று விதிக்கப் பெற்றிருக்கிறது. பட்டுச் சேலை-கலர்ச் சேலையை நீக்கி வெள்ளைச் சேலை தான் கட்டுதல் வேண்டுமென்று எவர் விதித்தனரோ ? பெரியீரே! தாரமிழந்த ஆடவர்கட்கும் இவ்விதிகளை ஒத்த மாறுதலுடன் விதித்தால் எத்தனை பெயர் இதனை அநுஷ்டிப்பரோ ? மொட்டைத் தலையாயிருத்தற்கும் வெள்ளுடையை நீக்கிக் கருப்புடையைத் தரித்தற்கும் ஒரு நாளைக்கு (எழு வேளை எப்பமிடுந்தற்காலம்) ஒரு வேளை உண்ணுதற்கும், அன்றி முன் கூறிய எள் துவையல், வேளைக் கீரையுடன் கஞ்சியையே குடிப்பதற்கும் எந்த ஆடவன் மன மிசைவான்? சிறிது கவனம் செலுத்தி ஆலோசித்துப் பார்மின் !

தனது கணவனை யிழந்த துக்கத்தோடு தான் பட்டு உடுத்திப் பொட்டு வைத்து நகையும் இனி யணிய வியலாதே எனும் துயரமும் ஒருங்கு சேரத், தன் முகத்தைக் குப்புறச் சாய்த்து அன்னமுந் தண்ணீரும் அருந்தாத பெண்ணைப் பார்த்து "பட்டுடுத்திப் பொட்டு வைக்கப் பாக்கியமுஞ் சேபலியே, மயிருராம் பட்டுடுத்த மாதவசு சேபலியே" என்று உற்றார் அழப் பெருங் குரலோச்சி ஒப்பாரியிட்டு அழுதழுது முகம் வீங்கி யிருக்கும் துன்ப உருவினையுடைய பெண்ணை நாற்கால் பந்தலுக்குள் இருத்தி வைத்துப் பட்டுச் சேலையைக் களைந்து வெள்ளைச் சேலையை உடுத்தி, கழுத்துரு வெனும் மாங்கல்யத்தையும் அவிழ்த்து எடுத்துக் கொள்ளும் ஒரு காட்சியை அஞ்ஞான்று அப் பெண்ணின் பிரலாபத்தை-நங்கையின் நரகவேதனையை--சகோதரர்களே--தெரிற்

காணும் நம் மனம்படும் பாட்டை ஆயிரம் நாவைப்படைத்த ஆதி சேடனாலும் உரைத்தற் கரியதே! கல் மனமும் கரைந்துருகக் காணும் காட்சி-இதனினும் உயர்ந்தது-வேறு எது உளதென்று யாமறியோம். உயிர்க்கொலையாயினும் செய்த அந்நிமிடத்தில் பெருந் திகிலையும் உடல் நடுக்கத்தையும் பரிதாபத்தையும் உண்டாக்கி விரைவில் மறைந்து விடும். விதவையரின் சித்திரவதையோ-வெற்றுடம்பு தாங்கிய தன்மையோ விரித்தற்குக் கொடிது. இவர் தமது பெற்றோர்-சகோதரர்-உற்றோர்-அயலார், சதிபதிகள் பேசிக்கொள்ளும் பிரிய வசனங்களைக் கேட்கும் பொழுதும், அன்பு மொழிகளைக் கூறும் பொழுதும் தமது கதியை நினைந்து மீளா நரகத்தில் வீழ்ந்துவிட்டதையெண்ணியெண்ணி இரத்தக் கண்ணீர் வடிக்கின்றனரே! இப்படி யிவர்க் கேற்படுந் துயர் போதாதென்று நாம் வியாபாரத்திற்குச் சென்றாலும் வெளியூருக்குச் சென்றாலும் ஏன்-சீட்டாடச் சென்றாலும் கூட விதவையரைக் காணிற் சகுனத்தடையென்று நினைக்கும் கொடும் பழக்கத்தையும், மற்றவர்இந்த——இச்சமயம் எங்கிருந்துமுளைத்தாள் எனப் பேசும் அவதூறையும்கேட்டு நைந்துருகிப் புலம்புகின்றனரே!

"காமசாகர மதனைக் கடக்க வல்லவர் சிறு மானிடரேயோ"? மனிதர் தமது வாழ்க்கையில் காமக் கடலைத் தாண்டுவதற்கு-ஆடவர் பெண்டிரையும், பெண்டிர் ஆடவரையும் துணைப்படுத்தி மீகாமராகக்கொண்டு அன்பினைக் கலனாக்கி இன்பம் எனும் இயந்திரத்தைச் சுற்றிச் செலுத்த வேண்டியதிருக்கிறது. துணைவரிழந்த பெண்டிராயினும் ஆடவராயினும் சமூகச் சட்டதிட்டங்கட்குஉட்பட்டுப் பயந்து மானத்திற்கஞ்சி வாழினும் இயற்கையை-காம இச்சையை-அவர்கள் அடக்கி வென்று-சித்தி பெறுவது மிக வருமையே. மனிதர் மாதத்திற்கிரண்டுவிசை தேக சம்பந்தம் செய்தல் வேண்டுமென்று நூல்கள் கூறுகின்றன. அன்றிக்கட்டுப்பாடாகஇருப்பினும் 30 தினங்கட்கு மேல் அல்லது முன் பின்னுகசக்திதானே வெளிப்படுகின்றதென்பது ஆண் பெண்இருபாலாருக்கு முரிய இயற்கையென்றுகூறப் பிரத்யக்ஷம். காமத்தைத் தணிப்பதற்கு ஒழுங்கான பிராணாயமும் ஆகார நியமும் தூய-தனித்த வாழ்வும் அடயோகப் பயில்வும் அனைவரும் அனுஷ்டித்தல் சாத்தியமா? மனைவியில்லாத மாந்தர்—வாலிபர்—ஒழுக்கமுள்ளாரா யிருப்பதற்கு முயன்றும் இயற்கையை வெல்ல வியலாது வழுக்கிவிழுந்தசகோதரிகளின் வீடுகளை நோக்குகின்றனரென்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆண்களைக்காட்டினும் பெண்கட்கு அதிகமான காமம்உளதென்று நூல்கள் நுவல்கின்றபடியால் பெண்களின் நிலையிலிருந்து இதனை நோக்குவோமாயின் அது மிகச் சீர்கேட்டிற்கு உரியதாகு மன்றோ?

அறுபது வயது ஆடவர். பல்லெல்லாம் மீண்டும் முளைக்கப் பார்க்கின்றன. தன்மனைவி யிறந்த அன்றே வேறு எப்பெண்ணை மணக்கலாமென ஆலோசிக்கின்றார். அரும்பாடு படுகின்றார். இருபது வயதுக் குமரி. கணவன் இறந்துவிட்டான். பிள்ளை இனிமேல்த்தான்! என் செய்வாள்? என் தலைவிதி இப்படியாயிற்றென்று அழுவள். விளையாட்டு வயதில் விவாகத்தைச் செய்து கணவன் இறந்தபின் பருவமடையும் இளங்கையர் அடையும் இன்னல் இயம்புதற்கியலுமோ? "கொடியது" பாடிய ஒளவைப் பிராட்டியார் இன்றிருப்பாராயின் 5-ஆம் வரியாக 'அதனினுங் கொடிதே விதவையர் துயரம்'', என்றும், 6. ஆம் வரியாக அதனினுங் கொடிதே "இளமையிற் கைம்மை" என்றும் பாடியிருப்பர். பதின் மூன்றுண்டுப் பாலகி சாகும் வரை கைம்மை நோற்பது போன்று பதின் மூன்றுண்டுப் பாலகன் சாகும் வரையும் அவளை நினைந்து-மறு பிறவியிலாயினும் அப் பெண்மணியையடையக் கைம்மை நோன்பு நோற்பானா?

மருவிய காதல் மணவாளன் இறக்க, நாயகனின வாழ்நாளில் நன்மையுந் தீமையும் ஒருங்கு துய்த்த நாயகி தனக்கு வாழ் நாட் செலவு (ஜீவனும்ஸம்) மட்டும் கொடுத்து மற்றையவற்றை வெளவிக் கொள்ளும் கொடுமையை என்னென்போம். இதை விரிக்கின் மற்றுமோர் அத்தியாயம் ஆகும். இதனையொழித்துப் புருடன் இறந்த பின் அவனின் எல்லாச் சொத்துக்களும் மனைவிக்கே யுரியவை என்று ஸ்ரீமான் ஹரிவிலாஸ சாரதா அவர்களால் 3 ஆண்டுகட்கு முன் (Widows' inheritance Bill) விதவையர் சொத்துரிமை மசோதா சட்டசபையிற் கொண்டுவரப் பெற்றது. இம்மசோதா அமரநாத தத்தராலும் வைதீக மெம்பர்களாலும் ஆக்ஷேபிக்கப்பெற்றுஆலோசனைக்கமிட்டியாரின்ஆலோசனையில் அறிதுயிலில் அமர்ந்து வருகிறது.

விதவையரின் விமோசனம்.

விதவையரின் துயரம் ஒழிய வேண்டுமெனில், ஆண் மகனைப் பார்க்கும் அக்கண்ணாலேயே பெண் மகளையும் பார்த்து, அவ் விதவையரை, இல்லற இன்பத்தை மீண்டும் துய்க்க விரும்பும் அம்மெல்லியலாரை மறுமணஞ் செய்வித்தல்வேண்டும். சாஸ்திரம் இடங்கொடுக்கவில்லை பில்லையென்று பொய்மைக் காரணம் கூறும் ஆடவர் மற்றைத் தம்முடைய களியாதிகளில் சாஸ்திரத்திலிருந்து அணுவளவும் வழுவாது நடத்தி வருவதாக நெஞ்சிற் கைவைத்துச் சொல்லுவரா? கணவன் இறந்துவிட்டாலும், தீராப் பைத்தியம் கொண்டாலும், அந்நிய நாடுசென்றுபல்லாண்டுகள் திரும்பிவாராவிடினும்பெண்கள் மறுமணஞ் செய்துகொள்ளலாமெனப் "பாராசரஸ்மிருதி" பகர்கிறதாம். தனவைசியப் பெரியோரே!

சகோதரர்களே!!

விதவையர் படும் அவதியும், விதவையர்ப் பெருக்கமும், விதவையரை மாமியார் வீட்டார் படுத்திவைக்கும் பாடும் நமது சமூகத்தில் அதிகமாகக் காணப்பெறுகிறதென்பதில் எட்டுணையும் ஐயமின்று. உங்கள் அருந்தவப்புதல்விகள், செல்வச் சிறுமிகள் பதினைந்து ஆண்டுகட்குள், ஏன்? பருவமாகாததற்கு முன்னுங் கூட கணவரையிழந்து "தாலியறுத்து" வீட்டினுள் கிடந்து குமுறிக் குமுறி விம்மி விம்மி யழுஞ் சத்தம் உங்கள் காதிற் கேட்கவில்லையா? ஊர் மெச்ச ஒப்பாரி வைத்து விட்டால் அத்துடன் அவர்கள் துயரம், மனவெழுச்சி அடங்கிவிடுமா? பாருங்கள்! அப்பெண்மணிகளெல்லாம் மறுமணஞ் செய்யப் பெறின் அவர் "பட்டுடுத்திப் பொட்டு வைத்துப் பணிதிபூண்டு" இல்லறத்தினை முன்னைக் காட்டிலும் நன்கு நடாத்தி இன்பம் பெறுவரென்பதும் "இன்னடிசிற் புக்களையுந் தாமரைக்கைப்பூ நாறுஞ் செய்ய வாய் மக்களை" யீன்றெடுப்பரென்பதும், அதனால் ஐம்பதினாயிரம் மக்களையும் காணப்பெறாதஎமது தனவணிகத்தாய் இலக்ஷக்கணக்கான மக்களைப்பெற்றெடுத்துச் சஞ்சலம் நீங்கிச்சந்தோஷமுறுவாளென்பதும் பெறப்படுகின்ற தன்றோ? ஏழையராம் இவர் அழுங் கண்ணீர் நமது சமூகத்தில் கூரிய வாளாயிருந்துவருகின்றது. இல்லறவாழ்விலாசைகொண்ட இளம்பூங் கொடிகள் தமக்குமனமிசைந்த கணவராய் இன்பமார்தரு நல்லியல்பு வாய்ந்தோரை மணந்து என்றும் இன்பமே எய்தும் நன்னாள் பொன்னெழுத்தால் பொறிக்கப் பெறும் நாள்.

கணவரையிழந்து கலக்கமெய்தும் சகோதரிகளே!


மூலையிலிருந்துமுக்காடிட்டு அழுது அழுது எலும்புக் கூடுபோன்ற உடலினைத்தாங்கி உயிர் வாழ்வதை விட்டு முக்காட்டையெடுத்தெறிந்து உங்கட்குஎல்லாவற்றானும் இசைந்த காதலரையடைந்து மறுமணஞ் செய்துகொண்டு மகிழ்வீர்களாக! மறுமணஞ் செய்துகொள்ளும் வாழ்க்கை நலம்பெற இறைவன் திருவருளினையிறைஞ்சுகின்றோம். விதவா விவாகச் சங்கங்கள்வாழ்க! விதைவையரை மணக்கும் விவேகிகள் வாழ்க!

"மாதர்தம்மை யிழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்."

(பாரதியார்)


———

சுவேதகான் பயாவின் ஸ்தூபி.




இரங்கூனிலுள்ள மிகப்பிரபலபமான ஸ்வேதகான் பயாவிலுள்ள, நவரத்தினங்கள் இழைக்கப்பெற்ற அழகிய ஸ்தூபி.


பர்மா நகரத்தார் கோவில்கள்.




பியாட்டம் மடம்.



ஜைடபி மடம்.




ஜைடபி கோவில்




போக்கலே கோவில்.


பர்மா நகரத்தார் கோவில்கள்.



டாசீன் கோவில்.



டாசீன மடம்.



பியாட்பம் கோவில்.

நமது நோய்

திரு. போ. திருகூடசுந்தரம் எம். ஏ., பி. எல்.

1 வாழ்வின் லட்சியம்

மனித வாழ்வின் லட்சியம் யாது? உலகில் அடையவிரும்பி ஒவ்வொருவரும் தேடுவது எது? ஒருவன் இதுவே என் இலக்கு, இதைப் பெற்றுவிட்டால் என வாழ்வின் பயனை அடைந்தவனாவேன் என்று ஒரு வஸ்துவைக் குறிப்பிடுகின்றான். மற்றொருவன் அதுபோலவே வேறொரு வஸ்துவைக் காட்டுகின்றான். மனிதர் யாவரும் தங்கள் கருத்திற்கேற்பப் பல்வேறு பொருள்களைத் தங்கள் லட்சியங்களாகப் பகர்வர். ஆனால் விஷயத்தைச் சிறிது நிதானித்து ஆராய்வோமானால் மனித வாழ்வின் குறிக்கோள் மனிதர்க்கு மனிதர் வேறுவேறாய் நிற்கவில்லை என்பதையும் வாழ்வின் லட்சியம் அனைவர்க்கும் ஒன்றே என்பதையும் அறியலாகும். மக்கள் வஸ்துக்களைத் தேடுவது வ்ஸ்துக்களுக்காக அன்று. வஸ்துக்கள் அளிக்குமென்று கனவு காணும் இன்பத்திற்காகவே. அதனால் எல்லோரும் விழைவது இன்பம் ஒன்றே. அதுவேமதை வாழ்வின் லட்சியம்.

2 அதற்குரிய சாதனம்.

இந்த இன்ப லட்சியத்தைப் பெறுவது எங்ஙனம்? இதை அடைவதற்கு அமைந்த சாதனம் யாது? எதுஇருந்தால்இன்பம் ஏற்படும்? பூவுலகம் முழுவதற்கும் பொதுநீதி புகன்றருளும் புண்ணிய மூர்த்தியாகிய திருவள்ளுவதேவர்,

"அருளில்லார்க் கவ்வுலகமில்லை பொருளில்லார்க், கிவ்வுலக மில்லா கியாங்கு,

என்று கூறுவதால் பொருளுடையவரே பூமியில் இன்பம் காண்பார்; பொருளில்லாதவர் துனபமே அநுபவிப்பார் என்பது விளங்கும். அதனால் ஐஸ்வரியமே ஆனந்த வாழ்விற்கு அஸ்திவாரம். தனமே சந்தோஷ வாழ்விற்குச் சாதனம்.

3 நமது நிலைமை

கைலாச மலைமுதல் கன்னியா குமரி வரை அகன்றுபரந்து கிடக்கும் இப்பாத கண்டத்தில் முப்பத்தைந்து கோடி ஜனங்கள் வசிக்கின்றனர். இவர்கள் நிலைமை யாது? இவர்கள் வாழ்வுஇன்பமயமானதா? அல்லது துன்பமயமானதா? இக் கேள்விக்குச் சரியான விடையளிக்க இம் முப்பத்தைந்துகோடி மக்களில் ஒவ்வொருவரிடமும் சென்று அவர் வாழ்வு குறித்து வினவி விசாரிக்கவேண்டிய அவசியமில்லை. ஒரு நாட்டின் க்ஷேமத்தை அறிய தனிப்பெருஞ் சோதனை யொன்றை வைத்திய நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். சில வருஷங்கட்குள் சென்னை அரசாங்கத்தில் ஆரோக்ய இலாக்கா அத்யட்சராயிருந்தகர்னல்ரஸ்ஸல்

'சிசுமரண விகிதத்தைக் கொண்டு தேசத்தின் க்ஷேமத்தை அளந்து விடலாம். ஆண்டு நிறைவதற்குள குழந்தைகள் அந்தகனுலகு செல்லுவது சகஜம். ஆனால் ஆயிரம் குழந்தைகள் பிறந்தால் அப்படி இறக்கும் குழந்தைகளின் தொகை எழுபத்தைந்துக்கு மேல் போகலாகாது. அதிகப்பட்டால் அந்த தேசம் க்ஷேமம் உடையதன்று—"


என்று கூறுகின்றார். அப்படியானால் நம் இந்திய நாட்டின் சிசுமரண விகிதம் என்ன? பிறக்கும் குழந்தைகளில் வருஷம் முடியுமுன் மரிப்பவை எத்தனை? ஆயிரத்திற்கு எழுபத்தைந்தா அல்லது அதிகமா? எழுபத்தைந்து அன்று. இருநூறும் எழுபத்தைந்துமாகும். அந்தோ! இதுவே நமது க்ஷேம நிலைமை.

4-இதற்குக் காரணம்

இங்ஙனம் க்ஷேமம் அழிந்து இன்னலுற்று நிற்பதற்குக் காரணம் என்ன? சிசுமரண மிகுதிக்குப் பல காரணங்கள் இருப்பினும் வறுமையே அவைகளில் பிரதானமானது என்று விஷயமறிந்த பெரியோர் அனைவரும் மொழிகின்றனர். கர்னல் ரஸ்ஸல் துரையின் அபிப்பிராயமும் அதுவே. பிரசவத்திற்கு முன்பும் பின்பும் தாய்க்குப் போதுமான போஷணையுள்ள ஆகாரம் முதலிய ஆரோக்கிய வசதிகள் கிடைப்பதில்லை. அதற்குக் காரணம் வறுமை. அதன் பயன் குழந்தைகளின் அகாலமரணம்.

5 அளவு நோய்

இந்தியர் வறிஞர் என்று இயம்புகின்றோம். ஆனால் வறுமை இந்த நாட்டில் மட்டுந்தானா? இல்லை. எல்லாநாடுகளிலும் உண்டு. ஐஸ்வர்யம் மிகுந்த ஆங்கிலநாட்டிலும் தரித்திரர் இல்லாமலில்லை. அங்கும் ஏழைகளின் அழுகுரல் எழும்பவே செய்கிறது. ஆனால் உலகிலுள்ள தேசங்களிலெல்லாம் இந்தியாவே பரமதரித்திர நாடு. வறுமை அதிகம்



என்று கூறினால் மட்டும் போதாது. அது பொறுக்க முடியாத அளவுடையது என்றும் கூறவேண்டியதாகும்.

"இந்தியர் எல்லோரையும்போல் சௌகர்யமாய் வாழவேண்டாம். உயிர் உடலை விட்டு நீங்காதிருந்தால் போதும். ஆனால் அதற்குக் கூடப் போதுமான பணம் அவர்களிடம் இல்லை"

என்ற மிஸ்டர் லில்லி என்னும் மேனாட்டுப் பெரியார் ஒருவர் கூறுவதைக் கவனிக்க.

6 நோயின் அளவுகோல்

இந்தியர் தரித்திரர். அவர் தரித்திரம் தாங்க முடியாத அளவுடையது என்று பொதுவாகக் கூறிவிட்டால் போதுமோ? அவர் வறுமையை அளந்து கூறமுடியுமோ? சுரம் என்று பொதுவாகக் கூறாமல், சூடு இத்தனை "டிக்ரி" என்று வைத்தியர் கூறுவதுபோல் வறுமையின் டிக்ரியையும் கூற வேண்டாமோ? கூறலாம். அதற்குப்பல வழிகள் உள. விரிக்கிற் பெருகுமாதலால் ஒன்று மட்டுங் கூறுவேன். உலகில் பல நாடுகள் உள. ஒவ்வொரு நாட்டிலும்பல கோடி மக்கள் உளர். அவர்கள் அனைவரும் அனுதினமும் பல்வேறுதொழில்கள் செய்து பணம் தேடிக் கொண்டேயிருக்கின்றனர். ஆனால் அவர்கள் அனைவர்க்கும் கிடைக்கும் ஊதியம் ஒரே அளவுடையதன்று. தினந்தோறும் பதினாயிரக் கணக்காய் பணம் பெறுபவரும் உளர். பத்துக்காசுகூட பார்க்கமுடியாது பரிதவிப்பவரும் உளர். ஆயினும் இவர்கள் எல்லோருடைய வருவாயும் கூட்டி வகுத்து சராசரி வருமானம் காண்பது அர்த்த சாஸ்திர நிபுணர் வழக்கம். அங்ஙனம் அவர் ஒவ்வொரு நாட்டிலும் தனி மனிதன் ஒருவனுடைய தினசரி சராசரி வருமானம் இதுவென்று கணித்திருப்பதை இந்தியருடைய அத்தகைய வருமானத்தோடு ஒத்துப்பார்ப்பதே இந்திய வறுமை சுரத்தை அளந்தறியுங் கருவிகளில் ஒன்று. மேல் நாடுகளில் இரண்டு ரூபாய்க்குக் குறைந்த தினசரி சராசரி வருமானம் காண முடியாது. கீழ் நாடுகளில் அரை ரூபாய்க்குக் குறைவில்லை. ஆனால் நமது நாட்டிலோ இரண்டணாக்கூடக் கிடைப்பதில்லை. கிடைப்பதெல்லாம் ஒரு அணா எழு பைசாவே. இந்திய தரித்திர சுரத்திற் தழல் டிக்ரி இதுவே என்று எண்ணிவிடற்க. இந்திய மகாஜனங்களிலும் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் தினசரி வருமானமாக உடையோர் இல்லாமலில்லை. அதனால் தினசரி சராசரி வருமானம் ஒன்றே முக்காலணாவிற்கும் குறைவாகுமானால் எத்தனை கோடி மக்கள் அதுவும் காணக்கிடையாது தவிப்பவர் என்பது கூறாமலே விளங்குமன்றோ?

7. நோயின் விளைவுகள்.

இவ்வளவு அதிக தரித்திர நிலைமையில் இருப்பதால் இந்திய மக்கட்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் ஏராளமாகும். மனிதர்க்கும்இதர ஜீவராசிகட்கும் வேறுபாடுண்டு. இதர ஜீவராசிகள் உடல் வாழ்வு ஒன்றே அறியும். மனிதன் மட்டுமே உடல் வாழ்வோடு உயிர் வாழ்வும் உணர்வான். இவ்விரு வாழ்விற்கும் வேண்டிய சாதனங்கள் பல. இந்தியர்க்கு உயிர் வாழ்விற்குரிய வசதிகள் கிடையாவிடினும் உடல் வாழ்விற்குரிய வசதியேனும் கிடைக்கவேண்டாமோ? உடல் வாழ்வினும் உயிர் வாழ்வே சிறந்தது. ஆனால் உயிர்க்கு உடலே சாதனம் என்பதை மறவற்க. சுவரை வைத்துத்தானே சித்திரம் எழுதவேண்டும்? இந்திய மக்களின் உடற் சுவரை வைக்க உணவு-உடை-உறையுள் மூன்றும் போதிய அளவு கிடைக்கின்றதோ?

போதுமான உணவில்லை. உண்பது நாழி உடுப்பது நான்குமுழம் என்பது நமது முன்னோர் ஆசாரம். ஆனால் இக்காலத்தில் நாள்தோறும் உண்ண நாழி கிடைப்பவர் எத்தனை பேர்? இந்திய ஜனங்களில் ஐந்தில் ஒரு பகுதியினர்-அதாவது ஏழு கோடி பேர் வருஷத்தில் ஒரு வேளையாவது வயிறு நிறையப் புசிப்பதற்கிலர் என்று ஸர் வில்லியம் ஹாண்டர் துரை கூறுகின்றார். ஏழைகள் "உணவு உண்டோம்" என்று உரையாமல் "கஞ்சி குடித்தோம்" என்று சொல்வதைக் கவனித்தால் ஹாண்டர் துரையின் கூற்றின் உண்மை விளங்கும்.

உயிரைக் காக்கும் உணவிலும் மானத்தைக் காக்கும் உடையேனும் உண்டோ? அதுவுமில்லை. சில வருஷங்கட்கு முன்னர் வடக்கே அலகாபாத் நகரத்தில் டிப்டி கமிஷனராயிருந்த மிஸ்டர் ஹாலோய் நமது

மாபெருந்தலைவர் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு எழுதிய கடிதமொன்றில்

"இந்திய நாட்டில் பலர்கந்தையையே உடுத்திருக்கின்றனர். அதுவுங்கூட மானத்தைக்காப்பதற்கு வேண்டிய அளவில்லை."

என்று கூறி வருந்துகின்றார். ஆமாம். ஏழை ஆண் மக்கட்குக் கிடைக்கும் உடை கௌபீனம் ஒன்றே. போர்த்திக்கொள்ளப்போர்வையொன்று கிடைக்கப் பெற்றவன்போன ஜன்மத்தில் புண்ணியஞ் செய்தவன். ஏழைப் பெண்கள் ஏழெட்டு முழக்கந்தை கிடைக்குமானால் இகத்தில் பரத்தைக் கண்டவளாவாள். ஐயோ! மானங்காக்கத் துணியில்லாது மரித்துவிடக் கழுத்தில் கயிறுபோடத் துணியும் பெண்களைக் கேட்டதில்லையோ?

உண்ண உணவில்லை, உடுக்க உடையில்லை. சரி, இருக்க இடமுண்டோ அதுவுமில்லை. குருவிக்குக் கூடுண்டு; புலிக்குக் குகையுண்டு; எலிக்கு வளையுண்டு; நாய்க்கு மடியுண்டு; ஆனால் இந்திய ஏழை இவற்றினும் இழிந்தவன் அல்லனோ? பரம தரித்திரனான பன்றிக்குறவன் வீடு பார்த்திருக்கிறீர்களோ? இல்லையானால் போய்ப் பாருங்கள். அங்கு பாரததேவியின் பாலர் படும்பாடு பார்க்கலாம். ஒருமுழ மண்சுவர். நாலடிக்கூரையுள்ள இரண்டு குடில்கள். ஒரே அளவுடையன. ஒன்று குறவன் மனைவி மக்களோடு வசிக்கும் மாளிகை. மற்றொன்று அவன் பன்றி தன் குட்டிகளோடு சயனிக்கும் பள்ளியறை. பன்றி தங்குடில் முழுவதிலும் படுத்துறங்கலாம். ஆனால் குறவன் தங்குடிலில் சமயல் செய்யவும் வேண்டும், சட்டி பானைகள் வைத்துக்கொள்ளவும் வேண்டும். ஆகவே பன்றியிலும் தாழ்ந்தவன் பன்றியின் எஜமானன்.

"இத்தகையமாங்குடிசைக்கட்டிடங்களே இந்திய நாட்டுக் கிராமங்கள்"

என்று அரசாங்க உத்தியோகஸ்தர் மிஸ்டர் கோட்டின் துரை கூறுகின்றார்.

8-ஆகவே அபாயகரமான நிலைமை

ஆண்டு தோறும் அரசாங்கத்தார் இந்திய தேசத்தின் நிலைமையைக் குறித்து "இந்தியா" என்னும் பெயரால் ஒரு விளக்கநூல் வெளியிடுகின்றார். இரண்டு வருடங்கட்கு முன் வெளிவந்த நூலில்

"இந்திய மகா ஜனங்களில் பெரும் பாலோர் அபாயகரமான வறுமையில் ஆழ்ந்து கிடக்கின்றனர்"

என்று பொருள்படும் வரிகள் காணப்படுகின்றன. வறுமை என்றும் அது அதிகம் என்றும் கூறினோம். இவர் அபாயகரமானது என்று கூறுகின்றார். அதன் பொருள் யாது? ஒருவர் நோயால் வருந்துகின்றார்; வைத்தியர் வந்து பார்த்து அபாயகரமான நிலைமை என்று மொழிந்தால் உடனே நாம் நோயாளி வெகு சீக்கிரம் இறந்து விடலாம் என்று தீர்மானிக்கின்றோம். அதுபோல் தான் நமது வறுமையின் அபாயத்தன்மையும். 'வறுமை அளவு கடந்து முதிர்ந்து விட்டது. விஷம் தலைக்கேறிவிட்டது. உடனே சரியான சிகிச்சை செய்யாவிட்டால் நாடு நாசமாய்ப்போகும். போன இடத்தில் புல் முளைத்துவிடலாம் என்று அறிய வேண்டும்.

9-நாளுக்கு நாள் அதிகம்

அம்மட்டோ? வைத்தியர் அபாயகரமான நிலைமை என்று கூறிவிட்டார். அபாயத்தை அகற்ற சிகிச்சைசெய்யக்காணோம். அபாயம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போகின்றது. பம்பாய் சர்வகலாசாலையில் அர்த்த சாஸ்திர நிபுணராக இருக்கும் மிஸ்டர் ஸி. என். வக்கீல் என்பவர்

"நாளுக்கு நாள் வறுமை அதிகம். நாற்பது வருடங்கட்குமுன் நமது வருமானம் எழு ரூபாயானால் இப்பொழுது அது ஐந்து ரூபாயே"

என்று கணிக்கின்றார். ஆகவே இந்திய மகாஜனங்களின் வறுமைநோயை நீக்க இனி ஒரு கணமேனும் தாமதித்தலாகாது. நோய் நீக்குவதைக் குறித்து வள்ளுவர்

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும், வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்று முறை வகுத்தனர். இந்திய மக்களின் நோய் வறுமை என்று கண்டுகொண்டோம். ஆனால் நோயை அறிந்தவுடனே நோயின் காரணத்தை அறிந்துவிட இயலாது. நோய்கள் இருவகைப்படும். ஒன்று கருவில் ஒட்டியவை; மற்றொன்று இடையில் ஏற்பட்டவை. கருவில் ஒட்டிய வியாதியைக் கடிவது கஷ்டம்.

10-எப்பொழுதுமே ஏழைகளா?

நம் நாட்டிற்குண்டாயுள்ள நோய் கருவில் ஒட்டியதா? இடையில் உண்டானதா? நமது நாட்டினரும் ஆதிமுதலே ஏழைகளா? அல்லது இப்பொழுதுதான் ஏழைகளா? சிலர் இந்தியர் எப்பொழுதுமே ஏழைகள் என்று செப்புகின்றனர். ஆனால் அதுபொய் என்று சரித்திரதேவி புகல்கின்றாள். இரண்டாயிரம்வருடங்கட்குமுன் இயற்றப்பட்ட தமிழ் நூல்களில் இந்நாட்டின் செல்வச்சிறப்பைப்பற்றிய குறிப்புகள் பல காணக்கிடக்கின்றன. ஒன்று மட்டும்கூறுவேன்.

முழங்குகடல் ஞாலமுழுதும் வரினும்
வழங்குதல் ஊவா.

வளத்தது தமிழ்நாடு என்பது ஒரு தமிழ்க் கவிஞரின் வாக்கு. ஆனால் இக்காலத்தில் சிலர் புராணங்கள் புரட்டு, இதிகாசங்கள் ஏமாற்று, புலவர் பொய்யர், கவிதை கட்டுங்கதை என்று புறக்கணிக்கத் தலைப்பட்டுளர். அதனால் அச்சான்றுகளை நீக்கி விடுவோம்.

இரண்டாயிரம் வருடங்கட்கு முன்னிருந்து நாளிதுவரை பல நாட்டினர் இந்தியாவிற்கு வந்து போயுளர். அவர்களில் பலர் தாம் கண்டதை எழுதி வைத்துளர். அவர்கள் பொய் கூறக் காரணம் எதுவும் கிடையாது. அவர்கள் அனைவரும் முன்னாலே நமது தேசம் பொன் விளையும் புண்ய பூமி என்று வானளாவப் புகழ்ந்துளர். கிரேக்க நாட்டு வீரன் அலெக்ஸாண்டர் நமது நாட்டுக்கு வருமுன் தம் படைகளிடம் நம் நாட்டைத் "தங்க மயமான இந்தியா" என்றுவர்ணித்து நம் நாட்டின்மீதுபடை யெடுக்கஆர்வம் ஊட்டினன் என்பதை அறியீர்களோ?

17-ம் நூற்றாண்டில் வந்துபோன ஆங்கில அறிஞர் மிஸ்டர் பிலிமோர்

"இந்தியா தன்னிடம்விளையும் உணவுப் பொருள்களைக்கொண்டு தன் மக்களுக்குப் போதிய உணவு கொடுத்ததுபோக மீதியைக்கொண்டு உலகத்தாரையும் ஊட்டுகின்றது."

என்று கூறுகின்றார். ஆம், பாரததேவி பாரனைத்திற்கும் பசிப்பிணி யாற்றும் பரமேஸ்வரியாவாள். இந்த வெள்ளையர் கூறுவதைத் தானே இரண்டாயிரம் வருஷங்கட்கு முன் எழுதிய தமிழ்க்கவியும் கூறுகின்றார்?

11 இடையில் ஏற்பட்டதே.

ஆகையால் நமது வறுமை புராதனமானதன்று. இடையில் விளைந்த ஒன்றே. அதனால் அதை நீக்கிவிட இயலும் என்பதில் ஐயுற வேண்டியதில்லை. இடையில் வந்ததானாலும் உடம்பில் ரத்த புஷ்டி இருந்தால் தானே நீக்க இயலும் என்று வினவலாம். நோயாளி அபாயகரமான நிலைமைக்கு வந்திருப்பினும், நாளுக்கு நாள் அபாயம் அதிகரித்துக் கொண்டிருப்பினும் நோய் நீக்குவதற்குரிய வசதிகள் இல்லாமலில்லை. மிஸ்டர் மோல்ஸ்வொர்த் என்னும் அறிஞர்

"கணக்கிட முடியாத களஞ்சியத்தில் மத்தியில் மைடாஸ்போல் வறுமையால் வாடி நிற்கின்றாள் இந்தியா"

என்று கூறுவது யான் புகல்வதை வலியுறுத்தும். நாட்டின் நிலவளம் நீர்வளம் இரண்டையும் யாரே கணக்கிட வல்லார்? ஜனங்களோ பெருந்தொகையினர். சோம்பேறிகளுமல்லர். பண்டைய சாமர்த்தியம் இன்றும் இருக்கவே செய்கின்றது. அதனால் முன்போல் செல்வம் பெற்று சிறப்பாயும் சந்தோஷமாயும் வாழ்தல் கூடும்.

'தனவணிகன்' வாசக நண்பர்களே! அதற்கு நாம் செய்ய வேண்டியது யாது? நம் அன்னைக்கு ஏற்பட்டுள்ள அபாய வறுமை நோயை அகற்றவல்ல அமிர்த சஞ்சீவி என்ன?

சங்க வாழ்க்கை

திரு. பெ. பெரி. சுப்பிரமணியச் செட்டியார்
(சிலோன் நாட்டுக்கோட்டைச் செட்டியார் சங்கக்காரியதரிசி)

உலகத்திலுள்ள எந்தப் பொருள்களும் தனித்தியங்குவன வல்ல. அவைகள் ஒன்றை ஒன்றுபற்றியே இயங்குகின்றன. இவ்வுண்மையைக் காணுவதற்கு நீண்ட ஆராய்ச்சி வேண்டுவதில்லை. தீ, காற்று, நீர், வெளி, மண் என்னும் ஐம்பூதங்களும் ஒன்றின் உதவிபெற்றே யற்றென்று இயங்குகின்றது. வளர்வன, பறப்பன, இருப்பன, நீர் வாழ்வன, நடப்பன போன்றஜீவராசிகளும் ஒன்றின் துணைபற்றியே இலங்குகின்றன, முற்றத்துறந்த முனிவர்கள் கூட "பிறவா இன்பம்" என்னும் ஒன்றைப் பின்பற்றியே நடக்கின்றார்கள். எல்லா நலன்களும் ஒருங்கே வாய்க்கப்பெற்று, ஆனந்தக் கடலில் மிதந்து கொண்டிருக்கும் ஒருபூமான் கூட பிறரின் உதவியை அநாவசியமென்று புறக்கணித்து விட முடியாத நிலையிலிருந்து கொண்டிருக்கிறான். அந்நியரைப் புறக்கணித்தாலும், பிறரை வெறுத்து ஒதுக்கினாலும் தனது இன்னுயிர்க் காதலியையும், ஆருயிர் மக்களையும் அவன் அன்போடு ஆதரிக்கின்றான். கடந்த ஞானியும் மறப்பரோ மக்கண்மேற்காதல்? என்பது முற்றும் உண்மையல்லவா? இம் முறையினை உணர்ந்தே பண்டு தொட்டு அறிஞர் ஒன்று கூடி வாழும் வாழ்க்கையை வற்புறுத்தி வருகின்றார்கள்.

நமது மூதாதையர் சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே உலகறிய இம்முறையை கடைப்பிடித்து ஒழுகினார்கள். அவ்வொழுக்கத்தால் அவர்கள் சீரிய வாழ்க்கையையும் உயர்ந்த புகழையும் ஒருங்கேதேடிக் கொண்டார்கள். "பீலி பெய்சாகாடும் அச்சிறும் அப்பண்டம், சால மிகுத்துப் பெயின்" என்றான் வள்ளுவன். "அடம்பக் கொடியும் திரண்டால் மிடுக்கு" என்றும் "ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு இலாபம்" என்றும் ஒன்றுபட்ட வாழ்வால் வரும் பெருமையையும் தனித்த வாழ்க்கையால் நேரும் சிறுமையையும் பற்றி அறிஞர் மிக்க அழகுறக் கூறிப் போந்தனர். கன்னித் தமிழ் நாடு செந்தமிழ்நாடு ஒன்றிய வாழ்க்கையில் தலை சிறந்தது. பலர் ஒன்று கூடி செம்மையுற வாழும் வாழ்க்கையை பண்டையத் தமிழர் சங்க வாழ்க்கை என்று கூறினார்கள். கூட்டுறவே—சங்கம்; சங்கமே கூட்டுறவு. முதல், இடை கடை என்னும் முச்சங்க மிருந்தது எந் நாட்டில்? புகழ் பெற்ற நமது என்றுமுள தென்றமிழ் நாட்டிலல்லவா? சங்கத்தவருள் ஒருவராய் இறைவன் திகழ்ந்த சங்கம் எச் சங்கம்? கன்னலும், தேனும், பாகும், கலந்தாலன்ன இன்சுவை ததும்பும் முத்தமிழ் சங்கத்திலல்லவா? தமிழ்நாட்டினை—தென்னாட்டினைப் புரந்த பாண்டிய அரசர்களால் தமிழ்ச் சங்கம் வளர்க்கப்பட்டது. பேரறிஞர் பலர் சங்கத்தமர்ந்து நடுக்கண்ட நியாயம் வழங்கி தமிழ் மக்களின் பெருமையைக் காப்பாற்றினார்கள். "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்று வீரகர்ஜனை புரிந்த நக்கீரர் நமது தமிழனல்லவா? சங்கத் தமர்ந்து நேர்மையைக் காப்பாற்றிய பண்டைத் தமிழரின் உயர் சிறப்பை நாம் என்னென்றியம்புவது?

தமிழ்ச் சங்கத்தை எண்ணும்பொழுதெல்லாம் உணர்ச்சியுள்ள ஒவ்வொரு தமிழனும் மார்புதட்டி ஆர்ப்பரிப்பானென்பதில் என்ன சந்தேகம்? இன்று நேற்றல்ல; பல ஆயிரம் ஆண்டுகட்கு முன்னர் மக்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில், மேல் நாட்டினர் தழையையும் கோளையையும் ஆடைகளாக அணிந்து திரிந்த அந்நாளில் எமது தமிழர் சங்கம் கண்டனர்; ஒன்று கூடினர்; அறிவுத் தேனை அள்ளி அள்ளிச் சொரிந்தனர். அத்தமிழரின் சந்ததியாரல்லவா நாம்? வெட்கமின்றி நாமும் தமிழரென்று கூறிக் கொள்ளுகின்றோமல்லவா? அரும்பாடுபட்டு நமது முன்னோரால் கட்டப்பட்ட சங்கம் என்னும் ஒற்றுமைக் கோட்டையை இன்று தமிழரென்று கூறிக்கொள்ளும் நாம் எந்நிலையில் வைத்திருக்கின்றோம். அக்கோட்டையை காவல்செய்து வருகின்றோமா? கெட்டழிந்து விடாது புதுப்பித்து வருகின்றோமா? இல்லை, அதற்கு நேர்மாறாக அக்கோட்டையை—கூட்டுறவை—ஒன்றுபட்ட வாழ்க்கையை சுக்கல் சுக்கலாக நொறுக்கி எறிந்துவிட்டோம். சுபநலம், சுயநலம் என்னும் கொடியஇராட்சசனுக்கு அடிமைப்பட்டுள்ள நம்மிடத்து எவ்வாறு ஒன்றுபட்ட வாழ்க்கை அரும்பக்கூடும்? ஒருவனைக்கெடுத்து மற்றொருவன் வாழ விழைகின்றான். உலகிற்கு நன்மை செய்யவேண்டிய மனித ஜென்மம் பொறாமையின் சொரூபமாகவே இலங்குகின்றது. கட்டுப்பாடான வாழ்க்கை இருக்குமாகில் வலியான் மெலியானை விழுத்தாட்டிவிட முடியுமா? அநீதியும், எதேச்சையின் ஆட்சியும் நடைபெற ஹேதுவுண்டா? இல்லை. இத்தகைய உயர்ந்த முறையை சில சுயநல துரந்தார்கள் காலக்கிரமத்தில் வெட்டிவீழ்த்திவிட்டார்கள். அதனால் நேர்ந்த பயனென்ன? அடிமை வாழ்க்கையல்லவா! அவ்விழிந்த வாழ்க்கையை அன்றோ இன்றைய தமிழர் அநுபவிக்கிறார்கள்? பொது வாழ்க்கையில்—ஒன்றுபட்ட கூட்டுறவில் வலியார்க்கு ஒன்றும், மெலியார்க்கு ஒன்றுமாக தலைகீழாக மாறிவிடுகிறதே என்று சிலர் கூறக்கூடும். இவர்களுக்கு நக்கீரனை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பெருவலியானாகிய கடவுளுக்கும் விட்டுக்கொடாத வீரனன்றோ நமது நக்கீரன். அத்தகை நக்கீரர் பலர் இக்காலத்து வேண்டப்படுகின்றார். ஹே கடவுளே! நீ என்னை சுட்டுச் சாம்பலாக்கினும் அவசியமில்லை; நின்பாட்டுக் குற்றமுடையதேயாகும், என்றன்றோ நக்கீரன் கூற்றான்! அத்தகைய வீரர்களே வேண்டும்! அதைவிடுத்து அற்பக் காரணத்திற்காக உயிருக்கு உலை வைப்பது முட்டாள்தனமேயாகும்.



நக்கீரன் காலத்திலும் வல்லானுக்காக ஒரு வழக்கும் வல்லானல்லானுக்காக ஒரு வழக்கும் பேசப்பட்டது உண்மைதான். ஆயினும் வழக்கு பிழைத்துவிடவில்லை. அறிஞர்கள் அறத்தையே நிறுத்தினார்கள். இக்காலத்திலும் ஏன் அம்முறையைக் கையாளக்கூடாது? "எதார்த்தவாதி வெகுஜனவிரோதி" என்றுகூறுவார்கள். உண்மைபேசுவோனுக்கு—நியாயத்தை கூறுவோனுக்கு பலதிறப்பட்ட இன்னல்கள் ஏற்படுவது இயற்கைதான். அதற்காக நியாயத்தை இழக்கமுடியுமா? அக்கிரமத்திற்கு அடிபணிய விழையலாமா? அவ்வாறு செய்வது மனிதத் தன்மைக்கு ஏற்றதா? மனிதனாகப் பிறந்ததின் பயன் இவ்வளவுதானா? என்று கேட்கவிரும்புகிறேன். ஒன்றுபட்ட வாழ்க்கையில் நல்லார் பலரும், பொல்லார் சிலரும் என்றும் இருந்தே தீருவார்கள். சில பொல்லாருக்காக அஞ்சி ஒடுங்கிவிடுவதும் பொதுவாழ்க்கையில் உருவகப்படுத்தாது அதற்கு ஊறு செய்வதும் பெரும்பேதமையாகும்.

கீர்த்திபெற்ற பண்டைத் தமிழர்கண்ட சங்க வாழ்க்கை இன்று உலகெங்கும் பரவிவிட்டது. அமெரிக்காவை ஆள்வது சங்க வாழ்க்கையேயாகும். "காங்கிரஸ்" என்னும் ஓர் மகாசபையை அமெரிக்கர் நிறுவியிருக்கிறார்கள். அம்மகாசபையை பேரறிஞர் பலர் அழகுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள். எல்லா மகா ஜனங்களுக்கும் சொந்தமான அம்மகா சபையே நீண்ட நிலப்பரப்பை ஆட்சி புரிந்து வருகின்றது. உலகத்திற்கே பெரிய பணக்காரர்களாக மிளிரும் சிலர் அமெரிக்காவில் இருக்கிறார்கள். ஆகாயத்தை அளாவிக் கொண்டிருக்கும் அரை நூறு உப்பரிகை உள்ள பல சிங்கார மாளிகைகள் ஆங்கு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றன. உலகம் போற்றும் தத்துவ சாஸ்திரிகளும், விஞ்ஞான சாஸ்திரிகளும் அமெரிக்காவை அழகு படுத்திக்கொண்டிருக்கிறார்கள். மனிதன் ஆச்சர்யப்படத் தக்க, பயங்கரத்தை அடையக்கூடிய நூதனமான பல கருவிகள் அமெரிக்காவில் உண்டுபண்ணப்படுகின்றன. அமெரிக்காவின் இத்தகைய உயர்ச்சிக்குக் காரணம் சங்கமல்லவா? மகாவீரன் நெப்போலியனின் ஏகாதிபத்தியம் எங்கே? அது கூட்டுறவு மணங்கமழும் சங்கமாகவல்லவா மாறிவிட்டது! ரஷ்யப் பொதுவுடைமைக்கு காரணமென்ன? ஜனாதி பத்திய சங்கமல்லவா? உலகத்தின் பெரும்பாகத்தை கட்டி ஆளும் பிரிட்டிஷ்ஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரம் என்ன? பொதுமக்கள் சபை; பிரபுக்கள் சபை என்னும் இரண்டு சங்கங்களல்லவா? உலகமே சங்கமாக மாறிவிட்டது. கூட்டுறவாகத் திகழுகின்றது.

புனிதமான இவ்வாழ்க்கையைத்தொன்றுதொட்டு நகரத்தார் சகோதரர்கள் கையாண்டு வந்திருக்கிறார்கள். புகழ் மண்டிக்கிடக்கும் சோழநாட்டில் தனவணிகர்கள் வாழ்ந்த காலத்து, அவர்கள் சங்க வாழ்க்கையே வாழ்ந்தார்கள். பாண்டியன் வேண்டலுக்கிசைந்த சோழன், மன்னர்க்கு மணிமுடி சூட்டும் தனவணிகர்களை அழைத்து, "ஒரு

சிலர் பாண்டி நாடு செல்லுவீராக; ஏனையோர் காவிரிப்பூம் பட்டினத்திலுறைந்து வருக" என்று கூறிய காலத்து எமது மூதாதையர் என்ன கூறினர்! அரசே! பாண்டி நாடு சென்றால் அனைவரும் செல்வோம். இங்கு உறைந்தால் அனைவரும்உறைவோம்! பிரிந்து வாழ்தலை நாங்கள் அறியோம்; என்றன்றோ கூறினர். இதுவல்லவா சங்க வாழ்க்கை? சோழநாட்டில் வாழ்ந்த தனவணிகரின் சங்க வாழ்க்கைக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? இவ்வாழ்க்கை இன்றைக்கு 2000ம்ஆண்டுகட்கு முன்னர் கண்டதல்லவா! பாண்டி நாடு போந்த தனவைசியர் எவ்வாழ்க்கை வாழ்ந்தனர்! ஊர்கள்தோறும் கூட்டம்; வட்டகைக் கூட்டம்; தொண்ணூற்றுறார்க் கூட்டம், முதலிய கூட்ட வாழ்க்கைசங்க வாழ்க்கையன்றோ வாழ்ந்தனர். வாழ்கின்றனர். பண்டமாற்றும்தொழிலைமேற்கொண்டு கொண்டுவிற்கச்சென்ற எமது மூதாதையர் ஆங்காங்குமுருகவேளுக்குக் கோட்டமமைத்து சங்க வாழ்க்கையன்றோவாழ்ந்தனர். பண்டமாற்றும் முறையைவிடுத்து, சோம்பேறித் தொழிலாகிய வட்டித்தொழிலில்புகுந்துள்ள இன்றையத் தனவைசியர் எவ்வாழ்க்கை வாழ்கின்றனர்? அவர்களும் கந்தனுக்கு வீடு கட்டி முன்னையோரைப் பின்பற்றி சங்க வாழ்க்கையே வாழ்கின்றனர். கோவிற் கூட்டம் சங்கக்கூட்டமன்றோ?

காலம் மாறிவருவதைப் போன்று மக்களும் விசேஷ முன்னேற்ற மடைந்து வருகின்றார்கள். சங்கத்தின் துணை கொண்டே அரசு புரிகின்றார்கல்; போர் செய்கின்றார்கள்; பொருள் திரட்டுகின்றார்கள்;பொதுவாழ்க்கை வாழ்கின்றார்கள். சங்கத்தின் வழியாக தங்களின் குறைபாட்டை எடுத்துச் சொல்லுகின்றார்கள்; முறையிடுகின்றார்கள்; இற்றில் நியாயத்தையும் பெற்றுக்கொள்ளுகின்றார்கள்; சைகோனை எதிர் நோக்குங்கள்- சங்கமின்றேல் சைகோன் நகரத்தார் கதி என்ன? அதோகதி யல்லவா?சமயச் சங்கம்; ஜாதிச்சங்கம்; பிரிவுச்சங்கம்; தெருச்சங்கம்; வீட்டுச் சங்கம்; பெயரளவில் சங்கம்; உயிரில்லாத சங்கம்; என்று எத்தனையோவிதமான சங்கங்கள் இக் காலத்தில் முளைத்திருக்கின்றன. "அழுதபிள்ளைதான் பால் குடிக்கும்" என்று சொல்லுவார்கள். அதைப்போன்று இடையிடையே தூண்டிக் கொண்டிருந்தால்தான் மேற்கெடுதலாவது வாராமற் பார்த்துக் கொள்ளலாம். "சுடர் விளக்காயினும் தூண்டுகோல் ஒன்றுவேண்டும்" அத்தூண்டுகோல்தான் "சங்கம்" தூண்டுகோல் இல்லாதுழி மெல்ல மெல்ல விளக்கு அணைந்துவிடுவது எவ்வளவு உண்மையோ அவ்வளவே சங்கமில்லாதுழி வாழ்க்கைக்கு கேடுசூழ்ந்து விடுமென்பதுமாகும்.

நகரத்தார் சகோதரர்களுக்கு தொன்றுதொட்டு சங்க வாழ்க்கையில் நிறைந்த அனுபவமிருப்பினும் காலத்திற் கேற்ற முறையில் அவர்கள் சங்க வாழுக்கை வாழுதல் வேண்டும். ஊர்கள் தோறும், வியாபாரம் செய்யும் ஒவ்வொரு தொலைகளிலும் கண்டிப்பாக நகரத்தார்சங்கமென்று ஒன்றை நிறுவிக்கொள்ளுதல் வேண்டும். எல்லாத்துறைகளிலும் செட்டாக வாழும் செட்டியார் சகோதரர்கள் இத்துறையில் தாராளமாக பொருளைச் செலவிடுதல் வேண்டும். "கல்லினுற் செய்த பேர்கள் கயிலைவிட்டகலார் தாமே" என்பதொன்றையே குறியாகக்கொண்டொழுகாமல் நாகரிக உலகத்தில் நாமும் தலை நிமிர்ந்து நிற்கக்கூடிய முறையில் புதிய பழக்கமும் நூதன உணர்ச்சியும் பெற்றுக் கொள்ளவேண்டும். பணக்காரர்கள்செல்வாக்குள்ளவர்கள் ஆதியோரிடத்து சங்கத்தை விட்டு விடாமல் அதை எல்லார்க்கும் பயன்படுத்திக் கொள்ளுதற்கு உதவ வேண்டும். நகரக் கூட்டத்திற்கும் சங்க நிகழ்ச்சிகளுக்கும் அநிக வேறுபாடுண்டு. சங்க நிகழ்ச்சிகளில் நகரக் கூட்ட முறையைக் கொண்டு வந்து புகுத்தாது பிரசங்கங்களைப் போன்று சங்க நிகழ்ச்சிகளை நடத்துதல் வேண்டும். ஒவ்வொரு அங்கத்தவருக்கும் சங்கத்தில் சம சுதந்தரமும், சம அதிகாரமு மிருத்தல் வேண்டும். கண்டிப்பாக ஆண்டு தோறும் புதிய நிருவாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். கூடுமான அளவு, கடந்த வருடத்தில் நிருவாகத்தை நடத்தியவர்களை விடுத்து, புதிதாகவே நிருவாகஸ்தர்களை தெரிந்தெடுத்தல் வேண்டும். பொதுக் கூட்டங்களில் தங்களின் உள்ளக் கிடக்கையை தெள்ளத் தெளிய எடுத்து விளக்குவதற்கு ஒவ்வொரு அங்கத்தவருக்கும்உரிமையுண்டு. எக்காரணத்தை முன்னிட்டும் அவ்வுரிமையை பறிமுதல் செய்து விடப்படாது. இன்னோன்ன உயர்ந்த முறையில் சங்கங்கள் திகழுதல் வேண்டும். அச்சிரிய சங்கங்களால் உலகிலுள்ள அனைவரும் நற்பயனடைந்து வருவதைப் போன்று நாமும் விசேஷ நன்மைகளைப் பெற்று வாழுதல் கூடும். சங்க வாழ்க்கையிலும், சங்கத்தை செவ்வையாகப் பரிபாலித்து இன்ப வாழ்க்கை வாழுவதிலும் தனவணிகர் சமூகம் அதி தீவிரமாக இடுபட்டுழைக்குமாக.

——

விதவையர் துயரம்

ஆ. ட்ழ. சோ.

க) நற்றவர் போற்றும் வாய்மை நற்குலத் துதித்தீர்! நாட்டிற்
கொற்றவர் மதிக்குஞ் செய்கைக் குவலயம் வாழ்ந்தீர்! நீவிர்
உற்றவெம் போன்ற பெண்கள் உளமகிழ் சிறக்க யாங்கள்
அற்றவ.றென் றபோா லடைந்திடுமின்னல் காணீர்!

உ) அவ்விதிக் கிலக்கா யெங்க ளரும்பெறற் கணவர் வீய
இவ்விதிக் கிலக்கு நீயே யெனக்குா லோச்சிவிட்டு
வவ்விய மனத்தர் போன்று வண்ணநற் சேலைபற்றி
வெவ்விதித் துயரத்தோடு வெள்ளுடைதனைபு மீந்தார்.

வீய—இறக்க; வண்ணநற்சேலை—பட்டுச்சேலை, கலர்ச்சேலை;
வெள்ளுடை-வெள்ளைச்சேலை

ங) அமங்கலி யாய வந் நாள் துய்த்தவை தம்மையெண்ணி
அமங்க லியாய விந்நா ளவைதமக் காவலுற்றோம்
இமந்தனி லெங்க ளுள்ள மின்பநல் வாழ்வை யெண்ணுஞ்
சமந்தனை யில்லாத் துக்கஞ் சாற்றுதற் கரிதா மன்றே

இமம்—இரவு; சமம்-ஒப்பு, பொறுமை;

ச) மட்டினைத் தோற்றும் பூக்கள் மணமில தாகி விட்ட
பட்டினைப் பார்க்குங் கண்கள் பயனிலதாகிவிட்ட
பொட்டினை வைக்கும் நெற்றி பொலிவிழந் தாகி விட்ட
வெட்டினை யேய்க்க வுள்ளம் வெம்பியே வீழ்ந்துவிட்டோம்

மட்டு-வாசனை; ஏய்க்க-பொருந்த;

ரு) பொழிலினை யிழந்துவிட்டோம் பூக்களை மறந்துவிட்டோம்
எழிலினை யிழந்துவிட்டோம் ஏங்கியே மாழ்கிவிட்டோம்
வழியினி லெம்மைக் காணில் வந்திட்டாள் தோசி யெளபீர்
கழிமிகு துயரத்தோடு கலக்கண்ணீ ருகுக்குகின்றோம்.

சு) பட்டினைப் பறித்துக் கொண்டீர் பலபணி கழற்றித் தாலிக்
கட்டினை யவிழ்த்துக் கொண்டீர் கணவனையிழந்த துக்கம்
எட்டின மட்டும் பாய்ந்து மெம்முயிர் நீங்கிற்றில்லை
பொட்டெனை வெம்மைத் தீயிற் புகுத்துத லிழிவு மன்றே

பாலிய விதவை பகர்தல்.

சந்த விருத்தம்

க) நளவெண்பாவும் திருக்குறளும் நலமுடன் கற்று வருகையிலே
வளமலி யோர்ப்த் தாமாண்டில் வரித்துவிட்டீர் திருமணமும்
உளமறியாமலெங் கணவர்தமை உற்றவர் தோழரென்றிடவே
இளமையி லீராண் டினுக்குளவ ரெந்தனை விட்டுயிர் நீங்கினரே

உ) தலைவிதி யுனக்கிது பெண்மகளே தணிந்திடு வாய்பெருந்துயரென்பீர்
வலைவிதி யுற்றிடு மீன்போலே வளைத்திட்டென்னை வருத்துகிறீர்
கலைவிதி நூல்பல கற்கையிலே கண்டிடுவீர் மணமென்றேனோ
தொலைவிதி தற்கொலை யாமென்றே துணிந்திடுவேனுயிர் வாழேனே.

சீர்திருத்தக்காரர் கூறுதல்

பெருந்துய ரொழிமின் பேதைமை யொழிமின் பெட்பிலா வாழ்க்கையின் மாழ்கி
வருந்துத லொழிமின் மனவெறப் பொழிமின் வையகம் வாழ்வதற் கெண்ணிற்
றிருந்திய செய்கைத் திறலினையுடைய செம்மல்பல் லோரினு நமக்குப்
பொருந்திய மற்றோர் புருடனை மணந்து பொற்புறப் பொலிகுவீர் மாதோ

பர்மிய ஆசிரியர்கள்.



ஊ செயின்
"ஸரைலா" ஆசிரியர்



ஊ தத்டன் மாங்
"ஸன்" (மாத சஞ்சிகை) ஆசிரியர்.



ஊ ஸோன்
"நியூ லைட் ஆப் பர்மா" ஆசிரியர்.



ஊ பாச்சோ
"டிட்டோவ்" ஆசிரியர்




ஊ பா கலே
"ஸன்" (தினசரி) ஆசிரியர்.




ஊகக்கின் மாங், பி.ஏ.,
"ஹோட் மேன்ஸ் கெஜெட்" ஆசிரியர்.


பர்மாக் காட்சிகள்.



இராணி தோட்டமும் ஹைக்கோர்ட்டும். Rangoon High Court.



சக்காந்தா அரண்மனை Sakkantha Palace.



சக்காந்தா சிங்காதனம் Sakkantha Throne

பிக்ஷு உத்தமர்

திரு. ஸி. நாகையா.



இப்பெரியாரைப்பற்றி அதவும் சங்கத்து மலரில் எழுதும் சந்தர்ப்பம் கிடைத்தமைக்காக, ஆசிரியருக்கு யான் எனது மனபார்ந்த நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டவனுகின்றேன். அஞ்சாமை, சத்தியம், சுயராஜ்யம் பிறப்புரிமை, தியாகம், சேவை முதலிய மந்திரங்களை ஓதுவித்து பர்மியரிடை புத்துணர்ச்சியை உண்டுபண்ணிய பெருமை பிக்ஷு உத்தமருக்கேயன்றிப் பிறிதெவர்க்கும்-எத்தலைவருக்கும் உரித்தாக மாட்டாது. இந்திய நாட்டிற்கு தாதாபாய் நௌரோஜி எப்படி சுயராஜ்ய விதையை அளித்தாரோ, அப்படியே பர்மிய நாட்டிற்கு ஸ்ரீ உத்தமப் பெரியார் விடுதலை விதையை தெளித்திருக்கிறார். வயிறு புடைக்கச் சாப்பிட்டு விட்டு கோலாகல வைபவத்தில் சதா மூழ்கிச் சாமான்ய ஜனங்களை வைதீகத்தில் பித்துப் பிடிக்கச் செய்து இல்லாத ஆர்ப்பாட்டங்களைச் செய்துவரும் நமது நாட்டு மடாதிபதிகளைப் போன்றில்லாமல், காலதேச வர்த்தமானத்திற் கிசைந்த முறையில் பர்மிய பிக்ஷுக்களை தேசிய சேவையிலிறங்கச் செய்து நாட்டிலேமகத்தானமாறுதலை, புரட்சியைஉண்டாக்கியிருப்பதற்கு பிக்ஷு உத்தமர்தான் காரணமாவார். தேசமுன்னேற்றம் இல்லையேல் தன்னேற்றம் இல்லையென்பதையும்,நாடு விடுதலையடைந்தாலன்றி,தேசத்திற்காவது, மக்களுக்காவது, மதத்திற்காவது பியோசனம் கிடையாதென்பதையும் உணர்ந்த பர்மியப் பெரியார்களில் ஸ்ரீஉத்தமரைத் தவிர்த்து வேறு எவரையும் கூறுவதற்கில்லை. தாய் நாட்டிற்குச் சேவைசெய்து சிறைக்கோட்டம் புகுந்து பர்மியரைத்தூக்கத்தினின்றும் விழிக்கச்செய்தஸ்ரீ உத்தமப் பெரியாரைக் குறித்துஇம் மலரில் எழுதும் பாக்கியத்தைவிட இச்சிறியேனுக்கு மற்றொரு பாக்கியமுமுண்டோ ?

பிறப்பு.

1881-ஆம் ஆண்டில் ஆக்கியாப்பில் உத்தமர் பிறந்தார். அவருக்குச் சகோதரரொருவரும், சகோதரி ஒருவரும் உண்டு. பர்மியரில் பல வகுப்பினர்களிருக்கின்றனர். உத்தமரும் அவருடைய குடும்பத்தாரும்பௌத்தமதத்தைச் சேர்ந்த அரக்கானியர்களாவார்கள்.இளமையிலேயே உத்தமர்,வங்கநாட்டிற்குச் சென்று, ஆங்கிலம், வங்காளி, இந்தி முதலிய பாஷைகளை இழுக்கறக் கற்றுக்கொண்டார்.வங்க நாட்டிலே கல்விப் பயிற்சிக்கென்று எட்டுவருடகாலம் வரை .யிருந்திருக்கிறார். பம்பாயில்சம்ஸ்கிருத பாஷையையும் சிலோனில் பாலிபாஷையையும் கற்று வல்லுநரானர்.பௌத்தமத ஆராய்ச்சியிலும் நன்கு தேர்ச்சியடைந்தார். திபேத்தில் லாமா "ஹாண்டா" இருப்பதாகக் கேள்வியுற்று அங்கு செல்வதெனத் தீர்மானித்து, திபேத் பாஷையை ஓரளவு பேசக் கற்றுக்கொண்டுதிபேத் எல்லையை யடைந்தார். திபேத்திற்குள் நுழையலாகாதென அந்நாட்டு அதிகாரிகள் அவரைத் தடை செய்தமையால் வந்தவழியே திரும்ப வேண்டியவரானர். இதில் அவர் மனச்சோர்வுகொள்ளாது வேறுஉபாயமொன்றைக்கண்டார். உடனே காஷ்மீர தேசத்திற்குப் பிரயாணமானர். காஷ்மீரத்திலிருந்து பதினைந்து நாள் பிரயாணத்திலிருக்கும் லாடெக் என்ற ஊரிலிருந்து திபேத்திற்குள் பிரவேசித்து விடுவதென்று அந்த ஊரை அடைந்தார். பாழும் தடையுத்திரவு அங்கும் தோன்றிற்று. இதனுல் உத்தமரின் மனமும் உடைந்தது. எகிப்து, பிரான்சு, இங்கிலாந்து முதலிய நாடுகளுக்குப் போய் வருவதென்று உத்தமர் இந்தியாவை விட்டுப் புறப்பட்டார். ஐரோப்பா கண்டத்தில் சுற்றுப் பிரயாணம் செய்துவரும்காலையில் ரஷியாவுக்கும் ஜப்பானுக்கும் நடந்த யுத்தத்தில் ரஷியாக்காரர்களை ஜப்பானியர்கள் முறியடித்து ஜெயக்கொடி நாட்டிய செய்திகளைப் பல பத்திரிகைகளில் வாசித்தார். பண்டைக்கால சரித்திரத்திலே இடம்பெருத ஜப்பானியர், உலகத்து வல்லரசுகளில் தலையாய ரஷியாவை தோற்கச் செய்தது, உத்தமருக்கு மிக்காச்சர்யத்தை விளைத்தது. உடனே தமது சொந்த நாட்டிற்கு திரும்பினர். 1907 ஆம் ஆண்டில் ஜப்பானையும் ஜப்பானியர்களையும் குறித்து நேரில் அறிந்து வருவதென்று புறப்பட்டார். யோகோஹாமாவை யடைந்தவுடன் உத்தமர், கையில் பிச்சா பாத்திரத்தை ஏந்தி தெருக்கள் தோறும் சென்று பிச்சை கேட்டார். இப்பழக்கம் ஜப்பானில் கிடையா தென்பதைப் பின்னர் உணர்ந்தார். Kyoto Buddhist University சோட்டோ பௌத்தமத சர்வகலாசாலையின் சான்ஸலரும் பிரதமமந்திரியுமாகியஒட்டானியவர்களுக்கு உத்தமர்எழுதியகடிதத்தில் ஆங்கிலம், சமஸ்கிருதம் பாலி வங்காளி, இந்தி, முதலிய பாஷைகளை நன்கு பயின்றிருப்பதாயும், தம்முடைய உதவி தேவைப்படும்போது அறிவிக்க வேண்டுமென்பதாயும் குறிப்பிட்டிருந்தார். இரண்டு நாட்களுக்குப்பின் உத்தமருக்குப்பதிற்கடிதமொன்று கிடைத்தது. அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபிரகாரம் உத்தமரவர்கள் சான்ஸலர் செலவில் ஆங்கிலம் தெரிந்த ஜப்பானிய ஆசிரியரைக்கொண்டு, அப்பாஷையைப் படித்துக்கொண்டார். அரசாங்கத்தார் நடத்திய பரீட்சையிலும் தேர்ச்சியானர். அதன்மேல் பாலி, சமஸ்கிருத பாஷைகளுக்குப் பௌத்தமத சர்வகலாசாலையில் ஆசிரியாரகவிருந்து சுமார் இரண்டாண்டுவரை மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார். தாய் நாடு செல்ல விரும்புவதாயும் போகும் வழியில் கொரியா, மஞ்சூரியா, போர்ட் ஆர்தர், சீனம், ஆனும்,கம்போதியா,சயாம்,சிலோன் இந்தியா முதலிய நாடுகளைச் சுற்றிப்பார்க்க விரும்புவதாயும் சான்ஸலரிடம் அறிவித்தார்.



உத்தமர்

அதன் பேரில் இவற்றிற்காகும் செலவைக்கணக்கிட்டு இரண்டாவது வகுப்பில் பிரயாணம் செய்யும்படியான சாதகங்களைச் சான்ஸ்லர்செய்துகொடுத்துஉதவிசெய்தார். சான்ஸ்லரின் பண உதவியைக்கொண்டு மேற்கண்ட நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு 1911ல் பர்மாவை அடைந்தார். அப்பொழுது அவர் தமது வெளிநாட்டு அனுபவங்களைப்பற்றி பர்மியரிடைப்பிரசங்கம் செய்ய முயற்சித்தார். இவருடையபோக்கு புதிய போக்காக விருந்ததாலும்பௌத்த மத துறவிகளில் இவர் முற்றிலும் மாறுபட்டவராகக் காணப்பட்டதாலும் பர்மியரில் பெரும் பான்மையோர் ஏளனம் செய்ய வாரம்பித்தார்கள். இவருடைய பிரசங்கத்தைக்கேட்பவர்கூட்டம் மிகக்குறைவாக விருந்திருக்கிறது. பெரும்பாலும் உத்தியோகஸ்தர்கள் வீடுகளிலேயே உத்தமர்உபசரிக்கப் பட்டு வந்தார். பாமர ஜனங்களை இராஜீய தேசிய விஷயங்களில் திருப்புதற்கு இது காலமல்ல வென்றெண்ணி, ஆஸ்திரேலியாவுக்குச் சென்றார். பர்மாவுக்குத் திரும்பிவந்தவுடன் பிரசங்கம் செய்ய ஆரம்பித்தார்.அப்பொழுதும் அவருக்குஎதிர்

ப்புறிருந்துகொண்டே யிருந்தது. ஸைலான் ஷாவ எ. எ. பார்-அடலா, கொ அவ்ன்ட்டுன், பி. எ, எம். பி, சி. எச். பி, முதலானோர் ஜப்பானியர்களைப் பற்றிப் புத்தகமொன்றை எழுதும்படி உத்தமரைக் கேட்டுக்கொண்டார்கள். அதன்பேரில் 1912ல் தமது சகோதரியையும் மற்றும் 3 பர்மிய மாணவர்களையும் ஜப்பானுக்கு உடனழைத்துச் சென்ருர். அரசாங்கத்தாரின் உதவிபெற்று தக்க ஆதாரங்களைக் கொண்டு ஜப்பானியர்களின் ஆதிசரித்திரத்தையும், அவர்களடைந்துள்ள முன்னேற்றத்திற்கு முக்கியமான காரணம் யாதென்பதைப்பற்றியும் ஒரு பெரிய புத்தகமொன்றைப் பர்மாவிற்கு திரும்பிவந்து பர்மிய பாஷையில் வெளியிட்டுள்ளார். இதன் பின்னர் அரசியலைப் பற்றியும் சுயாட்சியைப் பற்றியும் பர்மாவில் பல இடங்களுக்கு விஜயம் செய்து பிரசங்கங்கள் செய்துவந்தார். தேசிய சேவையில் புகும்போது உத்தமருக்கு வயது இருபத்தொன்று. பர்மாவின் லெப்டினண்டு கவர்னரான ஸர் ரெஜினல்டு கிராடாக்கை நாட்டை விட்டுச்செல்லும்படி பொதுஜனங்களிடை துண்டுப் பிரசுரங்களை வழங்கினர். பின்னர் அதிகார வர்க்கத்தின் கோபத்திற்கிலக்காகி 20 மாத வெறுங்காவல் தண்டனையை மவூபின் சிறைச்சாலையில் அனுபவித்து வந்தார். அப்பீலில் தண்டனை வஜா செய்யப்பட்டு விடுதலை யடைந்தார். சிறைச்சாலையிலிருக்கும்போது உபவாசமிருப்பதற்கு அனுமதிக்கும்படி கோரியிருந்தார். அதற்கு சிறையதிகாரிகளும் ஒப்புக்கொண்டார்கள். உள்ளூர் பொங்கிமடத்திற்கு அழைத்துச் செல்லப்படுவாரென்றசெய்தி பொதுஜனங்களுக்கு எப்படியோ எட்டிவிட்டது. அவர் அழைத்துச் செல்லப்படும் வழியிலெங்கும் பாய்களையும் அவற்றின் மீது ரத்தினக் கம்பளங்களையும் விரித்து அவற்றின் மேல் பர்மிய ஸ்திரீகள் தங்களின் அழகிய கூந்தல் ரோமங்களைப் பரப்பி உத்தமப் பெரியாரை எதிர்கொண்டழைத்து கூந்தல்களின் மீது நடக்கச் செய்த பொங்கிமடத்திற்கு வழிகூட்டி அனுப்பி வைத்தார்கள். சிறைப்பட்ட ஒருவருக்கு இவ்வளவு மரியாதையாவென்று அதிகார வர்க்கத்தார் முணுமுணுத்துக்கொண்டே உபவாசமிருப்பதற்களித்திருந்த உரிமையைப் பறிமுதல் செய்துகொண்டார்கள். இதன் பேரில் உத்தமர் சிறையில் பட்டினி கிடந்தார். அதன் பேரில் அதிகாரிகள் மத சம்பிரதாயப்படி சிறைக்குள் உபவாச மனுஷ்டிப்பதற்கென குடிசை கட்டிக் கொடுத்தார்கள். பர்மாவின் மூலை முடுக்குகளுக் கெல்லாம் திக்விஜயம் செய்து சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். பின்னர் ஐரோப்பாவுக்குப் பிரயாணமானர். பல நாடுகளுக்குச் சென்றுவிட்டு தாய் நாடு வந்து சேர்ந்தார். இப் பெரியார் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியில் அங்கத்தினராயும் பர்மா மாகாண காங்கிரஸ்கமிட்டியில் உப தலைவராயும் இருந்து வந்திருப்பதோடு ஒவ்வொரு வருடமும் இந்தியாவில் கூடும் காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்திற்குத் தவறாமல் விஜயம் செய்கின்ருர். பர்மா அதிகார வர்க்கத்தை நிந்தித்துப் பேசினதாக உத்தமர் மீது கொண்டு வரப்பட்ட வழக்கில், ரங்கூன் ஜில்லா மாஜிஸ்திரேட் மிஸ்டர் ஸிட்வர்என்பார் 3 வருட கடுங்காவல் தண்டனை விதித்தார். இத்தீர்ப்பை ஆட்சேபித்து ரங்கூன் வாசிகள் பொதுக்கூட்டமொன்று பிட்ச்ஸிஸ் கொயர் என்றழைக்கப்படும் இரானி தோட்டத்தில் கூடிற்று. அப்பொழுது நாலா பக்கங்களிலுமிருந்து வெள்ளைக் குதிரைப் போலீஸார் உட்புகுந்து கூட்டத்தைக் கலைத்தார்கள். சிறைப்பட்ட உத்தமரின் உடையைக் களையும்படி அதிகாரிகள் இந்தியக்கைதிகளுக்கு உத்திரவிட்டார்கள். அதற்குக் கீழ்ப்படிந்து நடக்க மறுத்துவிட்டார்கள். அதன் பேரில் பர்மியக் கைதிகளை ஏவினர்கள் அவர்களும் முடியாதென்று சொல்லிவிட்டார்கள். பின்னர் பலாத்காரம் செய்து உத்தமரின் காவியுடையை அப்புறப்படுத்திவிட்டு, அவருக்கு சிறைக்கைதி உடுப்பு கொடுத்திருந்தார்கள். அவர், தமது தண்டனைகால முழுவதையும் ரங்கூன் மத்திய சிறைச் சாலையிலேயே கழித்தார்.

மகத்தான வரவேற்பு.

ஸ்ரீ உத்தமர் சிறையிலிருந்து விடுதலையடைந்த சில தினங்கட்குப்பின்னுல், ரங்கூன் ஷுவேதகான் பொற்கோயில் (Platform) பிரகாரத்தில் அவருக்கு மகத்தான வரவேற்பு நடந்தது. அதை எம்மால் எழுதி வர்ணிக்கவும் முடியாது. எம்முடைய வாழ்நாளில் அத்தகைய கூட்டத்தையும் விஜயம் செய்திருந்தவர்களிடை காணப்பட்ட உற்சாகத்தையும் அன்றுதான் கண்டேன். உத்தமரின் சேவையைக் குறித்தும் தியாகத்தைப் பாராட்டியும் பர்மா சட்டசபை அங்கத்தினர்கள் சார்பாகவும், பர்மிய மகா சபைகளின் சார்பாகவும், சாங்கா சமேஜியின் சார்பாகவும்,சீனர்கள் சார்பாகவும், பர்மா மாகாண காங்கிரஸ் சபையின் சார்பாகவும், கிலாபத் கமிட்டியின் சார்பாகவும், பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள் சார்பாகவும் வரவேற்புப் பத்திரங்கள் அவருக்கு வாசித்துக் கொடுக்கப்பட்டன. அவற்றுள், சீனர்களால் வாசிக்கப்பட்ட பத்திரம்தான் யாவருடைய மனதையும் கவர்ந்துவிட்டதாகச் சொல்ல வேண்டும். பத்திரங்கள் யாவற்றுக்கும் சேர்ந்து உத்தமர் பதிலளிக்கும்போது சிறையில் எவ்விதம் கைதி உடையுடனிருந்தாரோ அதை அப்படியே காஷாய உடையைக் களைந்துவிட்டு பிரதிபிம்பிக்கச் செய்தார். அத்தோற்றத்தைக் கண்டு கண்ணீர் விடாதவர்கள் வெகு சிலரே யாவர். முடிவில் பர்மாப் பிரிவினை ஏழேழு தலைமுறைக்கும் கூடாதென்று சொன்னர். பர்மிய அரசியல் வாதிகளுக்குள் கருத்து வேற்றுமை மிகைத்து விட்டதாலும் பிரிவினைக்குத் தாளம்போடும் தினசரிப் பத்திரிகைகளின் விஷமப்பிரசாரத்தாலும் உத்தமர்முன்போல் தேசியத் துறையிலிறங்கிவேலை செய்ய முடியாது போயிற்று. பின்னர் இந்தியாவுக்குப் பிரயாணப்பட்டார். கல்கத்தாவில் கார்மிக்கேல் ஆஸ்பத்திரியில் சில காலமும் பம்பாயில் கொஞ்ச காலமும் தாமதித்துவிட்டு ஜப்பான் செல்லும் வழியில், ரங்கூனில் ஒரு நாளிரவைப் போக்கிவிட்டுப் பயணமானுர். சிறையிலேற்பட்ட தொத்து வியாதியை அறவே அகற்றி விடுவதற்காக ஜப்பானில் ஓராண்டு வரை தங்கியிருந்து சிறந்த டாக்டர்களைக் கொண்டு சிகிச்சை பெற்று வந்தார். சீனக் குடியரசுத் தலைவர் டாக்டர் சன்யாட்சென் பிரேத அடக்க வைபவத்திற்கு இந்தியா, பர்மா பிரதிநிதியாகச்சென்று வரும்படி அகில இந்திய காங்கிரஸ் தலைவர் காலம் சென்ற பண்டித மோதிலால் நேருவால் உத்தமர் கேட்டுக்கொள்ளப்பட்டார். உத்தமரும் டாக்டர் சன்யாட்சென் பிரேத அடக்கச் சடங்குக்கு விஜயம் செய்துவிட்டு இரண்டொரு மாதங்களில் பர்மாவுக்கு வந்து சேர்ந்தார். சில மாதங்களுக்குப் பிறகு சைமன் கமிஷன் ரிப்போர்ட்டில் பர்மா பிரிவினைக்குச் சிபார்சு செய்யப்பட்டிருந்ததால், இது சம்பந்தமாய் அப்பெரியாரின் அபிப்பிராய மென்னவென்பதை அறிய விருப்பம் கொண்டு அவர் ஜாகைக்குச் சென்றிருந்தேன். பர்மா பிரிவினையைப் பற்றிக் கேட்டதற்கு, உத்தமர் கீழ்க்கண்ட விதமாய் பதிலளித்தார்.

"இந்தியா உலகத்திற்கே சோறு போடுகிறது. பர்மாவின் தொடர்பை அறுப்பதால் இந்தியாவுக்கு ஒன்றும் முழுகிப் போய்விட மாட்டாது. பல்லியின் வாலைத் துண்டித்துவிட்டால் அதற்கு எவ்வித ஹானியும் ஏற்படுவதில்லை. அதைப்போலவே இந்தியாவுக்கு யாதாமொரு கஷ்டமும் ஏற்படமாட்டாது. பிரிக்கப்பட்டால் ஆந்திர நாட்டுத் தெலுங்கர் ஸ்தானத்தை நிச்சயம் பர்மியர்கள் அடைந்துவிடுவார்கள்."

பர்மாபிரிவினைப்பிரச்னையானது பர்மாசட்டசபையின் முடிவைப் பொறுத்திருந்தது. சென்ற வருடக் கடைசியில் கூடிய பர்மா சட்டசபைக் கூட்டத்தில் பர்மிய அங்கத்தினர்களின் ஒற்றுமையின்மையால் தீர்மானம் ஒன்று அர்த்தமற்ற முறையில் அர்த்த ராத்திரியில் நிறைவேற்றப் பட்டது. இப்பொழுது பர்மாப் பிரிவினைச் சுமையைப் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வலிய தங்கள் மீதுபோட்டுக்கொண்டிருக்கிருர்கள் ஆயினும் இச் சிக்கலான பிரச்சினையைப் பார்லிமெண்டு அங்கத்தினர்கள் பலரைக் கொண்டிருக்கும் ஜாயிண்டு செலக்ட் கமிட்டியாரின் விசாரணைக்கு விட்டு வைத்திருக்கிருர்கள். இதற்கிடையில் சின்னாட்களுக்கு முன்னர் தூ வென்று பொது மக்களால் வெறுக்கப்பட்ட பிரதம மந்திரியின் பிரிக்கப்பட்ட பர்மாவின் புதிய அரசியல் திட்டத்திற்கு விரிவுரையொன்றைத் தயாரித்து செலெக்ட் கமிட்டியாரிடத்தில் இந்தியா மந்திரி பரிசீலனைக்கு விட்டார். அதை அத்துடன் நிறுத்திக் கொண்டாரில்லை. அதைப் பற்றி ஆலோசிக்கும்படி பர்மா சட்டசபை அங்கத்தினர்களுக்கு அனுப்பி ஆழம் பார்த்தார். பிரிவினை வேண்டாதார் அவருடைய அறிக்கையை கண்ணெடுத்தும் பார்க்கமாட்டோமென்று சொல்லிவிட்டு, மண்டபத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள். இந்நிகழ்ச்சிக்குப் பின்னர் பர்மா கவர்ன்மெண்டார் பார்லிமெண்டரி ஜாயிண்டுசெலெக்ட் கமிட்டிக்கு ஒரு அறிக்கையைத்தயாரித்திருப்பதாய்ச் சொல்லப்படுகிறது. பர்மாவின் இராஜிய நிலைமை இம்மட்டோடு நிற்கிறது. நாளை என்னவாகுமோ?

பர்மா அரசியலின் சதுரங்க விளையாட்டின் முடிவை ஒவ்வொருவரும் மிக்காவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். உத்தமப் பெரியார் இராஜீய துறையிலிருந்து ஒருவாறு ஓய்வு பெற்றுக்கொண்டு சென்ற மூன்று வருடகாலமாக கல்கத்தாவில் கார்மிக்கேல் ஆஸ்பத்திரியில் தங்கி வாசம் செய்து வருகிருர். பௌத்த மதத்தின் உண்மைத் தத்துவத்தை மேல்நாடுகளில் பிரசாரம் செய்து, பௌத்த மதத்தைப் பரவச் செய்வதற்காக, பர்மா சிலோன், சயாம், இந்தியா முதலிய நாட்டுச் சந்நியாசிகளின் கோஷ்டி யொன்றைத் திரட்டி, அதற்குத் தாம் தலைமை வகித்து பாதசாரியாய் யாத்திரை செய்வதென்று ஒரு பெரியதிட்டம் போட்டுக்கொண்டிருக்கிருர். உத்தமரின் திட்டப்படி பிக்ஷு லோகநாதர் என்ற இத்தாலி நாட்டுத்துறவி பர்மா பௌத்த சந்நியாசிகளின் கோஷ்டிக்கு தலைமை வகித்து, ரங்கூனிலிருந்து கால்நடை மூலம் கல்கத்தாவுக்கு அழைத்துச்சென்ருர்.

———

கம்பை தனவைசியர் கல்வி நிலயம்

காரியதரிசி திரு. மு. சோமசுந்தரம் செட்டியார்.

ஆரம்பமும் அதன் வளர்ச்சியும்.

நம் தனவைசிய இளைஞர்களில் சமூக அபிமானமும் கல்வி வளர்ச்சியில் கருத்துங் கொண்ட சிலரால் கலி ௫௦௨௫-ம் வருடம் ஆவணி மாதம் தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கம் என ஓர் சங்கம் இரங்கூனில் காணப்பெற்று இளைஞர் முன்னேற்றங்கருதி எல்லாத் துறையிலும் வேலை செய்து வந்தது. அதன் வளர்ச்சியில் நாட்டங்கொண்ட பெரியார் பலர் அபிமானிகளாகவும், அங்கத்தினர்களாகவும் சேர்ந்தனர். அதிலிருந்து இளைஞர்களுடன் பெரியார்களின் ஒத்துழைப்பும் கிடைத்தது. எனவே சமூகச் சீர்திருத்தத் துறையில் முனைந்து வேலை செய்ய இச்சங்கத்திற்குப் பல சந்தர்ப்பங்கள் வாய்த்தன. மேலும் நமது இளைஞர்கள் சங்கீதப் பயிற்சியிலும் தேர்ச்சிபெற்று விளங்க வேண்டுமெனக் கருதி இளைஞர்களைக் கொண்டு ஒவ்வொரு வருடமும் பக்தியும் நன்னெறியும் செறிந்த பல நாடகங்கள் நடிக்கப் பெற்றன. அதிலிருந்து வரும் பண வருவாய் வருடா வருடம் அதிகரித்துக்கொண்டே வந்தது. அப்பணங்கள் பொது நலங்கருதிச் செலவிடப்பட்டன வெனினும் அவ்வமயம் பர்மாவுக்கு வந்திருந்த நம் சிறுவர்களின் நிலைமையை யோசிக்கும் பொழுது யாரும் வருந்துதற்கேற்றவிதமாகவே யிருந்தது. அக்கால இளைஞர்கள் வேலை என்னவென்றால் காப்பி ஓட்டல்களுக்குச் சென்று பலகாரம் முதலியன வாங்கி வந்து கொடுப்பதும், ஓய்ந்த நேரங்களில் பெட்டியடிகளிலிருந்து காப்பி எழுதுவதும், பெரியார்களிற் சிலர் "மாணி" "மைத்துனன்" என முறைவைத்துக்கொண்டு அவர்கள் பேசும் அருவருக்கத்தக்க வார்த்தைகளைப் பழகிக் கொள்வதும், ஒவ்வொரு நேரமும் தவறாது பலகாரங்களையும் சாப்பாட்டையும் தலையணைக்குப் பஞ்சமுக்குவது போல் அமுக்கிப் பலம் சிறிதுமின்றி பளபளப்பாயிருப்பதும், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் நல்ல காற்று இன்னதென்றே அறியாது இண்டிருந்து நகைகளுடன் ஊர்போய்ச் சேருவதுமேயாகும். பிற்காலப்பெரியார்களாக விருக்கும் இளைஞர்களின் நிலைமையை யறிந்த இளைஞர் சங்கத்தார் அவர்கள் நலங்கருதி விபவ வருடம் புரட்டாசி மாதம் முதல் தேதியில் "தனவைசிய இளைஞர் கல்வி நிலயம்" என ஓர் போஜனவசதியோடு கூடிய கல்லூரி ஒன்று நிறுவினர். அதில் ஆரம்பத்தில் ஏழு மாணவர்களே யிருந்தனரெனினும் வரவர அதிகரித்துக்கொண்டே வந்தனர். அவ்வமயம் இளைஞர் சங்கத்தாரின் மூலதனம் ஏழாயிரத்துச் சில்லரை ரூபாய்களே யானதால் 30 க்கு மேற்பட்ட மாணவர்களை வைத்து நடாத்துதல் இயலாத காரியமென எண்ணினர். அப்பால் இரங்கூனிலிருந்த, சமூகாபிமானம், இளைஞர்பால் அன்பு முதலியன நிறைந்த பெரியார்கள் பலரின் ஒத்துழைப்பால் தனவைசியர் கல்விக் கழகம் Nattukkottai Chettiars' Educational Trust) எனப் பெயரிய ஒரு கழகம் நிறுவி அக்கழகத்தார் பால் கல்வி நிலயப்பொறுப்பை ஒப்புவிக்கப் பெற்றது. அக்காலத்திலிருந்த தனவைசியப் பெரியார்களொவ்வொருவருக்கும் கல்வி நிலயத்தின் பாலிருந்த ஆர்வம் இவ்வளவென்று சொல்வதற்கில்லை. எனவே நிலயம் பல துறைகளிலும் அபிவிருத்தி அடைந்து இரங்கூனில் சிறிய இரண்டு அறைகளிலிருந்து கம்பையில் அதற்குச் சொந்தமாக வாங்கிய 17 ஏக்கர் நிலப் பரப்புள்ளதும் அழகிய கட்டிடங்கள் அமைந்ததுமாகிய பூங்காவுக்கு மாற்றப்பெற்றது. மாணவர்களின் எண்ணிக்கையும் வளர்வதாயிற்று. ஆரம்பப் பள்ளியிலிருந்து மத்தியதரப் பள்ளியாகி அப்பால் உயர்தரப் பாடசாலை (High School) ஆகவும் மாறியது.

இதன் தற்கால நிலைமையும் நடைமுறையும்.

இண்டு ஆரம்ப வகுப்பு முதல் பத்தாவது வகுப்புவரை யிருக்கின்றன. 160 மாணவர்கள் பயில்கின்றார்கள். இவர்கள்எல்லோரும் தனவைசியச் சிறுவர்களேயாவர். உள்ளூரிலிருந்து வந்து படித்துச் செல்லும் பிற வகுப்புமாணவர்கள் (Day Scholars) பதின்மர் பயில்கின்றனர். இவர்கள் அவர்கள் சொந்தத்தில் புத்தகங்கள் வாங்கிக்கொண்டுவர வேண்டியதைத் தவிர எவ்விதமான கட்டணமும் கிடையாது. கல்வி நிலயத்தி



லேயே தங்கிப் பயிலும் மாணவர்கட்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 20 கட்டணம் வசூலிக்கப் பெறுகிறது. அவர்கட்கு உடையும் படுக்கையும் தவிர பிற எல்லாச் செலவுகளும் நிலயத்தைச் சார்ந்ததே. இந்நிலயம் மாணவர்கள் தங்குவதற்கு அழகிய கட்டிடங்கள் நான்கினையும், படிப்பதற்கெனச் சிறுசிறு கட்டிடங்களையும், இரண்டு போஜனசாலைகளையும், உபாத்தியாயர்கட்கென ஓர் கட்டிடத்தையும், பிற வேலைக்காரர்கட்கேற்றவிதமான கட்டிடங்களையும் கொண்டு அழகிய பூஞ்சோலையில் திகழுகின்றது. இங்கு மின்சார விளக்குகள் மிளிர்கின்றன. சுகாதார சம்பந்தமான எல்லா வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மாணவர்கள் நலங்கருதி ஒரு சிறு வைத்திய சாலையிருக்கிறது. அதில் வேண்டிய மருந்துகளெல்லாம் வாங்கி வைத்திருக்கிறது. ஒரு கம்பவுண்டர் எப்பொழுது மிருக்கிறார். ஓர் தேர்ச்சி பெற்ற டாக்டர் தினந்தோறும் வந்து செல்கின்றார். உணவு சுத்த போஜனமாகவே தயாரிக்கப் பெறுகிறது. மாணவர்கள் தங்கியிருக்கும் ஒவ்வொரு இடங்களிலும் அவர்களைக் கவனித்துக் கொள்வதற்கென ஓர் உபாத்தியாயர் கூடவே வசிக்கின்றார். வாரத்தில் ஒருநாள்தான் மாணவர்கள் இரங்கூனுக்குப் போய்வர அநுமதிக்கப்பெறுகின்றனர். இக்கல்வி நிலயம் ஆரம்பம் முதல் அரசாங்கக் கல்லூரிகளோடு சேராமலேயிருந்ததெனினும் 33ம் வருடம் ஜூன் மாதம் முதல் அரசாங்கத்தாராலும் அங்கீகரிக்கப் பெற்றிருக்கிறது. பிற கல்லூரிகளைப்பார்க்கிலும் இங்குள்ளவசதியென்னவென்றால் ஆரம்ப வகுப்பு முதல் ஏழாவது வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் அவ்வாறு மாதங்கள் பயின்றால் போதுமானது. எட்டாவது முதல் பத்தாவது வகுப்பு வரை மற்ற கல்லூரிகள்போல ஒவ்வொருவருடம் படிக்கவேண்டுமெனினும் விடுமுறை நாட்களைப்பகிர்ந்துகொடுத்து அப்பொழுதும் வாழ்க்கைக்குப் பயன்படும்படியான தொழிற்கல்விகளைக் கற்பிப்பதெனக் கருதியுள்ளார்கள். மேலும் படிப்பு நேரங்களில் மட்டும் வந்து படித்துச்செல்லும் கல்லூரிகளிலோ மாணவர்களின் நடத்தையைப் பற்றியே கவனிப்பதில்லை. ஆனால் நமது கல்வி நிலயம் போன்ற மாணவர்கள் தங்கிப்பயிலும் கல்லூரிகளிலோ எந்த நேரமும் மாணவர்களும் உபாத்தியாயர்களும் ஒன்றாகவே யிருக்கின்றார்கள். மாணவர்கட்குச் சந்தேகம் தோன்றும்போதெல்லாம் உபாத்தியாயர்களிடம் தெரிந்து கொள்ளலாம். உபாத்தியாயர்கள் மாணவர்களின் ஒவ்வொரு நடத்தையையும் நேரில் கவனித்து தவறுகண்ட விடத்துத் திருத்தலாம். சந்தர்ப்பம் வாய்க்கும்போதெல்லாம் நன்னீதிகளைப் போதிக்கலாம். மாணவர்கள் வீட்டுப் பாடங்கள் படிக்கும்போதும், இராப் பாடங்கள் படிக்கும் போதும் ஆசிரியர்கூடவே இருக்கின்றார்களானதால் சந்தேகம் வந்தவிடத்து மலைக்கவோ அதற்கென வேறு ஆசிரியர்கட்குச் சம்பளம் கொடுத்து அமர்த்தவோ வேண்டியதில்லை. மேலும் இக்கல்வி நிலயம் பட்டணத்திற்கு வெளியே ஒரு குறிப்பிட்ட காம்பவுண்டுக்குள்ளிருப்பதால் மாணவர்களின் மனம் பரிசுத்தமடைவதற்கேதுவாயிருக்கிறது. பட்டணங்களில் சிறு குழந்தைகளை வளரவிடுவதில் சில நன்மைகள் இருந்தாலும் இதனால் உண்டாகும் தீமைகளே யதிகமென்பதை யறிவுடையார் ஒப்புக்கொள்வர். பரிசுத்த மனமுடைய குழந்தைகளும் பலரின் சேர்க்கையால் அதினின்றும் தவறி விடுகின்றார்கள். நிம்மதியாக ஓர் இடத்திலிருந்து படிக்க நினைத்தாலும் சினிமாக்காரர்களும் டிராமக்காரர்களும் விளம்பரத்திற்காக அடிக்கும் நகாரசப்தங்களும் பாண்டு சப்தங்களும் இவர்கள் எண்ணத்தை இன்று என்ன நாடகம்? அதில் யார் யார் நடிகர்கள் என்ற ஆராய்ச்சியில் திருப்பி விடுகின்றன. இன்னும் பட்டண வாழ்க்கையால் நாகரீகம் தாகரீகம் என எண்ணி இளஞ் சிறுவர்கள் விழும் பள்ளங்கள் எண்ணித் தொலையா. விரிக்கிற்பெருகும். எனவே பட்டண வாசப்பள்ளிகளில் ஏற்படும் நன்மைகளை விட மாணவர்க்கு இங்கு பதின்மடங்கு அதிக நன்மைகள் உண்டென்பதைக்கூறி நமது கல்விநிலய நடைமுறையை விளக்குவது நலமென எண்ணுகிறேன்.

கல்வி நிலய நடைமுறைகள்.

அதிகாலை 5 மணிக்கு மாணவர்கள் படுக்கை விட்டெழுகின்றனர். கால் முகம்

சுத்தம் செய்து கொண்டு ஆறுமணிவரை அவரவர்கள்பாடங்களைப்படுக்கையிலிருந்தே பயில்கின்றனர். ஆறு மணிக்குமேல் ஒரு பகுதி மாணவர்கள் தேகப்பயிற்சிக்குச்செல்கின்றனர். தேகப்பயிற்சி அரை மணி நேரம் நடக்கின்றது. அப்பால் எல்லா மாணவர்களும் நேராடிச்சரியாக ஏழு மணிக்கு இறைவணக்க இல்லத்திற்கு வந்துசேர்கின்றனர். அங்குஆஜர்ப்பார்க்கப்பெற்றதன்மேல்இசை பயில் மாணவர் சிலர் தேவார திருவாசகம் முதலியன பாடியதும் எல்லா மாணவர்களும் மௌனத்துடன் தியானிக்கின்றனர். அப்பால் வரிசைக்கிரமமாகச் சிற்றுண்டிக்குச் செல்கின்றனர். எட்டரை மணி முதல் பதினொன்றே முக்கால் மணி வரையிலும், ஒன்றே முக்கால் மணி முதல் நான்கு மணி வரையிலும் பள்ளியிலிருந்துபயில்கின்றனர். பகலுணவு 12 மணிக்கும், சிற்றுண்டி மாலை நாலேகால்மணிக்கும்கொடுக்கப்பெறுகிறது. மாலை ௫ மணிமுதல் அரை மணிநேரம் ஒரு பகுதியினர் தேகப்பயிற்சி செய்து பிறமாணவர்களுடன் கலந்து கொள்கின்றார்கள். எல்லாமாணவர்களும் 6 மணி வரை அவரவர்கட்கு ஏற்றவிதமான விளையாட்டுக்களில் கலந்து கொள்கின்றனர். அந்தநேரங்களிலும் ஆசிரியர்களிற் சிலர் கூடவே நின்று விளையாடுகின்றனர். பின் 6—30 மணிக்கு மாலைக்கடனை முடித்துக்கொண்டு தத்தம் வகுப்புகளிற் போயிருந்து பழம் பாடம் படிக்கின்றனர். ஆசிரியர்களும் உடனிருந்து ஐயங்களைந்து ஆவன செய்கின்றனர். இரவு எட்டுமணிக்கு இராப்போஜனம் முடித்து ஒன்பது மணிக்கு துயில் கொள்கின்றனர். பாடமுறைகளும் பிற ஹைஸ்கூல்களில் எவ்விதம் நடத்தப்பெறுகிறதோ அவ்விதந்தானெனினும் நம்மவர்கட்கு இன்றியமையாத வேண்டிய கணக்கு முதலிய பாடங்களும், சமயம் சீர்திருத்தம் சம்பந்தமான போதனைகளும் நடத்தப்பெறுகிறது. ஒவ்வொரு வியாழக்கிழமைதோறும் மாலை 6 மணி முதல் எட்டு மணிவரை மாணவர் சங்கச் சார்பில் மாணவர்களாலும் பெரியார்களாலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் சொற்பெருக்குகளும் வாக்குவாதப் போட்டிகளும் நடைபெறுகின்றன. ஒவ்வொரு சனிக்கிழமை மாலையிலும் ஐஸ்கூல் மாணவர்கள் எல்லோரும் ஆங்கிலத்தில் கட்டாயமாகச் சொற்பெருக்காற்றவேண்டுமென விதி ஏற்படுத்தி அது போல நடைபெற்றுவருகிறது. இங்கு பல மாணவர்கள் வாலிபச் சாரணர்கள் (Scouts) சேர்ந்துள்ளார்களானதால் வாரம் ஒருமுறை அவர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறைபற்றி அறிஞர்களால் ஓர் சொற்பெருக்காற்றப் பெறுகிறது. தேகப்பயிற்சி என்பது எல்லா மாணவர்கட்கும் கட்டாயமாகும். எல்லா மாணவர்கட்கும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விடுமுறை நாளாகும். ஹைஸ்கூல் மாணவர்கட்கு மட்டும் ஞாயிற்றுக்கிழமையும் விடுமுறை நாளாகும். ஆனால் அவர்கள் அன்றுவெளி இடங்கட்குச் செல்லுதல் கூடாது. ஆசிரியர்கள் மாணவர்கள் உபயோகத்திற்கென ஓர் புத்தகசாலையிருக்கிறது. அதில் இன்றியமையாத வேண்டிய ஆங்கிலதமிழ்ப்புத்தகங்கள் 1500 வரை இருக்கின்றன. மாணவர்கள் தகுதிக்கேற்றவாறு ஒவ்வொருவரும் வாரம் ஒரு புத்தகம் வாங்கிப் படிக்க வேண்டுமென்று விதியேற்றி அதுபோல் நடந்து வருகிறது. ஒவ்வொரு நீண்ட விடுமுறை நாட்களிலும் மாணவர்களைத் தொகுதி தொகுதியாக வெளியிடங்கட்குங் கூட்டிபோய் இயற்கை முதலிய வற்றை நேரிற் காட்டிவிளக்கஞ்செய்யப்பெறுகிறது.


இங்குள்ள ஆசிரியர்களில் பெரும்பாலோர் தேர்ச்சிபெற்றவர்கள் (Trained) ஆகவும் மற்றோர் நீண்ட அநுபவமுள்ளவர்களாகவும் இருப்பதாலும், அவர்கட்கு வேறு எத்தகைய ஜோலிகளும் இல்லாது எல்லா வசதிகளும் இங்கேயே அமையப் பெற்றிருப்பதாலும் வேறு சிந்தனை எதுவுமின்றி மாணவர்கள் முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாயிருக்கிறார்கள். இங்கும் போதிக்கும் முறை மிக நன்றாயிருக்கிறதென்பதை ஐந்தாண்டுகளுக்கு முன் இண்டு வந்து ஆங்கிலப் பயிற்சி தொடங்கிய மாணவர்கள் இவ்வருடம் பத்தாவது வகுப்புப் பப்ளிக் எக்ஸாமினேஷனுக்குப் போகத் தயாரிலிருக்கின்றார்களென்பதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம். இன்னும்இளைஞர்நலங்கருதி இங்கு என்னென்ன வேலைகள் செய்ய இயலுமோ அவற்றை யெல்லாம் செய்ய டிரஸ்டார்மிகவும்விருப்பமுள்ளவர்களாக யிருக்கிறார்கள்.

பேற்றோரின் அசிரத்தை.


இவ்வளவு வசதிகளெல்லாம் நிறைந்திருந்தும் இங்கு 160 மாணவாகள்தான் பயில்கின்றார்களென்பது மிக வருந்தத்தக்க ஒன்றாகும். தற்காலம் நமது நிலையத்திலிருக்கும் சிறுவர்களைத் தவிர இன்னும் உத்தேசம் 200 தனவைசியச் சிறுவர்கள் பர்மாவில் வதிகின்றார்களெனத்தெரிகிறது. இவர்களை எல்லாம் நம் கல்வி நிலையத்திற்கனுப்புவார்களேயானால், பிற்காலத்தில் நமது சமூகத்தில் அறிஞர் பலரிருப்பதற்கு வசதிவாய்ப்பதோடு கல்வி நிலையமும் மிகவும் சீரும் சிறப்புமுற்று விளங்கும். ஆனால் விரல்விட்டு எண்ணத் தகாக சில மாணவர்கள் பிறகல்லூரியிலும் பயில்கிறார்கள். காரணம் அவர்கட்கு வீட்டில் வந்து பாடம் சொல்லிக்கொடுப்பதற்கென ஒரு ஆசிரியர் அமர்த்தப்பெற்றிருப்பார். அவர் ஆபீஸ்களில் வேலை செய்துவிட்டு மாலை நேரங்களில் வீட்டிற்கு வந்து இச்சிறுவர்கட்குச் சொல்லிக்கொடுப்பது வழக்கம். அவர்களின் பெற்றோர்களின் தகுதிக்கேற்ப 10 ரூபாய் முதல் 25 ரூபாய்வரை சம்பளம் கொடுக்கப்பெறுகிறது. அவர்கள் பையன் கல்லூரியில் பயின்றுவந்தபாடத்தை நன்றாய்விளங்கவைப்பதோடு அந்த வருஷத்தில் அவன் படிக்கும் வகுப்பில் தேர்ச்சியடையச் செய்வார்கள். ஏன் வீட்டுப்பாடமும் கல்லூரிப்பாடமும் இங்கேயே சொல்லிக் கொடுத்து ஒருவருடத்திற்குப் பதிலாக ஆறு மாதத்தில் தேர்ச்சியடையச் செய்யும் நமது நிலையத்திற்கு அச்சிறுவர்களை அனுப்பக் கூடாதென்றால் அச்சிறுவர்களின் பெற்றோர்கட்கு அவ்வீட்டாசிரியர்களின் வாக்கு வேத வாக்காயிருக்கிறது. இக்கல்வி நிலையத்திற்கு அச்சிறுவர்கள் வந்துவிடுவார்களேயானால் வீட்டாசிரியர்களின் பிழைப்பில் மண்விழுந்து விடுகிறது. எனவே இப்பேச்சு ஆரம்பிக்கும்போதே அவர்கள் கம்பைக்குச் செல்வதைப் பார்க்கிலும் பிறகல்லூரிகட்கு அனுப்புவதுதான் நலமெனப் பெற்றோர்கட்கு அறிவுறுத்த ஆரம்பிக்கின்றனர். பெற்றோர்களும் விஷயத்தைப் பாராது அவ்விதமே செய்கின்றனர். ஒரு சமூகத்தார்கட்கெனப் பெரும் பொருள் செலவிட்டு ஒரு ஸ்தாபனம் நிறுவியிருக்கும்போது சமூகாபிமானமும் கல்வி வளர்ச்சியில் ஆர்வமுமில்லாதிருக்கும் பெற்றோர்களைப்பற்றி நாமென்ன கூறுவது? இன்னும் பல சிறுவர்களைப் பெட்டியடியிலேயே வைத்து அறிவு, உடல் வளர்ச்சிகளைத் தடைப் படுத்துகின்றார்கள். அவர்களின் பெற்றோர்களிடம் கேட்டால் 'நாங்கள் என்ன படித்தோம். எங்கள் முன்னோர்கள் என்ன படித்தார்கள். எங்களைப்போல அவனும் சம்பாதித்து பிள்ளைகுட்டிகளைப் பெற்றுக்கொண்டு நல்லாயிருந்தால் போதும்" மென்கிறார்கள். இதிலிருந்து நம்மவர்களில் சிலர், மனிதன், சம்பாதிக்கவும் பிள்ளை குட்டி பெறுவதற்குந்தான் பிறக்கின்றானென்று கருதுகிறார்களென்பது வெளிப்படை. இந்தக் குறுகிய நோக்கத்திலேயே வாழும் மக்களுக்கும் மாக்களுக்கும் சிறிதும் வேற்றுமை கிடையாது. மனிதன் என் பிறந்தான்? அவன் செய்யவேண்டியதென்ன? அடையவேண்டியதென்ன என்பனவற்றையெல்லாம் சிறிதும் சிந்திக்கவேண்டாமா? அப்படிச் சிந்திப்பதற்கு ஏற்ற சாதனப்பொருள் கல்வியல்லவா? அதனை அவமதித்தலைப்பற்றி நாம் வருந்தவேண்டியதைத் தவிர வேறொன்றும் செய்தற்கில்லை. ஆனால் பணம் சம்பாதிப்பதில் எல்லோரும் குறியாயிருக்கிறார்கள். அதன் பொருட்டாவது தம் சிறுவர்களுக்குக்கல்வி போதிக்க வேண்டாமோ? முன்போல எண்சுவடிதான் நமது உயர்தரப் படிப்பு என எண்ணி அது முடிந்ததும் தொழிலாராய்ச்சியில் புகுந்த காலம் மலையேறிவிட்டதென்பதை அறிவுடையோர் ஒப்புக் கொள்வர். எனவே ஒரு பத்தாவது வகுப்பு வரையாவது ஒவ்வொருவரும் ஆங்கிலக் கல்வியையும் தாய்பாஷையையும் தெரிந்து கொண்டாலொழிய உலக மக்களுடன் சேர்ந்து வாழமுடியாது. ஆதலான் நம்மவர்கள் தத்தம் சிறுவர்கட்கு உண்மையில் நன்மை செய்யவேண்டுமென எண்ணுவார்களேயானால் அவர்களைத்தேகப்பயிற்சி முதலியன செய்யவிடாது ஒரே இடத்திலிருந்து உணவையருத்தி வெறும் பொம்மையாக்குதலையும், சிறு பிராயத்தில் விவாகஞ் செய்து வைத்துப் பேரன் பேத்திகளை எதிர் பார்த்துக் கொண்டிருப்பதையும் அவர்கள் பேரால் பல கடைகளில் பணங்களை எடுத்து வைத்து அந்த வட்டியிலிருந்து அவர்கள் ஜீவித்து சோம்பேறிகளாகும்படி செய்வதையும், படிப்பில்லாது வெறும் பணக்காரர்களாவதினால் பணத்தைப் பயன்படுத்தும் விஷயம் தெரியாது அப்பணத்தினால் அவர்கள் துன்மார்க்கர்கள் ஆவதையும் தவிர்த்து நம் சிறுவர்களையெல்லாம் கல்வியறிவிற் சிறந்தவர்களாகவும், உடலுரம் பெற்றவர்களாகவும், நன்னடத்தையுள்ளவர்களாவும் ஆக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்ளுகிறேன். இது கருதியன்றோ நம் பொய்யில் புலவரும் "தந்தை மகற்காற்றுநன்றியவையத்து,முந்தியிருப்பச் செயல்" எனக்கூறியிருக்கின்றார். அன்புமிக்க தனவைசியப் பெரியோர்களே !

நமது கல்வி நிலையமானது நமது சிறுவர்கட்கு என்றே நிறுவி அவர்கட்கு வேண்டிய எல்லா வசதிகளும் செய்துவைக்கப்பெற்றிருக்கின்றது. இதில் நீங்களும் உங்கள் சிறுவர்களை யனுப்பாது பிற சிறுவர்களையும் அநுமதிக்காது இருப்பீர்களேயானால் "கலையளவேயாகுமாம் காரிகையார்" போல் அதன் பயனை யடையவிடாது செய்தவர்களாவீர்கள். மேலும் இக்கல்வி நிலைய விஷயத்தில் ஏதாவது குறைப்பாடு அல்லது சந்தேகம் உங்கள் கண், காதுகளுக்குத் தோன்றுமேயானால் நேரிலோ கடிதமூலமோ கேட்டு ஆவன செய்தற்குத் தனவைசியர் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு. எனவே எக்காரணம் பற்றியும் யாரும் ஒதுங்கி நிற்க வேண்டியதின்று. ஆதலான் உங்கள் அருமைச் சிறுவர்களை இண்டு அனுப்பி இக்கல்வி நிலைப்பப்படிப்பு முடியும்வரை இருந்து படித்துவரச் செய்யும்படியும் கல்வி நிலைய வளர்ச்சி கருதி உங்கட்குத் தோன்றும் உயர்ந்த எண்ணங்களை அடிக்கடி தெரிவிக்கும்படியும் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.


பர்மாக் காட்சிகள்.



Custom House கஸ்டம் ஹவுஸ்.




Secretariat செக்ரட்டேரியட்.




General Post Office ஜெனரல் போஸ்டாபீஸ்.


பர்மா நகரத்தார் கோவில்கள்.



மாந்தலே கோவில்.



மாந்தலே மடம்.



மைனு மடம்.

அவுரங்கசீபின் கடிதங்கள்

"சரித்திரக்காரன்"

மொகலாயவம்சத்தின் கடைசி சக்ரவர்த்தியும், கி.பி. 1658 முதல் 1707-ம் வருஷம் வரை பாரதநாட்டை ஆண்டவனுமான அபுல் முசாபர் முஹைதீன் முகமது அவுரங்கபகதூர்—அவுரங்கசீபின் முழுப் பெயர்—இஸ்லாம் மத அபிவிருத்திக்காகப் பெரிதும் பாடுபட்டு உழைத்து வந்தான். ஆனால் இந்த உழைப்பின் காரணமாக இவனைப்பற்றி பல தவறான கருத்துகள் தோன்றியிருப்பது பெரிதும் வியனிக்கத் தக்கது. அவுரங்கசீப், தன் குடிகளிடத்தில் அளவுகடந்த விசுவாசங்கொண்டிருந்தான்; அவர்களுடைய நலத்திலேயே தன் கவனத்தைச் செலுத்தி வந்தான். "எளியவாழ்க்கையும் உயரிய நோக்கமும்" என்ற சீரிய கொள்கையை, தனது அன்றாட வாழ்க்கையில் நடத்திக் காட்டி வந்தான். இவை தவிர ஓர் அரசனுக்கு இன்றியமையாது வேண்டப்படும் உயர்தர அம்சங்கள் யாவும் அவுரங்கசீபினிடத்தில் பொருந்தியிருந்தன. உதாரணமாக காலத்திற்குத் தகுந்தபடியும், இடத்திற் கேற்றாற்போலவும் உத்தியோகஸ்தர்களைப் பொறுக்கி யெடுக்கும் ஆற்றலும், அவர்களை எப்பொழுது சன்மானிக்கவேண்டும், எப்பொழுது கண்டிக்கவேண்டும் என்ற யோசனையும், சத்துருவையும் மித்துருவையும் எப்படி நடத்த வேண்டுமென்ற பாகுபாட்டு அறிவும் அவுரங்கசீபினிடத்திலே பூரணமாக விளங்கின. தவிர, அவுரங்கசீப் அரசாங்க விஷயங்களை தனது உடல் நலத்தைக் கூட கவனியாது குன்றா ஊக்கத்துடனும் தளரா முயற்சியுடனும் நடத்திவந்தான். நாட்டின் பல பாகங்களிலும் நடக்கும் விஷயங்களை ஒற்றர்கள் மூலம் அறிந்து அவ்வப்பொழுது அவைகளுக்கு ஆகவேண்டியனவற்றை உடனுக்குடன் செய்துவந்தான். இவைகளிற் சில அம்சங்களை விளக்க வேண்டி, அவுரங்கசீப் அந்தந்த மாகாணப்பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்ட தன்குமாரர்களுக்கும் வேறு பல முக்கிய உத்தியோகஸ்தர்களுக்கும் எழுதியகடிதங்களுள் ஒருசிலவற்றை மட்டும் இங்கு எடுத்துக் காட்டுகிறேன்.

I

எளிய வாழ்க்கை.

இந்தக் கடிதம் அவுரங்கசீபின் இரண்டாவது குமாரனும், பின்னால் பகதூர் ஷா என்ற பெயருடன் பட்டத்திற்கு வந்தவனுமான முகம்மது மூவாஸம், காபூலில் சக்கரவர்த்தியின் பிரதிநிதியாக ஆண்டுகொண்டிருந்தபோது எழுதப்பட்டதாகும்.

மகிழ்ச்சி நிரம்பிய மகனே! முகம்மது மூவாஸம்! ஆண்டவன் உன்னைக்காத்து ரட்சிப்பாராக. என்னுடைய நெருங்கிய நண்பர் ஒருவர் எழுதிய கடிதத்தின் மூலமாக, நீ, தாபாருக்கு வரும்போது மஞ்சள் நிறமுள்ள தலைப்பாகை அணிந்துகொண்டும், 'பல்வானி' (ஒரு வகைப் பட்டுத் துணி)யை தேகத்தின் மீது தரித்துக்கொண்டும் இருக்கின்றாய் என்று தெரிய வந்தது. நீ இப்போது 46வது வயதை அடைந்துவிட்டாய். பேஷ்! நரைத்த தாடியுடன் இந்த ஆடம்பரமான உடைகளை அணிகிறாய்!

II

குடிகளிடத்தில் பரம விசுவாசம்.

இந்தக் கடிதமும் முகம்மது மூவாஸத்துக்கு எழுதப்பட்டதாகும்.

பட்டத்திற்குரிய மூத்த மகனே! என்னுடைய கடிதத்தை உனக்கு நேரில் சீக்கிரம் அளிக்கும்பொருட்டு முனும்காலை இப்பொழுது அனுப்பியிருக்கிறேன். என்னைப்பற்றிய பிரக்ஞை இப்பொழுது உனக்கு இல்லை. நான் யார், நான் எங்கே செல்வேன், பாவங்கள் நிறைந்த இந்தப் பாவிக்கு (அவுரங்கசீபுக்கு) என்ன கதி நேரிடும் என்ற விஷயங்கள் எனக்குத் தெரியாது. ஆண்டவன் பாதுகாப்பில் எல்லோரையும் ஒப்புவித்துவிட்டு அனைவரிடத்திலும் கடைசி முறையாக விடைபெற்றுக்கொள்ளுகிறேன். பிரபலமும், மங்களகரமும் நிறைந்த என் புதல்வர்கள், (எனதுபிற்காலத்தில்) தங்களுக்குள் சண்டை போட்டுக்கொண்டு, கடவுளின் ஊழியர்களாகிய ஜனங்களிடையே படுகொலை நிகழுமாறு நடந்து கொள்ளக் கூடாது. அனைவருடைய மனதையும் மாற்றுகிறவனாகிய ஆண்டவன் இவ்வுலகத்திலே தனது பொக்கிஷமாயுள்ள பிரஜைகளைக் காப்பாற்றும் பொருட்டுத் தனது அருளைப் பொழிவானாக! அரசர்களுக்கு நல்வழி காட்டுவானாக!

III

அரச கடமைகளைக் கவனி.

அவுரங்கசீபின் மூன்றாவது குமாரனான முகம்மது அஸ்டிஷா, குஜராத்தி மாகாணத்தில் இராஜப்பிரதிநிதியாயிருந்த போது அவனுக்கு எழுதப்பட்ட கடிதம் இது.

பெருமை நிறைந்த மகனே! பகதூர்பூருக்கும் கூஜாஸ் தேபூனி யாத்துக்கும் இடையேயுள்ள ராஜபாட்டையில் ஆபத்து நிரம்பியிருக்கிறதென்று ஒற்றர்களின் அறிக்கைகளினால் தெரிகிறது. கொள்ளைக்காரர்கள், வியாபாரிகளையும், பிரயாணிகளையும் கொள்ளையடிக்கிறார்கள். யாத்ரிகர்கள் நிர்ப்பயமாய் பிரயாணஞ் செய்ய முடிவதில்லை. உன்னுடைய படையும் என்னுடைய படையும் தங்கியிருக்கும் இடத்திற்கு அருகாமையிலேயே இத்தகைய வழிப்பறிக் கொள்ளைகள் நடைபெறுமானால், தொலைவிலுள்ள பாதைகளின் நிலைமை எப்படி யிருக்கும்? ஒற்றர்கள், உனக்குச் சரியான செய்திகளைத் தெரிவிப்பதில்லை போலும்! அஜாக்ரதையும் கவனமின்மையும் அரசுரிமைக்கு விரோதமானவைகளாகும். இப்பொழுது நீ புதிய ஒற்றர்களை நியமித்து அவர்களுக்கு எச்சரிக்கையும் செய்ய வேண்டும். பழைய ஒற்றர்களைத் தண்டிக்கவும் வேண்டும். மேற்படி ராஜபாட்டையில், கொள்ளைக்காரர்களின் உபத்திரவமில்லாதபடி செய்ய உடனே ஒரு சேனையைத் தயார் செய். உன்னுடைய இந்த வெட்கங்கெட்ட நிருவாகத் திறமையின்மையை இன்னும் எவ்வளவுகாலம் அநுமதிக்கப்போகிறாய்? உன்னை நஷ்டமடையும்படியோ இலாபமடையும்படியோ கூறவில்லை. ஆனால் நல்ல சந்தர்ப்பத்தை யிழந்துவிடும் மகனே! எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறாயோ அதை உடனே செய். நீ மகிழ்ச்சியோடிருப்பாயாக!

IV

வேட்டையாடலாமா?

இதுவும் மேற்படி முகம்மது ஆஸத்திற்கு எழுதிய கடிதமாகும்.

பெருமை நிரம்பிய மகனே! தாலி நதிக்கருகாமையில் நீ சென்ற ஒருமாத காலமாய் நாரைகளைச் சுட்டுக் கொல்வதில் காலங்கழித்தாய் என்று தெரிகிறது. வேட்டையினால் சந்தோஷமும், இனிய உணவும் கிடைக்கின்றனவென்பதுண்மையே. ஆனால் உன்னுடைய கடமைகளாகிய இராஜகாரியங்களைக் கவனித்துவிட்டுப் பிறகு வேட்டையில் கவனஞ் செலுத்தினால் அஃது இன்னும் மகிழ்ச்சி நிரம்பியதாயிருக்கும். மதத்திற்கு முரணில்லாமலும் வழக்கத்திற்கு விரோதமில்லாமலும் அரசகாரியங்களை ஒழுங்காக கவனிக்கவேண்டும். அரசனுக்குரிய பொறுப்புகளை வழக்கமாக அநுசரிக்கப்பட்டு வந்த சம்பிரதாயங்களும், பிரபல சரித்திரங்களும் வேறுபல நூல்களும் விளக்கமாகக் கூறுகின்றன. மற்றக் கடமைகள் எல்லாவற்றையும்விட அரச கடமைகளைத்தான் முக்கியமாகக் கொள்ளவேண்டும். ஒரு ஜில்லாவின் விஷயங்களைப் பூரணமாகக் கவனித்துவிட்டதாக நீ திருப்தி யடைந்தாயானால் கான்ஜஹான், அகேப்கான், ஷிஜத்கான், முகம்மது பேக் ஆகியவர்களுடைய காரியங்களைக் கவனிக்கக்கூடாதா? நீ வேட்டையாடிக் கொண்டிருப்பதில் மகிழ்ச்சி கொள்கிறாய்? ஆனால் நானோ கோட்டைகளை ஜயிப்பதிலும் சத்துருக்களை அடக்குவதிலும் முனைந்து நிற்கிறேன். அந்தோ? இம்மையிலும் மறுமையிலும் உன்னுடைய நிலைமை என்னமாயிருக்கப் போகிறதோ?

V

தன்செயல்களுக்கு மனமிரங்கல்

இந்த கடிதம் தன்கடைசிகுமாரனான காம்பக்ஷுக்கு அவுரங்கசீப்தன் மரணத்தறுவாயில் எழுதியதாகச் சொல்லப்படுகிறது.


அழகுள்ள மகனே! தன்னிச்சைப்படி நடக்கும் மனிதர்கள் நிரம்பிய இவ்வுலகத்தில் ஆண்டவன் திருக் குறிப்பைப் பற்றியும் அவனது அருட் சக்தியைப் பற்றியும் உனக்கு நான் எடுத்துக் கூறினேன். ஆனால் இந்தப் போதனைகளை நீ கேட்கவுமில்லை; அங்கீகரிக்கவுமில்லை. நானே உங்களினின்றும் பிரிந்து வேறு உலகத்திற்குச் செல்கிறேன். உனக்குப் போதிய அறிவும், ஆற்றலும் இல்லையே யென்று இரங்குகிறேன். இப்பொழுது இரங்குவதால் என்ன பயன்? இம்மையிலே நான் செய்த பாவச் செயல்களின் பலனை மறு உலகத்திற்கு எடுத்துச் செல்கிறேன். இயற்கையின் நியமம் விசித்திரமானது. தனியனாக இவ்வுலகத்தில் தோன்றிய நான் இப்பொழுது இந்தப்பாவ மூட்டையுடன் வேற்று உலகத்திற்குச் செல்கிறேன். பன்னிரண்டு நாட்களாக நான் ஜுரத்தால் அடிபட்டும் அது என்னுடைய தேகத்தில் சக்தியில்லாததுகண்டு அதுவிட்டு ஓடிவிட்டது. எங்கெங்கு எனது பார்வையைச் செலுத்துகிறேனோ அங்கெல்லாம் ஆண்டவன் தோற்றமே எனக்குப் புலப்படுகிறது. என்னுடைய பிற்காலத்திலே பட்டத்திற்கு வருவோர் பலஹீனர்களாயிருப்பதால் அவர்களால் என்னுடைய உத்தியோகஸ்தர்களும், ராணுவமும், பிரஜைகளும் எப்படி நடத்தப்படுவார்களோ என்ற கவலையே என் துக்கத்தை அதிகப் படுத்துவதாயிருக்கிறது. என்னையே நான் தெரிந்து கொள்ள முடியாதவனாயிருக்கிறேன். நான் பல பாவச் செயல்களைச் செய்திருக்கிறேன். எனக்கு எத்தவிதமான தண்டனை கிடைக்

எனது ஆகாய விமானப் பயிற்சி

திரு. ஆவுடையப்பன்

1929-ஆம் ஆண்டின் இறுதியில் ஒரு நாள் மாலை வேளையில் நான் அமெரிக்காவிலிருந்து வெளிவரும் மாதப்பதிப்பு ஒன்றை வாசித்துக் கொண்டிருந்தேன். அதில் கீழ்வரும் சமாசாரம் காணப் பெற்றது "ஏழையான லிண்டன்பர்க் என்பவர் 36 மணி நேரத்தில் அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தைக் கடந்து பல லக்ஷ ரூபாய் சன்மானமும் பெருங் கௌரவமும் அடைந்தார்" இதுவே எனது ஆகாயவிமானப் பயிற்சி செய்ய வேண்டும் என்ற ஆசைக்கு முதல் தூண்டுதலாகும். பிறகு இந்தியா கவர்ன்மெண்டிற்கு என் அபிப்பிராயத்தைத் தெரிவித்தேன். அதற்கு அவர்கள் என்னை இங்கிலாந்து சென்று பயிலும்படி கூறினர். பிறகு அடுத்த அறிவிப்பில் சென்னையில் ஆரம்பிக்கும் ஆகாயவிமான சங்கத்தில் சேர்ந்து கற்றுக் கொள்ளும்படி செய்தார்கள். முதலில் எனக்கும் ஒரு ஆங்கிலேயருக்கும் பயிற்சியாரம்பஞ்செய்தார்கள். 10 மணி நேரம் வரை (ஒவ்வொரு நாளும் அரைமணி நேரமாக) ஓட்டாது சாதாரணமாகப் பிரயாணம்மட்டும் செய்தோம். பிறகு ஓட்டுவதற்கு Control செய்ய அநுமதியளித்தனர். பைலட்டுடன் (Bilot) உதவி பெற்றுப் பழகிவந்தேன். இவ்வாறு 7 மணி நேரம் பறந்தானதும், அதாவது 17-வது மணியில் தன்னுதவியாற் பறக்கும் அநுமதி (Solo) அளிக்கப்பெற்றது. நிரம்ப சிரமத்துடன் இறங்கவேண்டியதா யிருந்தது. பறப்பது மட்டும் எளிதாயிருந்தது. இவ்வாறு ஒருவருஷம் பறந்து பழகினேன். 1930 இறுதியில் லைசென்ஸ் கிடைத்தது.

ஒருநாள் பெங்களூருக்குப் பறந்து சென்றேன். ஒன்றரை மணி நேரத்தில் அவ்வூரைச் சேரலானேன். விரைவான ரயிலும் சேர்தற்கு 7 மணி நேரமாகும். ஹைதராபாத்திற்குப் பல முறைகளும் காரைக்குடி, திருச்சி, மதுரை, திருநெல்வேலி முதலிய பல தென்னாட்டிலுள்ள இடங்களுக்கும் சென்றேன். மேலும் பாம்பே டெல்லி, கல்கத்தா முதலிய பல வடநாட்டி



லுள்ள இடங்களுக்குச் சென்றேன். அதாவது 93 இடங்களில் ஒரு முறையல்லது பல முறைகளில் இறங்கியுள்ளேன்.

கொல்லப்பள்ளி ஜமீன்தார் அமெரிக்காவிலிருந்து ஆகாய விமான Design (சித்திரம்) மற்றும் சில சாமான்களும் வரவழைத்தார். நம் நாட்டில் என் மேற்பார்வையில் அது கோர்த்துச் செய்யப்பட்டது. எண்டர்சன் மோட்டார் சைக்கிள் எஞ்சின் அதில் இணைக்கப்பெற்று அது தயாராயிற்று. பறப்பதற்குஇந்தியா கவர்ண்மெண்டார் அதற்கு அநுமதியளிக்கவில்லை. அது பறத்தற்குதவாதென்பது அவர்கள் நம்பிக்கை. ஆனால் நான் பெஜவாடாவிலிருந்து சென்னைக்கு இதில் பறக்க முயன்றேன். சென்னை சேர்ந்துவிட்டது. ஆனால் நகரத்தின் மேல் பறக்கும்பொழுது, இஞ்சின் Fail ஆகி கெட்டுவிட்டது. அதனால் ஒரு வீட்டுக் கொல்லையில் இறங்கவேண்டியதாயிற்று. எனக்கு எவ்வித இடையூறுமின்றி, எஞ்சினுக்கு மட்டும் பழுது ஏற்பட்டது.

சைனாவிற்குப் பிரயாணஞ் செய்ய ஆயிரம் மைல் ஒரே நேரத்தில் இறங்காது பறக்கும் கப்பலொன்று தயாரித்துப் புறப்பட்டேன். கோலாப்பூரில் இறங்கினேன். அங்கிருந்து புறப்பட்டேன். ஆனால் Start பண்ணும் பொழுதே ஒரு சுவற்றில் மோதி விமானத்திற்குச் சேதம் ஏற்பட்டது. சமஸ்தானத்து ராணியார் எங்களுக்கு வேண்டிய உதவிகள் செய்தனர். ஆகவே சைனாப்பிரயாணம் நிறுத்தப் பெற்றது.

வேறு மிஷின்ஒன்று வாங்கினேன். ஹைதராபாத்திற்கு ஒரு முறை செல்லும் பொழுது பெரும் புயல் காற்று வரவே, மேகத்தினிடையே இரண்டு மணி நேரம் பறந்து சென்று மழையிருட்டில் இரவு 7 மணிக்கு ஹைதராபாத்திற்கு 14 மைல் தூரத்திலுள்ள நடுக்காட்டில் லேக் ஒன்றில் இறங்கி உறங்கலானோம். பிறகு காலையில் நடந்து சென்று பெட்ரோல் கொண்டு வந்து திடல் சரி செய்து புறப்பட்டோம்.

செட்டி நாட்டில் கனம் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்கள் இரண்டு லக்ஷ ரூபாய் வரை செலவு செய்து அமைத்திருக்கும் ஆகாய விமான நிலையம் ஸ்தலம் (Aerodrome) செட்டிமார் நாட்டிற்குப் பெரிதும் வசதியளிப்பதாகும். இந்தியாவிலேயே இந்நிலையந்தான் மிகவும் வசதியானது. ராஜா அவர்கள் இந்த Sportsக்கு எவ்வளவும் உதவிபுரியத்தயாராயிருப்பது எனக்கும் பிறருக்கும் மகிழ்ச்சி தருவதாகும். சென்னையிலிருந்து செட்டிமார் நாட்டிற்கு நான் அடிக்கடி வருவதற்கு இது பெரிதும் உதவியாயிருக்கிறது. செட்டி நாட்டில் ஆகாயவிமானசங்கம் ஒன்று ஸ்தாபிக்கப் பெற்றிருக்கிறது. அதற்கு 30000 ரூபாய் செலவில் ஒரு கட்டிடம் கட்டப் பெற்றிருக்கிறது. அதில் பலர் ஊக்கம் கொண்டு அங்கத்தினராகியுள்ளனர். சிலர் பழகவும் விரும்பியிருக்கின்றனர். செட்டிமார் நாட்டில் (Jolly trip) ஆக ஆயிரக்கணக்கான ஜனங்கள் எங்கள் விமானங்களில் பறந்து மகிழ்ந்துள்ளார்கள். செட்டிமார் நாட்டிலேயே இந்த நிலையம் ஏற்பட்டது முதல் பெரிய உணர்ச்சியை உண்டு பண்ணியிருக்கிறது. காரைக்குடி அ. மு. க. அள. ராமசாமி செட்டியாரவர்கள் விமானப்பயிற்சி பெற இசைந்துள்ளார்கள். பழக்க ஏற்பாடுகள் நிகழ்கின்றன. இவர்கள் மிகவும் சிரத்தையுடையவராவர். ஆகாய விமானப் பிரயாணம் எனக்கு மிகவும் எளிதான தோன்றுகிவிட்டது. கார்ப் பிரயாணம்மாதிரியிருக்கிறது. அது எனக்கு மிகவும் சந்தோஷத்தையும் ஊக்கத்தையும் அளிக்கிறது.

———

கும் என்பது எனக்குத் தெரியாது. ஆண்டவனால் என்னுடைய பிரஜைகள் காப்பாற்றப் படுவார்களென்பது நிச்சயமேயாயினும், வெளியுலக நிகழ்ச்சிகளுக்கு ஏற்றாற்போல், அவர்களைக் காப்பாற்றுவது, முகமதியர்களுடையவும் எனது குமாரர்களுடையவும் கடமையாகும். (என் மூன்றாவது குமாரனை) ஆலமும் என்னருகாமையில் இருக்கிறான். உனக்கு என்ன செய்யவேண்டுமென்பதைப் பற்றி அவனிடம் கூறியிருக்கிறேன். தவிர, என்னுடைய கடைசி கோரிக்கையையும் நீ அங்கீகரிக்க வேண்டும். அதாவது யுத்தங்களில் முகம்மதியர்கள் கொல்லப்படக்கூடாது. அப்படி அவர்கள் கொல்லப்பட்டால் அந்தப்பழியானது இந்தப்பயனற்ற ஜீவனாகிய அவ்ரங்கசீபின் மீது சாரும். உன்னையும், உன் குமாரர்களையும் ஆண்டவன் வசத்தில் ஒப்புவித்துவிட்டு இந்த உலகத்தினின்றும் பிரிந்து செல்ல உன்னிடமிருந்து விடைபெற்றுக் கொள்கிறேன். நான் மிகுந்த அமைதியுற்றிருக்கிறேன்; பகதூர்ஷா முன்னிருந்த இடத்திலேயே இருக்கிறான். என் பேரப்பிள்ளையாகிய ஆஜிம்இக்தியாவின் எல்லைப்புறத்திற்குச் சென்றிருக்கிறான். உலகஇன்பங்களை அநுபவியாத ஹியாத்-உன்-நிஸா துக்கத்தில் ஆழ்ந்து கிடக்கிறான். பீகத்தினுடைய நிலைமை மிகவும் கேவலமாயிருக்கிறது. உன் தாயாராகிய உதே பூரி என்பாள், நான் படுக்கையிலிருந்த காலத்தில் என் பக்கத்திலேயே யிருந்தாள். என் மாணத்திற்குப் பிறகு என்னுடன் கூடவே அவள் வருவதாகத் தீர்மானித்திருக்கிறாள். உனது உறவினர்களும் வேலைக்காரர்களும் வஞ்சகமாய் நடந்து கொண்ட போதிலும் நீ அவர்களிடத்தில் அன்பாகவும் ஜாக்ரதையுடனும் நடந்து அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். சட்டைக்குத்தகுந்தபடி துணியை நீ கத்தரித்துக்கொள்ளவேண்டும். ஆண்டவன் அருள் உன் மீது பொழிவதாக!

———

இளைஞர் இயக்கம்

திரு. சு. வீர. வீரப்பன்

பொதுவாக எந்த நாடும், எந்தத் தேசமும் எந்தச் சமூகமும், முன்னேற வேண்டுமானால் அதற்கு அவ்வந் நாட்டிலுள்ள, தேசத்திலுள்ள, சமூகத்திலுள்ள இளைஞர்களே உயிர் நாடியாயிலங்க வேண்டும். அவர்களின் தொண்டே முன்னேற்றத்தை விளைவிக்கும், அவர்களாலேயே சீர்திருத்த வேலைகள் எவ்வித சிரமுமின்றிச் சுலபமாக நடைபெறும். அவர்கள் பாற்றோன்று முணர்ச்சியே பல வகைப்பட்ட துரிதமான வேலைகளை யாக்குவிக்கும். அவர்களையே பிரதான கர்த்தாக்களாகக் கொண்டு முன்னேறிய தேசங்கள் பல. இங்கிலாந்து யுத்தகாலத்திலே தன்னகத்தே கல்விச்சாலைகளிற் பயின்று கொண்டிருந்த இளைஞர்கள் பலரின் ஆருயிர்கொடுத்தன்றோ வெற்றி பெற்றது. ஆதலால் இளமையே எக்காரியங்களுக்கும் இடந்தரும் என்பதுறுதி.

இவ்வுலகின் கண்ணே, பிறப்பும் இறப்பும் ஏற்படுவது இயல்பு. ஒவ்வொரு ஆத்மாவும் உடலெடுத்து அதனாலாய பயனை அடையவேண்டுவது அவசியம். ஆதலால் மனிதப்பிறவி கொண்டவர்களாகிய நமது கடமைகள் பலவுள. அவற்றுள் முதற்கடமையாக தனவணிக சமூகத்திலுதித்த நாம் கொண்டு செலுத்தவேண்டுவது நமது சமூக சீர்திருத்தமாகும்.


நம் நாடு இன்றிருக்கும் நிலையில் இன்னும் பல வருடங்களைக் கடக்குமாயின் பல இன்னல்களுக்குள்ளாகி உருவழிந்து தோன்றும் என்பதிற்சிறிதுமையமில்லை. ஆகவே அதன் பிற்போக்கை--ஆதாவற்று அழியும்போக்கை இவ்விதமேவளாவிடுவது பேதைமையாகும்.

பல பல்லாயிரக் கணக்கிலேயே எண்ணப் பெறுகின்ற நாம் சீர்திருத்திக் கொள்வது என்பது ஒரு பெரிய காரியமல்ல. அனைவரும் ஒன்று சேர்ந்து துவங்கி விட்டால் இது ஒரு கஷ்டமான காரியமுமில்லை. நம்மினத்தவர்களில் உலக அநுபவம் பெற்றும் பின்னிகழ்ச்சிகளை ஆய்ந்தும் தலையிடாத ஒருசில பெரும் பணக்காரர்களின் திமிர திகத்தாலேயே முன்னர் ஆரம்பிக்கப்பட்ட “வாலிபர் சங்கம்” போன்ற பல சங்கங்களின் உயர்ந்த நோக்கங்களும் சட்டதிட்டங்களும் நிறைவேறாது தடைப்படுத்தி நிறுத்தி வைக்கப்பெற்றன. ஆனால் இது பொழுது அவர்கள் போன்றாரின் கொட்டம் அடங்கி விட்டது. பணக்கஷ்டம் உலகெங்கும்பரவியது. அவ்வம்பு இக்கொடியர்கள் பாலும் பாய்ந்து அவர்களுக்கு ஒரு புத்துணர்ச்சியை—சீர்திருத்த உணர்ச்சியை உண்டுபண்ணியிருக்குமென்றே நான் கருதுகிறேன். இதுகாலை அவர்களும் இளைஞர்களாகிய நம்முடன் கலந்துழைப்பார்களென்றுநம்பஇடமிருக்கிறது.

தனவணிகத்தாயின் வயிற்றிற் பிறந்து வளர்ந்து, தவழ்ந்து, இளம்பருவத்தினராகி இதுகாலை வாலிபப் பருவமெய்தி வாழ்கின்ற நாம்—தனவணிகத்தாயினால் போற்றியணைத்துத் தாலாட்டிச் சீராட்டி வளர்க்கப்பெற்ற நாம் தாயைமறந்தவர்களானோம்; செய்ந்நன்றி கொன்றவர்களானோம்; உய்யும் வழியறியாது உழல்கின்றவர்களானோம்; இங்ஙனம் செய்ந்நன்றி கொன்ற மக்களாய் நாம் விளங்குகின்ற காரணத்தாலேயே நமது வியாபாரஸ்தலங்களாகிய மலாயா, பர்மா, சிலோன், சைகோன் முதலிய நாடுகளெல்லாம் வியாபார மந்தத்தாற் பீடிக்கப்பட்டு அதிற் சிறப்பாக நம்மவர்களை வாட்டுகின்றது என்று ஊகிக்கவும் இடமிருக்கிறது.

நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவதில் பெருமையில்லை. எதிர்காலத்தில் நமது சமூகமும் நாடும் முன்னேறி ஏனைய சமூகங்களைப் போல், நாடுகளைப்போல் மிளிரவேண்டும். நம்மிலும் பல திறத்திலும் மேன்மையுற்ற அறிஞர்கள் வெவ்வேறு தொழில்களில் இடுபட்டுத் திகழவேண்டும், நாம் எத்தொழிலிற் புகுந்தாலும் அத்தொழிலிற் சிறந்து விளங்குவோமென்பதிற் சிறிதுமையமில்லை. உதாரணமாக இதுகாலை ஆகாய விமானப் பயிற்சியில் சிறந்து விளங்கும் இளைஞர் ஒருவரை நம்மில் நாம் காண்கிறோம்.

இன்னும் உடற் பயிற்சியை சிந்தனைசெய்வோமாயின் அமெரிக்க நாட்டில் லீடர் மான் (Leader man) திகழ்வதுபோல நம் நாட்டில் நமது சமூக இளைஞர் ஒருவர் திகழ்கின்றார். அநுபவ முதிரப் பெற்று அவ்வழியே பல இளைஞர்கட்கும் பயன் தரும்படியான பல பயிற்சிக் கூடங்களை ஆங்காங்கே நிறுவிப் போதனை புரிந்து அவ்



வியக்கத்தின் தலைவராய் விளங்குகிறார். தென்னிந்தியாவின் தலைநகரான சென்னையின் மேயராகத் திகழ்பவரும் நம் இளைஞரே.

இவ்வாறாக நாம் பல துறைகளிலும் இறங்கவேண்டும். நம்மிலும் பல நிபுணர்கள் தோன்றலாம். இளைஞர்களாகிய நாம் இவற்றிலெல்லாம் தலையிடவேண்டுவது மிக முக்கியம். ஆயினும் இதுகாலை முதலாவதாகவேண்டப்படுவது நமது சமூக சீர்திருத்தமே. அதனைச் சிறிதும் காலந்தாழ்த்தாது கடைப்பிடித்துச் செயலிலாக்கவேண்டும். அதற்கான வழிகளைத் தேடவேண்டும். இதுகாலை நாம் மேற்கொள்ளும் வேலையும் அது கருதிய முயற்சியும் வீணாகாது. இச் சந்தர்ப்பத்தில் வாளாவிருந்து விடுவோமாயின் நம்மீதே நமது சமூகச் சீர்கேடடைந்த பழி சாரும். சமூகம் என்பது ஒரு வழி உதித்த பெரியோர் சிறியோர், மூத்தார் இளையார், ஆண்கள் பெண்கள் பாலர், அனைவரும் சேர்ந்த ஒரு கூட்டம். அச்சமூகம் சீர்திருந்த வேண்டும் என்பது அச் சமூகத்திலுள்ளாரனைவரும் சீர்திருந்தியாக • வேண்டுமென்பதே. அதில் ஒருசிலர் மட்டும் பேசுவதிலும் நடைமுறைக்குக் கொண்டு வருவதிலும் கவனம் செலுத்த மறு சிலர் வாளாவிருந்திடில் பயனென்னே? ஆதலால் அனைவருக்கும் தூண்டு கோலாய் நின்று துணை புரிந்து தக்கபடி அறிவிப்புச்செய்துகொண்டிருப்பதேஇளைஞர்களாயநம்மனோரின்கடமை

நாம் தோன்றச் செய்யும் இயக்கத்தின் முழு நோக்கம் என்னை? சமூக சீர்திருத்தத்துக்கான பல வழிகளையும் கொண்டு திருத்தம் செய்து, காலத்துக்கேற்ற முறையில் நாடு எதிர் நோக்கி நிற்கும் முறையில் சமய உசிதம் போல் முன்னேற்றத்தையே பெரு நோக்கமாகக்கொண்டு உழைக்கவேண்டும். கல்வி விஷயங்களிலும் தலையிட்டுத்தொழிற் கல்வி போன்ற காலத்துக்கேற்றகல்வியைப் படிக்கவும் போதிக்கவும் செய்யவேண்டும்.

சுதேசியத்தையும் காந்தியத்தையும் பின்பற்றிப் போதிய ஆதரவு நம் நாட்டில் உண்டாகும்படியான தீவிர முயற்சிகள் செய்யவேண்டும். இன்னும் பலப்பல நமது இயக்கத்துட் சேர்க்கப்பெற வேண்டுவன உளவாயினும் இவற்றையே முக்கியமாகக் கொண்டு நாம் துவங்குவோம். சமயம்போல் மற்றவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்.

இளைஞரியக்கத்தாலேயே சீரும் சிறப்பும் பெற்று ஒளிர்கின்ற நாடுகள் பல. அவற்றுள் இத்தாலியிலே தோன்றிய இயக்கத்தின் தலைவரான ஜோசப் மாஜினி என்பார் இளைஞர்கட்கு வலியுறுத்திக் கூறியுள்ள மொழிகள் இன்று நம்மனத்தில் பொன்னெழுத்துக்களால் பதிப்பிக்கப் பெறவேண்டுவனவாகும். ஒரு சிலவற்றைக் கீழே தருகிறேன். அது பயன் படும் என்பது எனது நம்பிக்கை.

“இளைஞர்களே வாழ்க்கை ஒரு பெரும் நோக்கமாகும். கடமையே அதன் பெரும் சட்டமாகும். வாழ்க்கையின் உண்மையை உணர்வதே சட்டமாகும். உணர்ந்து உங்களைச் சுற்றியுள்ள மஹா ஜனங்களுக்கு அத்தியாவஸ்யமானது எதுவென்றறிந்து அவற்றை அடைவதற்கான முயற்சிகளிலீடுபடத் தீர்மானியுங்கள்! நாம் போற்றும் கடவுளே வந்து எதிர்த்த போதிலும் அச் செயல்களை நிறுத்த வேண்டாம். சகல சுக துக்கங்கட்கும் உட்பட்டு உங்கள் வன்மையைக்கொண்டே நிறைவேற்றுங்கள்! அதிற் பிறருதவி கிடைத்தாலுஞ் சரி, கிடைக்காவிட்டாலும் சரி, சளைக்காமல் கடைசிவரை நின்று நிறைவேற்றுவதே உங்கள் கடமை! எதிர்கால வாழ்க்கையிற் சிரத்தைகொள்ளாது சுக துக்கங்கட்குப் பயந்து பின் வாங்குவீர்களேயானால் நீங்கள்பேடிகளே!”

இவ்வுணர்ச்சி மிகுந்த, ஊக்கம் நிறைந்த உபதேச மொழிகளையே நமக்கு உறுதுணையாகக்கொண்டு நமக்கேற்ற முறையில் இயக்கத்தைத் தோன்றச் செய்யவேண்டும். அவ்வியக்கத்தினின்றும் சமூக சீர்திருத்தத்தை முதலாவதாகக் கொண்ட பிரசாரங்கள் புரிந்து தொண்டாற்ற வேண்டும். இன்னும் சில நாட்களுந் தாமதித்தல் கூடாது. காலந் தாழ்த்தாது கண்ணுங் கருத்துமாய்ச் சீர்திருத்த வேட்கை மேலிட இயக்கத்தைத் தோன்றச் செய்து பின்னும்வேண்டியபுதுப் புதுத்துறைகளிலும் தலையிட்டுப் பெருமை பெற்று எல்லாச்சமூகங்களையும் நாடுகளையும் போல் வாழ்வோமாக!

வள்ளல் பாரி

திரு. காந்தி தாசன்

தமிழகத்திலே மட்டுமின்றி இத்தாணியிலேயே பெருவள்ளலாகத் தோன்றிப் பொருளுக்கும் பெருங்கொடைக்கும் பேர்பெற்று நாட்டு மக்களுள்ளங்களிலே நல்லிடம் பெற்று, மாரி போல் வாரி வாரி வழங்கிய வள்ளல் பாரியானவன் பாண்டி மண்டலத்திலே மதுரை மாநகருக்கு வடகிழ்பால் நாலு காத தூரத்தில் உள்ள பறம்புமலை (பிரான்மலை)ச் சாரலில் விளங்கும் அருளகம் என்னும் திரு நகரிலிருந்து அரசு புரிந்தான். இவன் பாரத நாட்டைத் தொன்றுதொட்டு ஆண்டுவந்த சந்திரவம்சத்தவனைப்போல தமிழகத்தில் தோன்றிய யது பரம்பரையில் தோன்றி பறம்பு நாட்டை ஆண்டுவந்த வேளிர் பரம்பரையில் வந்து சங்கப்புலவனாக விளங்கிய துவரைக்கோனுக்கு நாற்பத்தேழாஞ் சந்ததியாகும். பறம்பு நாட்டுக்கும் துவராபதி நாட்டுக்கும் இவனே தலைவனாக விளங்கினான்.

மலை.

மலர்தலையுலகினுக்கு உயிரென விளங்கும் இவன் மலையானது தென்னாட்டுக்கோர் மேருகிரியாகவும் தமிழ் நாட்டுக்கோர் இமயகிரியாகவும் நீண்டு வளர்ந்து யானைக் காது போன்று அணியணியாகத் தொங்கும் தேன் கூடுகளையும், உழவர்க்குழுஉழாமல்மூங்கில்நெல்லும், பலவின் பழமும், வள்ளிக் கிழங்கும், வண்டரையுந் தேனும் நறுநீர்ச் சுனையும் நிறைந்துள்ளது.

அரண்.

"ப" என்ற வடிவத்தில் பறம்பு மலை விளங்குவதால் "பாரி நகர்" (பிரான் மலை)க்கு மலையே அரணாகவுடையதென்றாலும் பாரியால் கட்டப்பட்ட பழமையான கோட்டையும் ஒன்றுளது.

பீரங்கி மேடை.

பிரான்மலை யுச்சியில் பாரி மன்னன் காலத்தில் கட்டப்பட்ட பீரங்கி மேடையையும் வரிசையாக அடுக்கப்பட்டிருக்கும் பீரங்கிகள் பதினெட்டையுங் காண்போர் பாரிவேந்தனது போர்த் திறத்தையும் போர் வீரர்களை திறம்பட அமைத்திருந்ததையும் போற்றிப் புகழாநிரார்.

முல்லைக்குத் தேரளித்தல்.

பிறவுயிர்கள் மாட்டுப் பேரருளுடைய பாரிவேந்தன் தான் பெற்ற பொருள் முழுவதையும் பிறருக்கே உதவினான். முந்நூறு ஊர்களையும் தனக்கு உரிமையெனக் கொள்ளாமல் இம்மன்னவன் இரப்போர்க்கு இல்லையென்னாமல் ஈந்துவிட்டான். ஒரு நாள் அந்திப் பொழுதில் தென்றல் நுகரச் சென்ற மன்னர்பிரான் கொழுகொம்பின்றித் துவண்ட முல்லைக் கொடிக்குத் தனது புதுமையான பொற்றேரை நல்கி, அரசியுடன் கால் நடையாக இராஜமாளிகை புகுந்தான். இதனாலே இரப்போர்க்கு மட்டுமின்றி இயற்கைப்பொருளுக்கும் இந்தபெருந்தியாகியின் புகழ் பாரத நாட்டிற்கு அப்பாலும் பரவியது, புலவர்கள் வாயாரப் போற்றினார்கள்.

பெருவேந்தர் படையெடுப்பு.

உலகெங்கும் புகழ்பரந்த உத்தமன் பாரிக்கு சங்கவை, அங்கவை யென்ற இரு அரசிளங்குமாரிகளிருந்தனர். அவர்கள் கல்வியிலும் அரசியற்றுறையிலும் மிகு தேர்ச்சி பெற்றவர்கள். இவர்களது அழகையும் பாரியின் புகழையுங்கண்டு பொறாமை கொண்ட வேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்கள் வெல்லக் கருதி படையுடன் திரண்டு, பாரி நகர்மேல் வந்தனர். அரண்வலியால் பெருஞ் சிறப்புடைய பிரான் மலையை முற்றுகை செய்தனர். இதுகண்ட பாரிமக்கள் படைதிரட்டி மூவேந்தரை முறியடிக்க முற்பட்டனர்.

தந்தையின் இன்மொழியால் அரசிளங்குமரிகள் தமதரண்மனையிலிருக்க பாரிவேந்தன் பாசறையிலிருந்து படைதிரட்டி அணிவகுத்துச் சென்று அஞ்சா நெஞ்சுடன் அவர்களோடெதிர்த்தான். பல பருவங்கள் கழிந்தன. வெற்றியை ஒருவரும் முற்றவுங் கண்டிலர். அக்காலத்தில் பாரியின் உயிர்த் தோழனும் மந்திரியுமான கபிலர் என்னும் புலவர் பெருமான் வெளியே வந்து அம் மூவரையும் நோக்கி "அரசிர்! எமது மன்னன் கொண்டபொருளையும் ஆண்ட ஊர்களையும் இரவலர்க்குக் கொடுத்துவிட்டு, தனியே யிருக்கின்றான். பறம்புமலை (பிரான்மலை) இருக்கின்றது. நானும இருக்கின்றேன். ஆயினும் அவனைப் பொருதுவெல்ல முடியாது. எம்மைக் கொள்ளவிரும்பின்



நீவிரும் இரவலராய் வரின் விரைவிற் பெறலாம். எம் இறைவன் மாறுதருளுவன். என்று பாரியின் வீரத்தையும் வள்ளற் குணத்தையும் தாளாற்றித் தந்ததையும் அழகாக எடுத்துரைத்தார். இதைக்கேட்டதும் போர்க்கோல மொழித்து பொய்க் கோலந்தாங்கி பாரியின் மலையையும் நகரையும் உயிரையும் இரந்து மூவேந்தருங் கூடி பாரியை வீரசுவர்க்கமனுப்பினர். பாரிமக்களையும் நாடுகடத்தினர்.

பாரிமக்கள் திருமணம்.

இட்டிவைத்த செல்வமெல்லாம் ஏற்பார்க்கும்தக்கார்க்குங் கொட்டிய பாரிமன்னன் குமாரிகளை கபிலர் பெருமான் இளவிச்சிக்கோ இருங்கோவேன் என்பானிடம் மணம் பேசியும் முடிவுபெறாமல் ஔவைபிராட்டியரால் மெய்ப்பொருள் நாயனார் வழிவந்த தெய்வீகன் என்ற அரசனுக்கும் அவன் தம்பி எனாதிதிருக்கண்ணன் என்பவனுக்கும் மூவேந்தரைக் கொண்டு முறையே மணம் முடித்தனர்.

பாரி குமாரியின் பதி பக்தி


அவ்வைபாடலுக்கு நறு நெய்பால் தயிர் பெருகிய தெய்வ மாநதிசூழும் திருமுனைப்பாடி நாட்டுச் செல்வனாகிய தெய்வீகமன்னனைக் கணவனாகக்கொண்ட பாரிமகள் சிறந்த கல்வியுடையவள். கணவனிடத்தில் மாறாத அன்புடையவள். தனது தந்தை பாரிவேந்தனைப் போல் யாவர்க்கும் இல்லை என்னாது எதையும் கொடுத்து அளிக்கும் இசைக்குணமுடையவள். இத் திருமடந்தையை தெய்வீகன் தன் இரு கண்கள் போல பாவித்து நடத்தி வந்தான்.

பாணனுக் குதவுதல் :

மூவரு நெருக்கி மொழிவிளக்கேற்றிமுகுந்தனைத்தொழுத நன்னாடு ஒருகாலத்தில் மழையில்லாமல் வற்கடம் உண்டாயிற்று. ஆறு, ஏரி, குளங்களெல்லாம் வற்றி வரண்டுபோயின. உழவர் உழு தொழிலைக் கைவிட்டனர். பசுக்களும் பால்வற்றின. சீவராசிகளனைத்தும் பசியினால் பெருவாட்ட முற்றன. தெய்வீக மன்னன் சிந்தை இரங்கி அரண்மனையிலுள்ள நெல் முதலிய தானியங்களைப் பசித்துவந்தோர்க்கு அளித்து நெடுநாள் அவர்களைப் பாதுகாத்துக் காப்பாற்றி வந்தான். இப்படிப்பல நாட்கள் செய்துவர அவனது அரண்மனையிலுள்ள உணவுப்பொருள்கள் எல்லாம் செலவாகிவிட்டன. எல்லோரும் பசிப்பிணியால் துன்புற்றார்கள். அக்காலத்தில் பாணன் ஒருவன்பஞ்சத்தால் நொந்து தெய்வீகன் ஜனங்களை ரக்ஷிக்கிறானென்று கேள்வியுற்று நெடுந்தூரத்திலிருந்து திருக்கோவலூர் வந்து "ஓ அரசனே என் பசிப்பிணி தீர்ப்பாய்" என்று அழுது தொழுது வேண்டினான். அதைக்கேட்ட தெய்வீகன் ஐயோ! நமது மாளிகையில்ஒன்றும் இல்லையே என் செய்வோம். எப்படியாவது பாணனைத் திருப்தி செய்வித்தல் நலமாமே."எனச்செய்வதொன்றறியாது மனம் அமைதி கொள்ளாது கலங்கிய மனத்தினனாய் அந்தப் புரத்திற்கு அவசரமாக ஓடி வந்தான். அப்போது அங்கிருந்த அரசன்மனைவிநாயகன் முகவாட்டத்தைக்கண்டு "செய்தி யாது" என வினவினள். தெய்வீகன் தனது துயரின் காரணத்தைச் சொல்ல உடனே "நாதா! நாங்கள் கவலையுறவேண்டாம்; அப்பாணனைச் சாப்பாட்டுக்கு வரச் சொல்லும்" என்று அன்புடன் மொழிந்து விட்டு உடனே உள்ளே சென்று நீர் உலை ஏற்றி அதிலே பொன்னைச் சொரிந்து "ஓ! பாரிசா! உலகளந்த பெருமானே! என் தந்தை வாரி வாரி வழங்கியது உண்மையானால் நான் கணவன் முகங்கோணாத கற்புடைய மனைவியானால் இப்பொன் சோறாகி அப்பாணன் பசியைத்தீர்க்கக்கடவது" என்று கணவனையும் தந்தையையும் நினைத்து கடவுளைத் தொழுதாள்.


பண்ணைசூழ்ந்திலங்குந் திருமுனைப் பாடி நாட்டு அரசியின் பக்தியையும் பாணன் பரிதாபத்தையுங்கண்டு பரமனருளால் பொன் உலை சோற்றுலையாகி குழம்பு கறி எல்லாவற்றோடும் நிறைந்துவிட்டது. பசித்து வந்த பாணன் என்றைக்கும் உண்டறியாத சுவையுள்ள உண்டியை உண்டு களித்தான். இச்செய்தி கேட்ட ஜனங்கள்யாவரும்"ஆ! கற்புடைய மனையாள் ஒருவர்க்கு வாய்ப்பின் அதனினும் பாக்கியம் ஒன்றுண்டோ? நன்மனைவியே நற்செல்வம்" எனக்கொண்டாடினார்கள். பின் சில நாளில் பஞ்சந் தெளிந்து மக்களெல்லாம் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

கம்பை தனவைசியர் கல்வி நிலையம்.



தனவைசியர் கல்விக் கழகத்தார்.

கட்டுரையாளர்கள்.



திரு. ரா. நாராயணஸ்வாமி,
''பாரதி'' ஆசிரியர்.



சென்னை மேயர்,
திரு. முத்தையா செட்டியார்,
பி.ஏ., எம்.எல்.ஸி.



திரு. ராய. சொக்கலிங்கன்.
''ஊழியன்'' ஆசிரியர்.



திரு. ந. சோ. அரு. அருணசலம்.



திரு. சாமி. சோமசுந்தரம்.

சுலோசனை

திரு. ராம. ராமநாதன் எழுதிய சிறுகதை.

தமிழ்த்தாயை வணங்கி எழுதப் பெறும் இக்கதை ஜுன் மாதத்தில் ஓர் நாள் மாலை நாலரை மணிக்கு ஆரம்பமாகிறது.

அப்பொழுது கிடைத்த தந்தி யொன்றைக்கையில் பிடித்த வண்ணம் ஒரு வாலிபன் வணிகர் புரத்தில் பெரியதோர் மாளிகையின் மத்தியிலமைந்த ஹாலில் ஓர் நாற்காலியில் அமர்ந்திருந்தான். அவனது உள்ளத்தில் பொங்கி யெழுந்த அபரிமிதமான சந்தோஷம் அவன் முகத்தில் பொலிந்து அவனுடைய பேரழகை இன்னும் பெருக்கிற்று. அத்தந்தியில் கண்டவிஷயங்கள்:—

புதுக்கோட்டை 2 ஜுன் 1933

வகுப்பில் நீ முதலாவதாகத் தேறியுள்ளாயென்பதையும் சுலோசனை மூன்ருவது பாரத்தில் முதன்மையாகத் தேறியுள்ளாள் என்பதையும் தெரிவிக்க மிக்க சந்தோஷமடைகின்றேன்.

சுப்பிரமணிய ஐயர்,

ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்திருந்த அவ்வாலிபன் அடுத்த நிமிடம் ஓடோடியும் சென்று தன் தாய் தந்தையரிடம் அந்தத் தந்தியைக் காண்பித்தான். அவர்கள் அடைந்த சந்தோஷத்தைக் கூறவும் வேண்டுமோ! விஷயம் தெரிவிக்கப்பட்ட கொஞ்ச நேரத்தில் சுலோசனையும் அவள் தாயும் வந்து சேர்ந்தனர். சுந்தரியான சுலோசனையின் முகத்தில் அப்பொழுது தோன்றிய பேரெழில் என்றும் மறக்கற்பாலதன்று. பெருத்த புதையல் அகப்பட்டது போன்ற சந்தோஷப் பெருக்கில் அவளும் அவள் தாயும் பூரித்துப் போயிநந்தனர்.

சிறிது நேரத்திற்குள் இச் செய்தி வணிகர் புறம் முற்றிலும் பரவி அங்கா மாந்தர் அனைவரும் சுலோசனையையும் மோகனன் என்ற வாலிபனையும் ஓயாது புகழ்ந்து கொண்டேயிருந்தனர். பலர் அவர்களை நேரில் வந்து பார்த்து வாயாரவாழ்த்தினர். அன்று மோகனன் வீட்டில் பெரியதோர் விருந்தும் நடைபெற்றது. இந்த வைபவங்களிடையே அவர்களது வரலாற்றையும் சிறிது கவனிப்போம். வணிகர் புரத்தில் வள்ளியப்ப செட்டியார் என்று ஓர் தனவணிகர் உண்டு. ஒரு லட்சம் ரூபாய் ஆஸ்தியுடையவர் என்று அவர் மதிப்பிடப் பட்டவர். ஒரு பெரிய பழைய வீடும்அவருக்கிருந்தது.அவருடைய அருமைக் குமாரன்தான் மோகனன். மிகவும் சிறு வயதிலேயே மோகனனைப் புதுக்கோட்டையில் படிக்க வைத்தார். இப்பொழுது அவனுக்கு வயது 17.F. A. பரீட்சை கொடுத்துவிட்டுக் கோடைகால விடுமுறைக்காக ஊருக்கு வந்திருந்தான். அவனுடைய பெற்ரோர்க்கு அவன் ஒரே பிள்ளை.

வள்ளியப்ப செட்டியாரின் தங்கை கோமதி ஆச்சியை வணிகர் புறத்திலேயே கல்யாணம் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. அவள் கணவன் ஆறுமுகம் செட்டியார் ஏற்கனவே வள்ளியப்பச் செட்டியாரின் ஆப்த நண்பர். கோமதியின் தவப்புதல்வியாயுதித்தவள் சுலோசனை. செல்வி சுலோசனையைத் தவிர அவர்களுக்கு வேறு மக்கட் பேறுமில்லை. செல்வப்பேறுமில்லை.

மொத்தத்தில் அவ்விரு குடும்பத்தாரும் பெண்கள் உள்பட நன்ருய் வாசித்தவர்களாயும் சீர்திருத்தப் போக்குடையவர்களாயும் பெண்கள் முன்னேற்றத்தில் ஆர்வம் காட்டுபவர்களாயும் இருந்தார்கள். மோகனனோடு சுலோசனையும் புதுக்கோட்டையில் பெண்கள் பள்ளிக் கூடத்தில் IIIrd Form பயின்று வந்தாள். அப்பொழுது அவளுக்கு வயது 14. பெரும்பான்மை அவ்விரு குடும்பத்தாரும் புதுகோட்டையிலேயே வசித்து வந்தார்கள். சுப்பிரமணிய அய்யர் என்பவர் மோகனனுக்கும் சுலோசனைக்கும் வீட்டில் பாடம் சொல்லிக் கொடுத்த (Tution) உபாத்தியாயர். பெரியமேதாவி. சில தினங்கள்வரை மோகனனுக்கும்சுலோசனைக்கும்ஏராளமான வாழ்த்துச் செய்திகளும் வெகுமானங்களும் வந்து குவிந்து கொண்டிருந்தன.

II

கோடை விடுமுறை கழிந்தது. மோகனன் சென்னையில் B A. படித்துக்கொண்டிருந்த தனது தோழன் ஆனந்தராமனோடு மேற் படிப்புக்காக இங்கிலாந்து செல்லத்தீர்மானித்தான். இதையறிந்த கோமதி இங்கிலாந்து செல்வதற்குள் கல்யாணத்தை முடித்துவிட்டால் நல்லதென்று புருடனிடமும் தமையனிடமும் கூறினுள். அவர்களிருவரும், "என்ன அவசரம்! எங்கே போகப் போகிறது! பெண்ணுக்கு இன்னும் சரியான வயதுவரவில்லை; இரண்டு வருஷம் போகட்டும்" என்று சமாதானம் கூறிவைத்தார்கள். மோகனன் லண்டன் பிரயாணத்துக்கு வேண்டிய எற்பாடுகளைத் தீவிரமாய் செய்துவந்தான். சுலோசனையையும் தொடர்ந்து படிக்கவைக்கும்படி அவள் தந்தையிடம் மிகவும் வேண்டிக்கொண்டான். ஆறுமுகம் செட்டியார் அவனுடைய வேண்டுகோளையும் தன் குமாரியின் விருப்பத்தையும் மதித்து வள்ளியப்பசெட்டியாரிடமும் இன்னும் சில தனவந்தர்களிடமும் சில ஆயிரம் ரூபாய்கள் கடனுகப் பெற்றுக்கொண்டு சென்னை வந்து சுலோசனையை மேரி காலேஜில் நாலாவதுபாரத்தில் சேர்த்துவிட்டு ஓர்வியாபார நிலயத்தை ஆரம்பித்துத் தன் மனைவியோடும் அங்கு சந்தோஷமாய். வாழ்ந்து வாலானுர்.

குறிப்பிட்ட தினத்தில் எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு பல சிபார்சுக்கடிதங்களுடன் தன் தோழன் ஆனந்தனோடு மோகனன் லண்டனுக்குப்பிரயாணமானுன். ஒரே குழந்தையைப் பிரியமனமில்லாதவர்களாய் அவன் பெற்ரோர்கள் கதறி யழுதார்கள். சுலோசனை மிகவும் மனம் நொந்தாள். ஆறுமுகம் செட்டியாரும் கோமதியாச்சியும் பெரிதும் வருந்தினுர்கள்.

III

இரண்டு வருடங்கள் கழிந்தன. சென்னையில் ஆறுமுகம் செட்டியாருடைய கம்பெனி நல்ல லாபத்தோடு மிகப்பிரபல்யமாய் நடைபெற்று வந்தது. செல்வி சுலோசனைக்கு அப்பொழுது வயது 16 நடக்கிறது. பருவகாலத்துச் செழுமையில் விளங்கிய அவள் கந்தர்வலோகத்து மாதுபோல் காணப்பட்டாள். இயற்கையிலே தோன்றிய அவளது உருவத்தின் சாயல், பயிற்சியால் அமைந்த அவளது அங்கக் கூறுகள் பத்தரைமாற்றுப் பொன்னொத்த திரேகம், வாரி முடித்த கருங்கூந்தல், ரோஜா மலர் வண்ணக் கன்னங்கள், முத்தொத்த பற்கள், எப்பொழுதும் புன் முறுவல் ததும்பும் இனிய பாந்த முகம், நடையுடை பாவனையின் நாகரீகத் தோற்றம் முதலியவை அவளுக்கே ஒரு தனிப்பெரும் சிறப்பா யமைந்திருந்தன. மெட்ரிக்குலேஷன் பரீட்சையிலும் முதலாவதாகத்தேறிப் பெரும் புகழும் பெற்றிருந்தாள. இச்சமயம் பல சிமான்கள் தங்கள் பிள்ளைகளுக்குச் சுலோசனையைத் தரும்படி மிக வேண்டிக்கேட்டனர். வாங்கிச் செய்வதாயிருந்தால் தங்களுக்குச் செய்துகொடுத்தாள் லட்ச ரூபாய் வரையில் வேண்டுமானுலும் தருவதாய் இரண்டொரு பெருத்த பணக்காரக் கிழக் கோடீஸ்வரர்களும் கூறினுர்கள். இவர்றை யெல்லாம் கேட்ட ஆறுமுகம் செட்டியார் மிக வெகுண்டு சீறி அவரவர்களுக்குத் தக்க பதிலளித்தார். இவற்றை பெல்லாம் நேரிலேயறிந்த வள்ளியப்ப செட்டியார் விரைவில் மோகனனை வரவழைத்து விவாகத்தை முடித்து விடுவதாய் உறுதி கூறினுர்.

மோகனன் சுலோசனைக்குக் கடிதமெழுதும் போதெல்லாம், அவளுடைய படிப்பை நிறுத்தாது தொடர்ந்து படித்து வரும்படி வற்புறுத்தியெழுதி வந்தான். அவனுடைய புகழ் தனவணிக நாடெங்கும் பரவிப் பெருங் கீர்த்தியையளித்து வந்தது. அவனுடைய திறமையையும் படிப்பையும் பல ஆங்கிலப் பத்திரிகைகளும் புகழ்ந்தன.

IV

வணிகர்புறம் ஓர் பெரிய நகரம். இருபதினுயிரம் மக்களுக்கு மேல் ஜனத்தொகையுள்ளது சொக்கலிங்கம் செட்டியார் இதன் முனிசிபல் சேர்மன் ஆவார். அவர் பரம்பரைப் பணக்கார வம்சத்தைச் சேர்ந்த ஓர் பிரபு. வயது நாற்பது இருக்கலாம். அகங்கார நெஞ்சும் பண மமதையும் கொண்டவர். அவருடைய மைனர் விளையாட்டுக்களில் அழித்தது போக இப்பொழுது 2,3 லட்சம் பணம்தேறலாம்.அவருக்கு இரண்டு பெண் குழந்தைகள் உண்டு. மூத்த குழந்தையை அடுத்த ஊரில் ஒரு பெரிய பணக்காரர் வீட்டில் விவாகம் செய்துகொடுத்துள்ளார். இளைய குழந்தை விவாகம் செய்விக்கத் தகுந்த பருவத்தில் இருக்கிருள். சுமாரான அழகும் கல்வியறிவும் உடையவள். அப்பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடும் காலத்தில் சொக்கலிங்கம் செட்டியாருக்கு மோகனனுடைய நினைவு உண்டாயிற்று. அவனுடைய அழகும் படிப்பும் கீர்த்தியும் அவர் மனதைக் கவர்ந்தன. வள்ளியப்ப செட்டியார் பணக்காரர் வர்க்கத்தில் சேர்க்கப்படவில்லை. எனவே தமது சம்பந்தம் அவர்களுக்குப் பெருத்த சந்தோஷத்தையும் அதிகப் பெருமையையும் அளிக்கும் என்று சொக்கலிங்கம் செட்டியார் நம்பினுர். அவர்களுக்கு வேண்டிய மனிதர்கள் மூலம் செய்தியையும் சொல்லியனுப்பினுர்.

வள்ளியப்ப செட்டியாரும் அவர்மனைவியும் முதலாவதாக அச்செய்தியைக் கேள்விப்பட்டபோது தங்களைத்தாங்கள் நம்பவேயில்லை. "பெரும் புகழும் படைத்த சீமான் சேர்மன் செட்டியாராவது தங்களோடு சம்பந்தம்செய்பவராவது" என்று பெரும் சந்தேகப்பட்டார்கள். ஆயினும் அச் செய்தி உண்மைதான் என்று ஊர்ஜிதமானபோது அவர்களது மனோநிலை ஒரு வகையாயில்லை. வள்ளியப்ப செட்டியார் மனத்தில் பெருத்த குழப்பமேற்பட்டு விட்டது. அவர் மனைவி தலைகால் தெரியாமல் ஆடுகிருள. சேர்மன் செட்டியார் வீட்டோடு சம்பந்தம் என்ற அந்த ஒரே உணர்ச்சி மின்சார சக்திபோல அவள் திரேகத்தில் ஊடுருவிப் பாய்ந்து

"சரியென்று சொல்லுங்கள்; சம்மதத்தைத் தெரிவியுங்கள்" என்று கணவனைப் பிய்த்துப் பிடுங்கிவிட்டாள். எனினும் யோசித்து கூறுவதாக வள்ளியப்ப செட்டியார் மறுமொழி அனுப்பினார்.

இச்செய்தி காட்டுத் தீபோல எங்கும் பரவிவிட்டது. ஆறுமுகம் செட்டியாருக்கும் கோமதிக்கும் எட்டியவுடன் அவர்கள் வள்ளியப்ப செட்டியாரைக் கண்டு கேட்டனர். செய்தி வாஸ்தவந்தானெனினும் எதற்கும் கவலைப்பட வேண்டாமென்று வள்ளியப்ப செட்டியார் தேறுதல் கூறியனுப்பினார். வள்ளியப்ப செட்டியார் மனைவியைப் பொறுத்தும் ஏற்கனவே விவாகம் செய்துவிடாமலிருந்த தவறைக் கருதியும் கோமதி வருந்திக் கொண்டிருந்தாள்.

இன்னும் சில மாதங்கள் சென்றன. தியாகராஜபுரம் திவான்பகதூர் மாணிக்கம் செட்டியார் கூட மோகனன மயக்கத்தில் விழுந்தார். அவனுடைய அபாரத்திறமையைப்பற்றியும், கலாஞானத்தைப் பற்றியும், சென்னையில் பல பிரபலஸ்தர்களிடம் அவர் கேள்விப்பட்டிருந்தார். பல கலெக்டர்களும் பெரிய அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அவனைப் பற்றி அவரிடம் அதிகமாய்ப் புகழ்ந்திருந்தனர். ஏன் அதிகம்! கவர்னர்கூட ஒருமுறை அவனைப் பற்றிப் புகழ்ந்து பேசியிருந்தார். அத்தகைய மாப்பிள்ளைக்குத் தான் தனது ஒரே மகளைச் செய்யவேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் வேர் ஊன்றிற்று. திவான் பகதூர் மாணிக்கம் செட்டியார் என்றால் தனவணிக நாடே கிடுகிடென்னும். அத்தகைய சீமான் வள்ளியப்ப செட்டியார் வீட்டுக்குக் கீழ்க்கண்ட விபரப்படி முறைகளும் கொடுப்பதாய்ச் செய்தி சொல்லியனுப்பினார்.

> 10 வராகனுக்கு உண்டியல். மாமியார் சாமானுக்கு ரூ 4000. ஒவ்வொரு முறைகளுக்கும் ரூ. 750. வெள்ளிச்சாமான்கள் 2 சிர் தங்கத்தாம்பாளம், பன்னீர்ச் செம்பு பேலா. உயர்ந்த முறையில் மற்றவை.

இச்சம்பந்தத்தைக் கேட்டதும் வள்ளியப்ப செட்டியார் வகையரு அப்படியே திக்பிரமை கொண்டுவிட்டனர். தாங்கள் கேட்பது கனவிலா? நினைவிலா என்பது அவர்களுக்குப் பெருத்த சந்தேகமாயிருந்தது. திவான் பகதூர் எங்கே! தாங்கள் எங்கே! மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்! இந்த நிலையில் தங்கள் சம்பந்தத்தை நாடி அவர்கள் வருவதென்றால்! எனினும் சீக்கிரம் தெளிவு பெற்றார்கள். (சேர்மன் செட்டியாரால் ஏற்பட்ட அனுபவம் தான் காரணம்) தங்களின் பையனின் படிப்பு மகிமையை உணர்ந்தார்கள். வள்ளியப்ப செட்டியாருக்கு என்ன பதில் கூறுவதென்று தெரியவில்லை. சுலோசனை அவர் மனக்கண்ணெதிரில் வந்து நின்றாள். கோமதியை நம்பிக்கைத் துரோகம் செய்யலாமா என்று தயங்கினார். என்ன வந்த போதிலும் இந்தச் சம்பந்தத்தை விட்டுவிடக்கூடாதென்று அவர் மனைவி தீர்மானம் செய்துவிட்டாள். அவள் நாக்கில் அப்பொழுதே ஜலம் சொட்ட ஆரம்பித்துவிட்டது. அவளுடைய தேகம் பூரித்துச் சிறிது பருத்தும் விட்டது. ஆனாலும் மோகனனின் நோக்கமும் தெரிந்துகொண்டு தான் முடிவு சொல்ல முடியும் என்று வள்ளியப்பச் செட்டியார் கூறிவிட்டார். இதைக் கேட்டு ஏமாற்றமடைந்த திவான் பகதூர் மாணிக்கம் செட்டியார் மிகக் கோபமடைந்தார். வள்ளியப்பச் செட்டியாரின் மனைவி மனமுடைந்து அதே வியாதியாய்ப் படுத்துவிட்டாள். அவர் பந்துக்களும் சிநேகிதர்களும் அவரைக் கண்டித்தார்கள். ஆறுமுகம் செட்டியார் வகையருவுக்கு இன்னும் அதிகக் கலக்கமுண்டாயிற்று.

IV

மறுபடியும் இரண்டு வருடங்கள் சென்றன. சுலோசனையைத் தவிர யாரையும் மணக்க முடியாதென்று ஏற்கனவே கண்டிப்பாய்ப் பதில் எழுதிவிட்டான் மோகனன். அதனால் மிக ஏமாற்றமடைந்த திவான் பகதூர் செட்டியாரும் சேர்மன் செட்டியாரும் வள்ளியப்ப செட்டியார்குடும்பத்தை எல்லா வழிகளிலும் கெடுத்துவிடச் சதிகள் செய்தனர். இருபெரும் பணக்காரர்கள் கூடி ஒரு சாதாரணக் குடும்பத்தைக் கெடுக்க முனைந்தால் எவ்வளவு நேரம் செல்லும். திருடர்களைக்கொண்டும் அரசாங்க உத்தியோகஸ்தர்களைக்கொண்டும் பல வழிகளில் வள்ளியப்ப செட்டியார் குடும்பத்தைச் சீரழித்துவிட்டனர். இவற்றையெல்லாம் கண்டு அவர் மனைவி இன்னும் அதிகமாய் நோய் வாய்ப்பட்டாள். வள்ளியப்ப செட்டியாரும் துரும்பாய் மெலிந்துபோய்விட்டார்.

V

மோகனன் லண்டனிலிருந்து புறப்பட்டு பம்பாய் வந்து சேர்ந்ததாக ஓர் நாள் காலை ஆறுமுகம் செட்டியாருக்கும் வள்ளியப்ப செட்டியாருக்கும் இரண்டு தந்திகள் கிடைத்தன. மோகனன் இந்தியாவைவிட்டுப் புறப்பட்டு மறுபடி இந்தியாவின் எல்லையில் அடிவைக்க 5 வருஷங்களாகிவிட்டன. இதற்குள் எவ்வளவோ மாறுதல்கள்! 14 வயதிலிருந்த சுலோசனை இன்று 19 வயதுள்ள மோகனாங்கியாய், B A. பட்டம் பெற்று ஞான ஒளியாய், கல்விக்கடலாய், அழகுக்கிரளாய் விளங்குகின்றாள். அன்று ஆரம்பிக்கப் பெற்ற ஆறுமுகம் கம்பெனி இன்று சென்னையிலேயே பெரிய வியாபார ஸ்தலமாய் விளங்குகிறது. அன்று உத்சாகமாயிருந்த வள்ளியப்ப செட்டியாரும் சுகஜீவியாயிருந்த அவர் மனைவியும் இன்று கவலைப்படுகுழியில் வீழ்ந்து கைப்பொருளெலாம் போய் நடைப்பிணங்களாய் வீழ்ந்து அன்று ஆறுமுகம் செட்டியாரை அவர்களாதரித்ததுபோல் இன்று அவரால் ஆதரிக்கப் பெற்று துயரமே உருவமாயிருக்கின்றனர். அதே மோகனன் இன்று வாலிபச் சிங்கமாய், சிறந்த பாரிஸ்டராய், ஒரு பெரிய பாங்கின் கவர்னராய் வந்திருக்கின்றான்.

இரண்டு தினங்களில் மோகனன் சென்னையை அடைந்தான். அவன் தாய் தந்தையர் முன்னதாகவே அங்கு வந்திருந்தனர். மோகனனைக் கண்டதும் அவ்விரு குடும்பத்தாரும் அடைந்த ஆனந்தம்மட்டிலடங்காது. இரண்டு வாரங்கள் வரை சென்னையிலேயே களிப்பும் சந்தோஷமுமாய்க் காலத்தைப் போக்கினர். பின்னர் தமது நகருக்கு வந்தனர். தனவணிக நாடு முழுமையும் மோகனனுக்கு வரவேற்பு அளித்தது.

வெகு சீக்கிரத்தில் சீர்திருத்தமுறையில் மோகனனுக்கும்—சுலோசனாவுக்கும் திருமணம் நடந்தேறியது. நாட்டிலுள்ள மக்களெல்லாரும் அதைப் போற்றினர்.

சில மாதங்கள் சென்றதும் மோகனன் சென்னை சென்று சுலோசனையோடு தொழிலில் இடுபட்டான். அவனுடைய தொழில் திறமை தென்னாடு முழுவதும் பரவிற்று. பெரிய கோடீஸ்வரர்களும் பெரிய உத்யோகஸ்தர்களும் அவனுடைய சிநேகத்தை நாடினர். இவற்றைக்கண்டு திவான்பகதூர் செட்டியாரும் சேர்மன் செட்டியாரும் அஞ்சியவர்களாய் மோகனனிடம் தாங்கள் செய்தவற்றைச் சிறிதளவாகக்கூறி மன்னிக்குமாறு பெரிதும் வேண்டிக் கொண்டனர். பெருந்தன்மை மிக்க மோகனனும் அவன் குடும்பத்தாரும் அவர்கள் செய்த பெரிய கொடுமைகளைப் பொருட்படுத்தாது மன்னித்துவிட்டனர். பவுன் பவுனாய்க் குவிக்க ஆரம்பித்து அவற்றை உயர்ந்த தர்மங்களில் செலவிடுவதைக் கண்டும் சுலோசனையும் மோகனனும் உடலும் உயிரும் போலும் நகமும் சதையும் போலும் ஒரு சிறிதும் பிரியாது வாழ்ந்துவருவதைக்கண்டும் அவர்களுடைய காதலின் பாக்கியத்தால் தோன்றிய குழந்தை அமிர்தவல்லியின் மழலையைக் கேட்டும் கோமதியும் மோகனன் தாயாரும் மறுபடியும் இளமைப் பருவத்தை எய்திவிட்டார்கள் என்ற சந்தோஷச் செய்தியோடு இச்சிறுகதையை முடிக்கின்றேன்.

பால்ய மணம்.

"கனகசபைத் திருநடனம்" என்ற மெட்டு.

பல்லவி

உதவாதே பால்ய மணம்— இந்த
உலகத்தி லுள்ளசுக—நிலையினைத் தள்ளுமிக (உத

அநுபல்லவி

விதவைப் பெயருமதி விசனமுஞ் சுற்றும்
வீணாகவே கெடுக்கும் மெல்லியர்களைச்சுற்றும் (உத

சரணங்கள்

பருவம்வரு முன்சிறு பாவையரீடு
படும்புரு டர்தங் கலப் பால்வருங்கேடு
சருவவு லகத்திலுந் தனித்தமிழ் நாடு
தனிலுந் "தன வைசியர்" தமிலும்வேரோடு (உத

அந்தணர் மணந்திடு வதுதெரி யாதா
அதற்கென் றல்லவோசார தாசல் மசோதா
பந்த மடைந்துவந்த பாரத மாதா
பாக்கிய வசத்தினாற் பலித்தது தோதா (உத

பர்மிய ஆசிரியர்கள்

"பர்மியத் தேனீ" திரட்டியது.

பர்மாவிலுள்ள சில முக்கிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் வரலாற்றைச்சுருக்கமாக எழுதியுள்ளேன். பர்மிய பாஷையில் முன்னேற்றமடைந்துள்ள பல பத்திரிகைகளை நாம் இன்று காண்பதற்கு, இப்பத்திரிகாசிரியர்களின் பேருழைப்பே காரணமாகும். பர்மியப் பத்திரிகைகளின் நோக்கங்களையும் கொள்கைகளையும் தமிழ் மக்கள் பொதுவாகவேனும் அறிந்திருப்பார்கள். எனவே பத்திராசிரியர்களின் வாழ்க்கை வரலாறுகளை நம்மவர்கள் ஆவலோடு வாசிப்பார்களென்று நம்புகின்றேன். இவ் வாலாறுகள் தகுந்த ஆதாரங்களுடனேயே வெளியிடப் பெறுகின்றன. தங்கள் வாழ்க்கைக்குறிப்புகளை தங்கள் சொந்தக்கைப்பட எழுதிக்கொடுத்த பர்மிய பத்திராசிரியர்கட்கு எனது வந்தனத்தைச் செலுத்துகின்றேன்.

"பர்மியத் தேனீ"

ஊத்தெய்ன் மாங்.

"ஸன்" மாகஸைன் ஆசிரியர்.

இப்பொழுது இவருக்கு வயது முப்பதைந்து. மவூபின் ஜில்லாவைச் சேர்ந்த மல்லெட்டோ கிராமத்தில் பிறந்தார். இவருடைய பிதா முனிசீப்பாக விருந்தார். ஊத்தெய்ன்மாங், தமது சிறு பிராயத்தில், மின்டொவ்ன் மன்னரின் பிரதம குருக்களில் ஒருவராக விருந்த கூகொவ்ன் ஸயாடோ என்ற துறவியிடம் பர்மிய பாஷையைக் கற்றுக்கொண்டார். பதின்மூன்ருவது வயதில் மவூபின் கவர்ன்மெண்டு உயர்தரப் பாடசாலையில் ஆங்கில பாஷையைப் பயின்ருர். பின்னர், ரங்கூனில் செயின்ட் பால்ஸ் உயர்தரப் பாடசாலையிலும் மெதடிஸ்ட் ஸ்கூலிலும் சேர்ந்து தொடர்ச்சியாய் ஆங்கிலம் கற்று வந்தார். யூனிவர்ஸிடி ஆக்டை வெறுத்து மாணவர்கள் சர்வகலாசாலையை ஒரு முகமாய் பகிஷ்கரித்தார்கள். அந்த பகிஷ்கார இயக்கத்தில் அனுதாபம் கொண்டு இவரும் பாடசாலையை விட்டு விலகி, மாணவர் பகிஷ்காரக் கமிட்டிக்குக் காரியதரிசியாக விருந்து மாணவர்களைக் கண்காணித்து வந்தார். பின்னர், கிமெந்தான் தேசீய பாடசாலையில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்குப் பர்மிய செய்யுள் பாடம், பர்மிய சரித்திரம் இவைகளைப் போதிக்கும் ஆசிரியரானுர். சில காலத்திற்குப் பின்னல், முதலாவதாக பர்மாவில் புகைப்படங்களைப் பிரசுரித்து வெளியிடப்பட்ட "சேடகூன்" என்ற பத்திரிகைக்கு மொழிபெயர்ப்பாளராக அமர்ந்து, சிறிது காலத்துக்குப் பின்னர், "ஸன்" பத்திரிகாலயத்தில் ஒரு சாதாரண குமாஸ்தாவாக உத்தியோகம் பார்த்து வந்தார். சுமார் இரண்டாண்டுகளுக்கப்பால், "ஸன்" பத்திரிகைக்கு மொழி பெயர்ப்பாளராக அமர்த்தப்பட்டார். பின்னர், உதவி பத்திராதிபர் பதவிக்கு உயர்த்தப்பட்டார். இவ்விதம் இவர் உப பத்திராதிபர் ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்ட சிறிது காலத்திற்குள்ளாகவே, பர்மாவில் முதன்மையாக படங்களுடன் திகழும் "ஸன்" வாரப்பதிப்புக்கு, பொறுப்பாசிரியராக விருந்து நடத்தினுர். அதோடு, ஆர்ட் எடிட்டர் என்ற வேலையையும் மேற்கொண்டார். இவற்றிற்கிடையில் "ஸன்" தினசரியில் சிறந்த புனைப்பெயருடன் அங்கமொன்றை எழுதி வருகிறுர். இவரால் எழுதப்படும் அந்த அங்கத்தின் காரணமாகவே பர்மா பிரிவினைப் பிரச்சினை மிக முக்கியப் பிரச்சினையாய் கருதப்பட்டிருப்பதாக ஊத்தெய்ன்மாங் அபிப்பிராயப்படுகிறுர். இருபத்தொரு கட்சியினரின் கொள்கையில் நம்பிக்கை கொண்டவர். சைமன் கமிஷன் விஜயத்திற்குப் பின்னர், பர்மா பிரிவினைச் சங்க மென்ற பெயரால் புதிய கழகமொன்றைக் கண்டார். அச்சங்கம் கண்ட 2 மாதங்களில் அதற்கு பதினயிரம் பேர்கள் அங்கத்தினர்களானுர்களாம். இன்று வரை அச் சங்கத்திற்குக் காரியதரிசியாயிருந்து வருகிறுர். "வீர பர்மியன்" "மகா பண்டுலா", "பய்பினவ்ன்" "அலவ்ங்பயா" ஆகியவர்களின் வாழ்க்கைச் சரித்திரங்களைச் சரித்திர ரூபமாக வெளியிட்டு பண்டைப் பர்மியர் பெருமையை இனத்தவருக் குணர்த்த முற்பட்டிருப்ப தொன்றே ஊத்தெய்ன் மாங்கின் மன வெழுச்சியை விளக்கப் போதிய சான்ருகும்.

ஊ பா கலே

"ஸன்" (தினசரி) ஆசிரியர்.

ஊபாகலேயவர்கள் ரங்கூன் கவர்ன்மெண்டு ஹைஸ்கூலில் வித்தியாப்பியாசம் பெற்ருர். பி. ஏ. வகுப்பில் தேர்ச்சியடைந்து 1911 ல் ரங்கூன் கலாசாலைப் படிப்பை நிறுத்திக் கொண்டார். 1911 ல் ஜுலை மாதத்தில் "ஸன்" பத்திரிகை முதலாவதாக வெளியிடப்பட்டது. அப் பத்திரிகையின் ஸ்தாபகர்களில் ஊபாகலேயும் ஒருவராவார். பழைய ஒய். எம். பி. ஏ. சங்கத்திற்குக் கௌரவப் பொக்கிஷதாரராயும் ஜீ. ஸீ. பி. ஏ. பர்மிய மகாசபைக்குக் காரியதரிசியாயும் சில காலம் வரை இருந்துள்ளார். 1923-25 வரை இன்சீன் தொகுதிக்குப் பர்மா சட்டசபையில் அங்கத்தினராயிருந்திருக்கிருர். 1926 முதற்கொண்டு ரங்கூன் லான்மடோ வார்டின் பிரதிநிதியாக ரங்கூன் கார்ப்பரேஷனில் அங்கத்தவர் பதவி வகித்து வருகிருர். கௌரவ மாஜிஸ்திரேட்டாயுமிருக்கிருர். 1929 ல் பர்மியர் வர்த்தக சங்கத்தின் பிரதிநிதியாக பர்மா சட்டசபையில் அங்கம் பெற்றிருந்தார். ஆனல் அப்பதவியைச் சில காலத்திற்குப்பின் இராஜீநாமாச் செய்து விட்டார். இப்பொழுது மேற்படி சங்கத்தின் பிரதிநிதியாய் சட்டசபைக்கு அங்கத்தினராக இருந்து வருகிருர். கலாசாலைப் படிப்பை விட்டுப் பொது வாழ்க்கையில் இடுபட்ட காலமுதற்கொண்டு, நண்பர் ஊபாகலே யவர்கள், அரசியலிலும் சமுதாயச் சேவையிலும் நகர அபிவிருத்தியிலும் இதர துறைகளிலும் அதிகப் பங்கெடுத்துக்கொண்டு வேலை செய்து வருகிருர். கவர்ன்மெண்டு உத்தியோகத்தில் இவர் எப்பொழுதும் சேர்ந்ததில்லை. 1919 ல் பத்திரிகைத் தொழிலிருந்து விலகிக்கொண்டார். அரிசி நெல் வியாபாரத்தில் சம்பந்தப்பட்டார். ஏழு வருட காலத்துக்குப் பின்னல் மீண்டும் தமக்குப் பிரியமான பத்திரிகைத் தொழிலை யேற்ருர். குதிரைப் பந்தயம் ஒன்றைத் தவிர்த்து, எஞ்சிய எல்லாவகைப் பயிற்சி விளையாட்டுகளிலும் கலந்து கொள்வதில் பிரேமை மிகக் கொண்டவர். இயற்கையிலேயே இவர் பலசாலியாயில்லாதிருந்தமையால், ஒவ்வொரு நாள் காலையிலும் விடாமல் சுமார் இருபத்திரண்டு ஆண்டுகளாக கால நிலையைக் கவனிக்காமல் ஏறக்குறைய சராசரி நாளொன்றுக்கு நான்கு மைல் முதல் ஆறு மைல்கள் தூரம் வரை நடந்து செல்வதைப் பயிற்சியாகக் கொண்டிருக்கிருர். ஒரு சமயத்தில் இவர், ரங்கூன் சர்வகலாசாலை, ரயில்வே ஆலோசனைக் கமிட்டி, போர்ட் கமிஷனர், ரங்கூன் டெவலப்மெண்டு டிரஸ்ட்டு ஆகியவற்றில் அங்கத்தினராயிருந்துள்ளார். அவர் சம்பந்தபட்ட வேலைகளில் கண்ணியமாகவும் அடக்கமாகவும் நடந்து கொள்கிருர். இவர் தமது கூட்டாசிரியர்களிடத்தில் எப்பொழுதும் கடுமையாய் நடந்து கொண்டதே கிடையாது. சுருங்கச் சொல்லுமிடத்து இயற்கையிலேயே பெருந்தன்மைக் குணம் படைத்தவரென்றுதான் கூறவேண்டும். "ஸன்" பத்திரிகையின் கொள்கையை வாசகர்களறிந்திருப்பதால், அதனைப்பற்றிக் கூருது விட்டு விடுவது நலமென்று இத்துடன் நிறுத்திக் கொள்கிறேன்.

ஊ ஸெய்ன்

"நியூ லைட் ஆப் பர்மா" ஆசிரியர்.

இவருடைய சொந்தவூர் பாஸின். இப்பொழுது வயது அறுபத்திமூன்று. உள்ளூர் கவர்மெண்டு உயர்தரப் பாடசாலையில் பர்மிய பாஷையும் ஆங்கிலமும் பயின்ருர். பின்னர் ரங்கூன் கலாசாலையிற் சேர்ந்து, நடுத்தர வகுப்புப் பரீட்சை, வங்க நாட்டுப் பரீட்சை ஆகியவற்றில் தேர்ச்சி பெற்ருர். கால் பந்தாட்டத்தில் சமர்த்தரா யிருந்தமையால் காலேஜ் புட்பால் குழுக்குக் காப்டனுக நியமிக்கப்பட்டார். பி. ஏ. ஏ. விளையாட்டுச் சங்கம் ஏற்பட்டதன் பின்னர், ஓடும் பந்தயம், தாண்டும்பந்தயம் முதலியவைகள் நடைபெற்றன. முதலாவது ஆண்டு நடந்தேறிய பந்தயத்தில் இவர், 100,200 கெஜம் ஓடும் பந்தயங்களிலும் 2 பர்லாங்கு ஓடும் பந்தயத்திலும் இடுபட்டு முதலாவது பரிசை பெற்ருர். பத்து செக்கண்டில் 100 கெஜ தூரத்தை யடைந்ததாயும் அவரைப்போல் நாற்பத்தைந்து வருடத்திறகுள் ஓடும் பந்தயத்தில் எந்த மாணவரும் வந்ததாகக் கேள்விப்படவில்லை யென்பதாயும் சொல்லுகிருர். பர்மிய பாஷையில் கெட்டிக்காரரென்று உபாத்தியாயர்களின் பாராட்டுக்கு இலக்கானவர். பர்மிய பாஷைகளில் நடைபெறும் பரீட்சைகளிலெல்லாம் முதலாவதாக வந்தவர். அதற்கேற்ப பரிசும் பெற்றுள்ளார். பர்னர்டு லைப்ரெரியிலுள்ள பர்மிய பாஷை இலக்கிய ஏடுகளில் பல, இவருடைய மேற்பார்வைக்குப் பின்னரே, அச்சியற்றப்பட்டிருக்கின்றன. ரங்கூன் காலேஜ் மாணவர்களுக்கும் செய்ன்ட் ஜான்ஸ் காலேஜ் மாணவர்களுக்கும் ஏற்பட்ட பெருங் கலகத்தில் ஊஸெய்ன் தலைமை ஸ்தானம் வகித்து, இரண்டு கலாசாலைகளுக்கும் சமாதானத்தை உண்டாக்கி வைத்தார். போலீஸ் இலாகாவிலாவது, நியாய வாதத் தொழிலிலாவது

இடுபட வேண்டுமென்று இவருடைய உபாத்தியாயர்கள் விரும்பினார்கள். ஆனால் அவ்விரண்டிலும் அவருக்குப்பிரியமில்லை. 1894ல் ஷ்வேபோ நகரசபைக்குக் காரியதரிசியானார். பின்னர் ஓவர்ஸியர் உத்தியோகம் பெற்று சுமார் இருபது வருட காலத்தைப் போக்கினார். அதில் அவருக்குப் பிடித்தமில்லாமல் இராஜிநாமாக் கடிதம் எழுதினார். அதைக்கேள்வியுற்ற ஊர் வாசிகள் இராஜிநாமா செய்ய வேண்டாமென்று வற்புறுத்தினார். மத கைங்கர்யங்களில் அதிக பங்கெடுத்துக்கொண்டு சேவை செய்திருக்கிறார். ஷ்வேபோவிலும் மாந்தலேயிலும் சுமார் 26 வருடங்கள் வசித்துவந்திருக்கிறார். இதற்கிடையில் லோயர் பர்மாவுக்கு வந்ததேயில்லை. 1919-ல் "நியூ லைட் ஆப் பர்மா" பிரெஸின் சொந்தக்காரர் கொக்கோஜீ விரும்பியபடியால் பிரெஸ் மானேஜர்பதவியை ஒப்புக்கொண்டார். அப்பொழுது ஸயாத்தின் பத்திரிகைக்கு ஆசிரியாக விருந்தார். சில அங்கங்களை மட்டும் ஊஸெய்ன எழுதி வந்திருக்கிறார். ஸயாத்தின் கொலையுண்டு மாண்டதன பின் மானேஜராயும் ஆசிரியராயும் பிரெஸ் வேலைகளை கவத்துவர வேண்டியதாயிற்று. அடிக்கடி பர்மாவின் பல பாகங்களுக்கும் விஜயம் செய்து பிரசங்கங்கள் செய்து பர்மிய சமூகத்திற்கு தீவிரமாய் வேலை செய்து வந்திருக்கிறார். இப்பொழுதிருக்கும் பிரெஸ் சொந்தக்காரர் மௌ மௌங்ஜி காலத்தில், பிரதம ஆசிரியர் பதவிக்கு உயர்த்தப்பட்டு அவர் விருப்பப்படி போகவும் வரவும் உரிமை கொடுத்திருக்கிறார்கள். ஆயினும் இவர் நன்றி மிகக் கொண்டு பத்திரிகைக்கு எப்பொழுதும் போல் எழுதிக்கொண்டு வருகிறார். அன்றாடச் செய்திகளை உடனுக்குடன் வெளியிடுவதிலும் புகைப்படங்கள் எடுத்துப் படங்களைப் பிரசுரிப்பதிலும் 'நியூலைட் ஆப் பர்மா' பத்திரிகை இடுபட்டிருப்பதால் வியாபார மந்தமும் பணக்கஷ்டமும சேர்ந்து மக்களை வதைக்கும் இக்காலத்தில் ஆயிரக்கணக்கான சந்தாதாரர்கள் சேர்ந்திருக்கிறார்களென்றால் அப்பத்திரிகையின் வளர்ச்சியைக் குறித்து அதிகம் எழுதுவானேன்.

ஊஸெய்ன்.

"பண்டுலா" ஆசிரியர்.

அப்பர் பர்மாவைச் சேர்ந்த அமராப்புரா குக்கிராமமொன்றில், ஊஸெய்ன் ஜனனமானார். இவர் போடோமின்டயா என்ற பர்மிய மன்னர் ஆளுகையில் சட்டசபை அங்கத்தினராயிருந்தவருடையவும் "அடுல" என்னும் பட்டம் பெற்ற ரெவரெண்டு ஸீஸானியினுடையவும் பேரப் பிள்ளையாவார். தமது பதினாறுவது வயதில் மாந்தலேயில் வெளியிடப்பட்டு வந்த "அதுரெய்ன்" என்னும் பத்திரிகைத் தொழிலில் இடுபட்டு உதவி செய்து வந்திருக்கிறார். ரங்கூனில் பிரசுரிக்கப்பட்டு வரும் "நியூ லைட் ஆப் பர்மா"வின் ஆசிரியர் ஸயாத்தின் என்பவர் கொலை செய்யப்பட்டமையால், அவருடைய பதவிக்கு, இவர் கம்பிச் செய்தி மூலம் அழைக்கப்பட்டார். "நியூ லைட் ஆப் பர்மா"விலும் "மியான்மா ஊன்ட்டீன்" என்னும் பத்திரிகைகளிலும் சிலகாலம் ஆசிரியப் பதவி வகித்துவிட்டு, 1920 ஆம் ஆண்டில் "பண்டுலா" வென்ற பெயரால் புதிய முறையில் சொந்தத்தில் வாரப்பதிப்பொன்றையாரம்பித்தார். அப்பத்திரிகையின்கொள்கையை அதிகமாய் விஸ்தரித்துக் கூறத் தேவையில்லை. சரியான பொறுப்பாட்சியின்றிப் பர்மாவை இந்தியாவினின்றும் பிரிவினை செய்தல் கூடாதென்பதே "பண்டுலா"வின் கொள்கையாகும். பர்மாப் பிரிவினையை அடிப்படையாக வைத்துச்சென்ற வருடம் நடைபெற்ற சட்டசபையின் பொதுத்தேர்தலையொட்டி, பர்மா வெங்கும் விஜயம் செய்து பிரதம மந்திரியின் அரசியல் திட்டத்தைப்பற்றிப் பச்சைபச்சையாக மக்களுக் கெடுத்துச் சொல்லி பிரிவினை வேண்டாத கட்சிக்கு மகத்தான வெற்றியை உண்டாக்கிய பெருமை இவருக்கும் உண்டு. இந்த அன்பர் டாக்டர் பாமோ கட்சியைச் சேர்ந்தவர். இவருக்கு இப்பொழுது முப்பத்தி நான்கு வயதாகிறது. ஆடம்பரமற்ற உண்மைத் தலைவர்கள் ஜாபிதாவில் இவரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஊபாச்சோ.

"டீட்டோவ்" ஆசிரியர்.

இவர் 1895ஆம் வருடத்தில் மியாங்மியாவில் பிறந்தார். உள்ளூர் நகரசபைப்பாடசாலையில் கல்வி பயிற்சி பெற்று,ஏழாவது வகுப்பில் தேர்ச்சியடைந்தார்.

அவ்வகுப்பில் வாசிக்கும்போது இவருக்கு ஸ்காலர் ஷிப்பும் கிடைத்தது. 1908ல ரங்கூன் ஸெயின்ட் பால்ஸ் ஹை ஸ்கூலில் சேர்ந்து 1910ல் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேறினார். அதன பின்னர் ரங்கூன் கலாசாலைப் படிப்பில் இடுபட்டார். இரசாயனப் பயிற்சியில் முதலாவது பரிசும் வாங்கினார்.

கலாசாலைப் படிப்பைவிட்டு நீங்கியதும் பௌண்டை கவர்ன்மெண்டு மத்திய பாடசாலைக்கு ஒரு உபாத்தியாயராக அமர்ந்து வேலை பார்த்து வந்தார். ஹென்ஸடா கவர்ன்மெண்டு உயர்தரப்பாடசாலையில் சுமார் ஐம்பது வருடகாலம்வரை பாலிபாஷை போதகாசிரியராயிருந்திருக்கிறார். அதுகாலை "நியூ லைட ஆப் பர்மா" "ஸாலேட்ஜ்" இப்பத்திரிகைகளுக்கு "டவ்டெ" என்ற புனைப் பெயருடன விடாமல் கட்டுரைகள் வரைந்தனுப்பிக் கொண்டு வந்திருக்கிறார். பின்னர் ஸ்கூல் டெபுடி இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பெற்று பாசீனில் இருந்திருக்கிறார். ரங்கூன் யூனிவர்ஸிட்டி பகிஷ்காரத்துக்குப்பின்னர் இவரிடம் அவருடைய நண்பர்கள் பலர் சென்று தேசீயக் கலாசாலையில் சேர்ந்து சேவை செய்யும்படி கேட்டுக் கொண்டார்கள். அவர்களுடைய விருப்பத்திற் கிசைந்து சர்க்கார் உத்தியோகத்தை இராஜிநாமாச் செய்துவிட்டு, தேசீய கலாசாலை வளர்ச்சிக்குப் பாடுபட்டார். அக்காலத்தில் பிரசுரிக்கப்பட்டு வந்த "வரெஸ்ய்ன்", "யான்ஜி அவ்ன்", "ஹோம்ரூல்,' "ஆஸானி" முதலிய வாரப் பத்திரிகைகளுக்கு "நப்பாஜி" என்ற மாறு பெயருடன விஷயதானங்கள் செய்து வந்தார். வேல்ஸ் இளவரசரின் பர்மா விஜயத்தை முன்னிட்டு, பர்மா அதிகார வர்க்கத்தார் எல்லாப் பத்திரிகைகளையும் ஜாமீன் கட்டும்படி தூண்டினார்கள். இதன் பயனாய் பல பத்திரிகைகள் நிறுத்தப்பட்டன. தேசீயக் கலாசாலையும் மூடப்பட்டது. பின்னர் கவர்ன்மெண்டு உதவி பெற்ற உயர்தர பாடசாலைக்கு சுமார் 6 மாத காலம்வரைப் பிரதம ஆசிரியாகவும் இருந்துள்ளார். 1925ல் பர்மிய மகாஜனங்களின் அபிமானத்தை சம்பாதித்திருக்கும் "டீட்டோவ்" என்ற வாரப்பத்திரிகையைச் சொந்தத்தில் ஆரம்பித்தார். பர்மாவின் புதிய அரசியலில் அதிருப்தியிருக்கும்வரைப் பர்மாப் பிரிவினையை வன்மையுடன் கண்டித்துவரும் கொள்கையையுடையவராகவும் இருந்து வருகிறார். சங்கீதத்தில் இவருக்கு நல்ல ஞானமுண்டு.

ஊக்கின் மாங் பி. ஏ.

"ஹெட்மென்ஸ் கெஜட்" ஆசிரியர்

1893 ஆம் வருடத்தில் ஊக்கிங் மாங் டெபுடி ஸ்கூல் இன்ஸ்பெக்டர் ஊம்லாப் பேயக்கு செல்வக் குழந்தையாகப் பிறந்தார். அவருடைய தகப்பனார் எஞ்செந்த ஊர்களுக்கு உத்தியோக முறையில் மாற்றப்பட்டாரோ, அவ்வந்த ஊர்களில் பிதாவுடன் வசித்து கல்வி பயின்று மோல்மீன கவர்ன்மெண்டு உயர்தரப் பாடசாலையில் மெட்ரிகுலேஷன பரீட்சையில் தேர்ச்சியுற்றார். பின்னர் ரங்கூன கலாசாலையில் படித்து 1916-ஆம் ஆண்டில் பி. ஏ. பட்டம் பெற்றார். கலாசாலையிலிருந்துவந்த காலத்தில், தாக்க வாத சங்கத்திலும், பௌத்த மத சபைகளிலும இடுபட்டு அதிக பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார். அரசியல் துறையிலும் மெச்சத்தக்க விதமாய் மிக ஊக்கத்துடன் வேலை செய்து வந்திருக்கிறார். தட்டோனில் பாடசாலை உபாத்தியாயராக சில காலம்வரை இருந்திருக்கிறார். அக்காலத்தில பர்மியான தனத்தைக் கொண்டும பர்மிய ஆசிரியரைக் கொண்டும் வெளியிடப் பட்டுவந்த "பர்மா அப்சர்வர்" என்ற ஆங்கிலப் பத்திரிகாலயத்தில் சேர்ந்து வேலை செய்துவந்தார். சில காலத்திற்குள்ளாகவே அவர், எதிர்பார்த்தபடி அப்பத்திரிகைக்கு தலைமை ஆசிரியராக நியமனம செய்யப்பட்டார். 'அப்ஸர்வர்" நிறுத்தப்படும வரை அவரே ஆசிரியாகயிருந்து, பின்னர், பர்மாவின சிறந்த தினசரியாய் ஒன்று திகழ்ந்துகொண்டிருக்கும 'சன' எனும பாமிய பாஷைப பத்திரிகையின ஆசிரிய பீடத்திற்கு மாற்றப்பட்டார். இக்காலத்தில் பாமாவின அரசியலில வெகுவாய் சமபந்தப்பட்டு தேசசேவைசெய்து வந்துள்ளார்.ஜி. ஸி.பி.ஏ. பர்மிய மகா சபைக்கும்,பர்மா சீர்திருத்தச் சங்கத்திற்கும், ரங்கூன் பௌத்தமத இளைஞர்களின் சங்கத்திற்கும் கௌரவக் காரியதரிசியாயிருந்து அரிய வேலைகள் செய்திருக்கிறார்; பசுமந்தான் கவர்ன்மெண்டு எயிடட் நாஷனல் ஸ்கூலுக்கு சூப்பரின்டென்டாகவும், பர்மா தேசீயக் கல்விச் சபையின் நிர்வாகக்கமிட்டி அங்கத்தினராகவும் இருந்திருக்கிறார். 1926-ல் இந்தியா சட்ட. சபைக்கு ஒரு அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய சரித்திர சாஸன ஆராய்ச்சி கழகத்திற்கு ஒரு உத்தியோகஸ்தராயும் நியமிக்கப்பட்டு, அவ்வேலையைச் செய்துகொண்டு வருகிறார். தட்டோன் நியாயவாதி யொருவரின் புத்திரியாகிய மாப்புவாஷ்வே என்பவரை மணந்து கொண்டிருக்கிறார். பர்மிய ஆசிரியர்களில் குழந்தைப் பாக்கியத்தில் சிறந்து விளங்குகின்றார். இப்பொழுது கவர்ன்மெண்டாரால் வெளியிடப்பட்டு வரும் "ஹெட்மென்ஸ் கெஜட்"பத்திரிகைக்குப் பத்திராசிரியாயிருந்து வருகிறார்.

கடற்பிரயாணம் செய்த தனவணிகத் தம்பதிகள்.



ஏவ.சு. ஷண்முகம் தம்பதிகள்.




ராசிபட்ட செட்டியார் தம்பதிகள்.


பர்மா நகரத்தார் கோவில்கள்.



தோங்குவாக் கோவிலும் மடமும்.



பின்மனு கோவில்.



பின்மனு மடம்.

ஆங்கிலேயர் வாழ்க்கை

திரு. சி. சோமசுந்தரம் செட்டியார் எல். எல். பி; டார்-அட்-லா.

நான் எடுத்துக் கொண்டுள்ள விஷயம் மிகவும்விரிவானது. இதைப் பற்றி மிகவும் சவிஸ்தாரமாக வரைய விரும்பு கிறேனுயினும் ஆசிரியர் எனக்கு அளித்துள்ள சிறு இடத்திற்குள் அதை முடிக்க முடியாதென்று அஞ்சுகிறேன். ஆதலின், இந்தச் சிறு கட்டுரையில், குடியேற்ற நாடுகளில் வதியும் ஆங்கிலேயனுக்குப் புறம்பாக, இங்கிலாந்தில் வதியும் ஆங்கிலேயனிடத்தில் என்னென்ன தனிப்பட்ட குணங்கள் அமைந்திருக்கின்றனவென்பதைப்பற்றி மட்டுங் கூற உத்தேசிக்கிறேன்.

சீதோஷ்ண நிலை.

இங்கிலாந்தில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது அதனுடைய சீதோஷ்ண ஸ்திதி. வருஷத்தின் பல பாகங்களில் அதிகஉஷ்ணமான காலமும், அதிக குளிர்ச்சியான காலமும், மித சீதோஷ்ண ஸ்திதியுள்ள காலமும் இப்படிப் பலவாருக ஏற்படுகின்றன. உலகத்தின் பல பாகங்களிலுமுள்ள சீதோஷ்ண நிலைமைகளை, இங்கிலாந்தில் வருஷத்தில் ஏதேனும் ஒரு காலத்தில் காணலாம். இதனுலேயே, ஆங்கிலேயர்வெளிநாடுகட்குச் சென்று குடியேறி வெற்றிகரமாக வாழ்க்கையை நடத்துவதில் திறமையுள்ளவர்களாயிருக்கிருர்கள். உலகத்திலேயே மிகவும் உஷ்ணமான தென்னுப்பிரிக்கா பிரதேசங்களுக்குக் கூடச் சென்று குடியேற இதனுலேயே ஆங்கிலேயருக்கு சாத்தியமாகிறது!

புதிதாக லண்டனுக்குச் செல்லும் ஒரு கீழ்நாட்டான், காலையில் எழுந்திருந்தவுடன் "இன்றைய சீதோஷ்ண ஸ்திதி மிகவும் அழகாயில்லையா?" அல்லது "இன்று மிகவும கொடுமையாக இல்லையா?" என்று கேட்கப்பட்டால் அதற்காக அவன் ஆச்சரியப்படவேண்டியதில்லை. காலை போஜனத்திற்குத் தயாராக வரும்போது வேலைக்காரியோ அல்லது வீட்டு எஜமானியோ முதன் முதல் இந்தக் கேள்விகளையே உங்களைக்கேட்பாள். சீதோஷ்ண ஸ்திதியானதுஆங்கிலேயனுக்கு முக்கிய கவலையுள்ள விஷயமாகப் போய் விட்டது. இதனுலேயே காலையில்எழுந்திருந்ததும் அவன முதன் முதலாக மேறகண்ட கேள்விகளையே கேட்கிருன்.

ஜனங்களின் குணகுணங்கள்.

ஆங்கிலேயர்கள் பொதுவாகச் சிறிது மிடுக்குள்ளவர்களாகவும், பரஸ்பர உபகாரப்பிரியர்களாகவும், அதிக இளக்கமில்லாதவர்களாகவும் இருக்கின்றனர். பிரெஞ்சுக்காரர்களைப்போல் இவர்கள் எளிதில் மனக்கிளர்ச்சிக்கு வசப்பட்டு விடுபவர்களல்லர். ஒரு பாலை வனத்தில் இரண்டு ஐரிஷ்காரர்கள சந்தித்தால், அங்கும் அவர்கள பரிகாசமாகத்தான் பேசிக் கொள்வார்கள்; இரண்டு ஸ்காட்லாந்துவாசிகள்சந்தித்தால் ஏதேனும் ஒரு வியாபார விஷயத்தை முடிவு செய்வார்கள. ஆனுல் இரண்டு இங்கிலீஷ்காரர்கள் சந்திததால், பரஸ்பரம் ஒருவர்க்கொருவர் பேசாமலேயே இருப்பார்கள். ஏனெனருல் இவர்களை அறிமுகப் படுத்தி வைக்க ஒருவருமில்லையே! ஆனுல் இந்தப் பரிகாச வார்த்தையானது, வெளிநாடுகளில் சென்று குடியேறுகிறவர்களுக்கோ, அல்லது உத்தியோகஞ் செய்யச் செல்லுகிறவர்களுக்கோ அல்லது ஏகாதிபத்திய நிர்மாணிகர்களுக்கோ பொருந்தியதல்ல. இங்கிலாந்தில் வசிப்பவர்களுக்கு மேற் கூறப்பட்டவர்கள் புறம்பானவர்களே யாவார்கள். இதனுல் இங்கிலாந்தில் வசிக்கும் இங்கிலீஷ்காரர்களைப் பற்றி வாசகர்கள் ஒருவித அபிப்பிராயந் தெரிந்துகொள்ளலாம். இங்கிலாந்தில் ஓர் ஆங்கிலேயனோடு நீங்கள் நாற்பது வருஷ காலம் வாழ்ந்துகொண்டிருக்கலாம்; ஆயினும் அவனைப் பற்றியோ, அவனுடைய குடும்ப விஷயங்களைப் பற்றியோ நீங்கள் ஒன்றுமே தெரிந்துகொண்டிருக்க முடியாது. ஆனுல் ஒரு பிரஞ்சுக் காரனோடு குடியிருந்தீர்களானுல் நாற்பது விநாடிகளில் அவனைப்பற்றியும் அவன் குடும்பத்தைப் பற்றியும் தெரிந்துகொண்டு விடுவீர்கள். இங்கிலீஷ்காரர்கள் இவ்வளவு ஒதுக்கமானவர்களாகவும் பரஸ்பர உபசாரக்காரர்களாகவும் இல்லாமலிருந்தால் நன்ருயிருக்கும். ஆனுல் நமது இந்தியர்களைப்போல் அவ்வளவு தாராளமுள்ளவர்களாகவும், பிறர் விஷயங்களைக் கவனிப்பதில் ஆவலுள்ளவர்களாகவும் இருக்கவேண்டாம். கீழ்நாட்டார் இருவர், ரெயில் வண்டி அறையில் அமர்ந்து பிர



யாணஞ் செய்து கொண்டிருக்கும்போது ஒருவர்க்கொருவர் பலவிதமான கேள்விகளைக் கேட்டுக் கொள்ளாமலிருக்கமாட்டார்களென்பது தெரிந்த விஷயம். இஃதொரு பெருந் தொந்திரவு என்றே நான் கருதுகிறேன். "உங்கள் தகப்பனுர் யார்? உங்களுக்கு எத்தனை சகோதர சகோதரிகள்? அவர்களெல்லாருக்கும் விவாகமாகிவிட்டதா? உங்களுடைய தகப்பனுருக்கு எவ்வளவு சொத்து?" இந்த மாதிரியான கேள்விகளையெல்லாம் கேட்பாங்கள். தனக்குத் தெரியாத ஒரு குடும்பத்தைப்பற்றி இவ்வளவு சவிஸ்தாரமாக ஒருவர் விசாரிப்பானேன். என்பது இன்னும் எனக்கு விளங்காமலே இருக்கிறது. இத்தகைய சம்பாஷணைகளை நிராதரவு செய்யவேண்டும்.

நியாய நெறி.

நியாயத்துடனும் நெறிபுடனும் நடந்து கொள்வதில் இங்கிலீஷ்காரர்கள் கண்ணுங் கருத்துமாயுள்ளவர்கள். "நீங்கள் நியாயமாக நடந்துகொள்ளவில்லை"யென்று சொன்னுல் அதுதான் நீங்கள் அவருக்குச் செய்யும் பெரிய அவமானமாகும். கறுப்பு நிறத்தவனுயிருக்கட்டும், வெளளை நிறத்தவனுயிருக்கட்டும், எல்லாருக்குஞ்சமமாக நீதி வழங்குவதில் அவர்கள் விருப்பமுடையவர்கள். ஆனுல் அரசியல் விஷயங்களில் சுயநலம் கலந்திருப்பதால் அதைப் பொறுத்த மட்டில் வேறு விதமாகவே நடந்துகொள்கிருர்கள். லண்டனில், என் நண்பர் சம்பந்தப்பட்ட ஒரு விஷயத்தை இங்கு உதாரணமாக எடுத்துக்காட்ட விரும்புகிறேன். பிகாடெல்லி சர்க்கஸிலுள்ள ஒரு சினிமா கொட்டகைக்கு என்நண்பர்சென்றிருந்தார். அங்கு டிக்கட்டு கொடுக்கப்படுமிடம் இன்னும் திறக்கப்படவில்லை. எனவே அங்கே வரிசையாகக் காத்துக் கொண்டிருந்தவர்களுடன் இவர்காத்துக் கொண்டிருந்தார். இவருக்கு முன்னுல் ஒரு வயோதிக ஆங்கில மாது நின்று கொண்டிருந்தார். சில நிமிஷங்கள் கழித்து இந்த வரிசையானது பெருகி விட்டது. இச்சமயத்தில் ஒரு யூதர் வந்து, வரிசையின் பின்னுல் நில்லாமல் மெதுமெதுவாக முன்னே வந்து மேற்படி இந்தியருக்கும் வயோதிக மாதுக்கும் இடையேநின்று கொண்டார். நமது இந்திய நண்பர் புதியவரானபடியால் இதை அவர் கண்டிக்கவில்லை. ஆனுல் வயோதிக மாது இவரைப்பின்னுல் போகும்படி கண்டிப்பாகக் கூறினுர். ஆனுல் யூதர் ஓர் அங்குலம்கூடப்பின் செல்லவில்லை. உடனே வயோதிகமாது என்னசெய்தார்? ஒருகான்ஸ்டேபிளை அழைத்துவிஷயத்தைத் தெரிவித்தார். அந்தக் கான்ஸ்டேபில் இந்த யூதரை அமைதியாக வெளியிலே கொண்டு நிறுத்தி வைத்துவிட்டார்.

இந்த வரிசையைப்பற்றி ஒரு வார்த்தை கூற விரும்புகிறேன். இதற்கு இங்கிலீஷ் மொழியில் "குவே" என்று பெயர். அதாவது, அவரவர்கள் வரும்வரிசைக்கிரமப்படி ஒருவராகவோ, இருவராகவோ, மூவராகவோ வரிசை வரிசையாகக் காத்துக்கொண்டிருப்பது என்று பொருள். ஒரு நாடகக் கொட்டகையிலோ, சினிமா கொட்டகையிலோ, அல்லது ரெயில்வே ஸ்டேஷனிலோ டிக்கட்டுகள் கொடுக்குமிடத்தில் இங்கிலீஷ்காரர்கள் மேற்படி வரிசைக் கிரமமாகவே நின்று டிக்கட்டுகள் வாங்கிச் செல்வார்கள். இதனுல் முதல் வந்தவனுக்கு முதலாவதாகவும் இரண்டாவது வந்தவனுக்கு இரண்டாவதாகவும் டிக்கட்டுகள் கிடைக்கின்றன. முக்கியமான சிலசமயங்களில் உதாரணமாக விம்பள்டன் டென்னிஸ் போட்டிப் பந்தயத்தின் போதோ அல்லது லண்டனில் முக்கிமான ஒரு நாடகம் நடிக்கப்படும்போதோ சிலர் 24மணி நேரம் முன்னுடியாகவேவந்து காத்திருப்பதுண்டு. என்னுடைய வாசகர்களுக்கு இது மிகவும் ஆச்சரியமாகத் தோன்றலாம். ஆனுல் இது முற்றிலும் உண்மை. எவ்வளவு மழையாயிருந்தாலும் வெய்யிலாயிருந்தாலும் குளிராயிருந்தாலும் அவைகளை பொருட்படுத்தாமல் ட்ரோஜன்களைப்போல் 24மணிநேரமும்சில'சாண்ட்விச்'களைத் தின்பண்டமாகக் கொண்டு, சில நாவல்களைப்படித்தவண்ணம் அங்கேயே காத்துக்கொண்டிருப்பார்கள். காலம் போக்குவதற்குச்சிலர் சீட்டாடுவார்கள். வீதிகளில் பாடிக்கொண்டு செல்வோருடைய பாட்டுகளைச் சிலர் கேட்டுக் கொண்டிருப்பார்கள். ஓர் இங்கிலீஷ் ரெயில்வே ஸ்டேஷனிலுள்ள ஜன வரிசைக்கும்,இந்தியரெயில்வே ஸ்டேஷனில்

காணப்படும் வெறக் கூட்டத்திற்கும் எவ்வளவு வேற்றுமை யிருக்கிறது! இந்தியர்களாகிய நாம் "பலவானுக்கே உரிமையுண்டு" என்பதில் நம்புகிறோம். ஆனல் இங்கிலீஷ்காரர்களோ "உரிமையாளனுக்கே பலம் உண்டு" என்று நம்புகிறார்கள். உதாரணமாக நமது ரயில்வே ஸ்டேஷன்களில் ஒன்றில் கூடும் கூட்டத்தை எடுத்துக்கொள்வோம். எவ்வளவு இடி! எவ்வளவு நெருக்கல்! மூர்ச்சையாகாமலோ, அல்லது கால்மிதிபடாமலோ இந்தக் கூட்டத்திலிருந்து ஒருவன் வெளியேவந்துவிட்டால் அவன் பெரிய அதிர்ஷ்டசாலி என்றே சொல்லவேண்டும். ஒரு ஹாக்கி விளையாட்டுப் பந்தயத்திற்கு நான் சென்றிருந்தபோது எனக்கு ஏற்பட்ட அநுபவத்தை நான் எப்பொழுதும் மறக்க முடியாது. கட்டுக் கடங்காத ஒரு முரட்டுக் கூட்டத்தின் நடுவே நான் அகப்பட்டுக்கொண்டேன். இந்தக்கூட்டம் ஒவ்வொரு நிமிஷமும் பெருகிக்கொண்டே வந்தது. அப்பொழுது தான் டிக்கட்டு விற்குமிடம் திறக்கப்பட்டது. நான் முன்னும் பின்னுமாகத் தள்ளப்பட்டேன். நான் எப்படி மூர்ச்சையடையாமலிருந்தேனென்பது எனக்கு ஆச்சரியமாயிருந்தது. டிக்கட்டுகொடுக்குமிடத்திலே ஏற்பட்ட நெருக்கமோ சொல்லமுடியாது. ஜனங்களுடைய வியர்வையினால் உண்டான துர் நாற்றமோ சகிக்கக் கூடியதாயில்லை. கடைசியில் டிக்கட்டுபெற்று கூட்டத்தினின்று வெளிவந்தபோது ஏறக்குறைய பாதி உயிரே யிருந்தது. காலிலே காயமும் ஏற்பட்டது. வாசகர்களே! எவ்வளவு கஷ்டப்பட்டு நான் டிக்கட்டுபெற்றேன் என்பதைச் சற்று ஊகியுங்கள்! மற்றவர்களுடைய உரிமைகளுக்கு நாம் மதிப்புக்கொடுப்பதில்லை என்ற நமது மனோபாவம் இதினின்று நன்கு புலப்படுகிறது. நாமும் இங்கிலீஷ் காரருடைய "குவே" முறையைப் பின்பற்றுவது மிகவும் நல்லது. பிரான்சு முதலிய நாடுகளிலுள்ள ஜனங்களும் நமது இந்தியர்களைப்போலவே தான் நடந்துகொள்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. பிரான்சில் ஒரு டிக்கட்டு விற்பனையாகு மிடத்தில் ஐந்து நிமிஷத்தில் மூன்று முறை கைகலந்த சண்டை ஏற்படுமென்று சொல்லப்படுகிறது.

போலீஸ் படை

இங்கிலாந்திலுள்ள போலீஸ் படையைவிட உயர்வானதோ அல்லது சமமானதோவுள்ள ஒரு போலீஸ்படை உலகத்திலேயே இல்லை யென்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை. இங்கிலாந்து போலீஸ் படையைச் சேர்ந்தவர்கள் உயரமாகவும் திட சரீரிகளாகவும் புத்தி கூர்மை யுள்ளவர்களாகவும் வணக்க முள்ளவர்களாகவும் உபகாரப் பிரியர்களாகவும் இருக்கிறார்கள். இதனால் கான்ஸ்டேபில்களைப் பொது ஜனங்கள் "பாப்பி" என்று அன்புடன் அழைக்கிறார்கள். ஒரு பெரிய மனிதனுக்கு வேண்டிய எல்லா அம்சங்களும் இந்தக் கான்ஸ்டேபிலிடம் இருக்கின்றன. நீங்கள் வழி தெரியாமல் திகைத்து நின்றாலும் சரி, அல்லது பணப்பையை தொலைத்து விட்டாலும்சரி, "ஏதேனும் தொந்தரவு ஏற்பட்டால் அருகாமையிலுள்ள போலீஸ் கான்ஸ்டேபிலிடம் செல்" என்ற முதுரையைப் பின்பற்றி நடந்தால் போதுமானது. பஸ் ஏறிச்செல்வதற்குப் போதிய பணம் கையில் இல்லாவிட்டால் அருகாமையிலுள்ள கான்ஸ்டேபிலிடம்செல்லுங்கள். அவர் உங்களுக்கு வேண்டிய பணத்தைத்தருவார். ஆனல் எவ்வளவு சீக்கிரமாக அதைத் திருப்பிக் கொடுத்துவிட முடியுமோ அவ்வளவு சீக்கிரமாகத்திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். மணி என்ன ஆயிற்று என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால் கான்ஸ்டேபிலைப் போய்க் கேள்" என்று எல்லாரும் பாடக்கூடிய ஒரு பாட்டு உண்டு. இதனால் கான்ஸ்டேபிலிடமிருந்து பொதுஜனங்கள் என்னென்ன கடமைகளை எதிர்பார்க்கிறார்கள் என்பது நன்கு புலனாகிறது. சில சமயங்களில் ஒரு கான்ஸ்டேபில் தன் கையை உயர்த்தி போக்குவரவு வண்டிகளை நிறுத்திவிட்டு ஒரு வயோதிக ஸ்திரியைக் கைப்பிடித்து தெருவின் குறுக்கு வழியாக அழைத்துச் செல்வதோ அல்லது குழந்தைகளை அழைத்துச்செல்வதோ மிகவும் உருக்கமான காட்சியாயிருக்கும். போலீஸ்காரரைப் பொது ஜனங்கள் "சிறந்த நண்பன்" என்றே அழைப்பார்கள். ஒரு கான்ஸ்டேபில், தன் கை விரலை உயர்த்தினால் அந்தத் தெருவிலுள்ள போக்கு வரவு வண்டிகளெல்லாம் அப்படியே நின்றுவிடும். இங்கிலாந்திலே சட்டத்திற்கு அதிகமான மதிப்புக் கொடுக்கப்படுகிறது.

வியாபார நாணயம்.

இங்கிலீஷ்காரர்கள் வியாபாரிகள் சமூகம் என்று நெபோலியன் சொன்னதாக நினைக்கிறேன். விற்பனை செய்யும் தொழிலில் அவர்கள் பெரிதும் பயின்றிருக்கிறார்கள். இங்கிலாந்திலுள்ள ஒரு ஷாப்பில் ஒருவர் சென்றால் அவர் உடனே நன்கு கவனிக்கப்படுகிறார். அவரை நீண்ட நேரம் காக்கவைப்பதில்லை. வாடிக்கைக்காரர்கள் திருப்தியுடன் செல்லுவதற்கு வேண்டிய வழிகள் செய்யப்படுகின்றன. ஆனல் நம்முடைய கடைகளிலோ, வாடிக்கைக்காரர்களுக்குக் கோபம் உண்டாகுமாறு காரியங்கள் செய்யப்படுகின்றன. தவிர இங்கிலீஷ் வியாபாரிகள் மிகவும் நாணயஸ்தர்கள. இதற்கு மூன்று உதாரணங்களை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். லண்டன் கடை யொன்றில் ஒரு நாள் நான் ஒரு 'கிரிக்கெட் பாட' 'Cricket Bat' வாங்கினேன். மறு நாள் அதை நான் விளையாடுவதற்கு எடுத்தபோது அது சிறிது வெடித்திருந்தது. உடனே அதை எடுத்துக்கொண்டு நான் வாங்கின கடைக்குச் சென்றேன். கடையின்மானேஜர் அதைத்திரும்பப் பெற்றுக்கொண்டு, வேறொரு நல்ல பாட்(Bat) டைக் கொடுத்ததுடன் என்னை மன்னிப்புங் கேட்டுக் கொண்டார். இதே மாதிரியான ஒரு விஷயம் கீழ்நாட்டு வியாபாரி ஒருவரிடம் ஏற்பட்டிருந்ததேயானால், தாம் மேற்படி பாட்டைக்கொடுக்கும் போது சரியாக இருந்ததென்றும், நான் அஜாக்கிரதையாக உபயோகப்படுத்தியிருக்கலாமென்றும் கூறி, தாம் பாட்டைத் திருப்பி வாங்கிக்கொள்ள மறுத்திருப்பார். மற்றோர் உதாரணம் என் நண்பரைப் பொறுத்த விஷயமாகும். இவர், 'மான் செஸ்டர் கார்டியன்' பத்திரிகையில் ஒரு விளம்பரம் போடுவித்தார். இதற்கு வழக்கமான கட்டணம் ஐந்து ஷில்லிங். ஆனல் அங்கேயிருந்த குமாஸ்தா புதியவரானபடியால், ஆறு ஷில்லிங் என்று தெரியாமற் சொல்லி மேற்படி தொகையை என் நண்பரிடமிருந்து பெற்றுக்கொண்டு விட்டார். இந்த நண்பரும் தான் ஒரு ஷில்லிங் அதிகமாகச் செலுத்திவிட்டார் என்று கனவிலும் கருதவில்லை. சுமார் ஒரு மாதங்கழித்து, மேற்படி பத்திரிகாலயத்திலிருந்து ஒரு ஷில்லிங்குக்குப் போஸ்டல் ஆர்டரும், அதிக கட்டணம் வாங்கியதற்கு வருந்துவதாகவும் ஒரு கடிதம் கிடைத்தது. நான் ஒரு முறை தபாலாபீசுக்குச் சென்று ஒன்றரை பென்ஸ் ஸ்டாம்பு வாங்கினேன். ஒரு பவுன் நோட்டை ஸ்டாம்பு விற்கும் ஸ்திரீயிடம் கொடுத்தேன். என்னுடைய அவசரத்தில் மிகுதிச் சில்லரையைப் பெற்றுக் கொள்ளாமல் திரும்பி வந்து விட்டேன். இதைப்பற்றி எனக்கு ஞாபகமும் இல்லை. இரண்டு நாள் கழித்து மேற்படி தபாலாபீசுக்குச் சென்ற போது, எனக்குச் சேரவேண்டிய பாக்கிச் சில்லரையையும் கொடுத்து இனிப் பணத்தில் ஜாக்கிரதையாயிருக்குமாறு எச்சரிக்கை செய்தார். இதே மாதிரி இன்னும் நான் பல உதாரணங்களை எடுத்துக் காட்டிக் கொண்டிருக்க முடியும்.

ரேயில்வே கம்பார்ட்மேண்ட்

ரெயில்வே கம்பார்ட் மெண்டுகள், சிகரெட் பிடிப்பவர்களுக்கென்றும், பிடியாதவர்களுக்கென்றும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. கம்பார்ட் மெண்டுகளெல்லாம் மிகவும் சுத்தமாக வைக்கப்பட்டிருக்கின்றன. சிறிது நாகரிக முள்ளவர்களுக்கு இங்கே எச்சில் துப்ப மனம் வராது.

விளையாட்டில் விருப்பம்.

டெர்பி குதிரைப் பந்தயத்தை முன்னிட்டு எப்ஸம் டௌன்ஸ் (Epsom Downs) என்ற இடத்திற்கு இலட்சக் கணக்கான ஜனங்கள் செல்கிறார்கள். எப்ஸம் வாரத்தில் நான்கு நாட்கள் குதிரைப் பந்தயம் நடைபெறுகிறது. செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை இந்தப் பந்தயம் நடைபெறுகிறது. இந்த வாரத்தில் வியாபார நிலையங்களெல்லாம் மூடப்பட்டு விடுகின்றன. இங்கிலாந்தில் தேசீயக் கொண்டாட்டம் ஏதேனு மொன்றுண்டானல் அது இந்த டெர்பி குதிரைப் பந்தயக் கொண்டாட்டந்தான். ஏகாதிபத்தியத் திருநாள் கூட அவ்வளவு முக்கியமானதல்லவென்று கூற வேண்டும். அப்பொழுது தனிப்பட்ட முறையில் சில விருந்துகள் நடைபெறுவதைத் தவிர வேறொன்றுமில்லை. ஆனல் ஜூன் மாதமுதல் வார புதன்கிழமையன்று வரும் இந்த டெர்பி குதிரைப் பந்தயக் கொண்டாட்டத்தைத் தான் முக்கியமாகக் கொண்டாடுகிறார்கள். இதற்கு முன்னரேயே ஜனங்கள் மிகவும் உற்சாகத்துடனிருக்கிறார்கள். பல வாரங்களுக்கு முந்தியே இந்தப் பந்தய விவரங்களைக் கொண்ட பத்திரிகைகள் ஏராளமாகச் செலவாகின்றன. இங்கிலீஷ்காரர்களுக்குக் குதிரைப் பந்தயம் முதலிய சூதாட்ட விஷயங்களில் எவ்வளவு உற்சாகம் இருக்கிறதென்பது இதனால் நன்கு புலனாகும்.

டெர்பி குதிரைப் பந்தயத்தை எப்படி வருணிக்க முடியும்? உத்தியோகசாலைகளெல்லாம் மூடப்பட்டு விடுகின்றன. உத்தியோகசாலைத் தலைவரும் சிப்பந்திகளும் விடுமுறை எடுத்துக் கொள்கிறார்கள். புதன்கிழமை ஆரம்பிக்கப்போகும் குதிரைப் பந்தயத்திற்காக, செவ்வாய்க்கிழமை மாலையிலேயே வரிசை வரிசையாக ஜனங்கள் கிளம்ப ஆரம்பித்து விடுகிறார்கள். எப்ஸம் மைதானத்திற்குச் சென்று அவரவர்கள் வண்டியிலேயோ, திறந்த மைதானத்திலேயோ தூங்குகிறார்கள். புதன்கிழமை காலை ஏழு மணியிலிருந்து காணப்படும் காட்சி மிகவும் அற்புதமானது! எப்ஸம் மைதானத்தைச் சுற்றிச் சுமார் அறுபதினாயிரம் மோட்டார் வண்டிகள் நிற்கும்! இந்த மோட்டார்வண்டிகளுக்குப்பின்னல் ஆயிரக் கணக்கான மோட்டார் பஸ்கள் நிற்கும். இவைகளுக்கு மேலே ஜனங்கள் நின்றுகொண்டுவேடிக்கைபார்ப்பார்கள். பஸ்ஸுக்குள்ளே, பஸ் ஓட்டி, பிரயாணிகளுக்குக் காபி, தேயிலைப் பானம் முதலியன தயார் செய்து கொடுப்பார். இந்தக் குதிரைப் பந்தய

மைதானத்திற்குச் செல்ல எவ்வித பிரவே சக்கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. மைதானத்தைச் சுற்றிப் பலவித கூடாரங்கள் அமைக்கப்பட்டு பலவித தமாஷாக்கள் காட்டப்படுகின்றன. ஜிப்ஸி ஸ்திரீகள் ஆங்காங்கு குறி சொல்லுகிறார்கள். இன்னும் சிலர், இன்னின்ன குதிரை தான் வெற்றியடையும் என்று அதிருஷ்டம் கூறுகிறார்கள். குதிரைப் பந்தயம் என்னமோ இரண்டு நிமிஷந்தான் நடைபெறுகிறது. வெற்றியடைந்தவர்களுக்கு உடனே பணம் கொடுக்கப்படுகிறது. மற்றவர்கள் டிக்கட்டுகளைக் கிழித்துப் போட்டு விடுகிறார்கள். இந்தக் குதிரைப் பந்தயக் கொண்டாட்டத்தைக்கொண்டு, இங்கிலீஷ்காரர்கள் எவ்வளவு விநோதப் பிரியர்கள் என்பது நன்கு புலனாகும்.

மதுபானம்.

ஐரோப்பிய யுத்தம் முடிந்து பதினான்கு வருஷங்களாயினும், இன்னும் 1914-15ம் வருஷத்து அவசரச் சட்டங்கள் அமுலில் இருக்கின்றன. ஏகாதிபத்தியப் பாதுகாப்பு சட்டம் இன்னும் அமுலில் இருக்கிறது. இதன்படி இரவு எட்டு மணிக்குமேல் எவரும் தெருவில் சிகரெட்டுகளை விற்பனைசெய்யக்கூடாது; லண்டனுக்குச்சுற்றுப் புறமுள்ளவர்கள் இரவு பத்து மணிக்குமேல், பொது ஸ்தாபன ஹோட்டல்களில் மதுபானங்களைக் குடிக்கக் கூடாது. இதனால் சிலர் இரவு பத்துமணிக்குமேல், மேற்படி இடங்களிலுள்ளவர்கள், மேற்கு லண்டன் முதலிய இடங்களுக்குச்சென்று அங்குள்ள ஹோட்டல்களில் மதுபானஞ் செய்கிறார்கள். இங்குச் சாதாரணமாக இரவு பதினோரு மணிவரை மதுபானம் முதலியன விற்கப்படுகின்றன. இரவு பதினோரு மணிக்குமேல் ஒரு துளி மதுபானம்கூட எவருக்கும் கிடைக்காது. இராச் சாப்பாடும் சேர்த்து ஆர்டர் கொடுத்தாலன்றி தனியாக மதுபானம் பெற முடியாது. மது விலக்குச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர அமெரிக்கா அரசாங்கத்தார் லட்சக் கணக்கான பணத்தை செலவழிக்கவேண்டியிருந்தது. ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தார், இந்தச் சட்டத்தை வெகு சுலபமாக அமுலுக்குக் கொண்டு வந்திருப்பதோடு, சாராய மூலமாகக் கிடைக்கும் வருமானத்தையும் அதிகப் படுத்தியிருக்கின்றனர்.

பன்னிரண்டரை ஷில்லிங் கொடுத்து யார் ஒரு புட்டி பீரை வாங்கமுடியும்? இதில் எட்டு ஷில்லிங், அரசாங்கத்தாருக்கு வரியாகச் சென்றுவிடுகிறது. யுத்தத்திற்கு முன்னர், ஒரு புட்டிவிஸ்கிவாங்கிமூன்று ஷில்லிங் வீதம் விற்பனை யாகிக் கொண்டு வந்தது. 1913ம் வருஷ முதல் 1926ம் வருஷம் வரை விஸ்கி குடிப்பது 320 லட்சம் காலனிலிருந்து 130 லட்சம் காலனுக்குக் குறைந்திருக்கிறது. பீர் 350 லட்சம் காலனிலிருந்து 210 காலனுக்குக் குறைந்திருக்கிறது. ஆயினும் விஸ்கியின் மூலம் கிடைக்கும் வரும்படியோ, 230 லட்சம் பவுனிலிருந்து 430 லட்சம் பவுனுக்கு உயர்ந்திருக்கிறது. பீர் என்ற சாராயவகையில் மட்டும் 1913ம் வருஷத்தில் கிடைத்த வருமானத்தைவிட இப்பொழுது ஆறுமடங்கு அதிகமாகக் கிடைக்கிறது.

இங்கிலீஷ் காரர்கள் அதிகமாகக் குடிக்கிறார்கள் என்ற அபிப்பிராயம் நம்மவர்களிடையே இருந்து வருகிறது. இது தவறான அபிப்பிராயமாகும். இங்கிலீஷ்காரர்கள் குடிப்பதற்கும் இந்தியர்கள் குடிப்பதற்கும் அதிகமான வித்தியாசம் இருக்கிறது. குடி மயக்கத்தினால் ஏற்படும் வழக்குகள் முதலியன இங்கிலாந்தைவிட இந்தியாவிலேயே அதிகம் என்பது எனது அபிப்பிராயம். லண்டனில் ஒருவன் குடி வெறியுடன் வீதிகளில் உலவுகிறான் என்பதற்குப் போலீஸார் பின்வரும் பரீட்சையைச் செய்கின்றனர். "ட்ரூலி ரூரல்" (Truly Rural) என்ற ஓர் ஆங்கில சொற்றொடரை விடாமல் ஆறு முறை உச்சரிக்கும்படி போலீஸார் அவனுக்குக் கூறுகின்றார்கள். அப்படிச் சரியாக உச்சரிக்க முடியாவிட்டால் அவன் குடிகாரன் என்று கருதப்பட்டு போலீஸ் காப்புக்கு அழைத்துச் செல்லப்படுகிறான். மறுநாள் அவன்மீது குற்றஞ் சாட்டப்பட்டு வழக்கு நடைபெறுகிறது. ஆனால் பொதுவாகவே, இங்கிலீஷ் காரர்கள் அளவுக்கு மீறிக் குடிப்பதில்லை யென்று சொல்லவேண்டும். ஆனால் நம்மவர்கள் நிலை யென்ன! குடி வெறியினால் மயங்கியவர்கள் இங்கிலீஷ் காரர்களில் நூற்றுக்கு இரண்டுபேர் இருந்தால் நம்மவர்களில் நூற்றுக்கு ஐம்பது பேர்கள் இருப்பார்கள். நாம் குடிப்பதே மன்னிக்க முடியாத ஒரு பாவம் என்று கருதுகிறோம். ஆனால் அவர்கள் மிதமாகக் குடிப்பதனால் தீங்கில்லை யென்று கருதுகிறார்கள். ஸர். அர்பத் நட் லேன் போன்ற பிரபல டாக்டர்கள், தினம் ஒரு பைண்ட் பீர் சாப்பிடுவதனால் மல சுத்தி ஆகிறதென்றும், தேகத்திற்கு நல்லதென்றும் கூறுகிறார். இந்த உபதேசம் தன்னடக்கமில்லாத நம்மவர்களுக்குப் பொருந்துமா? என்று எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.

இங்கிலீஷ் காரரிடத்திலுள்ள சில குறைகள்.

இங்கிலீஷ் காரரிடத்திலுள்ள சில குறைகளையும் நான் எடுத்துக் காட்ட வேண்டியவனாய் இருக்கிறேன். இங்கிலீஷ்காரர்கள் தங்களுடையமேன்மையிலும், அதிகாரத்திலும், ஏகாதிபத்தியத்திலும், பெருமை கொண்டவர்களாயிருக்கிறார்கள். பள்ளிக்கூடத்திலிருந்தே அவர்கள் தங்கள் சமூகத்தைவிடப் பெருமையுள்ளதும் உயர்வானதுமான ஒரு சமூகம் இல்லை யென்று கற்பிக்கப்படுகிறார்கள். மற்ற சமூகத்தினர் தங்களைவிடத் தாழ்ந்தவர்களென்றும், அநாகரிகமான கருப்பு நிறத்தவரைச் சீர்திருத்தவே கடவுள் தங்களை அனுப்பியிருக்கிறார் என்றும் போதிக்கப்படுகிறார்கள். பிற்போக்கடைந்தவர்களைப்பாதுகாக்கவே ஆண்டவனால் நியமிக்கப்பட்ட டிரஸ்டிகளென்று தங்களை நினைத்துக் கொள்கிறார்கள். இந்த மாதிரியான ஒரு மயக்கத்திலேயே ஆங்கிலேய இளைஞர்கள் வளர்க்கப்பட்டு வருகிறார்கள் என்பதை பேரறிஞரான திரு. எச். ஜி வெல்ஸும் அங்கீகரித்துக் கொண்டிருக்கிறார். இந்த மாதிரியான ஓர் எண்ணத்தை உண்டு பண்ணுவதற்குச் சரித்திரக் காரர்களும், பத்திராதிபர்களுமே பொறுப்பாளிகளாவார்கள். ஆங்கிலேய சரித்திரத்தை அடியோடு மாற்றி எழுத வேண்டுமென்று திரு. வெல்ஸ் கூறியது முற்றிலும் உண்மை. இங்கிலீஷ் சரித்திரத்தைப் படிக்கும் எவரும், வாட்டர்லூ சண்டையில் நெப்போலியனைத் தோற்கடித்தது வெல்லிங்டனே என்றுதான் கருதுவர். ஆனால் அது முழு உண்மையல்ல. இதன் உண்மையை யறிய ஜர்மனி சரித்திரத்தைப் படிக்கவேண்டும். நெப்போலியனைத் தோற்கடிக்க வெல்லிங்டன் எவ்வளவு பங்கெடுத்துக் கொண்டாரோ அவ்வளவு பங்கை ஜெர்மன் தளபதியாகிய தளபதி ப்ளூச்சர் என்பார் எடுத்துக் கொண்டாரென்பது தெரியவரும் பூர்வீக சரித்திர ஆதாரங்களை நாம் நடு நிலைமையினின்றும் ஆராய்ந்து பார்த்தால்வெல்லிங்டனும் ப்ளூச்சரும்வாட்டர்லூசண்டையில் வெற்றி பெற்றார்கள் என்று சொல்வது பொருந்தும்.

தங்களுடைய பெருமையிலேயே மயங்கிக்கிடக்கும் இங்கிலீஷ்காரர்கள் அந்நியர்களையாவது அவர்களுடைய பாஷையையாவது ஆராய்ச்சி செய்வதில்லை. இதனால் இவர்கள் தப்பர்த்தம் செய்து கொள்ளப்படுகிறார்கள். இதற்குக் காரணம், இவர்கள் தங்கள் நாட்டுக்குப் புறம்பான விஷயங்களைப் பற்றித் தெரிந்துகொள்ளும்சிரமத்தை மேற்கொள்ளாமையேயாகும். இங்கிலீஷ்காரர்கள் வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பிரயாணஞ் செய்யும்போது மற்றவிஷயங்களைக் கவனிக்கின்றார்கள் என்பது உண்மை. 'ரோமாபுரியில் வசிக்கும்போது உரோமர்களைப் போலவே நட' என்ற பழமொழியும் உண்டு. ஆனால் ரோமபுரியில் ஓர் இத்தாலியன் நடந்து கொள்கிற மாதிரி ஓர் இங்கிலீஷ்காரன் நடந்துகொள்வானா? எனவே இந்தப் பழமொழியை இங்கிலாந்துக்கு விஜயஞ் செய்யும் வெளிநாட்டார் விஷயத்தில் திருப்பி உபயோகிக்கப் படுகிறது.

இங்கிலீஷ்காரர்கள் கற்பனா சக்தி நிறைந்த மனோபாவமுடையவர்களல்ல. உலக அறிவு நிரம்பியவர்கள். எதையும் செய்கையில் செய்து காட்டக் கூடியவர்கள். அவர்கள் தர்க்கம் செய்வதைப் பெரிதும் வெறுக்கிறார்கள். மனதினால் நினைப்பது என்பது அவர்களுக்குக் கடினமான காரியம். ஓர் ஐரிஷ் கவிஞரும் ஓர் இங்கிலீஷ்காரரும் ஸ்விஜர்லாந்திலுள்ள பிளாங்க் மலையுச்சியிலிருக்கையில் ஐரிஷ்கவியானவர், இயற்கையழகைப் பற்றிப் பிரமாதமாக வர்ணித்துக்கொண்டிருந்தார். அப்பொழுது இங்கிலீஷ்காரன் "நல்லது, பலகாரஞ் சாப்பிடுவதற்குக் காலம் ஆகிவிட்டது." என்றான். இந்தமாதிரியான நிலைமையில் ஒரு சிறிது மனோபாவமுள்ளவனாவது இந்தப் பலகார விஷயத்தை முக்கியமாகக்கருதியிருப்பானா? தகுந்த காலத்தில் ஐர்லாந்துக்குச் சுதந்திரம் கொடுத்திருந்தால், இப்பொழுது டிவாலரா இங்கிலாந்துடன் சச்சரவிட்டுக்கொண்டிருப்பாரா? 1773-ம் வருஷத்தில் இங்கிலாந்து சிறிது தாராள மனப்பான்மையுடன் நடந்துகொண்டிருக்குமானால் இப்பொழுது அமெரிக்கா ஐக்கிய மாகாணம் தனிப்பட்ட சுயேச்சை நாடாக ஆகியிருக்குமா? இந்தியாவுக்குக் குடியேற்ற நாடு அந்தஸ்து கொடுத்திருந்தால், இவ்வளவு அமைதியின்மையும் அதிருப்தியும் ஏற்பட்டிருக்குமா? பர்க் என்னும் அறிஞர் கூறியமாதிரி பெரிய ஏகாதிபத்தியங்களும் குறுகிய மனங்களும் ஒன்று சேர்வதில்லை.

இங்கிலீஷ்காரர்கள், தாங்கள் எவ்வித நிறத்தையும் சேர்ந்தவர்களல்ல வென்று கருதுகிறார்கள். கீழ் நாட்டவரைப்பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் 'நிறத்தவர்' என்றே குறிப்பிடுகின்றனர். அப்படியானால் வெண்மை ஒரு நிறமல்லவோ? இது மிக்க ஆபாசம்.

ஒழுக்க நிலை

இந்த விஷயம் மாணவர்களுக்கு மிகவும் ஆபத்தானது. இதனால் வாசகர்களுக்கு மனம் புண்படுமோவென்று அஞ்சுகிறேன். ஆனால் எனக்குத் தோன்றுகிறபடி உண்மையை நான் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது, இங்கிலீஷ்காரர்கள் மணத்திற்கு முன்னால் காதல் என்பதில் நம்பிக்கையுடையவர்களாயிருக்கிறோம். இங்கிலாந்தில் விவாகத்திற்கு முன்னர், பெண்ணும் பிள்ளையும் காதலித்து ஒருவருடைய குணகுணங்களை பரஸ்பரம் அறிந்துகொள்கின்றனர். மாதக் கணக்காகவும் வருஷக் கணக்காகவும் இவர்கள் ஒருவர்க்கொருவர் சாதித்துப் பேசி

றார்கள். இதனால் இருவரிடமும் பரஸ்பரக் காதல் இருக்கிறதாவென்பதைத் தெரிந்துகொள்கிறார்கள்; குடும்ப வாழ்க்கையில் ஒன்றுபட்டு வாழ்க்கையை நடத்த முடியுமா வென்பதைத் தெரிந்துகொள்கிறார்கள். இன்றேல் பிரிந்துவிடுகிறார்கள். இதன் பயனாக, ஒற்றுமையான பல திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றனவென்று நான் உறுதியுடன் கூறுவேன். இந்தியாவில் பல விவாகங்கள் துக்கிக்கக் கூடிய ஒரு முடிவுக்கு வந்துள்ளதற்குக் காரணம், பெற்றோர்கள் தம்பதிகளுடைய மனோ நிலையை அறியாமலேயே விவாகம் செய்வித்து விடுவதேயாகும். இதனால் தம்பதிகள் விவாகம் செய்துகொள்வதற்கு முன்னர் ஒருவர்க்கொருவர் தெரிந்துகொள்ள முடியாமற் போகிறது.

இங்கிலீஷ்காரர் ஒழுக்க மில்லாதவர்கள் என்ற எண்ணம் நம்மவரில் சிலருக்கு இருக்கிறது. இங்கிலாந்தை விட இந்தியாவிலேயே அதிகமான ஒழுக்கமின்மை இருக்கிறது போலும்! ஒழுக்கமின்மை என்று எதை நாம் கருதுகிறோமோ அதை அவர்கள் பகிரங்கமாகச் செய்கிறார்கள்; அதையே நாம் இரகசியமாகச் செய்கிறோம். இவ்விஷயத்தில் நாம் வேஷதாரிகளாக நடிக்கிறோம். அவர்கள் அப்படியில்லை. நம்முடைய மாமார்த்திகத்தைப்பற்றியும் ஒழுக்கத்தைப்பற்றியும் நமது ஸ்திரீகளுக்குச சுதந்திரம் இல்லாமைபற்றியும் பெருமையாகப் பேசிக்கொள்கிறோம். இதன் பயனென்ன? பெண் வியாதியால அவஸ்தைப் படுகிறவர்கள் இங்கிலாந்தை விட இந்தியாவில் அதிகம். இது நமது ஒழுக்கத்தின் பயன் போலும். ஒழுக்கம் ஒரு புற மிருக்கட்டும். பெண் வியாதியால் இந்தியாவில் அதிகமாக அவஸ்தைப்படுவதற்குக் காரணம் இந்த வியாதி வரவொட்டாமல் தடுக்கும் முறைகளை அறியாமையும், இவைகளுக்கு எப்படிச் சிகிச்சை செய்வது என்பதைப் பற்றிய அறியாமையும் காரணங்களாகும். மற்ற நாடுகள் ஒழுக்கமற்றிருக்கின்றனவென்று கூறும் நாம் கண்ணாடி வீட்டில் இருந்துகொண்டு பிறர் மீது கல்லெறிய வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கிலீஷ் காரரிடத்திலே எவ்வித நற்குணங்களும் இல்லையென்று கூறுவோர் இந்தியாவில்பலருண்டு. ஆனால்நான் அப்படிக்கூறத் துணியமாட்டேன். நாம் இங்கிலீஷ்காரர்களுடைய அரசியல் கருத்துக்களை எவ்வளவுதான் விரும்பாவிட்டாலும் அவனுடைய நற்குணங்களை நாம் பாராட்டவேண்டும். அவர்கள் இந்தியாவைப் பற்றிக் கொண்டிருக்கும் அரசியல் அபிப்பிராயங்களுக்குக் கூட சாதாரண இங்கிலீஷ்காரர்களைக் குறை கூற மாட்டேன்; அவர்கள் நியாயமாகவே நடந்துகொள்ள விழைகின்றனர். ஆனால் பத்திரிகைகள் தான் நம்மைப்பற்றித் தப்பானசெய்திகளைப் பரப்பி நம்மைப் பற்றித் தப்பபிப்பிராயங் கொள்ளுமாறு செய்கின்றன. தவிர, முதலாளிகள் தங்களுடைய சரக்குகள் விற்பனையாவதற்கு இந்தியா தகுந்த மார்க்கெட்டு என்று கருதுவதால், இந்தியாவுக்கு அரசியல் உரிமை வழங்குதல் கூடாதென்று கூறுகிறார்கள். நம்மை நாமே ஆண்டு கொள்ளும் திறமை நமக்கு ஏற்படுமவரை, தாங்கள் டிரஸ்டிகளாக இருக்க வேண்டுமென்று சாதாரண இங்கிலீஷ்காரர்கள் சரியாகவோ தவறாகவோ நம்புகிறார்கள் என்பது உண்மை. இந்தக் கருத்தை நாம் ஏற்றுக்கொள்வதற்கில்லை. ஆனால் இதற்காக இங்கிலீஷ்காரரிடத்திலே உள்ள நற்குணங்களை நாம் பாராட்டாமலிருக்க முடியாது. அவர்களிடத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. அவர்களை நாம் துவேஷியாமல், காந்தியடிகள் கூறுகிறமாதிரி, அவர்களிடத்தில் என்ன குறைகள் இருந்தபோதிலும் அவர்களை நேசிப்போமாக. பொதுவாக இங்கிலீஷ்காரர்கள் மனித சமூகத்தில் காணப்படும் உதாரண புருஷர்கள்என்று கூறலாம்.

நகரத்தார்களும் சங்கங்களும்

சென்னை மேயர் திரு. மு. அ. முத்தையா செட்டியார்

பர்மா நாட்டுக்கோட்டை நகரத்தார்களது சங்கத்தின் பத்தாவதாண்டு நிறைவு விழா நிகழ்ந்ததைக் கேட்டுப் பெரிதும் மகிழ்கின்றேன். இச்சங்கம் பத்தாண்டுகளாக செவ்வனே நடந்து வருவது அவ்வூரில் குடியேறிய நம்மவர்களுடைய அபிமானத்தையும் குலப்பற்றையும் நன்கு விளக்கும்.


சங்கங்கள் இருக்கவேண்டிய அவசியத்தைப்பற்றி நான் விரித்துரைக்க வேண்டியதில்லை. நமது பெண்டிர், மக்களையும் விட்டு, அலைகடலுக்கு அப்பாற் சென்று உழைக்கும் நம்மவர்கள் தங்களுக்குரிய காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமானால் ஏகோபித்த ஒரு மனத்தினராய் ஏதோர் விஷயத்திலும் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட வேண்டும். அப்படி வெளியிடுவதற்கு முக்கியகருவியாய் இருப்பது சங்கமே. இவ்வுண்மை இங்கிலாந்து முதலிய மேனாடுகளை நோக்க வெளிப்படையாகும். அவ்வூர்களில் எதொரு விஷயத்திலும் பொது மக்களின் அபிப்பிராயத்தைத் திரட்டுவதும், நாட்டில் அவரவர்களுக்கு அனுகூலமான அபிப்பிராயங்களை பரவச்செய்வதும் சங்கங்களே. ஒவ்வொரு வகுப்பாரும், ஒவ்வொரு தொழிலாளரும் தனித்தனி சங்கங்களை ஏற்படுத்திக்கொண்டும், அவைகள் நடைபெறும்படி விதிகளை அமைத்துக்கொண்டும் காரியங்களை சித்திபெறச் செய்து கொள்கிறார்கள். அதுவேயன்றி பொது விஷயங்களில் அரசாங்கத்தாருக்கும் மற்றவர்களுக்கும் நியாயமான வழி இதுவென்று அறிவிப்பதும், பொது ஜன ஊழியர்கள்முறைதப்பித்தந்நலங்கருதித் தவறிழைக்கும்போது அவர்களைக் கண்டித்து நேர் வழிப்படுத்துவதும் இச்சங்கங்களே. வேற்றூரில் சென்று ஜனத்தொகையில் குறைந்தவர்களாயிருப்பினும், நகரத்தார், தொழில் முறையில் மூலதனம் பெரிதும் உடையவராய் இருப்பதால் இவர்களுக்கு சங்கங்கள் இன்றியமையாதன. சிறு குடிகளாயிருப்பவர்கள் பெரும்ஜனத்தொகையில் மூழ்கி மறைந்து விடாமல் இருக்கவேண்டுமானால், அவர்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லவும், அவர்களுக்கு இருக்கும் உரிமைகளை நிலைநாட்டவும் இச் சங்கங்கள் இருக்கவேண்டும்.

நமது நாட்டில் தொன்றுதொட்டுப் பஞ்சாயத்து ஏற்பட்டிருக்கிறது. சிறு அபிப்பிராய பேதங்களெல்லாம் பஞ்சாயத்தில் முடிவாகின்றன. பெரு விஷயங்களில் அவ்வாறேவேற்றுமை ஏற்படுமானால் அவைகளை மாற்றுவது சங்கங்களின் கடமை. இவ்வாறு நம்மவர்களுக்குள் இருக்கும் வேறுபாடுகள் பிறர் அறியாதபடி ஒற்றுமையாய் முடியக்கூடும். இதற்காக நாம் நகரத்தார்கள இருக்கும் ஊர்களிலெல்லாம் சங்கங்களை ஏற்படுத்தி, அவைகளை சென்னை நகரிலோ அல்லது செட்டி நாட்டிலோ உள்ள தலைச் சங்கம் ஒன்றோடு ஐக்கியப் படுத்தி, அதன் மூலமாய் பல நாடுகளில் நடக்கும் நம்மவர் விஷயங்களை யெல்லாம் திரட்டி, அவரவர்களுக்குச் செய்யவேண்டிய நன்மைகளைச் செய்தல் அவசியம். நகரத்தார்கள் எவ்வூரில் குடியேறினாலும், தங்களது செல்வப் பெருக்கால் அவ்வூரை வளமைப் படுத்துகிறார்கள் என்பது திண்ணம். வியாபாரத்தைப்பெருக்குவதோடு நம்மவர்கள் அவ்வூரில் செய்யும் தருமங்களும், அவ்வூர்களின் நன்மைக்காகப்பொதுவிஷயங்களில்நன்கொடையாக அளிக்கும்பொருளும்கணக்கில்லாதன. ஆகவே அவ்வூர்களில் நகரத்தார்களுக்குப் பலவித உரிமைகள் ஏற்படவேண்டும். அவ்வாறு உரிமைகள் உண்டென்று எடுத்துக் காட்டி, அவைகளை வற்புறுத்துவதும் சங்கங்கள் தான். சட்டசபைகளிலும், நகரபரிபாலன சபைகளிலும், துறைமுகப் பரிபாலன சபைகளிலும், வியாபார சம்பந்தமான கவர்ன்மெண்டு முதலிய கமிட்டிகளிலும் நமது சங்கங்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி முயல வேண்டும். இவ்வாறு சிதறிக்கிடக்கும் நம்மவர்களை யெல்லாம் ஒன்று சேர்ப்பதும் ஒரே மனத்தினராய் அவர்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடச் செய்வதும் சங்கமே. ஆயினும், இச்சங்கங்கள் செய்யும் செயல்களையும் ஊழியத்தையும் விளம்பரப்படுத்துவது பத்திரிகையே. இதன் உண்மையை அறிந்தே நம்மவரும் இரங்கூனில் 'தனவணிகன்' பத்திரிகையை ஏற்படுத்தி சங்கத்தின் ஆதரவில் நடத்தி வருவது போற்றத்தக்கது.


நகரத்தார் சங்கங்கள் நம்மவர்களுக்குப் பெரு நன்மையை எவ்வாறு செய்தனவென்பது, சமீபத்தில் சைகோனில் நடந்த குழப்பத்தில் வெளியாயிற்று. பிரெஞ்சுக்காரர்கள் நிரபராதிகளான நகரத்தார்மேல் கடுமையான நிபந்தனைகளை உண்டாக்கிய போது, பற்பல ஊர்களிலிருந்து நம்மவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து, ஏகோபித்து ஒரே மனதாய்த் தங்கள் எண்ணங்களையெல்லாம், தந்தி மூலமாயும், பத்திரிகைகள் மூலமாயும், சங்கங்கள் மூலமாயும் தெரிவித்ததனால் நம்மவர்களுக்குச் சிறிது நியாயம் ஏற்பட்டது. இது சம்பந்தமாய் சைகோனில் சில்லாண்டுகளுக்கு முன்னால் ஏற்படுத்திய சங்கமும், சென்னையில் பல்லாண்டுகளாக நடைபெற்றுவரும் சங்கமும், சைகோன் நகரத்தாருக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை நிவர்த்தி செய்ய வேண்டுமென்று பிரான்சு, ஆங்கிலேய, சென்னை, இந்திய கவர்ன்மெண்டார்களுக்கு மனு முதலிய செய்து பெரும் முயற்சி எடுத்துக்கொண்டது போற்றிக் கொண்டாடத் தக்கது. இப்படிப்பட்ட முக்கியத்தருணங்களில் நம்மவர்களும் நமது சங்கங்களும் விழித்திருந்து வேலை செய்ய வேண்டியிருக்கிறது. ஒற்றுமையாலும் சேர்ந்துழைத்ததாலும் இப்போது நன்மையை அடைந்தோம். அதேபோல் இனி வருங்காலத்தும் நாம் நன்மையை அடையவேண்டுமானால் நமது சங்கங்களை, அவைகள் இல்லாத இடங்களில் ஏற்படுத்தி இருப்பவைகளை பலப்படுத்த வேண்டும்.

இச்சமயத்தில் நம்மவர்களின் சிந்தனைக்கு,


பர்மா நகரத்தார் கோவில்கள்.



ஈந்தட்டா மடம்.




அய்மேன் கோவில்.




ஈந்தட்டா கோவில்

பர்மா நகரத்தார் கோவில்கள்.



டாங்கோ மடம்.



மோல்மேன்சூன் கோவில்.



டாங்கோ கோவில்.

சைகோன் கொடுமை

திரு. கே. ராமநாதன் செட்டியார் பி. ஏ. பி. எல்.

இந்தியா, பர்மா, சிலோன், ஐக்கிய மலாய் நாடுகள், இந்தோ சைனு முதலிய இடங்களில் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள் வட்டித் தொழில் செய்து வருகிறார்கள். பல்வேறிடங்களிலுள்ள அவர்களின் வியாபாரங்கள் ஒன்றுக்கொன்று நெருங்கிய சம்பந்த முடையனவாகும். சென்ற அறுபது ஆண்டுக்கு மேலாக இந்தோ—சைனுவில் செட்டியார்கள் தொழில் நடத்தி வருகின்றார்கள். அந்நாட்டின் விவசாயம், வாணிபம், கைத்தொழில் முதலியவைகள் அவர்களின் உதவியாலேயே முன்னேற்றமடைந்து வந்திருக்கின்றன. அவர்கள் அந்நாட்டில் ஐநூறு மில்லியன் பிராங்குகள் அதாவது ஏழு கோடி ரூபாய்க்கு அதிகமாக வாரி இறைத்திருக்கின்றார்கள். அங்கு சுமார் நூற்றிஇருபது செட்டியார் கடைகள் இருக்கின்றன. பிரெஞ்சு அரசாங்கத்தாரின் பாதுகாப்பு எப்பொழுதும் தங்கள் பாலிருக்குமென்றதைரியத்தாலும், அந்நாட்டில் எல்லா மக்களும் சமத்துவமாக நடத்தப்படுவார்களென்ற சட்டங்களினுறுதியினாலும், இவ்வளவு நீண்ட நாட்களாக எவ்வித இடையூறுமின்றித்திறம்பட நடத்திவந்தனர். அவர்கள் சட்டதிட்டங்கட்குட்பட்டு அமைதியை விரும்புகின்றவர்கள். அவர்கள் ஒழுங்காக வரிகளைச் செலுத்தி அந்த நாட்டின் சட்டதிட்டங்கட்குக் கீழ்ப்படிந்து நடந்து வந்திருக்கின்றார்கள். அவர்கள் இயற்கையிலேயே குறுகிய மனப்பான்மையுடையவர்கள். எந்தவிதமான அரசியல் இயக்கங்களிலும் அவர்கள் கலந்துகொண்டதில்லை. அவர்கள் தங்கள் கடன்காரர்களுக்கு மிக நல்லவர்களாக நடந்துகொள்வதோடு கடன்களைத் திருப்பிக் கொடுக்கத் தாராளமாகத் தவணைகள் கொடுத்து வருகின்றார்கள். அவர்கள் நாணயமாய் நடந்துகொள்பவர்களுக்கு எவ்வித ஜாமீனுமில்லாமல் கடன் கொடுத்து உதவிவருகின்றனர்.

சென்றசில ஆண்டுகட்கு முன்னர்தோன்றியஉலகப் பொருளாதாரநெருக்கடி இந்தோ சைனுவையும் பாதித்தது. அதிலும் நகரத்தார்கள் அதிகமாய்ப் பாதிக்கப்பட்டார்கள்.

கடன்காரர்களிடமிருந்து கொடுத்த பணத்தை வசூலிப்பது மிகவும் அரிதாயிற்று. அரசாங்கத்தினர் விவசாயிகளுக்கு உதவி செய்யும் நோக்கத்தோடுநீண்டகால தவணைக்குக் கடன் கொடுக்கும் (Long Term Society) லாங் டர்ம் சொசைட்டி யென்ற ஸ்தாபனத்தை 1932 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 29-ந் ஆம் தேதி ஆரம்பித்தனர். அதே சமயத்தில் விசாயிகளின் துன்பங்களை கண்டு பிடித்து அத்துன்பங்களினின்று அவர்கள் விடுபடுவதற்கு வேண்டிய பரிகாரங்களைத் தேட ரைஸ் கமிஷன் (Rice Commision) என்னும் பெயரோடு ஒரு கமிஷன் நியமிக்கப் பெற்றது. கமிஷனின் முன்பு நகரத்தார்களின் சார்பாக, பெருந்தன்மையுள்ள பாராட்டத்தக்கபிரேரணைகள் கொண்டுவரப் பெற்றன. ஆனல் மற்ற பாங்குகள் (Banks) இப்பிரேரணைகட்குச் சம்மதிக்காததால் வேறு வழியின்றி இப்பிரேரணைகள்புறக்கணிக்கப் பெற்றன. உண்மையைக் கூறுமிடத்து, நகரத்தார்களின் பெருந் தன்மையைக் கமிஷன் பெரிதும்



பாராட்டித் தனது அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளது.

சில காலத்திற்குப் பின்னர், லாங் டர்ம் சொசைட்டியின் தலைவரான திரு. டி. பெய்சால் என்பவர் நகரத்தார்களை அழைத்து மிகக் கொடூரமான நிபந்தனைகளைக் கூறி அவைகட்குச் சம்மதிக்கும்படி வற்புறுத்தினர். அதற்கு வட்டித்தொழில் செய்யும் இந்தியர்கள் நியாயமில்லாத, அகாரணமான, கொடூரமுள்ள எத்தகைய நிபந்தனைகளையும் ஏற்றுக்கொள்ளச்சம்மதிக்கவில்லை. எனவே 1932 ஆம் வருடக்கடைசியிலும் 1933ஆம் வருட ஆரம்பத்திலும்மேற்கண்ட நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ளாவிட்டால் நாடுகடத்தப்படுவதாகச் செட்டியார்கள் பயமுறுத்தப் பட்டனர். 29—9—32 ல் அ. ராம. சொக்கலிங்கஞ் செட்டியார் என்பவர், கடன்காரர்மீது சாதாரணமானசட்ட நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டதற்காக, நாடுகடத்தப்பட்டார். அந்த அரசாங்கத்தின் செய்கையை அங்குள்ள பத்திரிகைகள் மிக வன்மையாகக் கண்டித்தன. 1933 ஆம் ஆண்டிலும் செட்டியார்கள் நாடுகடத்தப் படுவார்களென்று பயமுறுத்தப்பட்டது. சொக்த்ரானில் எஸ். என். வி. ஆர். என். நாராயணன் செட்டியாரின் ஏஜண்டான நாகப்பசெட்டியாருக்கு 16.3.33ல் 13ஆம் தேதி இடப்பெற்ற நோட்டீஸ் ஒன்று கொடுக்கப்பட்டது. அந்த நோட்டீசில் மறுநாளே அதாவது 17 ஆம் தேதியே சொக்த்ரானிலிருந்து 220 கிலோ மீட்டர் (சுமார் 145 மைல்) தூரமுள்ள சைகோனுக்கு வரும்படி குறிப்பிடப் பெற்றிருந்தது. அவரும் மறுநாள் மாலை நான்கு மணிக்குச் சைகோனில் இரகசியப் போலீஸ் இலாகாவின் தலைமை அதிகாரி முன்னர் ஆஜரானர்.

இரகசியப் போலீஸ் அதிகாரி அவருக்கு அரசாங்க உத்தரவொன்றைக் கொடுத்தார். அவ்வுத்தரவில் இருபத்து நான்கு மணி நேரத்துக்குள்ளாக நாட்டை விட்டுச் செல்லவேண்டுமெனக் கண்டிருந்தது. திரு. நாகப்ப செட்டியார் தமக்குக் கொடுத்த உத்தரவுக்குக் காரணம் கூற வேண்டுமெனவும், குறைந்தது தமக்கு மூன்று மாதம் தவணை கொடுக்கவேண்டுமெனவும், அப்படிச் செய்வதினுல் தனது முதலாளியைக் கலந்துதான் புறப்படுவதற்கு முன்னர் தமது காரியங்களை முடித்துக் கொண்டு வியாபாரத்தைத் தொடர்ச்சியாக நடத்துவதற்குச் சௌகரியப்படுமெனவும் கூறினர். நாடு கடத்தப்படுவதற்குக் காரணம் கூறப்படவில்லை. அந்த அதிகாரிதமக்கு மூன்று மாதத் தவணை கொடுக்க அதிகாரமில்லையெனக் கூறி ஒரு வாரத் தவணை கொடுத்தார். மேற்கூறப்பட்ட நாடு கடத்தும் உத்தரவு 18-3-33ல் பாஸ் செய்யப்பட்டது.

பிறகு 20, 21, 22, தேதிகளில் முறையே பி. எ. பி.எம். பிச்சப்ப செட்டியார், என்ற மெய்யப்ப செட்டியார், ஏ. பழனியப்ப செட்டியார், முதலியவர்கட்கு இதே உத்தரவு கொடுக்கப்பட்டது. சில நாட்கழித்து ஏ. ராமசாமி செட்டியார், சா. அழகப்ப பிள்ளை முதலியவர்கட்கு இவ்வுத்தரவு வழங்கப் பெற்றது. ஆனல் இவர்களிருவரும்மறு உத்தரவு வரையில் இந்தோ சைனுவில் தங்கியிருக்க அநுமதிக்கப்பட்டது. சட்டத்தையும் சமாதானத்தையும் நிலை நிறுத்துவதற்கு இடையூருய் நிற்கும் வெளிநாட்டார்களை கவர்னர் ஜனரல் நாடு கடத்தலாம் என அதிகாரம் கொடுக்கும், 3-12-1849ல் இயற்றிய சட்டப்படி இவ்வுத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. மேற்கண்ட சட்டத்தைப் பாதிக்கும் வகையில் செட்டியார்கள் எத்தகைய காரியங்களையும் செய்ததேயில்லை.

சைகோனில் நாடு கடத்திய விஷயம் பரவவே, செட்டிநாட்டிலுள்ள நகரத்தார் பலர் சென்னை வந்து சேர்ந்தனர். கவர்னரிடமும் வைசிராயிடமும் தூதுக் கோஷ்டி அனுப்பப் பெற்றது. ராஜா சர். அண்ணமலை செட்டியார் இது விஷயமாக சென்னை கவர்னரைப் பேட்டி கண்டு பேசினர். சென்னை நகரத்தார் சங்கத்திலிருந்து பல்வேறு அதிகாரிகட்கும் சைகோன் சம்பந்தமான தகவல்கள் அனுப்பப்பட்டன. சைகோனிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகருக்கு அங்குள்ள நகரத்தார்கள் முழு விபரங்களையும் கூறினர்கள். பிரிட்டிஷ் ஸ்தானிகர் நாடு கடத்தும் உத்தரவை சிறிது தள்ளி வைக்கும்படி கவர்னருக்குக் கடிதம் எழுதினர். சிம்லாவிலிருந்து வெளிநாட்டுக்

விஷயம் ஒன்றை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். வட்டிக் கடைகளின்மேல் பலர் பல கடுமையான சட்டதிட்டங்களை ஏற்படுத்த எண்ணப் படுகிறார்கள். இதேபோல் அகில இந்திய மாகாண சட்டசபைகளில் வியாபாரிகள் சம்பந்தமாகப் பல மசோதாக்கள் அவ்வப்போது கொண்டுவரப் படுகின்றன. இவைகளை யெல்லாம் நம்மவர்கள் தங்கள் மனதைச் செலுத்தி அவைகள் எவ்வாறு நமக்கு அனுகூலமாயிருக்குமென்றும், எவ்வெவ் விதங்களில் பிரதிகூலமாயிருக்குமென்றும் யூகித்தறிந்து, முன்னெச்சரிக்கையாய் நம்மவர் அபிப்பிராயங்களை கவர்ன்மெண்டாருக்கும் சட்டசபை அங்கத்தினர்களுக்கும் தெரிவிக்க வேண்டியது நம் சங்கங்களுடைய கடமையாகும்.

பத்தாண்டுகளாக சீரும் சிறப்பும் பெற்று பல வழிகளில் நகரத்தாருக்கு நன்மையை தந்துவரும் இரங்கூன் நகரத்தார் சங்கம் இன்னும் பல்லூழி நிலைபெற்று இதுவரை உழைத்து வந்ததுபோல் இன்னும் பணி செய்து சிறப்படைந்து நகரத்தார்களுக்குஉதவ இறைவனருள் செய்ய பிரார்த்திக்கிறேன்.

———

காரியதரிசி, இது சம்பந்தமான விஷயங்களை தெரிவிக்கும்படி பிரிட்டிஷ் ஸ்தானிகருக்குத் தந்தி கொடுத்தார். மார்ச் மாதம் 25ந் தேதி பாரிஸ் நகரில் பிரிட்டிஷ் ஸ்தானிகர் நாடு கடத்திய உத்தாவை ரத்துச் செய்யவேண்டுமெனப் போராடினர். வைஸ்ராயும் பிரிட்டிஷ் பிரதம ஸ்தானிகரும் இவ்விஷயத்தில் தலையிட்டதாலும், இந்தோ சைனுவில் பொது மக்கள் தங்கள் செய்கையைப் பலமாகக் கண்டித்ததாலும், பிரஞ்ச் அரசாங்கத்தார் நாடுகடத்தும் உத்தரவை ரத்து செய்ய முடியாதெனப் பிடிவாதம் காட்டினர். எனவே நாடு கடத்தும் உத்தரவு கொடுக்கப் பெற்றவர்களில் ஒருவர் பாங்கோக்குக்கும், . பிறிதொருவர் சிங்கப்பூருக்கும்மற்றவர்கள் தாய்நாட்டுக்கும்சென்றனர்.

இந்நிலையில் இவ்விஷயங்கள இந்தியா அரசாங்கத்துக்கும் லண்டனிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் தெரிவிக்கப் பட்டது. இது சம்பந்தமாக இந்திய சட்டசபைக்கு 27-3-33ல் திவான் பகதூர் ஏ. ராமசாமி முதலியாரால் சில கேள்விகள் அனுப்பப்பட்டன. 29-3-33ல் கேள்விகள் கேட்கப்பட்டு மறுநாள் தள்ளிவைக்கப்பட்டது. 30-3-33ல் வெளிநாட்டுக் காரியதரிசி, திவான் பகதூர் ஏ. ராமசாமி முதலியாராலும், திரு. எப். ஏ. ஜேம்ஸாலும் சைகோன் சம்பந்தமாகக் கூறப்பட்டவைகள் அனைத்தும் உண்மைதானென்றும் இந்தோ சைனுவில் அரசர் பெருமானின் குடிகளைப் போதுமானபடி பாதுகாக்க அரசாங்கத்தார் அதிக ஆவலுடையவர்களாயிருக்கிறார்களென்றும், இது விஷயமாகத் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வதாகவும் கூறினர். இந்த உறுதியின் பேரில் கேட்கப்பட்ட கேள்விகள் வாபஸ் வாங்கிக்கொள்ளப்பட்டன.

இந்தோ சைனுவில் செட்டியார்கள் நாடு கடத்தப்பட்டதுமன்றி லாங்டர்ம் சொசைட்டியாரால் நியாயமற்றதும், கொடூரமானதுமான சில நிபந்தனைகட்கு உட்படவேண்டுமென்றும், இன்றேல் பலவித இன்னல்களுக்கு ஆளாவார்களென்றும் பயமுறுத்தப் பெற்றனர். லாங்டர்ம் சொசைட்டியார் தாங்கள் கடன் கொடுக்க உத்தேசித்திருக்கிற இனங்களுக்கு முதலாவது அடமான மாயிருந்தால் நூற்றுக்கு இருபத்தைந்து வீதமும், இரண்டாவது அடமானம் அல்லது வெண்ணிலைக் கடன்களுக்கு நூற்றுக்கு நாற்பது வீதமும்,நகரத்தார்கள் குறைத்துக் கொள்ளவேண்டுமென விரும்பினர். இவ்வாறு குறைத்துக் கொண்டதன் மேல் இந்த இரண்டுவகைகளிலும் மொத்தத்தொகையின் ஒருபகுதி ரொக்கமாகக்கொடுக்கப்படுமெனவும் மீதி தொகை பதினைந்து வருடங்களில் அரிசியின் விலை ஒரு கியா (gia) ஐம்பது 'சென்டுகளுக்கு மேற்பட்டால் கொடுக்கப்படுமெனவும் கூறினர். இந்த நிபந்தனைகளைக் கூறி மூன்று நான்கு தினங்களுக்குள்ளாக (அதாவது மேமாதம் பதினைந்தாந் தேதிக்குள்ளாக) பதில் கூறவேணடுமெனத் தெரிவித்தனர். சைகோன் நகரத்தார்கட்குச் செட்டி நாட்டிலுள்ள முதலாளிகளையோ அல்லது இந்தோ–சைனுவில் நாட்டுப்புறங்களிலுள்ள ஏஜண்டுகளையோ இது சம்பந்தமாகக் கலந்து பேசப் போதுமான காலங்கிடைக்கவில்லை.

செட்டியார்கள் மேற்கண்ட விதமாகத் தங்கள் கடன்களைக் குறைத்துக் கொண்ட பின்னர், முதலாவது அடமானத்திற்குப் பத்தில் ஒன்பது பங்கும், மற்ற கடன்களுக்குப் பத்தில்ஒருபங்கும் உடனேகொடுப்பது என்றும் நிச்சயிக்கப்பட்டது. கடைசியாக முதல் அடமானத்துக்கு நூற்றுக்கு இருபத்திரண்டு வீதமும் மற்ற கடன்களுக்கு நூற்றுக்கு முப்பத்தைந்து வீதமும் குறைப்பதென முடிவாயிற்று. லாங்டர்ம் சொசைட்டியார் இதைப்பற்றிக் கலந்தாலோசிக்கச் செட்டியார்களுக்குப் போதுமான காலம் கொடுக்காததுமன்றி 22—5—33 இரவு எழுமணிக்கு சம்மதமில்லாத செட்டியார்களிடம் நாடு கடத்துவதாகப் பயமுறுத்தி கொடூரமான நிபந்தனைகள் நிறைந்த பத்திரத்தில் வற்புறுத்திகையெழுத்துக்கள் வாங்கினர். அந்தப் பத்திரத்தில் ஒப்புக்கொள்ளக் கூடாததும் மிகக் கொடூரமானதுமான பல நிபந்தனைகள் அடங்கியிருக்கின்றன.

இதுவுமன்றிப் பிறகு மற்ற பாங்கர் (Bankers)களும் ஒப்புக் கொண்டால்தான் அமுலுக்கு வருமென்று கூறி மற்றொரு பத்திரத்திலும் செட்டியார்களிடம் கையெழுத்து வாங்கியிருக்கின்றார்கள்.

இதுகாறும் நாம் செய்த முயற்சிகளெல்லாம் வீணுகவில்லை; இதுவரையில் இந்திய அரசாங்கத்துக்கும் பாரிஸிலுள்ள பிரஞ்சு அரசாங்கத்துக்கும் நாம் பிரதிநிதிகளை அனுப்பியதினுல் இருவர் நாடுகடத்தப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டது.

இந்தோ சைனுவிலிருந்து 'வெளியேற்றப் பட்டிருக்கும் ஐவரின் நாடுகடத்தப்பட்ட உத்தரவு ரத்து செய்யப்பட வேண்டுவது நீதியும் நியாயமும் அவசியமுமாகும். லாங்டர்ம் சொசைட்டியார் நம் மீது வற்புறுத்திக்கொண்டு வந்திருக்கும் நியாயமற்றகொடூரமான நிபந்தனைகள் தடுக்கப்பெறல்வேண்டும். நமது காரணம் உண்மையானது; நியாயமானது; நேர்மையானது. இந்நாட்டுத் தலைவர்களுடையவும் பொது மக்களுடையவும் ஆதரவை நாம் பூரணமாகப்பெற்றிருக்கின்றோம்; எனவே நகரத்தார்களாகிய நாம் பூரணவெற்றியடைவோமென்பதிலையமில்லை.

சூதாடல்

திரு. ந. சோ. அரு. அருணசலன்

பெரியோர்களே ! சகோதரர்களே !!

எனது கட்டுரையின் தலையங்கத்தைப் பார்த்ததும் தபவு செய்து சீற்றம் கொள்ளாது நன்கு வாசிப்பீர்களென்று நம்புகின்றேன்.

இதுகாலை உலகின் காலச் சக்கரம் வேகமாகச்சுழன்று வருகிறது. அரசியல் வானம் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றது. நமது சமூகம் சூது விளையாட்டில் அமிழ்ந்து கிடக்கின்றது. "சூது விரும்பேல்" என்று ஔவையார்புகன்றிருக்கிறார்.,'பழகிய செல்வமும்பண்புங்கெடுக்குங், கழகத்துக் காலைபுகின்'' என்றுதிருவள்ளுவர் அருளியிருக்கின்றார். ஆனதால் சூதாடல் ஒருஇழிவானசெய்கையாகும். தற்பொழுது நம் நாட்டின் கண் சிறியோர்களும் பெரியோர்களும் சூதாடலை விருப்புடன் போற்றி வருகிறார்கள. பஞ்ச மஹா பாதகங்களில் ஒன்றாகிய சூதால் பாண்டவர்கள் நாட்டைவிட்டுக் கானகம் புகுந்தார்கள்; வஞ்சகமாய் அபகரித்துக் கொண்ட துரியோதனாதிகள் குலம் அழிவுற்றது. புட்கரன் சொற் கேட்டு நளமன்னன் சூதாடி முடியிழந்து வனம் புகுந்து நலிவுறுருன். எங்கு நோக்கினும் பொழுது போக்கு என்று பலவித சூதுகள் நடை பெறுகின்றன. பொருளீட்டுவான் கருதி மனைவிமக்களைப் பிரிந்து வந்துள்ள இப்பர்மாவில் வியாபார நிலையமென்று கூறும் பெட்டியடியின் பக்கத்தில் கண்டார் வெறுக்கும் இச் சூதாட்டம் நடைபெறுகிறதை நோக்கப்புகின் திருமகள் எப்படி வாசம் செய்வாள்? என்பதை பெரியோர்களே சிந்தித்துப் பாருங்கள்? விலை மதிக்க முடியாத காலத்தை வீணுக்குகின்றனர். சமூகப்பணி தேசப்பணி செய்துதிகழ்ந்தால் அல்லவா இப்பிறவியில் நற்பெயர் பெறலாம்? அறிவைப் பண்படுத்தும் அரசியல் நூல்கள் பொருளாதாரம், உடற் கூறுசாஸ்திரங்கள்காவியங்கள் பத்திரிகைகள் இருந்தும் அவைகளை முறையே பயின்று பயன்பெற முயற்சிக்காமல் சூதாடலில்தான் பொழுதுபோகிறது என்று நவிலும் அறிஞர்கள் இருப்பின் இச்சமூகம் பின்னோக்கி நிற்கும் சமூகங்களில் ஒன்று என்று கூசாமல் சொல்லலாமல்லவா? காலையிலிருந்து இரவு துயிலப் புகும்வரை சூதாடல் ஒரு தொழிலாகவே கருதுவார்களுமுளர் என்றால் அந்நாட்டிற்கே ஒரு குறைவுதான் என்று தளாரமல் பகரலாமன்றோ? மேலை நாட்டில் நிமிஷம் தோறும் ஆராய்ச்சித்துறையில் வெற்றி பெற்று வருகின்றார்கள். நம் நாட்டிலோ சூது கொலை, களவு, காமம், மது உண்ணல் அபிவிர்த்தியாகின்றது. கொடிய சூதாட்டத்தால் தனவணிக நாட்டில் அநேக குடும்பங்கள் பொருளிழந்து தவிக்கின்றதை வாசகர்கள் நன்கு அறிந்திருப்பீர்களென்று நினைக்கிறேன். சூதாட்டப் பிரியர்கள் பலர் சேர்ந்து சிறு ஊர்களில் சூதுக்கழகங்கள் ஸ்தாபனம் செய்து அரசிலார்கட்கு அஞ்சி மாற்றுப் பெயர்களால் நிர்வகித்து ஒனறுக்குப் பத்து எழுதி வாங்கி பொருள் தேஷ உண்டுகளிப்படைவாருமிருக்கின்றனர். அவ் வஞ்சகர்கள் வலையில் பேராசையால்நண்ப அல்லலுறுவாருமிருக்கின்றனர், சூதில்லாப நஷ்டத்திற்கு எழுதிக் கொடுத்த உண்டியல்களுக்கு நீதி மன்றம் சென்று வசூலிப்பதும அதில் எழுதிக்கொடுத்தவர்கள் சொல்லும்தாவாக்களும்மிகவியப்பாகவே இருக்கின்றன.

"சிறுமை பல செய்து சீரளிக்குஞ் சூதின் வறுமை தருவதொன்றில்" என்று வள்ளுவர் மொழிந்திருக்கிறார், சூதாட்ட வழக்குகள் பல அரசாங்கத்தாரால் கண்டுபிடிக்கப் பெற்று தண்டனைக் குள்ளாகின்றன. பெரும் பொருள் செலவு செய்து உயர்தர நீதி மன்றம் வரை செல்கின்றனர். அற்ப சூதாட்டத்தால் நிகழும் குற்றங்களை நன்கு சிந்தித்துப் பாருங்கள்! உடல் நலன் பெற நண்ணுந் திருக்குற்றாலத்தில் உரிய காலத்தே அருவியில் நீராடி உண்டு களித்து, உல்லாசமாக மலையில் ஏறிக் காட்சிகளைக் கண்டின்புறாமல் மிகுந்த பொருளை செலவு செய்து சூதாடி நோய்க்கு ஆளாகி வருகிறார்களென்றால் வருந்தாமல் என் செய்வது? உலகம் விழிப்புற்று ஒவ்வொரு சமூகமும் முன்னேற்றத்திற்கு வழி கண்டுபிடித்து வருங்காலத்திலுமா நம் சமூக இளைஞர்கள் பெரியோர்கள் சூதில் அரிய காலத்தை செலவிடுதல் வேண்டும்? அது பொருத்தமில்லை என்பதை உணர்ந்து இனி மேலாகிலும் சீரிய வழியில் செல்லவேண்டுமென்றும், "சூதும் வாதும் வேதனை செய்யும்" என்ற மூதோர் சொல்லை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டுமென்றும் வாசகர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தமிழகம்

திரு. சாமி சோமசுந்தரம்

தமிழகத்தின் பெருமையைத் தமிழாராய்ந்த அறிஞர் நன்கு அறிவர். பண்டைக் காலத்தில் தமிழ் மக்கள் எய்தியிருந்த நாகரீகத்திற்கு இணையான நாகரீகம் வேறு என்னாட்டினரும் எய்தியிருந்ததாக ஆராய்ச்சியாளர் இதுவரை காட்டவல்லை. தமிழர் தங்கள் பண்டைக்காலச் செந்நெறி முறைகளை மறந்து இடைக்காலத்து வஞ்சகக் குடிலர்களால் எழுந்த பொய்க் கதைக் கட்டுகளில் மயங்கிப் பண்டை உண்மை நாகரீக உருப்புக்களாகிய, கல்வி, அன்பு, உழவு, கைத்தொழில், வாணிபம், மதம், மனையறம், ஒழுக்கம், முதலியன நழுவப் பெற்றனர். பண்டை நாகரீகம் அகலவே, பொறாமை வஞ்சகம் பெருகி, ஒற்றுமை குன்றி, சமயப் போரையும் வகுப்புப் போரையும் வளர்த்தது. இவை காரணமாக மத்தியாசியாவிலிருந்து பல வகுப்பினரும் நம் நாட்டிற் படை யெடுத்து அரசுரிமையைக் கைப்பற்றினர். அந்த வழியை நம் நாடு தற்காலம் அன்னி ... ட்டவரான ஆங்கிலேயரால் ஆளப்... வருவதை நாம் அறிகிறோம். பழமைய நவே நாகரீகத்திற் சிறந்து விளங்கிய தமிழர், இடைக்கால மயக்கத்தால் மறந்த பழமையை நினைந்து புத்துயிர் கொண்டெழுந்து புதுப்பித்தல் அருமையாமோ ?

தமிழ்மொழி வகத்தில் வழங்கிவரும் ஒப்பற்ற மொழிகளு ளொன்று. அதன் இலக்கணவரம்பின் பெருமை போற்றத்தக்கது. அகர முதல் பனிரெண்டு உயிர்களின் அடுக்கும், ககர ஒற்று முதல் பதினெட்டு மெய்களினடுக்கும், ஒன்றினொன்று கலவாது இயங்குவதும்; பின் அவை புணர்ந்து உயிர் மெய் ஆதலும் செவ்விய ஒழுங்கிளமைந்தனவாம். தமிழ் எழுத்துக்களின் பிறப்பிடம் வகுத்தமைந்த பெருமை தமிழுக்கே உரியது. இவை நன்னூலிலக்கணம், "ஆவி யிடைமை இடமிடறாகும்," என்னுஞ் சூத்திரம் ... "அண்ண நுனி நாவனியுறிற் ..ரும்" என்பதீராகவுள்ள சூத்திரங்க ... றியப்படும். பின்னும் தமிழ்ச்சொல் இலக்கணப் பெருமை ... ஒரு எடுத்துக்காட்டால் விளக்கலாகும். தமிழ் வினைச் சொற்களில் எந்த வினைச் சொல்லும், திணை பால், காலம், மூன்றையுந் தானே காட்டி நிற்கும். உதாரணமாக 'நடந்தான்' என்னும் வினைச் சொல்லில், ஆன் விகுதி ஆண்பால் ஒருமையையும், தகர ஒற்று இடைநிலை இறந்த காலத்தையும், நட என்னும் பகுதி நடத்தலாகிய தொழிலையுங் காட்டி, ஒரு ஆண் மகன் நடந்தான் என உணர்த்தியது. இப்பெற்றிய அருமை ஏனைய சிறந்த பல மொழிகளிலுங் காண்பதரிது. நிற்கத் தமிழ்க் கலைகளுள் சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, புறநானூறு, அகநானூறு, பரிபாடல், கலித்தொகை, திருக்கோவையார், திருவாசகம், திருவாய்மொழி திருக்குறள், தொல்காப்பியம், சிவஞான போதம், முதலிய பல் காப்பியங்களிற் பயின்ருர், நம் தமிழர், நுண்ணறிவும், கைத்தொழில் வாணிபம், உழவு, தெய்வ வழிபாடு, அன்பு, முதலியவற்றிலும், சிற்பம், சித்திரம், முதலியவற்றிலும், மேம்பட்டு விளங்கினமை அறியுந்தாமாமென்பது:—

"நோக்கு நுழைகல்லா நுண்மைய
[பூக்கனிந்து
அரவுரியன்ன அறுவை நல்கி,"
'கண்ணுழை கல்லா நுண்ணூற்கைவினை
வண்ண அறுவையர்,"
"ஆவியன்ன அவிர் நூற்கலிங்கம்,"
(மணிமேகலை)

"பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டும் நுண்வினைக் காருகரிருக்கையும்,"
(சிலப்பதிகாரம்)

"பங்கயப் பகைப்பருவம் வந்தென
எங்கும் இல்லென எலிமயிர்த் தொழிற்
பொங்கு பூப் புகைப் போர்வை மேயினர்,"
(சீவகசிந்தாமணி)

என்பன வாதிமொழிகள் விளக்கும். நந்தமிழர், பருத்தியாலும் பட்டாலும், பொற்சரிகையாலும் எவராலும் ஒப்பங் கூறுவதொண்ணு எலிமயிராலும், புகை போன்று காணப்படுவதும், பாம்பின் சட்டைபோலுங் காணப்படும், பூந்தொழில்களமைந்த ஆடைகளை நெய்தார்களென்றும் அணிந்தார்களென்றும், விற்ருர்களென்றும், காணக்கிடக்கிறது. உரோமாபுரியில் அரசு வீற்றிருந்து மேல்நாடு முழுமையும் புரந்தனனென்று சரித்திரக்காரர்களாற் புகழப்படும், ஜூலிய சுசீசர் (Julians Caesar) என்னும் அரசர் உடலை அணிபெறச் செய்தது நமது தமிழ் நாட்டில் நெய்யப் பெற்ற பொற்சரிகை யாடையே யென்று உரோமர் சரித்திர ஆசிரியர் வியந்து கூறுகின்ருர். கிரீஸ் (Greece) உரோமாபுரி (Rome) முதலிய நாட்டிலிருந்து யவனவணிகர் தமிழகத்துள்ள, தந்தம், முத்து, பொன், வெள்ளி, இரத்தினங்கள் முதலிய இயற்கைப் பொருள்களையும், மிளகு, கடலை அரிசி, முதலிய விளை பொருள்களையும் ஏற்றிச் செல்லும் பொருட்டு பொன்னுடன் தங்களுடைய நல்ல கப்பல்களை, காவிரிப்பூம்பட்டினம், முசிரி தொண்டி, குமரி முதலிய கடற்கரைப் பட்டினங்களில் பிடித்து இறங்கினரென்பது:—

"கயவாய் மறுங்கிற் காண்போர்த்
[தடுக்கும்
பயனளவறியா யவனரிருக்கையுங்
கலந்தரு திருவிற்புறம் பெயர்மாக்கள்
கலந்திருந் துறையுமிலக்கு நீர்வரைப்பும்,"
"யவனர் தந்தவினைமாணன்கலம் (சிலப்)
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழு முசிரி," (அகம்)

என்பனவற்ருல் அறியலாம். இனித் தமிழர் உழவில் மிகத்திறமை வாய்ந்தவரென்பது, உழவின் மறு பெயராகிய வேளாண்மை யென்னுஞ் சொல் விளக்கா நிற்கின்றது. வெள்ளம் ஆண்மை என இரண்டு சொற்கள் புணர்ந்து மருவி, வேளாண்மை என வழங்கும். இதன் பொருள் நீர்பெருக்கை ஆண்டு வெள்ளத்தை விளைவு பொருட்டுப் பயன்படுத்திக் கொள்ளலாம். அஃதாவது ஆறில்லா ஊரில் அகன்ற திணிந்த உயர்ந்த கரைகளாற் சூழப்பட்ட ஏரி குளம் முதலியன அமைத்து மாரிகாலத்தில் நீர்வாரிகளின் வழியே அவ்வேரிகள் நிரம்பச் செய்து உபயோகப்படுத்திக்கொள்ளல். ஆறுள்ள ஊர்களில் ஆற்றிலிருந்து கால்வாய்கள் கொண்டு நீர் பாய்ச்சி விளைவு செய்தல். இந்நீர்நிலைகளை எக்காலத்தும் கண்ணும் கருத்துமாக ஆளவேண்டும். உழவின் நீர் ஆண்மையின்பின் உழுதல், எருவிடுதல், நீர்க்கட்டல், விதைத்தல், முதல் வளர்த்தல் களைகட்டல், பயிர் ஓம்பல் முதலிய தொழில்களின் திறனைத் தமிழர் நன்கு அறிந்தமை:-

"எரினும் நன்ருல் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்று அதன் காப்பு"
"செல்லான் கிழவனிருப்பினிலம் புலந்து
இல்லாளி னூடிவிடும்."
"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்
றொழுதுண்டு பின்செல்பவர்" (நெல்லாங்

என, உழுதல், எருவிடுதல், மண்ணைக் காயவிடுதல், களை வாங்கல் பின்னும் பயிரை ஓம்பல் முதலிய தொழில்கள் எத்துணையருமையாக வகுக்கப்பட்டுள்ளது என்பதை யறியலாம். இனித் தமிழர் அன்புசெழுமி அன்பையே தமது வழிபடுகடவுளின் பெயராக வகுத்து (பரமசிவம்) வழிப்பட்டு வந்தார்களென்பது:-

"அரும்பொனே மணியே யென்னன்பே
யென்னன்பான அறிவேயென நிவிலூறும்
ஆனந் வெள்ளமே யென்றென்று,"
'என்பெலா நெக்குடைய ரோமஞ்சிலிர்ப்ப
வுடலிளக மனதழலின் மெழுகா
இடையறு துருகவரு மழைபோலிரங்கியே
யிருவிழிகணீர் இறைப்ப
அன்பினல் மூர்ச்சித்த அன்பருக்கங்களே
அமுத சஞ்சீவி போல்வந்து"
(தாயுமானர்)

"அன்போடியைந்த வழக்கென்பவாருயிர்க்கு
என்போடியைந்த தொடர்பு" (யிர்க்கு

என்பன ஆதி உயர் மொழிகளால் காணப்படுகின்றன. இனிமணவினையின்கண், காதல் மணமேசிறப்புடைத்தென தமிழ்நாட்டு அகநூல்கள் நுவலுவதறிக:—

"தேவரிற்பெற்ற நஞ் செல்வக் கொடி
[வடிவார்தி...வே
யாவரிற் பெ ...ளி யார் சிதைப்பாரிமை
[யாத முக்கண்
மூவரிற் பெ ... சிறறம்பல ம... ரிமொய்
[பொழில்வாய்ப
பூவரிற்பெ நழலியென் வாடிப்
[புலம்புவதே.'

நமது காதல் மணம் நிலை பெறுமே. என்று ஐயங்கொண்டு புலம்பிய காதலியை ஆற்றி நீ வருந்தற்க, நம்மிருவர் மாட்டும் ஒத்த காதலானுண்டாய கூட்டத்தை, யாவர் எவ்வலியை, யாவர் மாட்டுப்பெற்று பிரிக்க முடியும், என்று தலைவன் சொற்றனன். இனி அரசியல் வினைகள், புறம், பரிபாடல் முதலியவற்றுள் பரக்கக் காண்கலாம்.

இவ்வகையான உண்மை நாகரீகங்களோடு திகழ்ந்த தமிழர் இக்காலத்து எவ்வகையில் விளங்குகின்றனர் என்பது தென்னாட்டை விட்டகன்று அன்னிய நாடுகளுக்குச் சென்று காணின் தமிழர் அன்னியரால் மிக்கக் கேவலவாக நடத்தப்படுவதுகாணும் மேல் நாட்டாருடைய ஆடம்பர ஆடை நாகரீகங்களைக் கைக்கொண்ட நம் தமிழர் அன்னவரிடை மலிந்துகாணும் தேசபக்தி மக்களுள் உயர்வு தாழ்வின்மை கைத்தொழில் ஆராய்ச்சி ஊக்கமுடைமை, முதலிய உயர் குணங்களைக்கொள்ளாது நீக்கியது கனியிருக்கக் காய் கவர்ந்தற்றேயன்ருே? ஆதலின் ஒவ்வொரு தமிழரும் தாய்மொழியினரிய நூல்களைப் பயின்று உண்மை நாகரிகம் அடைந்து தேசபக்தி பெருகி நாட்டு நலன்களுக்குரிய ஒவ்வொரு துறையிலும் உடன்பட்டு நம்நாட்டையும் நம்முன்னோரின் பெருமைகளையுங்காக்க வேண்டும்


கச்சீன் ஜாதியார்

திரு. அரு. சோக்கலிங்கம்




பொன் விளையும் பூமியாம், பர்மா நாட்டின் கண் குடியேற இருக்கும் சகல வர்ணத்தார்களையும் விட பர்மாவையே தாய் நாடாகக் கொண்ட மங்கோலிய வகுப்பார்களில் பலவித ஜாதியார்களிருக்கின்றனர். இவர்களில் தாம் வசிக்கும் எல்லையைத் தவிர மற்றப் பகுதிகளையே கண்டறியாத வர்கள் பெரும்பாலோருளர். பர்மியர்கள் என்றழைக்கப்படும் பெரும் பகுதியினரும் நாகரீகம் வாய்ந்தவர்களென்றும் தற்பொழுது கருதப்பெறும் கரீன் ஜாதியாரும் தான் பல துறைகளில் மேம்பாடுடையவர்களாகவும ஆங்கில நாகரீகத்தில் மூழ்கியவர்களாகவும் காணப்படுகின்றனர். இம்மங்கோலிய வகுப்பார்களில் பர்மாவில் மட்டும் பத்துவித ஜாதியார்களிருக் கின்றனர். அவையாவன:—டலாய்ங்ஸ், பர்மான்ஸ், அ க்கனீஸ், டவாயன்ஸ், ஷின்ஸ், கரீன்ஸ், கச்சீன்ஸ் ஷான் பலவுங்ஸ், சைனிஸ். என ஒவ்வொரு வருக்கும் அவர்கள் [illegible]யைக் குறிப்பிடும் பெயர் மாதிரி பாஷையும் தனித் தனியே வழங்கிவருகின்றன. இவர்களில் நாம் எடுத்துக்கொண்ட கச்சின ஜாதியார்கள் ஒரு விநோத மனிதவர்கத்தில் சேர்ந்த காட்டுமிராண்டிகளாகும் பெரும்பாலும் வடக்குப் பகுதிமலைக் குன்றுகளிலும் வடஷான் குன்றுகளிலும் தான் இவர்கள் பரவி இருக்கின்றனர். கச்சீன் சாதியாரை குறவர்வகையைச் சேர்ந்த ஒருவித மலைஜாதியாரென்றே அழைக்கலாம். இவர்கள் பனி நிறைந்த மலைச்சிகரங்களிலும் பிற மனிதர்கள் வாசஞ் செய்யக் கூடாத குன்றுகளிலும் வாசஸ்தலத்தை யமைத்துக் கொண்டு ஜீவித்து வருகின்றனர். இவர்களுக்கு மதமென்பது தனியாகக்கிடையாது. ஆகையால் காட்டுமிராண்டிகளோடு சேர்த்துக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறார்கள். கச்சின் பாஷை என்ற ஒருவிதபாஷையை இனிய சப்தத்துடன் பேசி வருகிறார்கள். இவர்களுக்கு நகர வாசமே பிடிப்பதில்லை. ஆனால் இப்பொழுது கிறிஸ்தவ பாதிரிமார்கள் முனைந்துசிறு பகுதியினரைகிறிஸ்தமதமாக்கி இவர்கள் பாஷையின் தொனிக்கேற்ப இங்கிலீஷ எழுத்தை யமைத்துக் கொடுத்து (அதாவது வாகப்பம் கச்சினிலும் எழுத்து மட்டும் இங்கிலீஷிலுமாகும்) கல்வி போதித்து வருவதோடுபட்டாளங்களிலும் சேர்க்கப்பட்டுநகரங்களில் குடியேற்றி இருக்கிறார்கள்.


இவர்கள் [illegible]மாகவும் திரேக கட்[illegible]யவர்களாகவும் அஞ்சா நெஞ்சம்படைத்தவர்களாகவும் முன் பின் சிந்தியாது ஆக்கினைப் படி நடக்கக் கூடிய வர்களாகவுமிருப்பதால் சேனைக்கு தகுதியுடையவர்களாக காணப்படுகின்றனர். வேட்டையாடுவதில் வெகு சமர்த்தர்கள். ஆப்பிரிக்காகண்டத்திலுள்ள நீக்ரோஜாதியாரைப் போல் வேட்டையையே ஜீவனமாகக் கொண்டவர்களாகையால் ஒரு வாலிபன் ஒரு புலியோடு திறமையாகச் சண்டை செய்து சில நிமிடத்தில்மடக்கிவிடுவான் இவர்கள் வனதேவதையைத்தான் பூஜித்து வருகிறார்கள். வேட்டையில் அகப்படும் பெரிய பிராணிகளை தேவதைக்கு படைத்தே தாம் உட்கொள்வது வழக்கம். காட்டு மாடுகளை தேவதைக்கு பலியிடுவதால்தேவதைகளின் அருள்கிடைத்து வருகிற தென்ற நம்பிக்கையுடையவர்கள் மலை யுச்சியிலுள்ள சகலவிதமான குழைதழைகளையும்பாகுபாடின்றி சமைத்து சாப்பிட்டு வருவதோடு கொஞ்சம் சமதளமாக இருக்கப்பட்ட இடங்களில் நெற்பயிர்களும் உண்டாக்கி ஆகாரத்திற் குபயோகப் படுத்திக் கொள்கிறார்கள். ஆணுக்கும் சரி பெண்ணுக்கும் சரி மத்யவயதடைந்து விட்டால் பெரும்பாலானவர்களுக்கு கழுத்தில் ஒருவித வீக்கம் மாதிரி முன் பக்கம் உண்டாகி கழுகுக் [illegible]ன் மாதிரியாகி விடுகின்றன. இ[illegible], கண்ட [illegible]வகைகளை எல்லாம் சாப்பிடுவதால் உண்டாவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கின்றனர்




பட்டாளத்தில் சேர்ந்து நகரவா[illegible] கச்சீன் ஜாதியார் குடியேறும் காட்சி.



கச்சீன் வாலிபன் [illegible]யாம் செய்யும் காட்சி



கச்சீன் குழுவினர் சேகரமாய் குடிசைகளில் வசிக்கும் காட்சி



கச்சீன் தலைவனுடைய உயர்ந்த குடிசையின் காட்சி